காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 10 இறகு: 4

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஏப்ரல் 2021 | விலை ₹40



- டிராட்ஸ்கி மருது
- பாவல் சங்கர்
- வேணுமாதவன்
- மே.து. ராசுகுமார்
- மௌனகுரு
- அப்பணசாமி
- சு. இராமசுப்பிரமணியன்
- பக்தவத்சல பாரதி
- ரூபன் சிவராஜா
- இரா. மோகன்ராஜன்
- ஆ. சிவசுப்பிரமணியன்
- க. முகுந்தன்
- ந. முருகேசபாண்டியன்
- பா. செயப்பிரகாசம்
- இரா. எட்வின்

கோடுகளின் நடுவில்

● டிராட்ஸ்கி மருது

# ‘ஜனா’




திரைத்துறையில் காலூன்றிக் கொண்டிருந்த எனது வாழ்வின் மிக முக்கியமான காலகட்டத்தில் என்னருகில் இருந்து வளர்ந்த அன்பும் மதிப்பும் கொண்ட எனக்குப் பிரியமான இளைஞர்களில் ஒருவராய் இருந்தவர்; மட்டுமின்றி, கொள்கைத் தெளிவோடும் நல்ல புரிதலோடும் திரையுலகுக்குள் வந்து தனது வாழ்நாள் முழுவதும் அதே கொள்கைகளோடும் கொள்கை வழிப்பட்ட நண்பர்களோடும் தொடர்ந்து இயங்கியவர் எஸ். பி. ஜனநாதன் என்கிற ஜனா.

சென்னையில் மயிலாப்பூருக்கு அருகிலுள்ள நொச்சிக்குப்பத்தில் மிக எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். சாராயம் விற்பதும், பட்டாணி, சுண்டல் விற்பதுமே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வளர்ந்ததாக எவ்விதத் தயக்கமுமின்றி மிகுந்த நகைச்சுவையோடு சொல்லிவந்தவர். திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு பெரியார், அண்ணா, கலைஞர் என அரசியல் பயின்றவர். அவருக்குள் கனன்று கொண்டிருந்த சினிமா தாகத்தால் எப்படியோ உள்ளே வந்து பிரபலமான இயக்குநர் லெனின் அவர்களிடம் உதவி இயக்குநராய்ச் சேர்ந்து தனது திரைப்பயணத்தைத் தொடங்கியவர். அடிப்படையில் பெரியாரியக் கொள்கைகளையும் நாத்திகக் கொள்கைகளையும் ஏற்று வளர்ந்து நின்ற ஜனநாதன், லெனின் அவர்களிடம் பணியாற்றிய காலத்தில் தன்னை அறியாமலே தன்னை ஒரு பொதுவுடமைக்காரராக, பொதுவுடைமைச் சித்தாந்தவாதியாகத் தகவமைத்துக் கொண்டவர்.

தமிழ் இலக்கியச் சூழலில் புத்தம் புதிய நவீன இலக்கியம் சார்ந்து சிற்றிதழ்களுக்கும் புத்தகங்களுக்கும் புத்துருவாக்கத்தை முன்னெடுத்து புதிய தடத்தை வரைகலையில் உருவாக்கிக் கொண்டிருந்த எனது முன்னத்தி ஏர் ஆதிமூலம் அவர்களோடு இணைந்து நான் வளர்ந்துகொண்டிருந்த காலம் அது.

தொடர்ச்சி மூன்றாவது அட்டையில்...

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 10 இறகு: 4

திருவள்ளுவராண்டு 2053

வைகாசி
ஏப்ரல் 2021

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க. சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க. பஞ்சாங்கம்
கே. எம். வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail. com

ஐரோப்பா:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

# யாருக்கு உங்கள் வாக்கு?

அடித்தட்டு மக்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகவும் அவர்தம் வாழ்வாதார நிலையை உறுதிசெய்வதற்காகவும் தி.மு.க., அதிமுக ஆகிய கட்சிகளால் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசத் திட்டங்கள் சாதாரண மக்களுக்கு எதிரான சில அரசியல் கட்சிகளாலும் தனிநபர்களாலும் இந்தத் தேர்தலில் பேசுபொருளாக்கப்பட்டு கேலிக்குள்ளாக்கப்பட்டிருப்பது தமிழ்நாட்டு அரசியலுக்கு நேர்ந்துள்ள அவலம்.

மக்கள் சமூக, பொருளாதார மேம்பாட்டைக் குறிவைத்து ரூபாய்க்கு ஒருபடி அரிசி; ஒருகிலோ அரிசி ஒருரூபாய்; குடும்பத்துக்கு 20 கிலோ அரிசி, அரசு மருத்துவமனைகளில் இலவசச் சிகிச்சை, கல்விக் கட்டணத்தில் சலுகை, பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு படிப்பு உதவித்தொகை, சீருடை, தங்கும் விடுதி, மடிக்கணினி, சைக்கிள், விவசாயக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட தேர்தல்கால அறிவிப்புகள் செயல் வடிவத்துக்கு வந்தன. இந்த அறிவிப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு களத்தில் மக்கள் சமூக, பொருளாதார உயர்வுக்கு முட்டுக்கொடுத்து நின்றன; நிற்கின்றன.

இந்த அறிவிப்புகள் செயல் வடிவம் பெற்றதற்குப் பிறகு மக்கள்சமூகம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்கள் தந்து விளக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டில் ஒவ்வொரு எளிய குடும்பமும் அடைந்துள்ள வாழ்வாதாரப் பாதுகாப்பும் வளர்ச்சியும் வாழ்வியல் நம்பிக்கையுமே களத்தில் நன்றியுணர்ச்சியாய் எதிரொலிப்பதைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியாவில் உள்ள எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியைத் தமிழ்நாட்டு மக்கள் எட்டிப்பிடித்ததற்கு இதெல்லாம் மிகமிக அடிப்படையானது என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

தேர்தலுக்கு முன்புவரை, ‘இலவசங்களைக் கொடுத்து திராவிடக் கட்சிகள் மக்களைப் பிச்சைக்காரர்களாய் ஆக்கிவிட்டார்கள்’ என்றும், மாநிலத்தின் பொருளாதாரத்தையே சீரழித்துவிட்டார்கள் என்றும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்த வர்களும் தங்களது தேர்தல் அறிவிப்புகளில் இலவசங்களை அறிவிக்கத் தொடங்கிவிட்டார்கள். பல இடங்களில் கூட்டணிக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ள இலவசத்திட்டங்களுக்கான உறுதிமொழியையே தங்களது அறிவிப்பு போல எடுத்துக்கொண்டு சுவரொட்டிகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் மக்களிடையே பரப்புரை செய்துவருகிறார்கள்.

அதுமட்டுமின்றி, அதுபோன்ற பரப்புரைகளில் தங்கள் கட்சியின் தலைவர் படத்தைப் போட்டால் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை அவர்களே புரிந்துகொண்டு சொந்தக்கட்சியின் தலைவர் படத்தையே போடுவதைத் தவிர்த்து கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் படங்களையும் அந்தத் தலைவர்களுக்குத் தலைவர்களாய் இருந்தவர்கள் படங்களையும் பெரிதாகப் போட்டுக்கொண்டு கூச்சமே இல்லாமல் மக்களிடம் போய்நின்று வாக்கு கேட்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்கட்டும். நடைபெறவிருக்கின்ற தமிழ்நாட்டு

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே'
அஞ்சல் செய்யப்படுகிறது.
5ஆம் தேதிக்குள்
இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: **98414 57503**

**ஏப்ரல் 2021 முதல், 'காக்கைச் சிறகினிலே' தனிஇதழ் விலை மாற்றம்**

காக்கை தொடங்கி, 10 ஆண்டுக்காலத்தில் அச்சுத்தாள் கட்டணம், அச்சுக்கட்டணம் உயர்ந்து வந்தபோதும் காக்கையின் தனிஇதழ் கட்டணத்தில் மாற்றம் செய்யப்படவில்லை. தவிர்க்கமுடியாத நிலையில் ஏப்ரல் 2021 முதல் தனிஇதழ் விலை ரூ.40ஆக மாற்றயமைக்கப்படுகிறது.

எனவே, மாற்றியமைக்கப்பட்ட கட்டணத்தை பொருட்படுத்தாமல் காக்கை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். சந்தா விவரமும் சந்தாத் தொகையை வங்கியில் செலுத்தும் விவரமும் அடுத்த இதழில்.

-ஆசிரியர்

**தொடர்பு முகவரி:**
காக்கை, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503,
தொலைபேசி : 04428471890
மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**
முகநூல்:
**www.facebook.com/kaakkai.cirakinile**




சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கப் போகிறோம் என்பது மிக முக்கியமானது. இந்தத் தேர்தல், சமூக சமத்துவத்தை நிலைநாட்டத் தோள்உயர்த்தும் சமூகநீதிப் போராளிகளுக்கும் சனாதனத் தீயைப் பற்றவைக்கத் துடிக்கும் சாதியத் தீவிரவாதிகளுக்கும் இடையேயான போட்டி என்பதை முதலில் துல்லியமாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ள வேண்டும். மிகக் கடுமையான இந்தத் தருணத்தில் கடந்த காலங்களில், எதிலெல்லாம் தவறு செய்தார்கள்; எங்கெல்லாம் சறுக்கினார்கள்; நட்புமுரண் எது? பகைமுரண் எது? ஆதரவுச் சக்திகள் எவை; எதிர்ப்புச் சக்திகள் எவை என்பதை எங்கெல்லாம் கண்டுகொள்ளத் தவறினார்கள்; தோழைமை சக்திகளையே எப்படித் தேடித்தேடி ஒடுக்கிக்கினார்கள் என்பதையெல்லாம் கண்டுகாட்டுவதில் முனைப்புக் காட்டுவதற்கான தருணம் இது அல்ல.

மாநில உரிமைகளும் அதிகாரங்களும் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. அல்லது திட்டமிட்டுப் பறிக்கப்படுகின்றன. மீண்டும் சனாதனத்துக்குள் தள்ளிவிட குடுமிதட்டிக்கொண்டு குதியாட்டம் போட்டு வருகிறார்கள். ஐம்பது ஆண்டுகளாய் திராவிடச் சித்தாந்தவாதிகளால் கட்டமைக்கப்பட்டுள்ள, அத்தனை கட்டுமானங்களையும் உடைத்துச் சிதறடிக்க 'வஞ்சகம்' என்ற ஆயுதத்தோடு உக்கிரமடைந்தவர்களாய் அலையாய் அலைகிறார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, இடஒதுக்கீடு உள்ளிட்ட மாநில நலன் சார்ந்த எல்லா உரிமைகளிலும் அத்துமீறி நுழைந்து துவம்சம் செய்யத் தொடங்கியிருக்கும் மத்திய பாஜக அரசின் அடாவடித்தனத்துக்கும் அவர்களுக்குத் துணைபோய்க் கொண்டிருக்கும் கையாலாகாத்தனத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க மக்களிடமுள்ள சரியான பேராயுதம் வாக்குச்சீட்டுதான். நீங்கள் அளிக்கிற ஒவ்வொரு வாக்கும் தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையையும் உறுதியையும் உலகிற்கு எடுத்துச் சொல்வதாக இருக்கவேண்டும்.

சு.இராமசுப்பிரமணியன் srsthovalai@gmail.com

# 73,000 ஆண்டுகள் பழமையான ஹேஷ்டேக் (#, hashtag) குறியீடு

## (Stone-age Crayon Doodle is the oldest Drawing)

ஒரு கைவிரல் அளவே ஆன துண்டுக் கல்லைக் கூடக் கவனமாகக் கண்டெடுத்து, அதனைக் கொண்டுவந்து, அதன்மீது வரையப்பட்டகோடுகளின் வயதையும், அதனை உருவாக்கிய பழங்கற்கால மனிதர்களையும், அவர்களது வரைகலை பற்றிய அறிவையும், அதன் நோக்கம் பற்றியும் தெளிவாகவும், நுணுக்கமாகவும் ஆய்வு செய்து, வெளிப்படுத்தியுள்ளனர், மேலை நாட்டார். ஆனால், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களோடு வாழ்ந்து வந்த நம்தமிழ் முன்னோர், கீழடி, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட இடங்களில் விட்டுச்சென்றிருக்கும் பொருட்களைப் பொருட்படுத்தாமல் இருக்கும் அரசுகளின் பொறுப்பற்றப் போக்கு மிகுந்த மனவலியைத் தருகிறது.





*மனிதர்களின் வரலாற்றுக்கு முந்தைய கலாச்சாரம் அல்லது மனிதர்களின் முன்னேற்றம் என்பது, கல்லாலான கருவிகளை உருவாக்கியதும், அவற்றைப் பயன்படுத்தியதுமான செயல்களை அடிப்படையாகக் கொண்டது. அப்படிக் கல்லாலான கருவிகளைப் பயன்படுத்திய காலம், பொதுவாக 'கற்காலம்' (Stone Age) எனப்படுகிறது. 3.3 மில்லியன் (33 இலட்சம்) ஆண்டுகளுக்கு முன் துவங்கும் கற்காலம் மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.*

### 1 பழையகற்காலம் (Paleo-lithic period):

*மனிதர்கள் முதன் முதலாகக் கல்லைக் கருவிகளாகப் பயன்படுத்திய காலம். பாறையிலிருந்து உடைக்கப்பட்ட (chipped) ஒழுங்கற்ற கூர்மையான கற்களைப் பயன்படுத்திய காலகட்டம்.*


### 2 இடைக் கற்காலம் (Meso-lithic period):

*உடைக்கப்பட்ட, வடிவ-ஒழுங்கற்ற கற்கள் மற்றும் தேய்க்கப்பட்ட (polished) வடிவ-ஒழுங்கான கற்களாலான கருவிகளைப் பயன்படுத்திய காலம்.*

### 3 புதிய கற்காலம் (Neo-lithic period)

*கற்களை நன்றாகத் தேய்த்தும், அரைத்தும் (grind), வடிவ-ஒழுங்குள்ள கருவிகளையும், நுண்-கருவிகளையும் உருவாக்கிய காலம். அதோடு,*





நாடோடி வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, வசிப்பிடங்களை உருவாக்கிக்கொண்டு வாழ ஆரம்பித்த காலம். நாய், ஆடு, மாடு, குதிரை போன்றவற்றை, வீட்டுவிலங்குகளாக மாற்றியும், பயிர்த்தொழில் செய்தும், மண்பாண்டங்கள் செய்தும், துணிகளை நெய்தும் வாழ ஆரம்பித்த காலமே, புதிய கற்காலம்.

**வரலாறு தொடங்கும் காலம்:**

உணவுதேடி அலைந்த மனிதர்கள், ஓரிடத்தில் தங்கி, உணவு உற்பத்தி செய்ய ஆரம்பித்தபோது, மனிதர்களின் கலாச்சாரம் தொடங்குவதாகக் கூறப்படுகிறது. மனிதர்கள் வரலாற்றை, எழுத்தில் பதிவு செய்ய ஆரம்பித்தபோது, மனிதர்களின் வரலாறு தொடங்கியதாகவும் சொல்கின்றனர். இப்படி, மனிதர்களின் கலாச்சார வரலாறானது, உலகில் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில் தொடங்கியிருக்கிறது. பொதுவாக, 10,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டம் அனைத்தும், வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம்'*(pre-historic era)* எனலாம். அப்போது வாழ்ந்த மனிதர்களை, வரலாற்றுக்கு முந்தைய மனிதர்கள் என்றும் அழைக்கலாம் என்று வரலாற்று அறிஞர்கள் சொல்கின்றனர்.

**குகை ஓவியங்கள்: (Cave Arts)**

விலங்குகள், பறவைகளை வேட்டையாடியும், மீன்பிடித்தும், பழங்கள், கொட்டைகளை சேகரித்தும், பலவிதங்களில் உணவுதேடி நாடோடிகளாக அலைந்து திரிந்து பழங்கற்காலத்தில், மனிதர்கள் குகைகளில் தங்கியிருக்கிறார்கள். அந்த காலகட்டத்தில், அவர்கள் பயன்படுத்திவிட்டுச் சென்ற பொருட்களில் இருந்துதான் அவர்களின் காலம் மற்றும் வாழ்வு முறைகளை, அகழாய்வாளர்கள் அறிந்து சொல்கிறார்கள்.


அப்படிக் குகைகளில் தங்கிய காலத்தில், குகைகளின் சுவர்களில் அவர்கள் வரைந்திருக்கும் வரைகோடுகளும் *(drawings)*, தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களும் *(paintings)*, பிரேசில், அர்ஜெண்டினா, பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின், இந்தியா, இந்தோனீஷியா போன்ற பலநாடுகளின் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**மிகவும் பழமையான கற்கால வரைகலை : (Oldest Stone-age Art)**

*100,000* மற்றும் *72,000* ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், வரலாற்றுக்கு முந்தைய மனிதர்களான 'ஹோமோசேப்பியன்ஸ்' *(Homo-Sapiens)* தென்-ஆப்பிரிக்காவின் லாம்போஸ் குகையில்*(Blombos Cave)* வாழ்ந்திருக்கிறார்கள். அக்குகையில், பல்வேறு கட்டங்களாக நிகழ்த்தப்பெற்ற அகழாய்வுகள், மிகவும் செறிவான கலைவடிவங்கள் அங்கு காணப்பட்டதாகப் பதிவு செய்திருக்கின்றன. அக்குகையில் கண்டெடுக்கப்பட்ட, பெரியபெரிய கடல் நத்தையின் கூடுகளில் கோர்க்கப்பட்டிருந்த மணிகள் *(beads)* குறிப்பிடத் தகுந்தவை. அங்கு வசித்த மனிதர்கள், வண்ணங்களைக் கையாள்வதிலும் தேர்ச்சிபெற்றவர்களாக இருந்திருக்கின்றனர் என்று நார்வே நாட்டைச் சேர்ந்த அகழாய்வாளர், கிரிஸ்டோபர் ஹென்ஷில் வுட்*(Christopher Henshilwood)* கூறுகிறார்

பழங்கற்கால மனிதர்கள், வரைகலையை*(art of drawing)* அறிந்து, அவற்றைக் குறியீடுகளாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு, லாம்போஸ் குகையில் *(Blombos Cave)* கிடைத்திருக்கும் *4* செ.மீ. நீளமுள்ள பாறைத்துண்டு*(rock-flake)* சான்றாகும். *4* செ.மீ. நீளம்கொண்ட அந்தப் பாறைத்துண்டின் மீது குறுக்கும் நெடுக்குமாக, செவ்வண்ணக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. அது, *73,000* ஆண்டுகள் பழமையானது என்றும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இன்றைய நிலையில், உலகின் மூத்த, மிகப் பழமையான குகை வரைகலை *(Oldest Cave Art)* அதுவாக மட்டுமே இருக்கிறது.

செவ்வண்ணக்கோடுகள், சிவப்பு ஓ-கர் வண்ணக் கோலால் *(Red Ochre Crayon)* வரையப்பட்டிருக்கலாம் என்று நார்வேயைச் சேர்ந்த கிரிஸ்டோபர் ஹென்ஷில்வுட்*(Christopher Henshilwood)* தலைமையிலான அகழாய்வுக்குழு, கருதுகின்றது. இப்புதிய கண்டுபிடிப்பு *2018* செப்டம்பர் *12* 'நேச்சர்' இதழில் வெளிவந்திருக்கிறது.*(Sep. 12, 2018, Nature)*. பாறைத்துண்டுமீது காணப்படும் சிவப்புக்கோடுகள், வண்ணம் தீட்டப்பட்டதா *(Painting)* அல்லது வரையப்பட்டதா *(drawing)* என்று ஆய்வு செய்யப்பட்டது. வண்ணம் தீட்டப்படவில்லை என்றும், பாறைத்துண்டுமீது உள்ள வண்ணக்கோடுகள்




சிவப்பு 'ஓ-கர்' வண்ணக் கோலால் (*Red ochre cryon*) வரையப்பட்டுள்ளன என்றும் ஆய்வு முடிவில் தெரியவந்தது.

இயற்கை வண்ணங்கள் இரு வகைப்படுகின்றன. ஒன்று உயிரி-வண்ணம் (*Orgonic pigment*). இதுநீரில் கரையக்கூடியது. மற்றது, கனிம-வண்ணம் (*Inorgon-icpigment*). அது நீரில் கரையாதது. லாம்போஸ் குகையில் கண்டெடுக்கப்பட்ட பாறைத்துண்டின்மீது, நீரில் கரையாத கனிம-வண்ணமான' ஓ-கர்" வண்ணக் கோலால்(*Ochre Cryon*) கோடுகள் வரையப்பட்டுள்ளன என்பதையும் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். 'ஓ-கர்'(*Ochre*) என்பது இயற்கையில் கிடைக்கும் வண்ணத்தாது (*Colour mineral*). அதில் இரும்பு-ஆக்சைடு கலந்திருக்கும். மங்கிய மஞ்சள், பழுப்பு, ஊதா, அடர்-சிவப்பு (*pale-yellow, brown, violet, deep-red*) என்று பலவண்ணங்களில் அது கிடைக்கிறது. களியாகவும் (*clay*), பொடியாகவும் (*chalk*) இரண்டு விதமாகக் கிடைக்கிறது. அவற்றில், களியாகக் கிடைக்கும் 'ஓ-கர்' தான், அடர்த்தியான வண்ணங்களுடன் காணப்படுகின்றது.

லாம்போஸ் குகையில் (*Blombos Cave*) கிடைத்திருக்கும் பாறைத்துண்டில், கோடுகள் வரைவதற்குக் களிவடிவிலான 'ஓ-கர்' பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அப்படிப் பயன்படுத்தப்பட்ட 'ஓ-கர்' வண்ணக்கோல்களின் முனைகள், 1 மிமீ முதல் 3 மி.மீ வரையில், மிகவும் கூர்மையானதாக இருந்திருக்கின்றன! இதுவே கூட, 73,000 ஆண்டுகளுக்கு முந்தைய மனிதர்களின் தொழில்நுட்பத் திறமையைக் காட்டுகிறது எனலாம்.

லூகா பொலரோலோ (*Luca Polarolo*), ஜெனிவாப் பல்கலைக் கழகத்தில் (*University ofGeneva, Switzerland*), மாந்தவியல் மற்றும் தென்-ஆப்பிரிக்கா தொடர்புடைய அகழாய்வுத் துறையில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர். அவர், 2015-இல், தென் ஆப்பிரிக்காவின் லாம்போஸ் குகையில் ஆய்வாளர்கள், ஒவ்வொரு மில்லிமீட்டராக, ஆய்ந்து அறிந்து, கொண்டுவந்து சேர்த்த வீழ்படிவு மாதிரிகளை (*sediment samples*) சோதனைச் சாலையில் மிகவும் கவனமுடன், கழுவிக்கொண்டிருந்தார். அப்படிக் கழுவும் வேளையில்தான், அந்தப்பாறைத் துண்டை அடையாளம் கண்டார். அப்பாறைத் துண்டு, சாம்பலாலும், தூசியாலும் (*ash & dirt*) மூடப்பட்டிருந்திருக்கிறது. ஒருமுறை கழுவிய உடனேயே, அந்த கல்லும், அதன்மீது வரையப்பட்டிருந்த செவ்வண்ணக் கோடுகளும் துலங்கிவிட்டதாக லூகா பொலரொலோ பதிவு செய்கிறார்.

அது வரையிலும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கலைப்பொருட்களை அவர் பார்த்திருப்பதாகவும், பல்வேறு வண்ணங்களையும் பார்த்திருப்பதாகவும், ஆனால் பாறைத்துண்டின்மீது சிவப்புக் கோடுகளை அதுவரையிலும் பார்த்ததில்லை என்றும் லூகா பொலரோலோ பதிவு செய்கிறார். அந்த கணத்தில், அந்த காட்சி நம்பமுடியாத வகையில், மிகவும் நெகிழ்ச்சியாக இருந்ததாகவும் அவர் உணர்ச்சிவசப்பட்டுக் கூறுகிறார்.





அப்பாறைத் துண்டில், ஒன்பது செவ்வண்ணக் கோடுகள் காணப்படுகின்றன. நெடுக்கில் வரையப்பட்ட 6 இணைகோடுகளின்மீது, சற்றே வளைந்த 3 இணைகோடுகள் குறுக்காக வரையப்பட்டுள்ளன. அவற்றின் தோற்றம், இன்றைய ஹேஷ்டேக் (*#, hashtag*) குறியீடுபோல காணப்படுவதாக, ஹென்ஷில்வுட் .கூறுகிறார்.

அதாவது, 73,000 ஆண்டுகளுக்கு முன்பே, ஹோமோ-சேப்பியன்ஸ்' (*Homo-Sapiens*) ஹேஷ்டேக் குறியீட்டை, ஏதோ காரணம் கருதிப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் சொல்லலாம்! என்ன காரணத்திற்காகப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் இன்றளவும் கேள்விக்குறியாக உள்ளது!

அந்தக்கோடுகள், மனிதர்களால் உருவாக்கப்பட்டதா? அல்லது இயற்கையே உருவாக்கியதா? என்னும் ஐயமும் ஆய்வாளர்களுக்கு எழுந்தது. தீவிரமான ஆய்வுக்கு உட்படுத்தியதில், கோடுகள் அன்றைய மனிதர்களால் வரையப்பட்டது என்று உறுதி செய்யப்பட்டுவிட்டது. மனித குலத்தில், குறியீடுகள்-செயல்பாடு (*symbolic activity*) முதன்முதல் தோன்றிய காலகட்டமாக, லாம்போஸ் குகை வரைகலை உருவான காலத்தை உறுதியாகச் சொல்லலாம் என்று இங்கிலாந்து நாட்டின் அகழாய்வாளர் 'பால்பெடிட்' (*Paul Pettitt*) கூறுகிறார்.

*2011*-இல் கிரிஸ்டோபர் ஹென்ஷில்வுட் (*Christo-pher Henshilwood*) தலைமையிலான அகழாய்வுக்குழு, வரைவதற்குத் தேவையான கருவிகளைக் கொண்ட





'கருவிப்பெட்டி' (tool-kit) ஒன்றையும் லாம்போஸ் குகையில் கண்டெடுத்திருக்கிறது. கருவிப் பெட்டியில் இருந்த கருவிகளைக்கொண்டு, ஆய்வாளர்கள் கோடுகளை மீளுருவாக்கம் செய்திருக்கின்றனர். ஆனால், அந்தக்கோடுகள் எதனை உணர்த்துவதற்காக வரையப்பட்டவை என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அதற்கான காரணத்தை அறிய வேண்டிய தேவை உள்ளது. ஆனால், அது முற்றுப்பெறாத ஒன்றாகவும் நீடிக்கிறது என்றும் அவர்கள் சொல்கின்றனர்..

கிடைத்திருக்கும் பாறைத் துண்டின்மீது வரையப்பட்டிருக்கும் சிவப்புக்கோடுகள் முற்றுப்பெறாமல், திடீரென நின்றுவிடுகின்றன. அது, அப்பாறைத்துண்டு முழுமையானது அல்ல என்றும், தேய்க்கப்பட்ட மற்றொரு பெரிய பாறையிலிருந்து (grind-stone) உடைந்திருக்கக் கூடும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அந்த முழுப்பாறை எந்த அளவு பெரியதாக இருந்திருக்கும் என்று கணிக்க முடியவில்லை என்றும் கூறுகின்றனர். ஆனாலும், பாறைத்துண்டின்மீது காணப்படும் வண்ணக் கோடுகள், முழுப்பாறையின் மீதும் படர்ந்திருக்க வேண்டும் என்று சொல்லலாம் என்கின்றனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அகழாய்வாளர் ஃப்ரான்சிஸ் கோடி எரிக்கோ (Fracesco d' Errico), பாறைத்துண்டின் மீது வரையப்பட்டிருக்கும் கோடுகள், அதற்கு முன்பாகவே லாம்போஸ் குகையில் கண்டெடுக்கப்பட்டப் பொருட்கள்மீது வரையப்பட்டிருக்கும் உருவங்களை ஒத்திருப்பதாகக் கூறுகிறார். இயற்கையில் கிடைக்கும் கனிம வண்ணங்களைக் கொண்டு (mineral pigment) வரையப்பட்ட 'கற்காலத்து வரைகலை' (Stone-age Art) என்பதை இப்புதிய கண்டுபிடிப்புத் தெள்ளத்தெளிவாக உணர்த்துவதாக, இங்கிலாந்தைச் சேர்ந்த அகழாய்வாளர் ஏலிஸ்டர் பைக் (Alistair Pike) கூறுகிறார்.

65,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நியாண்டர்தால் மனிதர்கள், ஸ்பெயின் நாட்டின் குகைச் சுவர்களில் தீட்டியிருந்த வரைகலை ஓவியங்கள், தென்னாப்பிரிக்காவின், லாம்போஸ் குகைகளில் காணப்படும் ஓவியங்கள்போன்று சிறப்பானவை என்று பைட் மற்றும் பெடிட்(Pite& Pettitt) கூறுகின்றனர். பழங்கற்கால மனிதர்களும் (Homo-Sapiens), நியாண்டர்தால் மனிதர்களும் (Neo-nderthal People) ஏறத்தாழ சமகாலத்தில், வரைகலை ஓவியங்களைத் துவங்கிவிட்டதாகக் கனடாவைச் சேர்ந்த ஏப்ரில் நோவல் (April Nowell) கூறுகிறார். இரண்டு மனித இனங்களுமே, இப்படிப்பட்ட வரைகலைகள் வழியே தகவல்தொடர்புக்கு முயன்றிருக்கிறார்கள் என்று அவர் மேலும் கூறுகிறார்.

இந்தோனேஷியாவின், சுலவேசி (Sulawesi islands) தீவுகளில், சுண்ணாம்புப் பாறையாலான குகைகளில் காணப்பட்ட வரைகோடுகள், 40,000 ஆண்டுகள் பழமையானவை என்று யுரேனியம்-தோரியம் வயதறிதல் (Urenium-Thorium Dating) முறையில் கணக்கிடப்பட்டது. இந்தோனேஷியாவைச் சேர்ந்த அகழாய்வாளர், 'ராம்' (Brumm) மற்றும் அவரது ஆய்வுக் குழுவினர், அதே யுரேனியம்-தோரியம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திடலாம் போஸ் குகையில் கிடைத்திருக்கும் பாறைத்துண்டின் வரைகோடுகளின் வயதை, 73 ஆயிரம் ஆண்டுகள் என்று கணித்திருக்கின்றனர். அதற்காக, அத்துண்டின் ஒருபகுதி மீது படிந்திருந்த தாதுவைப் (mineral formation) பயன்படுத்தியிருக்கின்றனர். பாறையில் கோடுகள் வரையப்பட்டதற்குப் பின்பான காலங்களில், பாறைத்துண்டின்மீது தாது படிந்திருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

ஒரு கைவிரல் அளவே ஆன துண்டுக் கல்லைக் கூடக் கவனமாகக் கண்டெடுத்து, அதனைக் கொண்டுவந்து, அதன்மீது வரையப்பட்டகோடுகளின் வயதையும், அதனை உருவாக்கிய பழங்கற்கால மனிதர்களையும், அவர்களது வரைகலை பற்றிய அறிவையும், அதன் நோக்கம் பற்றியும் தெளிவாகவும், நுணுக்கமாகவும் ஆய்வு செய்து, வெளிப்படுத்தியுள்ளனர், மேலை நாட்டார். ஆனால், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களோடு வாழ்ந்து வந்த நம்தமிழ் முன்னோர், கீழடி, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட இடங்களில் விட்டுச்சென்றிருக்கும் பொருட்களைப் பொருட்படுத்தாமல் இருக்கும் அரசுகளின் பொறுப்பற்றப் போக்கு மிகுந்த மனவலியைத் தருகிறது.

கட்டுரையாளர் : இயற்பியல் பேராசிரியர் (பணிநிறைவு)

மே.து. ராசுகுமார்
mdrajukumar@gmail.com


# தகுதியால் தலைமை பெற்றவர்
# தா. பாண்டியன்

1950, 1960களிலும்,1970களிலும் இருந்த களநிலை தமிழ்நாட்டில் வெகுவாக மாறிவிட்டது. தமிழ்த் தேசிய இயக்கங்கள், புதிய அரசியல்கட்சிகள், சமய-சாதிய அமைப்புகள், சமய நல்லிணக்கக் குலைவு என வெவ்வேறான போக்குகள் தலையெடுத்திருக்கின்றன. முற்போக்குப் பயணங்களும் இருக்கின்றன. பிற்போக்குச் சறுக்கல்களும் இருக்கின்றன. மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சி என்ற பொறுப்பில், முற்போக்கு முனைப்புகள் அனைத்தையும் உள்வாங்கிக்கொண்டு, அவை யாவற்றையும் தனதாக்கிக்கொண்டு, தலைமை தாங்க முன்வரவேண்டும். பெரியார் பண்படுத்திக் கொடுத்த களம், அடித்தளத்தில் வலிமையாக இருந்தாலும், மேற்கட்டுமானம் தளர்ந்து கிடக்கிறது. தேர்தல் அரசியலுக்காக எதையும் விட்டுக்கொடுக்கும் மனப்போக்கு வேரூன்றிவிட்டது.



இயற்கை வளம் சூழ்ந்த கொடைக்கானல் அடிவாரத்திலுள்ள வாளாத்தூர் சொக்க தேவன்பட்டி என்னும் ஊர்தான் தோழர் தா. பாண்டியன் அவர்களின் முன்னோர் வாழ்ந்த இடமாகும்.தற்போதைய தேனி மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள வெள்ளைமலைப்பட்டி என்னும் சிற்றூரில் நான்காவது மகனாக 18-05-1932 அன்று பாண்டியன் பிறந்தார்.அவரது தந்தையார் டேவிட், தாயார் ரேச்சல் நவமணி ஆகியோர் கிருத்துவ அமைப்பினர் நடத்திய பள்ளியில் ஆசிரியர்களாக அப்போது பணியாற்றி வந்தனர்.

காமக்காப்பட்டி கள்ளர் சீரமைப்புத் துறையினர் பள்ளியில் தொடக்கக் கல்வியை முடித்துவிட்டு, உசிலம்பட்டியில் இருந்த மதுரை மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்து பயின்றார். எட்டாம் வகுப்புப் படிக்கும்போது, ஆசிரியராக இருக்கும் தந்தையிடம் எழுதி வாங்கிப் பேசுவார் என்ற எண்ணத்தில் பாண்டியனின் ஆசிரியர் அவரைப் பேச்சுப்போட்டியில் சேர்த்துவிட்டார். ஆனால், படிக்கும்போது மேடை ஏறுவதை விரும்பாத தந்தை எழுதிக் கொடுக்க மறுத்துவிட்டார் அப்போது அவருடைய அண்ணன் தா. செல்லப்பா உரையினை எழுதிக் கொடுத்ததுடன், எப்படிப் பேசவேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுத்து ஊக்கப்படுத்தினார். அடுத்தடுத்து, தானே



தஞ்சையில் 21-07-1968 அன்று நடைபெற்ற தமிழக மாணவர் மன்றத்தின் (அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்) ஐந்தாவது மாநில மாநாட்டில் தோழர் தா.பா. பேசுகிறார். உடன் தோழர்கள் ஏ.கே. சுப்பையா (எம்.எல்.ஏ.), கே. பாலதண்டாயுதம், மே.து.ரா. (மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக மாணவர் மன்றத்தின் பொதுச் செயலாளர்), மொகித்சென்

உரையாற்றும் பயிற்சியையும் பழக்கத்தையும் பாண்டியன் பெற்றார்.

விடுதலை இயக்கம் வீறு கொண்டு எழுந்திருந்த காலம் அது. கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த அண்ணன் செல்லப்பா விடுமுறையில் இல்லம் வந்தபோதெல்லாம் விடுதலைப் போராட்ட விவரங்களுடன், பாண்டியனுக்கு மார்க்சியக் கல்வியையும் அறிமுகப்படுத்தினார். அதன் விளைவாக, அவரது பத்தாவது அகவையில் வழியிலிருந்த காவல்நிலையத்தில் கல்லெறிந்து ஆங்கில ஆட்சியின் மீது இருந்த சினத்தை பாண்டியன் வெளிப்படுத்தியிருக்கிறார். நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது, மாணவப் பருவம் என்பதால் விடுவிக்கப்பட்டார். பள்ளிக் கல்வியை அடுத்து, இடைநிலைப் படிப்புக்காக (இன்டர்மீடியட்) காரைக்குடி அழகப்பா கல்லூரியில் சேர்ந்து, அங்கேயேபொருளியலில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

அன்றைய ஆட்சியில் உயர் அலுவலர்கள் பெரிதும் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர். ஊர் மக்களுக்கும் உயர் அலுவலர்களுக்கும் இடையில் இணைப்பாக பாண்டியனின் தந்தையார் விளங்கினார். பள்ளி ஆசிரியர் என்ற நிலைக்கு மேலாக ஆங்கில அறிவும் அவரிடம் மிகுந்திருந்தது. அத்துடன், கிருத்துவராக இருந்தபோதிலும், தனது இரண்டு பிள்ளைகளுக்கு பாண்டியன், பொன்னிவளவன் என்று அவர் பெயரிட்டிருக்கிறார். கிருத்துவர்கள் வழக்கமாக இத்தகைய பெயர்களைச் சூட்டுவதில்லை. இதனால், பாண்டியனது தந்தையார் தமிழ் ஆர்வமும் கொண்டிருந்தார் என்பதை அறியலாம். இத்தகைய பின்புலத்தில், ஆங்கில அறிவையும் தமிழ்ப் பற்றையும் இல்லத்திலிருந்து எளிதில் பெறக்கூடிய வாய்ப்பு பாண்டியனுக்கு இயல்பாக அமைந்தது. இதற்கு மேலாக, அண்ணன் செல்லப்பா வழியாகக் கிடைத்த மார்க்சிய அறிமுகம் அவருக்கு ஆழமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்று, அன்றைய நாள் காரைக்குடி அழகப்பா கல்லூரியும் பெரும் புகழ் பெற்று விளங்கியது. பல துறைகளும் இருந்ததால், மாணவர் எண்ணிக்கையும் மிகுதி. மாணவர் அனைவரும் வாக்களித்து மாணவர் பேரவைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். பேரவைத் தேர்தல் ஒரு பொதுத் தேர்தல் போலவே நடைபெறும். இது அந்தக் காலத்திய கல்லூரிகள் பெரும்பாலானவற்றுக்கும் பொருந்தும். ஆளுமையும் அறிவுப் பெருக்கமும் ஈர்ப்பும் பேச்சாற்றலும் இருந்தால்தான் பேரவைத் தலைவராக முடியும். தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்போர் நிகழும்.

திராவிட முன்னேற்றக் கழகம் வேர்விட்டு வளர்ந்துகொண்டிருந்த காலம் அது. பொதுக்கூட்ட மேடைகள் மட்டுமன்றி, திரை உரையாடல்கள் வழியாகவும் திமுக தலைவர்கள் சொல் வலிமையையும் கருத்து வளத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். தலைவர்களைப் பின்பற்றி, மாணவர்களும் இளைஞர்களும் அடுக்கு மொழிப் பேச்சாலும் சமூக சீர்திருத்த முன்மொழிவுகளாலும் அனைவரையும் கவர்ந்திழுக்கக்கூடியோராக விளங்கினர்.

எண்ணத்திலும் எண்ணிக்கையிலும் செல்வாக்கு மிக்க திமுக மாணவர்களின் ஊடுருவலையும் மீறி, பாண்டியன் மாணவர் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு அவருடைய

**மாணவராக இருந்தபோது, அழகப்பா கல்லூரியில் திமுக மாணவர்களை எதிர்கொள்ளும் அறிவும் ஆற்றலும் சொல்வளமும் கருத்துச்செறிவும் கொண்டிருந்த பாண்டியனுடைய முழுமையான பங்களிப்பினை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் வழியாகப் பயன்படுத்திக் கொள்ளப் பொதுவுடைமை இயக்கம் தவறிவிட்டது என்றுதான் கருதத் தோன்றுகிறது.**

பேச்சாற்றல் மட்டுமன்றி, ஆழ்ந்த ஆங்கில அறிவும் மார்க்சிய அறிமுகத்தால் பெற்றிருந்த விரிந்த பார்வையும் துணைநின்றன. இவரை அடுத்து, இவரது இளவல் தோழர் தா.பொன்னிவளவனும் அழகப்பா கல்லூரி மாணவர் பேரவைத் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.இளமையிலேயே மறைந்துவிட்ட தோழர் பொன்னிவளவன் பொதுவுடைமை இயக்கத்தோடு முழுமையாக இணைந்திருந்தார்.

1950களின் தொடக்கத்தில் இருந்து 1967இல் ஆட்சிக்கு வரும்வரை, கல்லூரி மாணவர்களிடையே திமுகவினரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெறுவது என்பது எண்ணிக்கூடப் பார்க்க இயலாத நிலையாகவே அன்று நீடித்திருந்தது. இந்தப் பின்புலத்தில் பாண்டியனும் பொன்னிவளவனும் மாணவர்களிடையே போட்டியிட்டுப் பெற்ற வெற்றி தனித்துவமானதாகும்.

அப்போது, ஒன்றுபட்ட இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மாணவர் அமைப்பு பெரிதும் செயல்பாட்டில் இருக்கவில்லை என்றே கூறிவிட முடியும். பொதுவுடைமை ஆர்வம் கொண்ட ஒருசில மாணவர்கள் ஆங்காங்கே கல்லூரிகளில் இருந்திருக்கலாம்.1948–50களில் ஏற்பட்ட கட்சியின் தடையை அடுத்து, 1952 பொதுத் தேர்தலில் அன்றைய சென்னை மாநிலத்தில் கிடைத்த எதிர்பாராத பெரும் வெற்றிக்குப் பிறகும்கூட, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மாணவர்களை அமைப்பு அடிப்படையில் ஒன்றிணைப்பதில் முனைப்புக் காட்டவில்லை. இந்த நிலை 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டம் முடியும் வரை தொடர்ந்துகொண்டிருந்தது. 1964இல் பிரிந்து சென்ற மார்க்சிஸ்ட்டுக் கட்சியிலும் இதே நிலைதான். அதனால்தான், பாண்டியன், பொன்னிவளவன் ஆகியோரது வெற்றி சிறப்பித்துப் பார்க்கப்படுகிறது.

திராவிட இயக்கக் கருத்து நிலைக்கு எதிர்வினையாற்றக்கூடிய, அடுத்தகட்ட வளர்ச்சியினை முன்னிறுத்தக்கூடிய, மாற்றினை முன்மொழியக்கூடிய அறிவும் ஆற்றலும் திறனும் வல்லமையும் பாண்டியனுக்கு வாய்த்திருந்தது என்பதை மறுக்க முடியாது. இங்கு மற்றொன்றையும் மறந்துவிடக்கூடாது. தனது கல்லூரிப் பருவத்திலேயே 1953இல் தோழர் ஆர். எச். நாதன்வழியாக பாண்டியன் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர் ஆகிவிட்டார். தோழர் ஜீவா அவர்களின் தொடர்பும் அக்காலத்திலேயே அவருக்கு ஏற்பட்டுவிட்டது. இவை பாண்டியனின் வளர்ச்சி–பயிற்சிப் படிக்கட்டுகளாக அமைந்தன.

பொருளியலில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தாலும், இவரது ஆங்கில அறிவின் பின்புலத்தில் அவர் படித்த அழகப்பா கல்லூரியிலேயே ஆங்கிலத் துறையில் பயிற்றுநராக அமர்ந்தார். அப்போது விரிவுரையாளர் பணிக்கு முன்னதாக, பயிற்றுநர் (Tutor) என்ற ஒரு படி நிலை இருந்தது.

அடுத்து, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கப்பட்டபோது, 1961ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற முதல் மாநாட்டில் ஜீவா தலைவராகவும் பாண்டியன் பொதுச்செயலாளராகவும் பொறுப்பேற்றனர். இதற்குப் பின்னர் கல்லூரிப் பணியை உதறித் தள்ளிவிட்டு சென்னை வந்தடைந்த பாண்டியன், சட்டக்கல்லூரியில் சேர்ந்திருந்தாலும் கட்சியின் முழுக் கால ஊழியராகவே செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

கலை இலக்கியப் பெருமன்றப் பணிகளோடு, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சென்னை மாவட்டச் செயலாளர், மதுரை மாவட்டச் செயலாளர், சென்னைத் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் துணைத் தலைவர், வேறு பல தொழிற்சங்கங்களின் பொறுப்புகள், ஜனசக்தி இதழின் கட்டுரையாளர், கட்சிப் பொதுக்கூட்டங்களில் பரப்புரை என அவருடைய செயல்பாடுகள் மேலும் விரிவடைந்தன.

கட்சியின் மாநிலக்குழு, நிர்வாகக்குழு, செயற்குழு, தேசியக்குழு, தேசிய நிர்வாகக் குழு என உயர்மட்ட அமைப்புகளின் உறுப்பினர் பொறுப்புகளும் வந்து சேர்ந்தன. அடுத்து தமிழ் மாநிலச் செயலாளர் ஆகும் வாய்ப்பும் வந்தமைந்தது.

பாண்டியன் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச் சிறந்த பேச்சாளர் என்பது அனைவரும் அறிந்ததுதான். கட்சியினர் மட்டுமன்றி, மாற்றுக் கட்சியினர், பொதுமக்கள், கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், முதியோர், ஆண்கள் பெண்கள், கலை இலக்கியப் படைப்பாளர்கள், நகர்ப்புற – ஊர்ப்புற மக்கள், படித்தோர், படிக்காதோர், அறிவுத் துறையினர் என அனைவரையும் தனது பேச்சால் ஈர்க்கக்கூடியவராக அவர் இருந்தார். அவருடைய இறுதி மூச்சு வரை இந்த ஈர்ப்பு ஆற்றல் அவரிடம் தொடர்ந்து கொண்டிருந்தது. இதனால், பாண்டியனை ஒரு பேச்சாளராக மட்டுமே பலரும் கருதுகின்றனர். ஆனால், அவர் அதற்கும் மேலானவர். ஒரு காலத்தில் சிறந்த மேடைப் பேச்சாளராக இருந்தோரே அரசியலிலும் தலைமைப் பொறுப்புக்கு வந்தனர். குறிப்பாக, திராவிட இயக்கத்தில் இதனை வெளிப்படையாகக் காண முடியும்.

**கட்டுக்கோப்பான அரசியல்கட்சி என்ற அளவில், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தனிஒருவர் மட்டுமே திக்குமாற்றித் திருப்பிவிட முடியாது, திருத்திவிட முடியாது என்பது உண்மைதான். ஆனாலும், தனிமனிதருக்கும் பங்களிப்பு உண்டு என்பதை பாண்டியன் நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறார்.**

ஆனால், ஆழமாக ஆய்ந்து பார்த்தால், பேச்சாளர்களுக்கும் தலைவர்களுக்கும் உள்ள நுட்பமான வேறுபாடுகள் எளிதில் புலப்படும். தமிழ், அடுக்குமொழி, இலக்கிய நயம், சொல்வளம் என்பனவற்றால் மட்டுமே தலைவர்கள் உருவாகிவிடவில்லை. திராவிட இயக்கத் தலைவர்கள் பலர், தங்களுடைய பேச்சாற்றலோடு, சமூக நீதிக் கருத்துக்களையும் புதிய செய்திகளையும் இணைத்தே வெற்றி பெற்றனர். அண்ணா, கலைஞர், சொல்லின் செல்வர் சம்பத், பேராசிரியர் போன்றோர் இந்த வகையினர். மேலும், தலைமைக்கான ஆளுமையும் அவர்களுடன் சேர்ந்துகொண்டது. பிறர் பேச்சாளராக மட்டுமே இருந்தார்களே அன்றி தலைவர்களாக அடுத்த கட்டத் தகுதி பெறவில்லை.

இதைப் போன்றுதான், பொதுவுடைமை இயக்கத்திலும், பேச்சாற்றலுடன் கருத்துச் செறிவையும் தலைமைக்கான ஆளுமையையும் கொண்டிருந்தோர் மட்டுமே தலைவர்களாக உயர முடிந்தது. பாண்டியன் போலவே ஏற்ற இறக்கங்களுடன் தமிழோடு விளையாட முயன்ற பலர் தலைமை பெற முடியவில்லை. இதேபோன்று, பேச்சாற்றல் என்ற தனித்திறன் அமையாவிடினும், தங்களது கருத்து வலிமையாலும் அமைப்புத் திறனாலும் ஆளுமைமிக்க தலைவர்களாக இயக்கத்தில் பலர் மேன்மை பெற்றுள்ளனர்.

பாண்டியனது விரிந்த பார்வையும் பரந்த நோக்கும் அகன்ற அறிவும் ஆழமான புலமையும் ஆற்றல்மிக்க வெளிப்பாடும் அவரைத் தனித்தன்மை கொண்டவராக ஏற்றிவைத்தன. அவருடைய எல்லைகள் விரிந்து கொண்டே இருந்தன. தமிழர், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழர் நலன் என்பவற்றோடு அவர் நெருக்கமாக இருந்தார். மார்க்சியத்தை ஆழமாக அறிந்து வைத்திருந்ததைப் போலவே, பெரியாரையும் புரிந்துகொண்டிருந்தார். தனித்தமிழ் இயக்கத்தினர் நம்பிக்கைகளையும் அவர் புறக்கணித்துவிடவில்லை. தமிழ்த் தேசியம் என்பதிலும் அவருக்குத் தெளிவான கருத்துக்களும் புரிதல்களும் இருந்தன. பிற மொழித் திணிப்பை அவர் புறம் தள்ளினார். சுருக்கமாகச் சொன்னால், அவர் காலத்தில் இருந்த முற்போக்கு முனைப்புகள் அனைத்திலும் அவருக்கு இயைபும் ஈடுபாடும் நம்பிக்கையும் நாட்டமும் இருந்தன. ஈழத்தமிழர் விடுதலையிலும் அவர் ஈர்ப்புக் கொண்டிருந்தார்.

பாண்டியன் அவர்களோடு எனக்கு 1967-68ஆம் கல்வியாண்டில் அறிமுகம் ஏற்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் பேரவையில் பேச அவரை அழைத்திருந்தோம். அடுத்து, 30-03-1968அன்று அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் (அப்போது தமிழக மாணவர் மன்றம்) தென்னார்க்காடு மாவட்ட மாநாட்டில் பேச, தோழர் பாலதண்டாயுதம் அவர்களுடன் பாண்டியன் அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வந்திருந்தார். நான் முன்னின்று ஏற்பாடு செய்த மாநாடு அது. சற்றேறக்குறைய 18 ஆண்டுகளுக்குப் பின்னர் பொதுவுடைமை இயக்கம் சார்ந்த மாணவர் அமைப்பு நடத்திய முதல்மாநாட்டு நிகழ்வும் அதுதான்.

தோழர் ப. மாணிக்கம் அவர்களை அடுத்து மாணவர் இயக்கத்துக்கு பாண்டியன் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு எங்களுடைய உறவும் தொடர்பும் மிகுந்தன. நானும் 1969இல் தமிழ் முதுகலை பயில சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்தேன். இதனால் நாங்கள் அன்றாடம் பார்க்கவும் பழகவும் வாய்ப்பு அமைந்தது. மாணவர் அமைப்புக்காக மாணவர் முழக்கம் என்ற திங்கள் இருமுறை இதழ் 05-08-1969இல் தொடங்கப்பட்டது பாண்டியன் ஆசிரியராகவும் நான் பொறுப்பாசிரியராகவும் இருந்தோம். கட்சியின் செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்டு புதிய கருத்துக்களோடு மாணவர் முழக்கம் நடத்தப்பட வேண்டும் என்பதில் பாண்டியன் உறுதியாக இருந்தார். முழு உரிமையுடன் இதனை நடத்த எனக்கு வாய்ப்புகளைத் தந்தார்.

தமிழ்நாட்டில் பெரியார் விதைத்திருந்த கருத்துக்களையும் இணைத்துக்கொண்டு பொதுவுடைமை இயக்கம் செயல்பட வேண்டும் என்ற தனது எண்ணங்களை அவர் பலவாறு வற்புறுத்தியுள்ளார் தோழர்களிடம் உரையாடும்போது இக்கருத்துக்களை வெளிப்படையாகவே பேசியிருக்கிறார்.

திராவிட இயக்கப் பரப்புரைகளையும், அவற்றால் விளைந்த வியக்கத்தக்க- வீரியமிக்க தாக்கங்களையும், அதனால் அடித்தளத்தில் ஏற்பட்டுக்கொண்டிருந்த பெரும் சமூக மாறுதல்களையும், காங்கிரசைப் போலவே பொதுவுடமைக் கட்சியினரும் பெரிதும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. திராவிடர் கழகமும் 1957 தேர்தல் வரை திராவிட முன்னேற்றக் கழகமும்தொடர்ந்து தேர்தல் அரசியலில் ஈடுபடாமல் சமூக இயக்கங்களாகவே நீடித்துக்கொண்டிருந்ததால், அவற்றின் விரிவும் வீச்சும் புரிந்து கொள்ளப்படவில்லை என்று கருத இடமில்லை. ஏனெனில், பெரியாரின் சோவியத் பயணம், சிங்காரவேலர் - ஜீவா தொடர்புகள், பொதுவுடைமைக் கருத்துக்களையும் முன்னிறுத்திய சுயமரியாதை - திராவிடர் இயக்கங்களின் பரப்புரை போன்றவற்றை கம்யூனிச இயக்கம் பெருமளவில் கண்டுகொள்ளாமல் புறக்கணித்தது என்றே கூறலாம். திமுக பிரிந்த பின்னர் அதனுடைய வளர்ச்சியின் பரவலும், திரையுலகில் அதன் பங்களிப்புப் பயன்களும்,1957 தேர்தல் வெற்றிகளாக

வெளிப்பட்ட பின்னர்தான் பொதுவுடைமை இயக்கத்தினரின் கண்கள் திறந்தன. உண்மையான கள நிலைமைகளைக் காணவிழைந்தனர். ஆனால், புரிந்துகொள்ள முயன்றனர் என்று கருத இயலாது.

இவற்றின் எதிர்வினையாகவே தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. தாமரை இதழும் தொடங்கப்பட்டது. இரண்டையும் வழிநடத்தியவர் ஜீவா அவர்கள்தான். அன்றைய கட்சித் தலைமையின் கட்டுக்குள் முழுமையாக நின்றுகொண்டுதான், வரையறைகளுக்குள் முடங்கிக்கொண்டுதான் கலை இலக்கியப் பெருமன்றம் செயல்பட வேண்டியிருந்தது.

சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திமுக என்ற அடுத்தடுத்த வளர்ச்சிக் கட்டங்களில், சமூக-பொருளிய-பண்பாட்டுத் தளங்களில் தமிழ்ச்சமூக மறுமலர்ச்சிக்காகவும் மாறுதல்களுக்காகவும்பல செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. சாதி மறுப்பு, கலப்புமணம், சுயமரியாதை மணம், விதவை மறுமணம், பெண் விடுதலை, பெண் கல்வி, கடவுள் மறுப்பு, ஆரியப் புறக்கணிப்பு, இந்தி எதிர்ப்பு, நிலவுடைமை எதிர்ப்பு, உழைப்பாளரைப்



**தமிழக மாணவர் மன்றத்தின் (அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்) தென்னார்க்காடு மாவட்ட மாநாடு 30-03-1968 அன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது தோழர்கள் மே.து.ரா., கே. பாலதண்டாயுதம், ஈழத்துச் சிவானந்தன் (அண்ணாமலையில் பயின்றுகொண்டிருந்த இலங்கை எழுத்தாளர்), தா. பாண்டியன், ஜெயராமன் (இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தென்னார்க்காடு மாவட்டச் செயலாளர்).**

போற்றுதல், தமிழ்ப் பண்பாட்டை முன்னிறுத்துதல், தமிழ் இலக்கியங்களைப் பெருமைப்படுத்துதல் என்பன போன்ற பலவடிவங்களை அவை கொண்டிருந்தன. இவற்றையொட்டிய பரப்புரைகள், நாடக-திரை ஆக்கங்கள், இலக்கியப் படைப்புகள், இயக்கங்கள் எனப் பல்வேறு முயற்சிகளும் முன்னேற்றம் கண்டு இருந்தன.

இவற்றுக்கு எதிர்வினையாகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், பெரியாரையும் அவரது கொள்கைகள் சார்ந்த அனைத்து வளர்ச்சி நிலைகளையும் முற்றாக- முழுமையாகப் பொருட்படுத்தாமல் ஒதுக்கிவைத்துவிட்டு -விலக்கிவைத்துவிட்டு, தமிழர் பண்பாட்டை மட்டுமே முன்னெடுக்க நினைத்தது; திராவிட இயக்கங்களின் முற்போக்கு முனைப்புகளாக வெளிப்பட்டுக்கொண்டிருந்த இலக்கியப் படைப்புகளை நச்சு இலக்கியங்களாகப் பார்த்தது; மக்கள் மனம் கவர்ந்த திரையாக்கங்களைத் தீமை தருவனவாகக் கருதியது.

திகவிலிருந்து பிரிந்து வந்த காலகட்டங்களில், திமுக பெரியாரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய பரப்புரைகளை அமைத்துக்கொண்டது. இதனால், பெரியார் பண்படுத்தி வைத்திருந்த களத்தை முழுமையாகத் தனதாக்கிக்கொண்டது. தேர்தல் அரசியலுக்கு வந்த பின்னர், படிப்படியாக வாக்கு வங்கி அரசியலுக்கு ஏற்பத் தனது போக்குகளை மாற்றியும் திரித்தும் வேறு வகையான கொள்கைகளை வடிவமைத்துக் கொண்டது. இருப்பினும், மேம்போக்கான சில தொடர்ச்சிகளை மட்டும் அவ்வப்போது சுட்டிக்காட்டி, சுயமரியாதை இயக்கக் காலம் தொட்டுப் படிப்படியாகப் பெற்றிருந்த பயன்கள் அனைத்துக்கும் உரிமையும் பங்கும் இருப்பதாக இன்னும் நம்பவைத்துக்கொண்டு இருக்கிறது. அதுபோன்று பொதுவுடைமை இயக்கமும், அன்றைய சமூக-பொருளிய-பண்பாட்டு முன்னெடுப்புகள் அனைத்தையும் உள்வாங்கி அரவணைத்துக் கொண்டு- தனதாக்கிக்கொண்டு, அங்கிருந்து தொடங்கி, பின்னர் தனது கண்ணோட்டத்துத் தக்கவாறு அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு எடுத்துச் சென்றிருக்கவேண்டும். ஏனெனில், அவை எதுவும் மார்க்சியத்துக்கோ, முற்போக்குச் செயல்பாடுகளுக்கோ முழு அளவில் முரண்பட்டதாக எப்போதும் இருக்கவில்லை.


மாறாக, முன் வரலாற்றை முற்றிலுமாக மறந்தோ, மறுத்தோ, மறைத்தோ, கலை இலக்கியப் பெருமன்றம் வழியாகப் புதியதொரு முற்போக்கு முகாமைக் கட்டமைத்துவிட முடியும் என்று அன்றைய பொதுவுடைமையினர் நம்பினார்கள் அல்லது நம்பவைக்க முயன்றனர். சமூக சீர்திருத்தங்களை, அதாவது சமூக மாறுதல்களை வேண்டிய பல திராவிட எழுத்தாளர்களைப் புறக்கணித்து, அவர்களுக்கு எதிரணியில் இருந்து கொண்டிருந்த 'தேசிய' எழுத்தாளர்களை முன்னிலைப்படுத்திச் சிறப்பித்தனர். 1967 தேர்தலுக்கு முன்னரும் பின்னரும், திமுகவுடன் கூட்டணி ஏற்பட்டதை அடுத்து, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நோக்கும் போக்கும் நீண்ட காலம் திக்குத் தெரியாத காட்டில் பயணம் செய்வதாகவே அமைந்துவிட்டது.

பண்பாட்டுக் கூறுகளை முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தாலும், பாண்டியனுடைய தெளிவும் புரிதலும் கலை

இலக்கியப் பெருமன்றத்தின் போக்குகளை மாற்றப் பயன்படாமல் போய்விட்டது என்று கூறினால் அது தவறாகாது. மாணவராக இருந்தபோது, அழகப்பா கல்லூரியில் திமுக மாணவர்களை எதிர்கொள்ளும் அறிவும் ஆற்றலும் சொல்வளமும் கருத்துச் செறிவும் கொண்டிருந்த பாண்டியனுடைய முழுமையான பங்களிப்பினை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் வழியாகப் பயன்படுத்திக் கொள்ளப் பொதுவுடைமை இயக்கம் தவறிவிட்டது என்றுதான் கருதத் தோன்றுகிறது.

எந்தப் பொருளாக இருந்தாலும் நுணுக்கமாக ஆய்ந்து தெரிந்துகொள்ளும் இயல்பு பாண்டியனுடையது. மார்க்சிய அறிவு, உலக நிகழ்வுகள், இந்திய அரசியல் போக்குகள், தமிழ்நாட்டின் சூழல்கள்என்பவற்றோடு, தமிழ், ஆங்கில இலக்கியங்களில் பரவலாக அறிமுகம் அவருக்கு இருந்தது. அதனால்தான், எழுத்திலும் பேச்சிலும் அவரால் தனித்துவத்தை வெளிப்படுத்த முடிந்தது.

ஜீவா காலம் வேறு. கட்சி பிளவுபடாதபோது அவர் எடுத்த முயற்சிகள் கலை இலக்கியப் பெருமன்றத்துக்கு மதிப்பை உருவாக்கிக் கொடுத்தன என்பதை மறுக்க முடியாது. எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள் என வேறுபட்ட பலரையும் ஈர்க்கும் ஆற்றலாக ஜீவா விளங்கினார். ஆனாலும், குறிப்பிட்ட மட்டத்துக்குக்கீழே உள்ள மக்களிடம் கலை இலக்கியப் பெருமன்றம் சென்றடையவில்லை என்பதும் உண்மை. உழைக்கும் கீழ்த் தட்டு மக்களைச் சென்றடையக்கூடிய செயல் திட்டங்கள் ஏதும் பெருமன்றத்திடம் இருக்கவில்லை. அதற்கான கொள்கை முன்னெடுப்புகளும் இருக்கவில்லை. உழைக்கும் மக்கள் கலை, இலக்கியம் என்ற உரையாடல்களின் இடையே, அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கான சீர்திருத்தச் செயல்பாடுகள் ஒன்றிணைக்கப்படவில்லை. கலை இலக்கியப் படைப்பாளரின் - பார்வையாளரின் - துய்ப்போரின் அமைப்பாக மட்டுமே இருந்ததேயன்றி, சமூக-பண்பாட்டு இயக்கமாக மாறி மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. அதாவது, திராவிட இயக்கத்துக்கான எதிர்வினையாக எழ முடியவில்லை. இதனால், பாண்டியனது பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் பரவலான மக்கள் திரளை ஈர்த்தன, இணைத்தன, இணங்கவைத்தன. இயங்கவைத்தன என்றாலும், இத்தகைய சார்பு நிலைகளைப் பயன்படுத்தி, அடுத்தடுத்த கட்ட நகர்வுகளுக்கு இழுத்து வரக்கூடிய அளவுக்குச் செல்வாக்குச் செலுத்தக்கூடிய செயல்திட்டங்களைக் கட்சி வடிவமைத்துக் கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கது.



ஜீவாவின் மறைவை அடுத்து, 1964 பிளவுக்குப் பின்னர், குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைமையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன என்றுதான் கூற முடியும். தோழர்கள் பாலதண்டாயுதம், வ. சுப்பையா, ப. மாணிக்கம், ஏஎஸ்கே, மா. காத்தமுத்து போன்றோர் தமிழ் மாநிலச் செயற்குழுவில் இடம்பெற்றுவிட்டார்கள். அப்போது பாண்டியன் மாநிலக்குழு உறுப்பினராக மட்டுமே இருந்தார். மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் ஒன்பது பேரில் பெரும்பான்மையோர் விரிந்த பார்வையும் பரந்த நோக்கமும் கொண்டோராகவே இருந்தனர். இவர்களுக்கு அப்பால், பரந்துபட்ட பார்வையுடன் விரிவாக்க எண்ணங்களைக் கொண்டிருந்தோர் பலர், தலைமைப் பொறுப்புக்கு வெளியிலும் இருந்தனர். தோழர்கள் ஆர்.கே. கண்ணன், நாகை கே. முருகேசன் போன்ற எண்ணற்றோர் இருந்தனர்.

தமிழ்நாட்டுச் சூழலில், பெரியாரும் திராவிட இயக்கமும் விழிப்புணர்வை ஏற்படுத்திவைத்திருந்த வாய்ப்பினை அடிப்படைகளாக அமைத்துக்கொண்டு கட்சியைக் கட்டமைக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியான, தெளிவான கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்பதை இவர்கள் அனைவரோடும் உரையாடிய வகையில் நான் உணர்ந்திருக்கிறேன்.

சிறையிலிருந்து விடுதலையானபோது, அரசியல் அடிப்படையில் திமுக எதிர்ப்பாளராக இருந்தபோதிலும், பெரியாரை எந்தவகையிலும் புறக்கணித்தவராக பாலதண்டாயுதம் இருக்கவில்லை. 1967 தேர்தலையடுத்து, குறிப்பாக 1971 தேர்தலுக்குப் பின்னர், பாலதண்டாயுதம் அவர்களுடைய எண்ணங்களும் பார்வையும் மாற்று வகையிலான செயல்திட்டங்களை முன்வைக்கக்கூடிய அளவிலேயே அமைந்திருந்தன. 1972க்குப் பிறகு, கட்சிஅளவில் கலை இலக்கிய அரங்கத்திற்கு பாலதண்டாயுதம் பொறுப்பேற்றார். அவரது பணிகளில் என்னையும் இணைத்துக் கொண்டு, கலை இலக்கியப் பெருமன்றத்தின் அமைப்பாளராக்கினார். இருப்பினும், தமிழகச் சூழலுக்கு ஏற்றதான செயல்திட்டங்களும் நடைமுறை அரசியல் செயல்பாடுகளும், இவற்றையொட்டிய அணிதிரட்டல்களும் ஏன் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என்பது புதிராகவே இருந்தது. பாண்டியன் தமிழ் மாநில நிர்வாகக் குழு, செயற்குழுப் பொறுப்புகளுக்கு வந்த பின்னரும் இந்த நிலை நீடித்தது.

ப. மாணிக்கம் மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்ற பின்னர், மாறுதலுக்கான சில முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. திராவிட இயக்கத்தின் அடிப்படைகள், கொள்கைகள், நடைமுறைகள், இலக்கியப் படைப்புகள், திரைத் துறையின் பங்கு, பரவல், தாக்கங்கள் போன்றவை குறித்து முழுமையாக மதிப்பிட, கோவையில் கலந்தரங்கம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1980களின் தொடக்கத்தில், சென்னையில் மற்றொரு கூட்டம் நடைபெற்றது. இதற்குத் தலைமை ஏற்கும் வாய்ப்பினை மாணிக்கம் அவர்கள் எனக்கு வழங்கினார்.

தோழர்கள் பாலதண்டாயுதம், மாணிக்கம், பாண்டியன், இவர்களைப் போன்ற வேறு சிலர் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஒன்றியிருந்தன. இவர்கள் இணைந்து பணியாற்றும் சூழல் ஏற்பட்டிருந்தால், தமிழ்நாட்டில் வியக்கத்தக்க மாற்று அரசியல் மட்டுமன்றி, சமூக-பண்பாட்டுத் தளங்களிலும் வேறுபட்ட முற்போக்கு முனைப்புகள் முகிழ்ந்திருக்க வாய்ப்புகள் மிகுந்திருக்கும். எதிர்பாராது பாலன் 1973இல் மறைந்துவிட்டார். அடுத்து, கட்சியில் மீண்டும் ஏற்பட்ட ஒரு பிளவினால் பாண்டியன் பிரிந்து சென்றுவிட்டார். அப்போது மாநிலச் செயலாளராக இருந்த மாணிக்கம் அவர்களின் உழைப்பும் முயற்சிகளும் கட்சி அமைப்புகளைக் கட்டிக் காப்பதில் திக்கு மாறிவிட்டன. எண்ணங்களைச் செயல்படுத்தக் காலம் இடம்தரவில்லை. அதைப்போன்று, பாண்டியனது பங்களிப்பு அப்போது அவர் சார்ந்திருந்த கட்சிக்குச் சென்று விட்டது. மாணிக்கம், பாண்டியன் ஆகிய இருவரும் இணைந்து செயல்படக்கூடிய வாய்ப்பும் சூழலும் அமைந்திருந்தால், கட்சியின் செயல்பாடுகளை முன்னெடுப்பதில் பல மாறுதல்கள் நேர்ந்திருக்கலாம். ஆயினும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பாண்டியன் மீண்டும் இணைந்த பிறகு மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அப்போது அவர் தனது எண்ணங்களுக்கு ஏற்பப் பல முயற்சிகளை முன்னெடுக்க முயன்றார் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல ஆண்டு காலப் பட்டறிவினால், கட்சி அணிகளிடமும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அடுத்த தலைமுறையினர், புதிய எண்ணங்களையும் ஏற்பாடுகளையும் உள்வாங்கிக்கொள்ளும் உள்ளங்களையும் உணர்வுகளையும் பெற்றிருக்கின்றனர். இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் தமிழ் மாநிலத் தலைமையிலும் மாறுதல்கள் தென்படுகின்றன. மாநிலச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன் போன்றோர் முந்தைய தலைமுறையின் தவறுகளைப் புரிந்திருக்கின்றனர் என்றே தோன்றுகிறது.

அதேவேளையில், 1950, 1960களிலும்,1970களிலும் இருந்த கள நிலை தமிழ்நாட்டில் வெகுவாக மாறிவிட்டது. தமிழ்த் தேசிய இயக்கங்கள், புதிய அரசியல் கட்சிகள், சமய-சாதிய அமைப்புகள், சமய நல்லிணக்கக் குலைவு என வெவ்வேறான போக்குகள் தலையெடுத்திருக்கின்றன. முற்போக்குப் பயணங்களும் இருக்கின்றன. பிற்போக்குச் சறுக்கல்களும் இருக்கின்றன. மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சி என்ற பொறுப்பில், முற்போக்கு முனைப்புகள் அனைத்தையும் உள்வாங்கிக்கொண்டு, அவை யாவற்றையும் தனதாக்கிக்கொண்டு, தலைமை தாங்க முன்வரவேண்டும். பெரியார் பண்படுத்திக் கொடுத்த களம், அடித்தளத்தில் வலிமையாக இருந்தாலும், மேற்கட்டுமானம் தளர்ந்து கிடக்கிறது. தேர்தல் அரசியலுக்காக எதையும் விட்டுக்கொடுக்கும் மனப்போக்கு வேரூன்றிவிட்டது.

ஈழத்தமிழர் உரிமைகளையும் விடுதலையையும் முன்னிலைப்படுத்தி பாண்டியன் மேற்கொண்ட மாநிலம் தழுவிய இயக்கங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக, 2008 அக்டோபர் 2 அன்று மேற்கொண்ட உண்ணாமைப் போராட்டத்தைக் காணலாம். தோழர் மாணிக்கம் தொடங்கிவைத்து, தோழர் து. ராஜா தொடர்ந்த ஈழச் சிக்கல்கள் குறித்த புரிதல்கள் பாண்டியனது முயற்சிகளை எளிதாக்கின.

அரசியல் அளவிலோ, அமைப்பு வகையிலோ,பார்வை நோக்கிலோ, நடைமுறை நிலையிலோ பாண்டியனது செயல்பாடுகளில் மறுப்புகள் இருக்கலாம்; மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம்; முரண்பாடுகளும்கூட இருக்கலாம். ஆனால், கம்யூனிஸ்டுக் கட்சியினது இயக்கச் செயல்பாடுகளின் எல்லைகளை மேலும் விரிவாக்க அவர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது

கட்டுக்கோப்பான அரசியல் கட்சி என்ற அளவில், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தனி ஒருவர் மட்டுமே திக்கு மாற்றித் திருப்பிவிட முடியாது, திருத்திவிட முடியாது என்பது உண்மைதான். ஆனாலும், தனிமனிதருக்கும் பங்களிப்பு உண்டு என்பதை பாண்டியன் நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

பொதுவுடைமையரின் வருங்காலம் (2017, என்சிபிஎச்) என்ற அவரது நூலில்,தனது கனவுகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், பட்டறிவுப் பாடங்கள், பொதுவுடமை இயக்கம் நழுவவிட்ட நல் வாய்ப்புகள், செய்யவேண்டிய கடமைகள் என அனைத்தையும் மிகவும் வெளிப்படையாக மனம் திறந்து கூறியிருக்கிறார்.

அகவையும்உடல் நலனும் ஒத்துழைத்திருந்தால், அவரது நீண்ட பயணத்தின் பயன்களை எட்டிப்பிடிக்கும் தொலைவுக்கு அவரால் பயணிக்க முடிந்திருக்கலாம். பாண்டியன் போன்றோரை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் அளவில் கட்சிஅப்போது இருக்கவில்லை. ஆனால் இன்றைய நிலை வேறு.

தமிழ்நாட்டில் இன்றைய நிலைமைகளைக் கணக்கில் கொண்டு தமிழ், தமிழர், தமிழர் உரிமை என்பன உள்ளிட்ட சமூக-பொருளிய-பண்பாட்டு-அரசியல் திட்டங்களைக் கட்சி வகுத்துக் கொள்வது இயலாதது அல்ல. இன்று கம்யூனிஸ்டுக் கட்சியின் பொறுப்பில் உள்ளோருக்கு இதில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. கட்சியின் அனைத்திந்தியப் பொதுச்செயலாளர் ராஜாவும் ஒத்த கருத்துடையவர்தான்.இவர்கள் அனைவரும் விரிந்த பார்வையுடன் இன்றைய வேண்டல்களுக்கு வடிவம் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பாண்டியன் இன்று (26-02-2021) மறைந்திருக்கலாம். ஆனால்,பாண்டியன் போன்றே இப்போதும் பலர் இருக்கின்றனர். புதிய நிலைமைகளில், பாண்டியன் போன்று இன்னும் பலர் தோன்றுவார்கள். இவர்கள் அனைவரது ஒன்றுபட்ட, ஒன்றிணைந்த பங்களிப்புகள் தமிழ்நாட்டுக்கான எதிர்காலமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**கட்டுரையாளர்: கல்வியாளர், பத்திரிகையாளர்**

குஞ்சரம் | 1

# கானல் வரி

கருகும் முது மாலை.
பூம்புகாரின் தொல்கரைகள் சிவக்க
நுரைக்கும் திராட்சை மதுவாய்
நெளிகிறது எழுவான் கடல்.
இது படுவான் கரையென்றால்
மாலை செம்பொன்னாய்ச் சொரியுமே.
எனினும் காதலில் சிறகுகள் உரச
கூடு ஏகும் பறவைகளின் பாட்டில்
கானல் வரி தொனிக்கிறது.
*
இந்த மதுவார்க்கும் மாலையில்
தனித்த முது கவிஞன்.
நினைவு இடறி நான்கு தசாப்தங்கள்
காலச்சரிவில் உருள்கின்றேன்.
எங்கோ ஒரு ஜப்பானியப் பாடல்
தாபம் வளர்கிறது.
*
அது ஈழத்தின் கொடும்பகையை எதிர்த்து
ஒவ்வொருவராய் நாங்கள்
போருக்கு எழுந்தகாலம்.
எத்திசை செலினும் அத்திசை சோறே
அத்திசை தமிழே என
தோழர்கள் புலம் பெயர்ந்தார்..
*
இது ஆண் கடல்.
காவிரிக் கரையில்
இந்தக் கொடுங் கடலை நம்பியொரு
தொல்நகரம் இருந்ததுபோல்
என்னருகே மெல்ல
யப்பானியப் பாடல்களை இசைத்தபடி
ஆரி மக்சிமோட்டோ இருந்தாள்.
*
வாடிய தென்னந்தோப்பாய் அசையும்
நரைத்த தாடியின்கீழ்
கீழடியாய் மறைந்திருக்குமே
காதல் தொன்மங்கள்.

# தேவதைகளின் மண்

கோபத்தில் நடுநடுங்கியபடி
இணைய இதழில் எனது
சிதைக்கபட்ட தாஜ்மகாலைப் பார்த்தேன்.
கண்ணகி பிய்த்து வீசிய
முலையின் படத்தோடு ஒரு வரியில்
"மணல் கொள்ளை" என்கிற தலைப்பு.
மதுரையாய் பற்றி எரிகிறது மனசு.
*
கண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டேன்
1983ல் கரை ஒதுங்கியது மனசு.
தமிழைப் பேசினோம் என்பதற்காக
சிங்கள மண்ணில் வகைதொகையின்றி
தெருத்தெருவாக நாம்கொல்லப்பட்ட
கருப்பு ஜூலைக்கு முந்தைய மாசம்.
*
போரா புலப்பெயர்வா என
இளையோர் விவாதம் வளர்க்கும்
யாழ்பாணத் தெருவிலோர் இராஜதந்திரி
காரையும் பேருந்தையும் வெறுத்து
மோட்டார் சைக்கிளில் செல்கிறான்.
பின்னே இருக்கை விளிம்பின் விளிம்பில்
ஆரிமக்சிமோட்டோ.
அவளோ மகிழ்ச்சி கோபம் பயத்தில்கூட
ஜப்பானிய பாடல்களை இசைக்கிறபெண்.
எத்தனை எத்தனை "பிரேக்" அடித்தாலும்
அவள் தாளம் பிசகாது.
*
வசந்தத்தில் வங்கக் கடலோரம்
அடம்பன் கொடி முந்தானை கிழிய
வான்பார்த்த தேவதைகள்
வெய்யில் காய்கிற அந்த
முலைக்காடு கடற்கரைக்கு வந்தோம்.
வழிநெடுக ரீங்காரத்தினூடே
பெயர்ப்பலகை வாசிக்கிற அந்தச்சிறுக்கி
மணல்காடு என வாசித்தபடி
புதைந்த வண்டியை நீத்தாள்.
*

குஞ்சரம்

கவிதை

வ.ஐ.ச.ஜெயபாலன்

துயிலும் பேரழகிகளின் மார்புகளில்
சூரிய கள்ளன்
மஞ்சள் பூசுவதைப் பார்த்ததுண்டா?
கீழே இருண்ட சவுக்குத்தோப்பின் பின்னே
நீளும் தேவதைகளின் பாதங்களில்
அலைகள் வெள்ளிக் கொலுசுகள் சூடும்.
கால்கள் நடு நடுங்க ஆரி என்றேன்.
இதுதான் உனக்கான தாஜ்மகால் என்று
மணல் கும்பி ஒன்றைக் காட்டினேன்.
அடம்பன் மலர்களை கொய்ய குனிய
முதன்முதலாகத் தீண்டி தடுத்தாள்.
அவையும் நம்போல கனவுகாண்பவை
உயிர்ப்புள்ள மகத்துவங்கள் என்றாள்.
எனக்கோ கவிதை எழுதமட்டுமே வரும்.

*
மணல் கொள்ளையர்களால் குதறப்பட்ட
தேவதைகளின் முலைகளைப் பார்த்து
கோபமடைந்தேன்.
அது புதைந்துகிடக்கிற ஆயிரம் ஆயிரம்
போராளிகளின் கோபம்.

குஞ்சரம் | 2




பொன்னியின் செல்வன் நாவலை விரும்பிப் பெற்று மீளவும் படிக்கும் புலம்பெயர் தமிழ்ப் பாட்டி திருமதி கமலாவதி தனிநாயகம். இவர் 92வது அகவையில் ஜெர்மனியில் தனது மூத்த மகன் குடும்பத்தோடு வசிக்கிறார். இந்தப் பெருமாட்டி காக்கையின் நீண்டநாள் வாசகர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: க.முகுந்தன்

## நூல் மதிப்புரை

## பக்தவத்சல பாரதி




நூல் :
**பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்**

ஆசிரியர் :
**ஆ. சிவசுப்பிரமணியன்**

வெளியீடு :
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 2021**

பக்கங்கள் : 140
(வண்ண ஒளிப்படங்களுடன்)

விலை : ரூ. 145

பண்டைத் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுகள் இன்று புதுப் பரிமாணங்கள் கண்டுவருகின்றன. பல்துறை ஆய்வுகள் புதிய வெளிச்சங்களைக் காட்டுகின்றன. ஆய்வுப் பொருளைச் சிறியதாக்கி, அவற்றை நுட்பமாக ஆராயும் போக்குகளை உருவாக்கியுள்ளன. இந்தச் சூழலில் "பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்" *(2021)* எனும் தலைப்பில் பேரா.ஆ.சிவசுப்பிரமணியன் (சிவம்) அவர்கள் எழுதியுள்ள இந்த நூல் நம் கவனத்தை ஈர்க்கிறது.

பண்டைத் தமிழர்கள் ஆசிவகம், சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகியவற்றைப் பின்பற்றினார்கள் என்ற கருத்துள்ளது. ஆனால் இந்தச் சமயங்களுக்கு முன்பு தொல்சமய நெறிகள் வழக்கிலிருந்தன எனும் கருத்தும் கவனம் பெற வேண்டும். அத்தகைய ஆய்வுகள் குறைவுதான். அதிலும் 'இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்' பற்றிய தனி ஆய்வு நூல் இதுவரை வெளிவரவில்லை. இந்த வகைமையில் இதுவே முதல் நூல். இதனை நம் காலத்தின் மூத்த நாட்டார் வழக்காற்றியல் அறிஞர் பேரா. சிவம் அவர்கள் எழுதியிருக்கிறார்.

நூலின் தொடக்கம் ஒரு முக்கிய ஆய்வு முறையியலோடு தொடங்குகிறது. நூலின் பொருள் பற்றிய முன்னாய்வுகளைப் பேராசிரியர் "சிவம்" அவர்கள் மதிப்பிட்டுள்ளார். ஆய்வுக்கான வரையறைகளை நுட்பமாகப் பேசியிருக்கிறார். ஆய்வின் தேடுதலுக்கும் உசாவலுக்கும் இவையே அடிப்படையாகும்.

பேரா. நா. வானமாமலையின் தலை மாணாக்கராகிய பேரா. சிவம் 'மந்திரம் சடங்குகள்' *(1987)* நூல் எழுதிய காலம் தொடங்கி தொல் சமயம், நாட்டார் சமயம் பற்றி ஆராய்ந்து வந்துள்ளார். இன்னும் சொல்லப்போனால் இந்த நூலுக்கு முன்பே தச்சுக்கழித்தல், முளைப்பாரி, மதுக்கொடை, ஆடிப்பொம்மை முதலான கட்டுரைகளில் தொல் சமயக் கூறுகளின் முக்கியப் பகுதிகளை ஆராய்ந்துள்ளார். இப் பின்புலங்களோடு இந்த நூலினை எழுதியுள்ளார்.

'தொல் சமயம்' எனும் முதல் இயலில் தமிழ்ச் சூழலுக்குட்பட்ட புராதன சமயத்தை ஆராய்ந்துள்ளார். உலகமனைத்திலும் புராதன சமயம் காணப்படுகிறது. இதன் உட்கூறுகள் உலகின் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இல்லை. ஆயினும் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மானிடவியலர்கள் ஒரு பொதுமையாக்கம் செய்தனர். இந்த உலகளாவிய பொதுமையாக்கங்களின் *(Universalism)* ஊடாகப் பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தனித்துவங்களை *(Particularism)* ஆராய்கிறார்.

ஆவியம், உயிரியம், இயற்கை வழிபாடு, குலக்குறியம் வெறியாட்டு முதலான கூறுகளை ஆராயும் முதல் இயல் மிகுந்த நுட்பங்களைக் காட்டுகிறது. இதுவரையிலான ஆய்வுகளில் சுட்டப்படாத புதிய ஆழமும் வெளிச்சமும் இந்த நூலில்தான் முதன் முதலாகக் காண முடிகின்றன. உலகளாவிய நிலையில் சுட்டப்பட்ட ஆவி *(Soul),* கீழ்நிலை ஆவியம் *(Iower animism)* மேல்நிலை ஆவியம் *(higher animism)* ஆகிய மூன்று வகையினங்களைச் சங்க இலக்கியங்களில் இனங்கண்டு, அவை பண்டைத் தமிழர்களால் உடல், உயிர், மாய்தல், நெஞ்சம் முதலான கூறுகளோடு தொடர்பு கொண்டுள்ளதை பாடல்வரி சான்றுகளோடு ஆராய்ந்துள்ளார் பேரா. சிவம். பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் ஆன்மா, நெஞ்சம் முதலான கூறுகளுடன் எவ்வாறு மேல்நிலை ஆவியம் கட்டமைந்தது என்பதையும் தக்க பாடல் வரிகளோடு விளக்கியிருக்கிறார். தொல்சமயம் குறித்த ஆய்வில் இப்பகுதி ஒரு புதிய வெளிச்சத்தைக் காட்டுகிறது; ஆழமான புரிதலை வழங்குகிறது.

அவ்வாறே, இறப்பு, இறப்பை நிகழ்த்தும் கூற்றுவன்(எமன்), அவனுடைய படைக்கலன்கள், இறப்புக்குப் பின்னர் உயிர் சென்றடையக்கூடிய 'மறு உலகம்' முதலான சமயம்சார் கருத்தினங்களை விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்திருக்கிறார் பேரா. சிவம். இவ்வாறே, குலக்குறியம், உயிரியம், இயற்கை வழிபாடு, வெறியாட்டு முதலான பிற தொல்சமயக் கூறுகளையும் விரிவான தளத்தில் விவாதிக்கிறார். இந்த விவாதங்கள் அனைத்தும் இறந்தோர் வழிபாடு, முன்னோர் வழிபாடு ஆகிய இரண்டையும் மையமிட்டிருப்பது கவனத்திற்குரியது. ஆய்வுப் பொருளோடு விவாதம் குவிமையம் கொண்டிருப்பது பேரா.சிவத்தின் ஆய்வுத் திறனைக் காட்டுகிறது. நூலின் முதல் இயல் ஆய்வுக்கான அடித்தளத்தைத் தக்க முறையியலோடும் வடிவான அணுகுமுறையோடும் ஒழுங்கமைத்திருப்பது வாசகர்களின்

கவனத்தை நிச்சயம் ஈர்க்கும். இந்நூலின் பெரும் பயனாக இந்த இயல் அமைகிறது.

பண்டைத் தமிழர்கள் இறப்பின் பொருண்மையில் உடல் ஆவி, உலவும் ஆவி ஆகிய இரண்டு கூறுகள் உள்ளன என எண்ணினர். இவற்றுக்கான சடங்குகள் பெருங்கற்படைக் காலத்தில் (கி.மு.590-கி.பி.400) மாறத் தொடங்கின. இறந்தோர் ஆவிகளைப் பதுக்கைகளிலும் நடுகற்களிலும் நிலைநிறுத்தினர். இறந்த வீரனின் உருவத்தோடு அவனுடைய பெயரும் பீடும் எழுதிப் புடைப்புச் சிற்பமாக நட்டனர். இதுவே கடவுள், தெய்வம் உருவாக்கப்பட்ட வரலாறாக உருமாறுகிறது. இதனைச் சான்றாதாரங்களுடன் ஆராய்ந்திருக்கிறார் பேரா. சிவம்.

இந்த வரலாற்றை ஆராயும் இரண்டாம் இயல் இந்த நூலின் மையக் களம் எனலாம். இதனைப் பேரா.சிவம் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, சங்க இலக்கியங்கள் ஊடாக அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் வரை ஆராய்கிறார். இதன்மூலம் இப்பொருள் பற்றி ஒரு விரிவான ஆழமான புரிதலைக் காட்டுகிறார். தரவுக் களமும் பகுப்பாய்வும் சிவத்தின் ஆய்வு நுட்பத்தைக் காட்டுகின்றன. அடுத்ததாக, சங்க காலத்தின் தொடர்ச்சி இன்றைய நாட்டார் மரபில் பிரதிபலிக்கிறது என்பதையும் விவாதிக்கிறார். சங்க மரபின் நீட்சியையும் தொடர்ச்சியையும் நூல் நெடுக நம் வசப்படுத்தியிருக்கிறார். சங்க இலக்கிய ஆய்வினை சமகால நாட்டார் வழக்காற்றியல் ஆய்வோடு இணைத்திருக்கும் இந்தப் புலமை நெறி பேரா. சிவத்தின் முறையியலாகவும் அணுகுமுறையாகவும் இந்நூல் நெடுக விரிகின்றன. இவற்றின் மூலம் பண்டைத் தமிழ் மரபின் நீண்ட நெடிய அறுபடாத போக்கினை நமக்குக் காட்சிப்படுத்துகிறார்.

இறந்தோர் வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் சிதைவுகளையும் மூன்றாம் இயலில் விவாதிக்கிறார். பண்டைத் தமிழகத்தில் திணைச் சமூகத்தின் அழிவாலும் நிலவுடைமையமைப்பு வளர்ச்சியாலும் 'கோட்டம்' என்ற பெயரில் கோயில்கள் உருவாயின. சீறூர் மன்னர்களும் முதுகுடி மன்னர்களும் நாடு உருவாக்கத்தால் வேந்தராட்சியில் கரைந்துவிட்டனர். முருகன் கோட்டம் (புறம்.299), தேவர் கோட்டம், காமன் கோட்டம் (கலி.82, 109), இவற்றின் வளர்ச்சியாக உருவான பாசண்ட சாத்தன் கோவில் (சிலம்பு 9:9-13), புகார் நகரின் சக்கரவாளக் கோட்டம் (மணி. 6:51-62) என அடுத்த கட்டத்தின் வளர்ச்சியால் இறந்தோர் வழிபாடு சிதையத் தொடங்கியது. சமாதிக் கோயில்களும், பள்ளிப் படைக் கோயில்களும் இறந்தோர் நினைவாக உருவாகத் தொடங்கின. இப்போக்குகளை பேரா.சிவம் மிக விரிவாகவே இந்த நூலில் பேசுகிறார். கூடவே சங்க காலத்தில் கோயில் உருவான ஆதி வடிவத்தைத் தகுந்த சான்றுகளுடன் நிறுவுகிறார். ஊரின் பொது மன்றத்தில் சுவர் எழுப்பி, அங்கு விட்டங்கள் வைத்து, கூரை வேய்ந்து கோயில் உருவாக்கப்பட்டது (அகம்.167). இச்சுவற்றில் கடவுளின் உருவம் வரையப்பட்டது. இதன் எதிரில் 'இட்டிகை' எனும் பெயரில் பலிபீடம் அமைத்துப் பலி கொடுக்கப்பட்டது. கடவுள் மனித உருவேற்றம் அடைந்ததையும், மனிதப் பண்பேற்றம் அடைந்ததையும் பேரா.சிவம் வெகு நுட்பமாகவே அலசியிருக்கிறார். மேலும், இத்தகைய கோயில் பல்லவர் காலத்தில் கற்றளியாகவும், அதற்கடுத்த காலகட்டத்தில் வைதிகத்தின் தாக்கத்தால் வேள்வி நடத்த 'யாகத்தூண்' நட்டும், பண்டைய பலிகளை நீக்கி அமுது படைக்க 'திருமடைப்பள்ளி' கொண்ட சமையலறை கோயில்கள் உருவாக்கப்பட்டும் மாற்றங்கள் தொடர்ந்தன. கல்வெட்டு, செப்பேடுகள், புராணங்கள் வாயிலாக இந்த மாற்றங்களை விரிவாக ஆராய்ந்திருக்கிறார் பேரா. சிவம்.

பண்டைத் தமிழர்களின் தொல்சமயம் சைவம், வைணவத்தால் சிதைவடைந்தது ஒருபுறம் நிகழ்ந்தாலும், வடமொழி ஆகம விதிகளின் தாக்கத்தால் புராண மூதாதையர் *(Mythical ancestor)* எனும் ஒரு புதிய வகையினம் உருவாக்கம் பெற்றதை மறுபுறம் தனியொரு இயலில் பேசுகிறார். இறந்த வீரனை நடுகல் நட்டு வழிபட்ட ஆதிநிலை மாறி, நாடாளும் வேந்தர்கள் பெருமைமிகு குலத்தில் தோன்றியவர்கள் எனச் சில புராண மூதாதையர்கள் புராணங்கள் மூலம் உருவாக்கப்பட்டனர். வேளிர் மரபில் வந்த இருங்கோவேள் முனிவன் ஒருவனின் மரபில் வந்தவன் என்று புறநானூறு(201) பேசுகிறது. சோழ மன்னர்களின் மூதாதையாக மனுநீதிச்சோழன் என்ற கற்பனை மன்னன் காட்டப்படுகிறான். இவ்வாறாக, அகத்தியர் வாயிலாகவும், இன்னும் பல சான்றுகள் காட்டியும் புராண மூதாதையர் பற்றி விவாதிக்கிறார். தமிழ் மரபில் வேதமரபு உருவாக்கிய கலப்புகளை மூதாதையர் வழிபாட்டிலும் காட்டும் பேரா.சிவத்தின் புலமை நெறி ஆழமானது.

இறுதி இயலில் இறந்தோர் வழிபாட்டின் எச்சங்களைப் பேசுகிறார் பேரா. சிவம். இதில் சமகாலத் தன்மைகளைக் காட்டுகிறார். எந்த ஒரு பண்பாட்டிலும் 'மரபும் மாற்றமும்' நிகழக்கூடியவைதான். ஆனால் கி.மு. 600லிருந்து வந்து கொண்டிருக்கும் சங்ககால மரபில் தமிழ் மரபின் அச்சு அசலான, சுயமான, இயல்முறையான பண்புகள் சங்ககாலத்தின் பிற்பகுதியிலேயே வடபுல அயல்முறையின் பண்புகளையும் ஏற்றுக்கொண்டன. இவை இன்றைய சமகாலம் வரை எவ்வாறு எச்சங்களாகத் தொடர்கின்றன என்பதைப் பேரா.சிவம் இந்த இயலில் விவாதிக்கிறார்.

வெகுசன நாட்டார் சமயம், வெகுசனக் கிறித்தவம் (தமிழ்க் கிறித்தவம்), இஸ்லாம் ஆகியவற்றில் தொல் சமய எச்சங்கள் எவ்வாறு தொடர்கின்றன எனும் முயற்சி பேரா. சிவத்தின் புலமை வெற்றியாகக் கருதலாம். சங்ககாலம் தொடங்கி, இன்று வரையிலான மிக நீண்ட காலப் பகுதியில் இறந்தோர், முன்னோர் வழிபாட்டின் போக்குகளை விரிவாகவும் ஆழமாகவும் பேசுகின்ற இந்த நூல் தமிழுக்குப் புதுவரவு. சங்ககாலப் பண்பாடு நுண்ணிய களங்களில் இப்போது ஆராயப்பட்டு வருகிறது. தொல்லியல், பண்பாட்டியல், சமயவியல், மானிடவியல் துறைகள் ஊடாக இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் புலமை ஆழத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன. அதில் பேரா.சிவத்தின் இந்தப் பங்களிப்பு மிக முக்கியமானது. இத்தகைய மேலும் பல ஆய்வுகளை அவர் முன்னெடுப்பார் என எதிர்பார்ப்போம்.

இந்த நூலினைப் பேரா.சிவம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிலக்கியம் பயின்ற காலத்தில் (1963-1967) தனக்குப் பழந்தமிழ் இலக்கியம் கற்பித்த பேராசிரியர்கள் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், மு. அருணாசலம் பிள்ளை, ச.தண்டபாணி தேசிகர், அ.நடேச முதலியார், உளுந்தூர்பேட்டை சு, சண்முகம் ஆகியோருக்குக் காணிக்கையாக்கியுள்ளார். பேரா. சிவம் அவர்களின் நினைவில் வாழும் இவர்களை நாமும் நினைவு கொள்வோம்.

கட்டுரையாளர்: பேராசிரியர் (பணிநிறைவு)

சாந்தா தத்

# கிங் மேக்கர்....

கதையுமின்றி கட்டுரையுமின்றி இடைப்பட்ட நிலையிலான ஒரு வித்தியாசமான படைப்பு வடிவம் டாக்டர் தேவராஜு மஹாராஜு எனும் படைப்பாளியால் தெலுங்கில் முயற்சிக்கப்பட்டு பரவலான வரவேற்புப் பெற்றுள்ளது! ஒரு வகை உருவகம் என்றும் அடையாளப்படுத்தக்கூடிய இப் படைப்பு வகைமை தமிழிலும் படித்துள்ளதாய் நினைவு... கீழுள்ள படைப்பு இவ் வகையிலான ஒரு தெலுங்குப் படைப்பைத் தழுவியது. சற்றே பழைய கருவாயினும் சமகால நாட்டு நடப்புக்கேற்ற கூர்மையான எடுத்துக்காட்டாய் கொள்ளலாம்.

## கிங் மேக்கர்

ஒரு நாள் ஒரு மனிதன் தெருவில் காலாற நடந்து கொண்டிருந்த போது என்ன தோன்றியதோ என்னவோ சரேலெனக் குனிந்து ஒரு பிடி மண்ணைக் கையில் எடுத்துக் கொண்டான். அதிசயம்....பேரதிசயம்......... அப்படியே பணமாக மாறி விட்டது அம் மண்!.

ஒன்றும் புரியாமல் ...நடந்ததை நம்பவும் இயலாமல் நடந்து கொண்டிருந்த போது எதிர்பட்ட இன்னொரு மனிதனுடன் அறிமுகம் ஏற்பட.....ஹல்லோ என்றபடி நட்புடன் அவன் கையைக் குலுக்க..........அம் மனிதனும் மொத்தமாய் பணமாக மாறி இவன் கரங்களின் அணைப்புக்குள்....!!

பளீரெனப் புரிந்து விட்டது மனிதனுக்கு.! இன்னமும் வியந்து கொண்டு...குழம்பிக் கொண்டு நேரத்தை வீணடிக்காமல் எதிர்பாராமல் கிடைத்த செல்வச் களஞ்சியத்தைச் செலவிடும் ஆலோசனைகளில் முனைந்து...... ஒரு சினிமா தயாரித்தான். மகா மட்டமான படம்..! எப்படியிருந்தால் என்ன......கையிருப்பினாலான கை அரிப்பு கரைந்த ஆசுவாசம்.! அவன் தீ வினை...அப் படம் வெற்றிகரமாய் ஓடி இன்னும் பன் மடங்கு செல்வத்தை அவன் இருப்பாக்கியது. குதிரைப் பந்தயத்தில் களத்தில் இறங்கிய அத்தனை குதிரைகள் மீதும் பணம் கட்டினான்.. அவன் நம்பிய (!) குதிரைகள் அவனுக்கு செல்வச் சுரங்கங்களுக்கு அதிபதியாக்கின.

அரசாங்கத்துக்குக் கணக்கு காண்பிக்க வேண்டுமே....!... பொங்கல் பண்டிகை நெருங்கிக் கொண்டிருப்பதால் வண்ண வண்ணக் கோலமாவு வகைத் தயாரிப்பில் இறங்கினான்.. இல்லத்தரசிகள் படு ஆர்வத்துடன் ரங்கோலிப் போட்டிகள் வேகத்தில் போட்டி போட்டுக் கொண்டு கோலமாவுப் பொட்டலங்களை டன் டன்னாய் வாங்கிக் குவிக்க .பிளாக் மார்க்கெட் சந்தையில் வெகு அமர்க்களமான வியாபாரம்! இது தான் சாக்கென கோலமாவுத் தொழிற்சாலையை மூடி விடத் தீர்மானித்த போது கூடாதெனத் தொழிலாளிகளனைவரும் போராட்டத்தில் இறங்க.... தலை சுற்றத் தொடங்கியது மனிதனுக்கு.

பத்திரிகை தொடங்கப் போவதாய் மிரட்டலாய் எச்சரிக்க....... வாயே திறக்கவில்லை வாசகர்கள் . அந் நிசப்தத்தின் பொருள் பிடிபடவில்லை மனிதனுக்கு. சரி... இப்படியாவது நஷ்டப்பட்டு கையையும் பையையும் காலி செய்யலாமென பத்திரிகை ஒன்றைத் துவங்கினான். ஓடி ஓடி தேடித் தேடி வாங்கலானார்கள் ஜனங்கள்..! அத் திட்டமும் தோல்வியைத் தழுவ......சரி....ஜாலியாய் சமூகச் சேவை செய்யலாம்.... ஏழை எளியவர்களுக்கு பணத்தை அள்ளிக் அள்ளித் தானம் செய்யலாமென அம் முயற்சியை மேற்கொண்டான்....."...வாழ்க..வாழ்க..." வாழ்த்துகள் வரவாயிற்றே தவிர செல்வம் மட்டும் குறைந்த பாடில்லை.

ஒரு நாள் படு உக்கிரமான சண்டையொன்றைக் காண நேரிட்டது. ஒரு சீட்....ஒரே ஒரு சீட்டுக்காக பத்து பேர் வெறித்தனமாய் முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள். சாதாரண சீட் அல்ல அது. சர்வ அதிகாரம் கொண்ட சீட்!! பணத்தை மலை மலையாய் கொட்டிக் குவித்தான் நம் மனிதன். அவ்வளவுதான்......... நீயா நானா எனும் கடும் சீட் போட்டியைக் காற்றில் பறக்க விட்டு எங்கும் எங்கும் நீக்கமற இறைந்து கிடந்த ரூபாய் தாள்ககளைப் பறந்து பறந்து பொறுக்கிக் கொள்வதில் போட்டி போடலானார்கள் அவர்கள். அச் சந்தடியில் அந்த சீட் காலியாகிக் கேட்பாரற்றுக் கிடந்தது.. நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அதில் அமரப் போனான் மனிதன். அப்போது அவனுக்கு வெகு நெருக்கமான அந்தரங்கனொருவன் வந்து காதைக் கடித்தான்.

...."....சார்.. மிகவும் ஆபத்தான சீட் அது. . அங்க உட்காராதீங்க... இருந்த இடத்திலிருந்து ஒரு மில்லி மீட்டர் அசையாமல் .......வாய் திறந்து ஒரு வார்த்தை பேசாமல் மில்லியன் பில்லியன்களில் பண மழை கொட்டும் உங்கள் மடியில்!...நன்றாக யோசியுங்கள்...."

பெரும் கவலையில் மூழ்கிப் போனான் மனிதன்... நாய்களுக்கான நன்றியுணர்வுள்ள ஒரு ஆள் காலடியில் தென்பட.... அவன் முடியைப் பிடித்து எழுப்பி நிறுத்தினான்.

..." உடனே போய் குளித்து விட்டு வா. பட்டபிஷேகம் செய்து வைக்கிறேன் உனக்கு...."......தீர்மானமாய் கூறினான்.

ரூபன் சிவராஜா
svrooban@gmail.com



## மியான்மார் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு

# அதிகார முரண்பாடுகள், பின்னணி, உள்ளகச் சிக்கல்கள், வெளித்தரப்புகளின் நலன்கள்

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமது அரசியல் வகிபாகமும் அந்தஸ்தும் பலவீனமடைந்த நிலையில் மேலும் ஐந்து ஆண்டுகள் தமது அதிகார இருப்பினைக் கேள்விக்கு உட்படுத்திவிடுமென்ற அச்சமே புதிய அரசாங்கம் கூடவிருந்த சில மணி நேரங்களுக்கு முன்னர் ஆட்சிப் பறிப்பு முடிவினை இராணுவபீடம் எடுக்கவைத்துள்ளது. 80 வீதமான நாடாளுமன்ற இருக்கைகளை தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு வென்றது. இது இராணுவக் கட்சிக்கு பெருத்த வீழ்ச்சியும் அவமானமும் ஆகும்.

2021 பெப்ரவரி முதலாம் நாள் மியான்மார் இராணுவம் ஆட்சிக்கவிழ்ப்புச் செய்து நாட்டின் ஆட்சியதிகாரத்தைத் தம்வசப்படுத்திய செய்தி உலக அரசியலின் பேசுபொருளாகியுள்ளது. தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Aung San Suu Kyi உட்பட்ட அரசியல் தலைவர்கள், முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தலைநகர் ரங்கூன் உட்பட ஆட்சிக்கவிழ்ப்பிற்கு எதிரான கண்டன ஒன்றுகூடல்களில் குறிப்பிட்ட தொகை மக்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றனர். மியான்மாரில் இராணுவ ஆட்சி, ஆட்சிக்கவிழ்ப்பு என்பன புதியதோ அன்றி அதிர்ச்சிக்குரிய நிகழ்வோ அல்ல. தெற்காசிய வரலாற்றில் பல தசாப்தங்கள் இராணுவ ஆட்சியின் கீழ் வைத்திருக்கப்பட்ட நாடு அது. 1948இல் பிரித்தானிய காலனித்துவ ஆளுகையிலிருந்து விடுதலைபெற்ற பின்னரான இற்றைவரையான 70 ஆண்டுகளுக்கு மேலான உள்நாட்டு முரண்பாடுகள், இராணுவ ஆட்சி வரலாற்றையும் கொண்டுள்ளது. இது மூன்றாவது இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு. 1962இலிருந்து 2011 வரையான 50 ஆண்டுகள் இராணுவ ஆட்சிக்குள் இருந்தது. 2011இலிருந்து உள்ளக மற்றும் வெளியக அழுத்தங்கள், மற்றும் பொருளாதார நலன்கள் சார்ந்த தெரிவுகள் 'ஜனநாயகப் பாதை'யில் நகர்வதற்கான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருந்தது. தற்போதைய இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பினை மேற்கு கண்டித்திருக்கின்றது. ஐ.நா வில் அவசர கூட்டம் கூட்டப்பட்டு ஆராயப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் விடுவிக்கப்பட வேண்டும், இராணுவத்தின் ஓராண்டுகால அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டு, ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன. அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடை தொடர்பான அச்சுறுத்தலை விடுத்துள்ளன. ஐ.நாவில் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள சீனாவும், ரஸ்யாவும் சர்வதேச கூட்டு நடவடிக்கைகளிலிருந்து மியான்மாரைக் காப்பாற்றி வருகின்றன. 2017இல் ரொகிங்ய மக்களுக்கெதிரான

இன அழிப்பிற்கெதிராக தீர்மானங்களிலும் இவ்விரு நாடுகளும் அவ்வாறே நடந்துகொண்டன. இம்முறை இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பிற்கு எதிரான நடவடிக்கைகளையும் தமது வீட்டோ அதிகாரத்தின் மூலம் முறியடித்துள்ளன.

மியான்மாரின் இராணுவ ஆட்சிபீடத்தின் முதன்மை ஆதரவு சக்தியாகச் சீனா தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது. அதேவேளை சீனாவைத் தமது இருப்பிற்கான அச்சுறுத்தலாகவும் மியான்மாரின் இராணுவம் பார்த்துவந்துள்ளது. இராணுவ ஆட்சிபீடம் சீனாவில் முழுமையாகத் தங்கியிருக்கும் நிலையில் இருந்த அதேவேளை, சீனாவின் நலன்கள் மற்றும் தலையீடு சார்ந்த அச்சமும் இராணுவ ஆட்சிபீடத்திற்கு இருந்து வந்துள்ளது என்கிறார் நோர்வேஜிய சமூக மானிடவியல் பேராசிரியரும் மியான்மார் மற்றும் இலங்கைத் தீவின் அரசியல் சூழ்நிலைகள் தொடர்பான ஆய்வு அறிதலும் அனுபவமுள்ள கிறிஸ்தியான் ஸ்தொக்க.

மியான்மார் நாட்டின் மொத்த சனத்தொகை 52 மில்லியன் (2014 கணக்கெடுப்பின்படி). பல்வேறு இனத்துவக் குழுக்களைக் கொண்டுள்ளது. எட்டு வரையான அரசினால் அங்கீகரிக்கப்பட்ட இனத்துவத் தேசிய இனங்கள் மியான்மாரில் உள்ளன. ரொகிங்யா போன்ற இன்னும் பல அங்கீகரிக்கப்படாத, குடியுரிமை மறுக்கப்பட்ட சிறுபான்மை இனங்களும் உள்ளன. இதில் 68 வீதமான பெரும்பான்மையினர் பர்மியர்கள். அவர்களே அரசியல் மேலாதிக்கம் செலுத்திவருபவர்களுமாவர். ஏனைய சிறுபான்மை இனக்குழுமங்களின் சுயாட்சி உரிமைகள் தொடர்பான முரண்பாடுகள் ஆயுத மோதல்களுக்கும் உள்நாட்டுப் போர்களுக்கும் இட்டுச்சென்றன. 85 வீதமானவர்கள் பௌத்தர்கள், 4 வீதமானவர்கள் கிறிஸ்தவர்களும் 4 வீதமானவர்கள் முஸ்லீம்களுமாவர். ஆட்சிக் கவிழ்ப்பிற்கு இராணுவபீடம் சொல்லும் காரணம், கடந்த ஆண்டு (2020) நவம்பரில் நடந்த தேர்தலில் மோசடிகள் நடந்துள்ளன என்பதாகும். தேர்தல் ஆணையத்திற்கு பல முறைப்பாடுகள் கொண்டுசெல்லப்பட்டபோதும், அவை தேசிய ஜனநாயக கூட்டமைப்பு அரசாங்கத்தினால் தடுக்கப்பட்டுள்ளன என்பதுமாகும். நாட்டின் தேசிய பாதுகாப்புக் கருதித் தாம் ஆட்சிப்பொறுப்பேற்றதாக இராணுவபீடம் கூறியிருக்கிறது. தேர்தல் ஆணையத்தினைத் தாம் மறுசீரமைத்து, ஓராண்டுக்குள் புதிய தேர்தலை நடாத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசாங்கத்திடம் ஆட்சிப் பொறுப்புக் கையளிக்கப்படுமென இராணுவத் தளபதி Min Aung Hlaing கூறியிருக்கின்றார். ஆனால் உண்மை நிலவரம் வேறானது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலோ, இறைமை அச்சுறுத்தல் சார்ந்த பிரச்சினைகளோ அங்கு இல்லை. இது முற்றிலும் அதிகாரம் சார்ந்த முரண்பாடுகளின் விளைவு என்பது மியான்மார் நிலைமைகளை அறிந்த ஆய்வாளர்களின் பார்வையாகும்.

மியான்மாரின் பழைய பெயர் பர்மா. வடகிழக்கில் சீனாவையும், தென் கிழக்கில் தாய்லாந்தினையும், கிழக்கில் லாவோசினையும், மேற்கில் இந்தியா மற்றும் வங்கதேசத்தினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 1948 வரை பிரித்தானியக் காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த மியான்மாரில் அவர்களின் வெளியேற்றத்திற்குப் பிற்பட்ட காலங்களில் முற்றிலுமாக அமைதியற்ற பல்வேறு முரண்பாடுகளால் சூழப்பட்ட வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்ட காலங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. இம்முரண்பாடுகள் இராணுவ ஆட்சியதிகாரத்தை கைக்கொண்டிருந்த அதிகார மையங்களுக்கும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் வலியுறுத்தி வந்த சக்திகளுக்குமிடையிலுமான முரண்பாடுகளாக இருந்துள்ளன.

1962இல்; இராணுவம் ஆட்சிக்கவிழ்ப்பு முதன்முதலில் நிகழ்த்தப்பட்டு ஜெனரல் Ne Win தலைமையில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது . அந்தக் காலப்பகுதியிலிருந்து அதாவது 1962 ஆம் ஆண்டிலிருந்து 2011 வரையான அரைநூற்றாண்டு காலங்கள் மியான்மாரில் இராணுவ ஆட்சியே நிலவி வந்திருக்கின்றது. தென்கிழக்கு ஆசியாவில் செல்வச் செழிப்பான நாடுகளில் ஒன்றாக விளங்கி வந்த அந்நாடு இராணுவ ஆட்சிக்குட்பட்ட காலங்களில் உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றென்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனபோதும் சீனாவுடன் தொடர்ச்சியான வணிக மற்றும் படைத்துறை உறவும் ஏனைய சில ஆசிய நாடுகளுடன் வணிக உறவும் இருந்துவந்துள்ளது.

இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் முன்னரும் பலதடவைகள் நடந்துள்ளன. 1988 இல் இராணுவ ஆட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம் முதன்முதலில் எழுந்தது. ஜனநாயகத்தை நிலைநிறுத்தக்கூடிய வகையில் மறுசீரமைப்புகள் கொண்டுவரப்படவேண்டும். சுதந்திரமான முறையில் தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு மக்கள் போராட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன. எதிர்ப்புப் போராட்டங்கள் பௌத்த துறவிகள் மற்றும் மாணவர் சமூகம் தொழிற்சமூகங்களால் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

அன்றைய நாட்களில் அதாவது 1988இல் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கி அழிக்கப்பட்டனர். பெரும் ரத்தக்களறியில் 3000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டனர். பலநூற்றுக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். தொடர்ந்து 1990ம் ஆண்டு (இராணுவ ஆட்சி நடாத்தப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர்) ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அத்தேர்தலில் National league for democracy – ஜனநாயகத்திற்கான தேசியக் கூட்டமைப்பு மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றி பெற்றது. 1930–1940 வரையான காலப்பகுதியில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக நாட்டின்; விடுதலையை வலியுறுத்தி போராட்டத்தினை முன்னெடுத்த ஜெனரல் Aung San இன் மகள்தான் Aung San Suu Kyi – அவரே ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவரும். ஜனநாயகத்திற்கானதும் மக்கள் உரிமைகளுக்கானதுமான

அமைதி வழிப் போராட்டத்தினை முன்னெடுத்து வந்த Suu Kyi 1990ம் ஆண்டு, இராணுவ ஆட்சி மையத்தினால் விட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இராணுவ ஆட்சிக்கெதிரான மக்கள் புரட்சிகளுக்கு தலைமை தாங்கினார் என்ற குற்றசாட்டின் பேரிலேயே அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

1990ம் ஆண்டு நடாத்தப்பட்ட தேர்தலில், ஏறத்தாழ 90 வரையான அரசியல் கட்சிகள் போட்டியிட்டன என்று தகவல் தெரிவிக்கின்றன. இதில் Aung San Suu Kyi தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் வெற்றியீட்டியது.! ஆனபோதும் ஜனநாயகத் தேர்தலை புறக்கணித்த இராணுவ ஆட்சிப்பீடம் தேர்தலில் போட்டியிட்ட அனைத்துக் கட்சிகளையும் தடைசெய்ததோடு, தேர்தலில் வென்ற கட்சியிடம் ஆட்சியதிகாரத்தைக் கையளிக்கவும் மறுத்தது. தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற இடங்களைப் பறித்து, அவற்றில் இராணுவத்தை சேர்ந்த வேட்பாளர்களை உறுப்பினர்களாக நியமித்தது. 1990ஆம் ஆண்டிலிருந்து Aung San Suu Kyi பல்வேறுதடவைகள் விட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். வன்முறையற்ற அமைதி வழிமுறைகள் மூலம் ஜனநாயகத்திற்காகவும் மனித உரிமைகளுக்கான அவரது போராட்டங்களுக்காக 1991 ம் ஆண்டு நோர்வேயினால் அவருக்கு சமாதானத்திற்கான நோபல்விருது வழங்கப்பட்டது. அவர் நோபல் விருதினை நோர்வேக்கு பயணம் சென்று பெற்றுக்கொள்ளாத வகையில் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். சமாதானத்திற்கான நோபல் விருது அவருக்கு வழங்கப்பட்டதை அடுத்து பர்மாவின் இராணுவ ஆட்சி அதிகார மையத்திற்கெதிரான அனைத்துலக அழுத்தம் அதிகரித்தது எனலாம்! ஆனபோதும் அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள் மியான்மாரின் அரசியல் மாற்றத்திற்கு வழியேற்படுத்தவில்லை.

2007இிலும் தலைநகர் உள்ளிட்ட நகரங்களில் பெருபெடுப்பிலான அமைதிப் பேரணிகள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பௌத்த துறுவிகள் பல்லாயிரக்கணக்கில் எதிர்ப்பு பேரணிகளில் கலந்து கொண்டிருந்தனர். ஒரு லட்சம் வரையிலான பௌத்த துறவிகளும் மக்களுமாக இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஜனநாயகம், மனித உரிமையை வலியுறுத்தியும் போராட்டங்களை முன்னெடுத்தனர். மியான்மாரின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக பௌத்த துறவிகள் கிளம்பிய செய்திகள் அன்றைய காலகட்டத்தில் உலக ஊடகங்களில் முக்கிய செய்தியாகியிருந்தன.

2008இில் ஏற்பட்ட நர்கிஸ் சூறாவளி இடரில், 138,000க்கும் அதிகமானோர் பலியாகினர். உயிர்களை இழந்தனர், 2007 புத்த பிக்குகளை மோசமாகக் கையாண்ட விதம் என்பனவும் அரசியல் ஆட்சி முறைமை சார்ந்த மறுசீரமைப்புகளைக் கோரிநின்றது. ஜனநாயகத்திற்குத் திரும்பும் பாதையில் 2008இில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது. 2008 இல் தமது அதிகார நலன்களை நிலைநிறுத்தும் இலக்கோடு அரசியலமைப்பு மாற்றத்தினைக் கொண்டுவந்தனர். அதற்கமைய 2010இல் தேர்தல் நடாத்தப்பட்டு, 2011இல் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பும், தேர்தல் நடாத்தப்பட்ட முறையும் ஜனநாயகத்திற்கான அமைப்பு மற்றும் சிறுபான்மை இனங்களின் விமர்சனங்களுக்கு உட்பட்டன.

அரசியலமைப்பின் மூன்று முக்கிய கூறுகள் இராணுவத்தின் தொடர்ச்சியான பிடியினை உறுதிப்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்டன. நாடாளுமன்றத்தில் 25 சதவீத இடங்கள் இராணுவக் கட்சியின் (Union solidarity and development party) பிரதிநிதிகளுக்குரியது என்பதோடு மூன்று முக்கிய அமைச்சகங்களும் அவர்களுக்குரியது. பாதுகாப்பு அமைச்சு, உட்துறை விவகாரங்கள் மற்றும் எல்லை பாதுகாப்பு ஆகியன அவையாகும். நாடாளுமன்றம் மேலவை (தேசிய அவை), கீழவை (உறுப்பினர் அவை) என இரண்டு அவைகளைக் கொண்டது. இரண்டிலும் படைப்பிரிவைச் சேர்ந்த 25 வீதமானவர்கள் பிரதிநிதித்துவம் அரசியலமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்தோடு அரசியலமைப்பு திருத்தங்கள், மாற்றங்களுக்குக் குறைந்தது 75 சதவீத உட்கார்ந்த உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்பதும் அரசியலமைப்பின் முக்கிய மூன்று இராணுவபீடத்திற்குச் சாதகமாக அவர்களாலேயே கொண்டுவரப்பட்ட அம்சங்கள்.

வெளிநாட்டுப் பின்னணியையுடைய வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளைகளையுடைய எவரும் ஜனாதிபதியாக முடியாது. இந்த விதிமுறை Suu Kyiஐ மனதிற்கொண்டு உள்ளடக்கப்பட்டதாகும். அவருடைய மறைந்த கணவர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர் என்பதோடு இரண்டு மகன்களும்பிரித்தானியக் குடியுரிமையை வைத்திருப்பவர்கள். என்பது அவர் ஜனாதிபதியாவதைத் தடுக்கின்றது. கடந்த தேர்தலின் (2015) பின்னர் NLD கட்சியைச் சேர்ந்த தனக்கு நெருக்கமான Htin Kyawஎன்பவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து தனது கட்டளைகளை அவர் நடைமுறைப்படுத்துவார் என்பதையும் தெளிவுபடுத்தினார். நாடாளுமன்றத்தினூடாக அரச ஆலோசகர் என்ற புதியதொரு பதவியை கட்சி உருவாக்கியது. நடைமுறையில் அந்தப் பதவி அவரை அரசாங்கத்தின் அதிகாரம்மிக்க தலைவராக்கியது.

2015 இல் ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்கியதோடு, மியான்மாருக்கு விஜயம் செய்த முதல் அமெரிக்க ஜனாதிபதி என்ற பெயரும் ஒபாவுக்கு உண்டு. அமெரிக்காவைத் தொடர்ந்து மேற்கின் பல்வேறு நாடுகளும் வணிக, நிதி நிறுவனங்களும் தடைகளை நீக்கின. 2012ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலக வங்கி மியான்மருடன் மீண்டும் உறவைப் புதிப்பித்தது. அரச நிறுவனங்களுக்கு கடன் வழங்கியது. அத்தோடு கடன் முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டுச் சட்டம் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியது. மிகப் பெரிய அளவிற்கு வெளிநாட்டு மூதலீடுகள் நாட்டிற்குள் செல்லத்தொடங்கியது.

2015 தேர்தலில் Aung San Suu Syi பெரும் வெற்றியடைந்தார். தொடர்ந்தும் பெரும்பான்மை ஆதரவு அவருக்கு மக்கள் மத்தியில் உள்ளது. இம்முறைத் தேர்தலிலும் பெரும் வெற்றியடைந்தார். தேர்தல் நடாத்தப்பட்ட முறை அல்ல பிரச்சனை. தேர்தல் முடிவுகள்தான் இராணுவபீடத்திற்குப் பிரச்சனை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமது அரசியல் வகிபாகமும் அந்தஸ்தும் பலவீனமடைந்த நிலையில் மேலும் ஐந்து ஆண்டுகள் தமது அதிகார இருப்பினைக் கேள்விக்கு

உட்படுத்திவிடுமென்ற அச்சமே புதிய அரசாங்கம் கூடவிருந்த சில மணி நேரங்களுக்கு முன்னர் ஆட்சிப் பறிப்பு முடிவினை இராணுவபீடம் எடுக்கவைத்துள்ளது. 80 வீதமான நாடாளுமன்ற இருக்கைகளை தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு வென்றது. இது இராணுவக் கட்சிக்கு பெருத்த வீழ்ச்சியும் அவமானமும் ஆகும்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் (2011) ஜனநாயகத் திறவுக்கு இராணுவ ஆட்சிபீடம் இணங்கியமைக்கான பின்னணிகளில் முக்கியமானது நாட்டின் மீதான சீனச் செல்வாக்கினைக் குறைத்து, மேற்கினை நாட்டுக்குள் அனுமதிப்பதாகும். அதன் மூலம் ஒருவகைச் சமநிலையை உருவாக்குகின்ற நோக்கத்திலானது என்கிறார் பேராசிரியர் ஸ்தொக்க. மேற்கினை உள்வர அனுமதித்தல் என்பது சீனாவைக் கையாள்வதில் ஒரு எதிர்வலுவினை உருவாக்குவதும், சீனாவைக் கையாள்வதற்கான ஒரு துருப்புச் சீட்டாகக் கையாள்வதும் தொடர்பான மியான்மார் இராணுவ ஆட்சியாளர்களின் நோக்கத்தைக் குறிக்கின்றது. ஆனால் மேற்கின் உள்நுழைவு என்பது சீனாவை முற்றிலுமாக அரங்கிலிருந்து அகற்றவில்லை. ஆனால் சீனாவின் அதிகாரம் ஒருபடி பின்தள்ளப்பட்டது என்பதில் உண்மையுள்ளது.

2015 தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு பாரிய வெற்றி பெற்றது. இராணுவ பீடம் தமக்குச் சாதகமாக அரசியலமைப்பினை மாற்றியிருந்தபோதும் Aung San Suu Kyiஇன் பாரிய வெற்றியும் அவர் அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குகின்ற நிலை உருவாகியமையும் இராணுவபீடத்தின் அதிகார நலன்களுக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தின. சீனாவிற்கு சார்பாக வலுச்சமநிலை மாறுவதற்கு ஏதுவான சூழல் அமைந்தது. Suu Kyi மேற்கின் செல்லப் பிள்ளையாக இருந்தார் என்பதும் சமாதானத்திற்கான நோபல் விருது உட்பட்ட பல்வேறு மனித உரிமை விருதுகளை மேற்குலகம் அவருக்கு வழங்கியிருந்தமை உலகறிந்தது. ஆனால் அவர் பதவிக்கு வந்தபின்னர் மேற்கு எதிர்பார்த்த தாராளவாத ஜனநாயகவாதியாக செயற்படவில்லை. அவரின் நடவடிக்கைகளும் நிலைப்பாடுகளும் மேற்கிற்கு ஏமாற்றத்தைக் கொடுத்தன.

அவர் முதன்மையாகப் பர்மிய -பௌத்த ஜனநாயகப் புரிதலுடன் உள்நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு, இராணுவ பீடத்துடனான மேற்கின் உறவு சார்ந்தும், மேற்கின் அரசியல் ஈடுபாடு வணிக, பொருளாதார ஈடுபாடாக மாறியதையிட்டு அதிருப்தியடைந்ததாகவும் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் கிறிஸ்தியான் ஸ்தொக்க. ஆனால் மேற்கின் அணுகுமுறை என்பது, ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமை, கருத்துச் சுதந்திரம், அபிவிருத்தி, என்ற போர்களில் தமது வணிக பொருளாதார நலன்களுக்குச் சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதே இறுதி இலக்கு. குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இத்தகையை சொற்பிரயோகங்களுடனேயே அமெரிக்காவும் மேற்கும் தலையீடு செய்து களமிறங்குகின்றன. இதற்குப் பல்வேறு உதாரணங்களை வரலாற்றிலிருந்து கூறமுடியும்.

முரண்பாடுகள், உள்நாட்டுப் போர்கள் நடைபெறும் நாடுகளில் மேற்கினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்குப் பின்னால் அவர்களின் பொருளாதார நலன்கள் இருந்திருக்கின்றன என்பதுவும் அறியப்பட்டதே. மியான்மாரைப் பொறுத்தவரையிலும் ஜனநாயகப் பாதைக்குத் திரும்புதல்; என்ற அணுகுமுறை, மேற்கத்தைய வணிகத் தரப்புகள் போட்டிபோட்டுக் கொண்டு இராணுவ பீடத்துடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்குரிய கதவுகளைத் திறந்தது. எனவே இது பரஸ்பரம் மியான்மார், சீனா உட்பட்ட பிராந்தியத் தரப்புகள் மற்றும் மேற்கு ஆகியவை தத்தமது நலன்களுக்கான அறுவடையைக் கருத்திற்கொண்டு முன்னெடுத்த அணுகுமுறைகளாகும்.

2012இலிருந்து மதரீதியான வன்முறைகள், குறிப்பாக நாட்டின் முஸ்லீம் சமூகத்திற்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரித்தன. பவுத்த தேசியவாதம் வன்முறையோடு மீள் எழுச்சியடைந்தது. ராக்கின் மாநிலத்தில் (Rakhine province) ரொகிங்ய மக்களுக்கு (Rohingya) எதிரான படுகொலைகளும் வன்முறைகளும் அதிகரித்தன. Rakhine முரண்பாடு என்பது அடிப்படையில் மதமுரண்பாடு அல்ல. அது ரொகிங்ய மக்கள் மீதான அப்பட்டமான இன ஒடுக்குமுறை. 1982 இல் ரொகிங்ய மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு, பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

மியான்மாரின் பௌத்த பெருந்தேசியவாதம் அம்மக்கள் மீதான பாரிய வன்முறைகளை 2015 காலப்பகுதியில் கட்டவிழ்த்துவிட்டது. 2017இல் இராணுவ வன்முறைகளில் 6700 வரையான ரொகிங்ய மக்கள் கொல்லப்பட்டதோடு, 700 000 வரையான ரொகிங்யர்கள் சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, வங்கதேச எல்லைகளை நோக்கி விரட்டப்பட்டனர். இந்த நடவடிக்கைகளை இன அழிப்பு என ஐ.நா வரையறை செய்தது. அத்தோடு இதனுடன் தொடர்புபட்ட சில இராணுவ ஜெனரல்களின் பெயரைக் குறிப்பிட்டு, இன அழிப்பு, போர்க்குற்றம், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துமாறும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறும் கோரியிருந்தது.

Rohingya முஸ்லீம் சிறுபான்மையினர் மீதான மியான்மார் அரச இராணுவ இயந்திரத்தின் இன அழிப்பு நடவடிக்கைக்கு தார்மீக எதிர்ப்பினையோ கண்டனத்தையோ வெளிப்படுத்தவில்லை என்ற அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு Suu Kyiக்கு வழங்கப்பட்ட மனித உரிமை விருதினை அமெரிக்க Holocaust Museum 2018இல் மீளப்பெற்றது 1997ஆம் ஆண்டு Oxford பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட சுதந்திரத்திற்கான விருதும் (Freedom Award) கடந்த 2017 நவம்பர் மாதம் மீளப்பெறப்பட்டது.

விருது மீளப்பெறுகை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டிருந்தது:

'இராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிரான நீண்ட எதிர்ப்புப் போராட்டம், மியான்மார் மக்களின் சுதந்திரத்திற்கும் மனித உரிமைகளுக்குமாக ஓங்கி ஒலித்த உங்கள் குரல் உலகெங்கிலுமுள்ள பல மில்லியன் கணக்கான மக்கள் மத்தியில் நீங்கள் உருவாக்கிய உத்வேகத்தின் அடிப்படையில் உங்களுக்கு 2012இல் விருது வழங்கியதில் நாம் பெருமைகொண்டோம். இப்போது மிகுந்த வருத்தத்துடன் அந்த விருதினை மீளப்பெறுகிறோம். இந்த முடிவிற்கு நாம் இலகுவில் வரவில்லை.'

அருங்காட்சியகம் ரொகிங்ய மக்களுக்கெதிரான மியான்மார் இராணுவத்தின் நடவடிக்கைகளையும் அதற்கான Aung San Suu Kyisஇன் பதில்களையும்

நுணுக்கமாகக் கண்காணித்து வந்ததோடு, மியான்மார் மற்றும் வங்கதேசத்திற்குப் பல பயணங்களை மேற்கொண்டு முதற்கட்ட ஆதாரங்களையும் சேகரித்துள்ளது. இன அழிப்புத் தொடர்பான ஆதாரங்களையும் வெளியிட்டிருந்ததாக 2018இல் The Guardian செய்தி வெளியிட்டிருந்தது.

மியான்மார் நாட்டின் இராணுவ சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துக் குரல் கொடுத்து, அதற்காக 15 ஆண்டுகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த Aung San Suu Kyi, நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிடுமளவிற்கு சர்வதேச சமூகத்தால் கொண்டாடப்பட்டவர். ஆனால் 2017இல் ரொகின்ய மக்கள் மீதான வன்முறை, அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கிற்கும் அவருக்குமிடையிலான உறவில் விரிசலும் பரஸ்பரம் கசப்பும் ஏற்படத்தொடங்கியது. ரொகிங்கிய மக்கள் மீதான இராணுவத்தின் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை நிராகரித்து இராணுவத்தினைப் பாதுகாத்தார். மேற்குக்கும் Aung San Suu Kyi இற்குமிடையிலான விரிசல் சீனா அவரை நெருங்க வழிவகுத்தது.

சீனாவிற்கு மியான்மார் சார்ந்து தொலைநோக்கு அடிப்படையிலான இலக்குகள் உள்ளன. சீனாவின் வணிகம் மிகப்பெருமளவில் கடலை மையப்படுத்தியது. இந்துமா கடலுக்கு மலாக்கா நீரிணை ஊடான சுற்றுப்பாதையைத் தவிர்த்து நேரடிப் போக்குவரத்துப் பாதைக்கு மியான்மார் அவசியமான தளம். Rakhine கரையோரத்திலிருந்து (Port of Kyaukphyu) சீனாவின் தென்மேற்கு மாநிலமான Yunnanஇற்கு ஆழ்கடல் வழியான எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டத்துடன் (Belt and Road) தொடர்புபட்டது. 2015 இற்குப் பின்னர் மியான்மாரில் சீனாவின் தலையீடு அதிகரித்துள்ளதான பார்வை நிலவுகிறது.

மியான்மாரில் சீனாவின் வகிபாகமும் தலையீடுகளும் சிக்கலான பரிமாணங்களைக் கொண்டதாகவும் பார்க்கப்படுகின்றது. ஒரு தளத்தில் அல்ல. பல தளங்களில், அதாவது அரசியல், இராணுவ, பொருளாதாரம் என அனைத்திலும் சீனா களமிறங்கி நிற்கின்றது. அங்குள்ள சிறுபான்மை இன ஆயுதப் போராட்டக் குழுக்களுடனான சமாதான முயற்சிகளில் சீனா அனுசரணைப் பாத்திரம் வகிக்கின்றது.

சமாதான முயற்சியில் சீனாவின் நிலைப்பாடு ஒடுக்கப்படுவோரின் உரிமைகள், கோரிக்கைகளின் நிலைப்பட்ட அணுகுமுறை அல்ல. மாறாக பொருளாதார நிலைப்பட்ட சமாதான அணுகுமுறை அவர்களுடையது. பொருளாதார மேம்பாடும், மக்களை வாழ்க்கைத்தர நெருக்கடிகளிலிருந்து மீட்கும் திட்டங்கள் சமாதானத்திற்கான அடிப்படைகளை உருவாக்கும் என்பது சீனாவின் முரண்பாட்டுக் கையாள்கை, சமாதான அணுகுமுறை. தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் சீனா தனது, வகிபாகத்தினையும் செல்வாக்கினையும் பலப்படுத்தியமை இராணுவபீடத்திற்கு உவப்பானதாக அமையவில்லை. மியான்மார் விடயத்தில், பல பந்தையக் குதிரைகளில் பணம் கட்டுகின்ற அணுகுமுறையைச் சீனா கடைப்பிடித்து வந்துள்ளது. ஒன்று சறுக்கினால் மற்றொன்று என்பதே அந்த அணுகுமுறை.

பொதுவாகவே பனிப்போருக்குப் பின்னான காலத்தில் உலகநாடுகளின் வெளியுறவுத் தீர்மானங்களும் நகர்வுகளும் கோட்பாட்டு இலட்சியங்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதில்லை. நலன்களின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகின்றன. இதற்கு உலகநாடுகள் எதுவுமே விதிவிலக்கல்ல. ஐ.நா மனித உரிமைப் பேரவையில் சிறிலங்காவிற்கு ஆதரவாக கியூபா வாக்களித்தமை என்பது இதற்குரிய முக்கியமான எடுத்துக்காட்டு.

மேற்கு தனது பொருளாதார நலன்களுக்காக பெயரளவில் பெரிதாகவும் செயலளவில் சிறிதாகவேனும் ஜனநாயகம், நல்லாட்சி, சமாதானம் போன்றவற்றை ஏற்றுமதி செய்கின்றது. சீனா கோட்பாட்டு இலட்சியங்களின் அடிப்படையில் வெளியுறவு முடிவுகளை எடுப்பதில்லை. பொருளாதார நலன் சார்ந்தே அதன் முடிவுகள் அமைவன. பொருளாதார ஸ்திரத்தன்மை, அபிவிருத்தி நிதியுதவி என்பனவே சீனாவின் வெளியுறவு மூலோபாயங்கள். அந்த வகையில் மியான்மாரைத் தளமாகப் பேணுதல் என்ற இலக்கிற்குரிய முடிவுகளையே சீனா எடுக்கும். மியான்மாரின் உள்நாட்டுச் சக்திகளுடன் தனது நலனுக்குரிய வகையில் உறவைப் பேணும் முடிவினையே அது எடுக்கும். அது இராணுவபீடமாயிருந்தால் என்ன? ஜனநாயக கட்சித் தலைவர்களாக இருந்தால் என்ன? அந்தந்தக் காலகட்டத்தில் அதிகாரத்தில் உள்ளவர்களுடன் உறவைச் சீனா பேணும். இராணுவ ஆட்சி எத்தனை காலம் நீடிக்கும் என்பது யாரும் அறியாதது. தற்போது அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் இராணுவத்தினர். எனவே அவர்களைப் பாதுகாக்க எண்ணுகிறது சீனா.

தென்-கிழக்கு ஆசியாவில் சீனாவிற்கு எதிரான அமெரிக்க அணிதிரட்டலுக்கு மியான்மாரும் அமெரிக்க நலன்களுக்கு முக்கியமானது. இந்தியாவும் மியான்மாரில் தனது வகிபாகத்தை உருவாக்குவதில் முனைப்புக் கொண்டுள்ளது. ஜப்பானும் ஏற்கனவே சமாதான அனுசரணை, அபிவிருத்தி நிதியுதவி ஆகியவற்றினூடாக ஒருவகையான பொருளாதார அதிகாரத்தை மியான்மாரில் கொண்டுள்ளது. இந்தியா, ஜப்பான் ஆகிய இரண்டும் பிராந்தியத்தில் சீனாவின் போட்டி சக்திகள். அமெரிக்காவின் ஆதரவு சக்திகள். அளவுகளில் வேறுபாடிருப்பினும் இலங்கை போன்று மியான்மாரும் சிக்கலான உள்நாட்டு முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. மட்டுமல்லாது புவிசார் அரசியல் முரண்பாட்டுச் சக்திகளால் தத்தமது நலன்களுக்காகக் கையாளப்படும் தேசமும்கூட.

பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் இரண்டு கூட்டு(கள்) பர்மாவை மையம்கொண்டுள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நட்பு சக்திகளின் கூட்டு ஒரு புறம். இது சர்வதேச மற்றும் பிராந்திய சக்திகள் இணைந்த கூட்டு. மற்றையது சீனாவின் நலன்கள் சார்ந்த தலையீடு. இதில் சீனா தனிப்பெரும் தரப்பு எனினும் பிராந்தியத்தின் கம்போடியா மற்றும் பிலிப்பைன் ஆகியன சீனாவின் ஆதரவு சக்தியாக உள்ளன.

கட்டுரையாளர்: எழுத்தாளர்

# மடல் திறப்பு

காக்கை மார்ச்–2021 இளவேனில் நினைவுச் சிறப்பிதழ் வாசித்தேன். ஒரு படைப்பாளி குழந்தையைப் போல எதையும் கொண்டு வருவதும் இல்லை எதையும் எடுத்துச் செல்வதுமில்லை. ஆனால் கலைத்துப் போடுவதும், கலையச் செய்வதுமான அவனது அசைவியக்கமானது இவ்வுலகை புரட்டிப் போடத்தான்செய்கிறது. இளவேனில் குறித்து இப்படியும் சொல்லாம். ஒரு படைப்பாளி மட்டுமே இப்படி இருக்க முடியும். காக்கை, இளவேனில் குறித்தப் பல்தள ஆளுமைகளின் நினைவேந்தல்களைப் பதிவு செய்வதன் வழி அவரது ஆளுமையை, ஆழமாகச் சிறப்பித்துக் கொண்டுள்ளது. இன்குலாப் அவர்களின் ‘இன்குலாப் கவிதைகள்’ நூல் தொகுப்பிற்கு மகரந்தங்களிலிருந்தும் துப்பாக்கி ரவைகள் என்ற அவரது முன்னுரை அவர் யார் என்பதை, பிறரைவிட அவரது எழுத்துக்கள் சிறப்பாகச் சொல்லிவிடுகிறது. அந்த முன்னுரையை இப்போது வெளியிட்டதன் வழி இளவேனில் குறித்து இளைய தலைமுறைக்குச் சிறப்பான அறிமுகம் வேறொன்றிருக்க முடியாது. ஆசிரியர் முத்தையாவின் பதிவில். கடவுள் சிறந்தவரா? சாத்தான் சிறந்தவரா என தோழரின் மனைவியிடம் கேள்வி எழுப்பிய இளவேனிலின் வாதத்திறமை பொதுவில் விவாதிக்கத் தக்க ஒன்று. மனம் முழுமையும் மனிதர்கள் மீதான அன்பும், கரிசனமும் பொங்கும் ஒருவரால்தான் சதா அவர்களை ஒடுக்கும் விடயங்கள் பற்றி பேசிக் கொண்டிருக்க முடியும். இளவேனில் அப்படியான மனிதன். கலைஞர் அதிகாரத்தில் இருந்தும், அவரிடம் ஆஷ்ட்ரே இருக்கிறதா என இளவேனில் கேட்டதைத் திருநாவுக்கரசு பதிவு செய்கிறார். ஒரு கலைஞன் பிறிதொரு கலைஞனிடம், மனிதனிடம் அதிகாரத்தைப் பாரப்பதில்லை. அவனது கலையுள்ளத்தை மட்டுமே காண்கிறான். அதிகாரத்தைப் பார்த்திருந்தால் தயக்கம் அல்லது மயக்கம் இல்லையென்றால் ஒருவிதத் தாழ்வும் உண்டாகக்கூடும். ஆனால் இளவேனில் அவற்றைக் கடந்த மனிதன். கலைஞன் என்பதற்கு இதைவிடச் சிறப்பான அனுபவ நிகழ்வு இருக்க முடியாது. ஒரு ஆகச்சிறந்த மனிதனுக்கு, கலைஞனுக்கு காக்கை செலுத்தியிருக்கும் நினைவேந்தல் நினைக்கத்தக்கது. காக்கையை இன்னும் சிறப்பான உயரத்தில் வைக்கக்கூடிய தொன்று.

**இரா.மோகன்ராஜன், முத்துப்பேட்டை – 614704**

மார்ச் மாத காக்கைச் சிறகினிலே இதழ், இளவேனில் நினைவுச் சிறப்பிதழாக வெளிவந்தது கண்டு நெகிழ்ச்சியடைகிறேன். இளவேனில் எனும் பன்முக ஆளுமையை நன்கு அறிந்த – அவருடன் பல்லாண்டுகள் பயணித்த சக படைப்பாளிகள் சிலரிடம் கட்டுரைகள் பெற்று வெளியிட்டது சிறப்பிதழுக்கு உயிரூட்டியது. 1972ஆம் ஆண்டு வெளிவந்த ‘இன்குலாப் கவிதைகள்’ எனும் நூலுக்கு இளவேனில் எழுதிய பிரசித்திபெற்ற முன்னுரையை இதழாசிரியரின் முத்தாய்ப்பான முன்னோட்டத்துடன் அப்படியே வெளியிட்டது சாலப் பொருத்தமானதாகும். இளவேனில் போன்ற மக்கள் படைப்பாளிகளுக்கு சிறப்பிதழ் கொண்டு வருவதன்மூலம் ‘காக்கை’ எத்தகைய திசைவெளியில் பறந்து கொண்டிருக்கிறது என்பதையும், எது மாதிரியான வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்ற முற்படுகிறது என்பதையும் தமிழ் உலகிற்கு மேலும் உணர்த்தியிருக்கிறது. பத்தாண்டுகால காக்கைப் பயணத்தில் இதழுக்கு இதழ் மைல் கற்களாக அமைகின்றன. இதழின் தயாரிப்பும் வடிவமைப்பும் நாளுக்கு நாள் மெருகேறி வருகின்றன. இதழை முழுமையாகப் புரட்டினாலே இதன் பதமும் பக்குவமும் வெளிப்படுகிறது. ‘காக்கை’ சிறகடித்துப் பறக்கட்டும். இதன் பயணம் மென்மேலும் சிறக்கட்டும்.

**த. ஸ்டாலின் குணசேகரன், ஈரோடு**

மார்ச் காக்கை “கனலாய் மணந்த தனிப்பெருங்கலைஞன் இளவேனில் “ நினைவஞ்சலி சிறப்பிதழ் மனதை நெகிழ்வித்தது. இளவேனில் குறித்து அவர் இணைந்து பணியாற்றிய பல முற்போக்கு இயக்கங்களும், தோழர்களும் அவர்தம் பங்கு பணிகளை, பன்முக ஆளுமைகளை அவரவருக்கேற்ற வகையில் நினைவுகூர்ந்துள்ளனர். ஒரு மாபெரும் கலைஞன் இளவேனில், அவரது ஆற்றலுக்கேற்றவகையில் சமூக அறிந்தேற்பு இல்லாமல் மறைந்தாரே, தமிழ்கூறும் நல்லுலகம் இன்னும் மனதளவில் விரிவடையவில்லையே என்ற எண்ணம் பெருமூச்சை கிளர்த்துகிறது. எவரையும் எளிதில் கவர்ந்து நட்பு பூணுவது இளவேனிலின் பலமென்றால் எவரையும் தாட்சண்யம் பாராது பகைத்துக் கொள்வது அவரது பலவீனம் என்று மதிப்பிடும் போது எவரோடும் பகைமறந்து உறவாடும் மனிதத்தன்மையும் அவரிடம் இருந்தது சிறப்பம்சம். இளவேனில் தன்பெயருக்கேற்ப வாழ்வில் வசந்தகாலத்தை பெருமளவில் துய்த்தாரில்லை என்ற நகைமுரண் வருத்துகிறது.எனினும் இளவேனிலின் நினைவும், படைப்புகளும் நம் மனதில் வசந்தம் வீசிக்கொண்டே இருக்கும். இன்குலாப் நூலுக்கு இளவேனில் எழுதியமுன்னுரையை மீண்டும் வாசிக்க வாய்ப்பளித்த காக்கையின் பணி பாராட்டத் தக்கது டொமினிக்ஜீவா வாழ்வையும் பணியையும் வெளிப்படுத்தும் கட்டுரைகள் புகழஞ்சலியைப் பகிர்கிறது. இப்படி புகழஞ்சலிகளையே அடுத்தடுத்து எதிர்கொள்ள நேர்கிறதே எதிர்வரும் நாளாவது இத்துயர் இல்லாமல் இருக்குமா என்ற ஏக்கத்தை பகிரும் தருணத்தில் தோழர் ஜனநாதன் மரணச்செய்தி உலுக்குகிறது. இளவேனிலின் வார்த்தையில் சொல்வோம் “இங்கும் ஒரு பூ மலரும் “ ...துயர் விலகும்.

**ஜனநேசன், ஹைதராபாத்**

எல்லாவற்றுக்கும் ஏதோவொரு கணக்குவழக்குப் பார்த்துப் பழகுகிற சூழலில் இளவேனில் குறித்து நினைவுச் சிறப்பிதழ் கொண்டுவந்த 'காக்கைச் சிறகினிலே' ஆசிரியர் குழுவினரின் பணி மகத்தானது. வாழ்த்துகள். இளவேனில் நினைவுகள் என்பவை தனிப்பட்ட மனிதருடையவை மட்டுமல்ல. அன்றைய நாளில் சமூக மாற்றம், புரட்சி குறித்த கனவுகளுடன் சென்னைத் தெருக்களில் சுற்றித்திரிந்தவர்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையது. 1981–85 வரையிலான காலகட்டத்தில் கட்டுரைகளில் குறிப்பிடப்படும் இடங்கள், அச்சகங்கள் எனக்கு நெருக்கமாக இருந்தன; ஆளுமைகளுடன் தொடர்பு இருந்தது. பத்திரிகைகள் மூலம் புரட்சிகரமான கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல முடியுமென்ற நம்பிக்கையுடன் செயல்பட்ட பத்திரிகை ஆசிரியர்கள் மீது எங்களுக்கு மரியாதை இருந்தது. இராயப்பேட்டை தெருக்களில் நின்று வெறுமனே தேநீர் மட்டும் குடித்துவிட்டு மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருந்தோம். எல்லோருக்கும் ஏதோவொரு லட்சிய வேட்கை. சொந்த வாழ்க்கையில் பொருளாதாரரீதியில் முன்னேற வேண்டுமென நினைத்தாலும், சமூக மாற்றத்திற்கான கருத்துக்களைக் காத்திரமாக விவாதித்தோம். 1981 ஆம் ஆண்டு கோடம்பாக்கம், 15, சாரி தெரு வீடு இடதுசாரிகள், எழுத்தாளர்கள், சினிமாகாரர்கள், வேலை தேடுகிறவர்கள் என இளைஞர்களால் நிரம்பி வழிந்தது. நானும் அவ்வப்போது தங்கியிருக்கிறேன்.

அந்தப் பெரிய வீட்டின் காப்டனாகத் தோழர். வைகறை இருந்தார். சாரி தெரு வீட்டில் இரவுவேளையில் பெரிய பானையில் சோறு ஆக்கி, குழம்பு ஊற்றிப் பெருங்கும்பலாக மொட்டை மாடியில் அமர்ந்து வயிறாரச் சாப்பிட்டது நினைவுக்கு வருகிறது. 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்' என்ற பாரதியின் வரிகள் நினைவுக்கு வருகின்றன. அந்த வீட்டில்தான் முதன்முதலில் இளவேனில் அவர்களைப் பார்த்தேன். நண்பர் வித்யா சங்கர் என்ற துரைக்கு இளவேனில் நெருக்கமாக இருந்தார். இளவேனில் எழுதிய 'ஆத்மா என்றொரு தெருப்பாடகன்' புனைவு மொழியில் இருந்தாலும், நிஜமான கதை என்று நம்ப வைத்தது. இடதுசாரி எழுத்தாளர்கள் என்றால் வறட்டுத்தனமாகப் புரட்சி குறித்து எழுதுவார்கள் என்ற பார்வையைப் புறந்தள்ளிய இளவேனிலின் எழுத்துகள் ஈரத்துடன் ததும்பின.

**ந.முருகேசபாண்டியன், மதுரை**

ஜோசப் குமார்

அ. மாதவையாவின் ‘‘தில்லை கோவிந்தன்’’

# புதினமும் கட்டுரைகளும்



அந்தக் காலக்கட்டத்தில், நாடார், மற்றும் மற்ற தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் போன்று தீண்டாதார் என்று கருதப்பட்ட மக்கள், ஊரின் ஒதுக்குப்புறமானதோர் பகுதியில் வசித்து வந்ததையும் தன் இனத்தவராகிய பார்ப்பனர், பெருங்குளத்தின் மையப் பகுதியில் உறைந்து வந்ததையும் கண்ட மாதவையா, இந்திய மண்ணில் புரையோடியுள்ள சாதிச் சிக்கலையும், இழிவையும் உணர்ந்து மனம் வெதும்பினார். ராமானுஜரின் மதச் சீர்திருத்தங்களை முழுவதுமாக ஏற்றுக்கொண்ட அவர் எழுதுகிறார்: “தில்லையிலுள்ள பிராமணர் வீதியில் சுமார் ஐம்பது வீடுகள் உண்டு. அங்கே பள்ளர், பறையர், சாணார் முதலிய தீண்டாதார் யாரும் பண்டைக் காலந்தொட்டு அடியெடுத்து வைத்ததில்லை. இவ்வூரில் பிராம்மணன் எவனும் கைப்பாடு படுவதில்லை. சூத்திரர்களிலும் ஒரு சிலர் மட்டுமே பாடுபட்டு நிலத்தை பயிர் செய்பவர். இந்த இழிவான வேலையெல்லாம் கீழ்ச்சாதியினராலேயே செய்யப்பட்டு வந்தது. இவர்கள் பூதேவர் வாழும் திருக்கோயில்களுக்கு நெடுந்தூரத்திலே, தாங்கள் பயிரிடும் வயல்களுக்கு இடையேயுள்ள திடல்களிலே கூரை வேய்ந்த சேரிக் குடிசைகளிலே ஆடு மாடுகளோடும், நாய், பன்றி முதலியவற்றோடும் அநாதைகளாய், தீராத தரித்திரத்திலே ஆழ்ந்து, எவ்வாறோ காலந்தள்ளி வந்தனர்....”

தமிழ் மண்ணில் வாழ்ந்து, மறைந்த சமூகப் புரட்சியாளர் அ. மாதவையா (1872-1925), தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் ஆழ்ந்த புலமை உடையோராய் இருந்தார். தமது குறுகிய வாணாளில் இவ்விரு மொழிகளிலும் ஏராளமான, புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள், மற்றும் கட்டுரைகளை எழுதியுள்ள பேராற்றலாளர். தமிழ்மொழியில் அவர் எழுதியவை ஆறு புதினங்கள், ஒரு சிறுகதைத் தொகுதி, எட்டு நாடகங்கள், ஏழு கட்டுரைத் தொகுதிகள் ஆகும். இஃதன்றி, “பஞ்சாமிர்தம்”, “தமிழ் நேசன்” என்ற இரு இதழ்களையும் 1917-24 ஆகிய ஆண்டுகளில் நடத்தி பல்சுவைக் கட்டுரைகள் படைத்துள்ளார்.

இதேபோல ஆங்கில மொழியில், அவர் எழுதிய நான்கு புதினங்கள், ஐந்து குறும்புதினங்கள், “தி இந்து” ஆங்கில நாளிதழில் பதின்மூன்று சிறுகதைகள், தான் கல்வி பயின்று ஓரிரு ஆண்டுகள் பணியாற்றிய சென்னை கிறித்துவக் கல்லூரி இதழில் பதினேழு கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அனைத்திலும், சமூக சீர்திருத்தத்திற்கான புரட்சி விதைகளைத் தெளித்துச் சென்றுள்ளார். பிறப்பால் அவர் பார்ப்பனராயிருந்தாலும், தமது இனமக்கள் கடைப்பிடித்தொழுகிய “சமூக அநீதி” வாழ்வியலோடு அவர் இயைந்து போக மறுத்ததோடு மட்டுமல்ல, அதற்கெதிராகப் போர்க் கொடியையும் உயர்த்தினார்.

மாதவையா “தில்லை கோவிந்தன்” என்ற பாத்திரத்தை மையப்படுத்தி இரு நூல்கள் செய்தார். 1903-ல் அவர் எழுதிய “தில்லை கோவிந்தன் – ஒரு தன் வரலாறு” என்ற புதினம் சென்னையைச் சேர்ந்த சீனிவாச வரதாச்சாரி என்ற நிறுவனத்தாரால் முதலில் அச்சிடப்பட்டது. ஆங்கில மொழியில் அவர் எழுதிய இப்புதினம், 1916-ஆம் ஆண்டு, இலண்டன் மாநகரிலுள்ள “ஃபிஷ்ஷர் அன்வின்” (Fisher Unwin) என்ற நிறுவனத்தால் மறுபதிப்பு கண்டது. சிலகாலத்திற்குப் பின்னர் மாதவையா, தான் நடத்தி வந்த “தமிழ் நேசன்” இதழில், இப்புதினத்தைத் தாமே தமிழில் மொழிபெயர்த்து வெளியிடத் துவங்கினார். சில அதிகாரங்கள் வெளியிட்டதும், தொடர்ந்து மொழிபெயர்க்கும் பொறுப்பைத் தனது உறவினரான வே. நாராயணன் என்பவரிடம் ஒப்படைக்க, அவரும் இப்பணியை நிறைவு செய்தார். 1944-ல், அதாவது மாதவையா காலமாகி பத்தொன்பது ஆண்டுகள் கழிந்த பின்னர், இப்புதினத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு, “தினமணி” நிறுவனத்தால் வெளியிடப்பட்டு, மக்களிடையே பெரிய வரவேற்பையும், பேராதரவையும் பெற்றது. திரு. ஏ. என். சிவராமன், திரு. கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், திரு. ஏ.வி. மெய்யப்பச் செட்டியார், திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை போன்ற மேதைகளையெல்லாம் உள்ளடக்கி ஓர் இலக்கிய ஆலோசனைக் குழு

அமைக்கப்பட்டு, அவர்களது வழிகாட்டுதலில், இப்புத்தகம் அச்சிடப்பட்டது.

திரு. மாதவையா, இப்புதினத்தை "பம்பா" (PAMBA) என்னும் புனைபெயர் பூண்டு எழுதினார். இவ்வைந்து ஆங்கில எழுத்துக்களும் "பெருங்குளம் அ. (அப்பாவையர்) மாதவையா, பி.ஏ." என்பதைக் குறிப்பன. தில்லை கோவிந்தன் என்ற பாத்திரம் தனது காலம் சென்ற நண்பர் ஒருவரைக் குறிப்பதாகும் என்று மாதவையா, சென்னை கிறித்துவக் கல்லூரி இதழொன்றில் (அக்டோபர், 1906) பதிவு செய்துள்ளார். தில்லை கோவிந்தன் என்ற பார்ப்பனச் சிறுவன் தன் இளம் பருவம் துவங்கி, மணப்பருவத்தைக் கடந்து, உலக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்து ஊரார் மெச்ச நடந்து, வாழ்க்கையின் பிற்காலத்தில் சந்திக்க நேரிட்ட அதிருப்தியினால் அமைதி நாடி "யாத்திரை" மேற்கொண்டு, இதிலும் நிறைவும் தெளிவும் பெறமுடியாமல் மீண்டும் தனது வீட்டிற்குத் திரும்பிவிட்ட அனுபவங்களைப் பற்றி, பத்தொன்பது அத்தியாயங்களில் கூறுவதாக இந்நூல் படைக்கப்பட்டுள்ளது.

முதல் அத்தியாயத்தின் துவக்கப் பகுதியிலேயே, மாதவையா, அக்காலக் கட்டத்தில் வெகுவாகப் பரவியிருந்த பார்ப்பன ஆதிக்கம் மிகுந்த சாதிய மரபுகளை இடித்துரைக்க ஆரம்பித்து விடுகிறார்.

அந்தக் காலக்கட்டத்தில், நாடார், மற்றும் மற்ற தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் போன்று தீண்டாதார் என்று கருதப்பட்ட மக்கள், ஊரின் ஒதுக்குப்புறமானதோர் பகுதியில் வசித்து வந்ததையும் தன் இனத்தவராகிய பார்ப்பனர் பெருங்குளத்தின் மையப் பகுதியில் உறைந்து வந்ததையும் கண்ட மாதவையா, இந்திய மண்ணில் புரையோடியுள்ள சாதிச் சிக்கலையும், இழிவையும் உணர்ந்து மனம் வெதும்பினார். ராமானுஜரின் மதச் சீர்திருத்தங்களை முழுவதுமாக ஏற்றுக்கொண்ட அவர் எழுதுகிறார். "தில்லையிலுள்ள பிராமணர் வீதியில் சுமார் ஐம்பது வீடுகள் உண்டு. அங்கே பள்ளர், பறையர், சாணார் முதலிய தீண்டாதார் யாரும் பண்டைக் காலந்தொட்டு அடியெடுத்து வைத்ததில்லை. இவ்வூரில் பிராம்மணன் எவனும் கைப்பாடு படுவதில்லை. சூத்திரர்களிலும் ஒரு சிலர் மட்டுமே பாடுபட்டு நிலத்தை பயிர் செய்பவர். இந்த இழிவான வேலையெல்லாம் கீழ்ச்சாதியினராலேயே செய்யப்பட்டு வந்தது. இவர்கள் பூதேவர் வாழும் திருக்கோயில்களுக்கு நெடுந்தூரத்திலே, தாங்கள் பயிரிடும் வயல்களுக்கு இடையேயுள்ள திடல்களிலே கூரை வேய்ந்த சேரிக் குடிசைகளிலே ஆடு மாடுகளோடும், நாய், பன்றி முதலியவற்றோடும் அநாதைகளாய், தீராத தரித்திரத்திலே ஆழ்ந்து, எவ்வாறோ காலந்தள்ளி வந்தனர்...." என்ற வரிகள், அந்தக் காலத்தில் பார்ப்பனர் – பார்ப்பனர் அல்லாதார் இடையே, மிக மோசமான இடைவெளி இருந்து வந்துள்ள அவலத்தைத் தோலுரித்துக் காட்டுகின்றது. இத்தகு சமூக முரண்பாடுகளைப் பிற எத்தனையோ புரட்சிகரச் சிந்தனையாளர்கள் அதற்கு முன்னரே படம் பிடித்துக் காட்டி, சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், ஒரு பார்ப்பனரின் சிந்தனையிலிருந்தே இவை நேர்மையான முறையில் வெளிப்படுவது, அவலத்தின் உக்கிரத்தை சுட்டிக்காட்டுகிறது.

மாதவையா தொடர்ந்து எழுதுகிறார்: "தில்லை வாழ் தீட்சிதர் ஒருவரிடம், பிராம்மணரல்லாதார் அனைவரிடமும் அவமதிப்பு காணப்பட்டது. இதனை அவர் மறைப்பதில்லை. விஷ்ணுவை வணங்குவதைக் காட்டிலும், கிறித்துவைப் பெற்றெடுத்த கன்னி மேரியைக் கூட அவர் வணங்குவதற்கு இணங்குவார், சூத்திரனாகப் பிறந்த பெரியாரினும், பிராம்மணனாகப் பிறந்த கொலையாளியை சிலாக்கியமென்று கொள்வார்". பிறரினும் தாம் பல படிகள் உயர்ந்தவர்கள் என்ற அகந்தைச் செருக்கோடு பார்ப்பனர் தம் வாழ்வை அமைத்துக் கொண்டு, அதன் மூலம், சிறப்பான மேன்மையும் குணநலன்களும் கொண்டிருந்த பிற சமூகத்தினரை துச்சமாக எண்ணி, அவரை மதியாது, அவரிடம் தோழமை பாராட்டாது சிறுமைப்படுத்தி வந்துள்ள வக்கிரம் ஒரு பார்ப்பனரின் எழுதுகோல் மூலமாக விவரிக்கப்படும்போது, அங்கு கலகக் கனல் விதைக்கப்படுகிறது.

பிறிதோரிடத்தில், தில்லை கோவிந்தன் தனது பாட்டனார் ஒருவரைப் பற்றி எழுதுவதாக மாதவையா பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "ஒரு நாள் காலை என் பாட்டனார் நதியில் நீராடிவிட்டுத் திரும்பும்போது, சாலையிலே சாணான் ஒருவன் வருவதைப் பார்த்து, அவனை சாலையிலிருந்து கீழே இறங்கிச் செல்ல சைகை செய்துள்ளார். ஆனால் அந்தச் சாணான் ஒரு கிறித்துவன், அவன் என் பாட்டனாரின் சைகைகளையெல்லாம் சிறிதும் மதியாது குறுகிய சாலையில் நேராக நடந்து வர, என் பாட்டனார், அவனுடைய மூச்சு தம் மீது பட்டாலும் அசுத்தமாகி விடுவோம் என நினைத்துப் பயந்து, தானே சாலையிலிருந்து இறங்கி வயல்களுக்கு நடுவில் ஓட ஆரம்பித்தார். ஆனால் சாணானோ, தானும் வயலில் இறங்கி, அவரைத் துரத்திக் கொண்டு, அவரை இன்னும் விரைவாக ஓடச் செய்தான்! அப்போது வேறு சில மறவர் அங்கு வர, அவர்களிடம் என் பாட்டனார், அந்தச் சாணானை ஊரார் முன் விசாரணைக்குக் கூட்டிவரப் பணித்தார். நியாய சபை வழக்கை விசாரித்து என் பாட்டனாருக்கு நூறு ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கியது! வயலில் ஓடியபோது, என் பாட்டனாரின் காலில் முள் ஒன்று தைத்துவிட்டதால், அது பெரிய காயமாகி, அவர் படுக்கையிலேயே இருக்க வேண்டி வந்துவிட்டது. உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை இல்லாமல், அவர் படுக்கையிற் கிடந்த படியே "சமன்யாஸம்" வாங்கிக் கொண்டார்". உறவினர்கள் அவரது தலையை மழுங்கச் சிரைத்துப் பூணூலையும் கழற்றியபோது, சிறுவனான தில்லை கோவிந்தன், தன் தாயாரைப் பார்த்து, "தாத்தா துருக்கனாகி விட்டாரா அம்மா? இனி நான் அவரைத் தொட்டால் தீட்டாகி விடுவேனா?" என்று கேட்டானாம். மாதவையா இந்நிகழ்வுகளை விவரிக்கும்போது அவருடைய சொற்களில் நகைச்சுவை மிளிர்கிறது.

தில்லை கோவிந்தனுக்கு, பள்ளிப் பருவத்திலேயே திருமணம் நடக்கிறது. மணமகளுக்கு வயது ஐந்து. திருமணச் சடங்குகள் நடைபெற்ற வேளையில், அவன் உச்சரித்த மந்திரங்களின் பொருளோ, கருத்தோ அவனுக்கு விளங்கவில்லை. அவனது உபநயனத்தின் போதும், அவன் கூறிய மந்திரங்களின் பொருள் சிறிதும் புரியாமலிருந்தது. அவன் கூறுவதாக ஆசிரியர் எழுதுகிறார், "நாளும் முச்சந்தியும் தவறாது நான் சிரத்தையோடு செய்து வந்த சந்தியா வந்தன மந்திரங்களின் அர்த்தமும் எனக்குத் தெரியாதே! உண்மையில் நான் இவற்றைப் பற்றியெல்லாம் சிந்தித்ததேயில்லை. விவாகத்தின் தாத்பர்யம் என்ன, மணவாளனின் பொறுப்புக்கள் யாவை என்பதைப் பற்றி அறிய முயலவில்லை". சமூக வாழ்வைச் சிக்கலின்றித்

தொடர்வதற்கு மனிதர் உருவாக்கிக் கொண்ட திருமண முறை, பார்ப்பனரின் வைதிகத்தில் எப்படி பொருள் இழந்து அதன் உண்மையும் இனிமையும் சிதைக்கப்பட்டுவிட்டன என்பதைப் பார்ப்பனரான மாதவையா அறிவு நேர்மையோடு, கேள்விகளுக்கு உட்படுத்துவது மிகவும் பாராட்டத்தக்கது. மேலும், தில்லை கோவிந்தனின் தங்கை கோமளா ஐந்து வயதிலேயே ஜாதக முறைப்படி திருமணம் செய்து வைக்கப்பட்டிருந்த போதும், ஒரு சில ஆண்டுகளிலேயே கைம்பெண் ஆகிவிட்டதால், அவர், அறிவியலுக்கும் பொது அறிவிற்கும் முற்றிலும் மாறான, ஜாதகம் பார்க்கும் முறைக்கு எதிர் மனநிலையில் இருக்கிறார்.

இந்த நிலையில் தில்லை கோவிந்தன் அவரது மகள் கமலாவிற்கு, திருமணம் செய்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றார். முதன் முதலில் பார்த்த ஒரு பையனிடம் கோத்திரச் சிக்கல் இருந்ததால் அவனைத் தவிர்த்துவிட்டார்கள். இரண்டாவதாகப் பார்த்த பையன் ஆயிரம் ரூபாய் சீதனம் கேட்டதால் அவனையும் ஒதுக்கிவிட்டார்கள். மூன்றாவதாகப் பார்த்த பையன், தில்லை கோவிந்தனிடம், தனது குடும்பத்தின் வறிய நிலையை எடுத்துச் சொல்லி, தான் மேற்கொண்டிருக்கும் பி.எல். படிப்பைத் தொடர்வதற்கு மட்டும் உதவி செய்தால் போதுமானது என்று கூற தில்லை கோவிந்தன் அவனையேத் தேர்ந்தெடுக்கின்றார். மகள் கமலாவின் ஜாதகத்தைக் கணித்த ஜோசியர், ஏதோ சந்தேகமாகச் சொல்லவே, அக்கணமே, ஜோசியத்தில் நம்பிக்கை இல்லாத தில்லை கோவிந்தன் மகளது ஜாதகத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு, பையனின் தந்தையிடம், “என் பெண் பிறந்தபோது, அவர் பிறந்த வேளையைக் குறித்து வைக்கத் தவறிவிட்டோம்” என்று சொல்ல, அவரும் ஜாதகப் பொருத்தம் பார்க்காமலேயேத் திருமணத்திற்கு இசைந்து விடுகிறார். அதோடு மட்டுமல்ல, பெரும் பொருட் செலவின்றித் திருமணத்தையும் தில்லை கோவிந்தன் நடத்தி விடுகிறார்.

பார்ப்பனிய நெறிமுறைகளை, தில்லை கோவிந்தன் வன்மையாகக் கண்டிக்கிறார். “பூணூலைப் போட்டுக் கொண்டால், பிராம்மணரல்லாதாருடன் பகிரங்கமாய்ச் சாப்பிட்டாலும், அவர்களோடு கொண்டு கொடுத்துச் சம்பந்தம் செய்யாத வரையிலும், என்னை எல்லோரும் பிராம்மணன் என்றே மதிப்பார்கள். அந்த உயர் சாதியாரின் உரிமைகள் எல்லாம் எனக்கும் அளிக்கப்படும். சிற்சில அற்ப அனுஷ்டானங்களையும் மேற்கொண்டு விட்டால் என்னை வைதிகச் சிரத்தை வாய்ந்த கனவான் என்று புகழ்வார்கள்.... நான் பிறர் மனையோடும், பாபியாகவோ, குடிகாரனாகவோ, பொய்யனாகவோ, படு மோசக்காரனாகவோ இருக்கலாம், தெய்வச் சொத்தைத் திருடித் தின்னலாம், வாய் கூசாமற் பொய்ச் சத்தியம் செய்யலாம். ஆனால், என் தலை மயிரை ஒட்டக் கத்திரிக்கவோ, மீசை வளர்க்கவோ, தொப்பி போடவோ, பூணூலை எடுத்தெறியவோ நான் தலைப்பட்டாலும், என் இளைய சகோதரி அமங்கலியானாள் என்று அவளது அழகிய கருங்கூந்தலை எடுக்க நான் சம்மதியாவிட்டாலும், என் மனைவியை என்னோடு திறந்த வண்டியிலே காற்றாட அழைத்துச் செல்லத் துணிந்தாலும், அவள் வெயிலிலே நடந்து போக வேண்டியதாயிருந்து, காலிற் செருப்பும், கையிற் குடையுமாகச் சென்றாலும், உடனே இந்தப் பொது ஜனப் பிரமுகர்கள் என்னைத் திரஸ்காரஞ் செய்து, தங்கள் மத்தியில் எனக்கு இருப்புக் கொள்ளாதபடி நடந்து கொள்வார்கள். நான் என் மனைவியை அடிக்கலாம், அவள் கண்ணிற்கு எதிரிலே என் வீட்டிலே வைப்பாட்டிகளைக் கொண்டு வந்து வைக்கலாம். அவள் மட்டும், என் சிநேகிதர்களானாலும், ஆண் மக்களோடு வாய் திறந்து பேசக் கூடாது, மற்றவர் முன்னால் என் கண்ணிலே படும்படி உட்காரக் கூடாது” என்று அவர் எழுதியுள்ள வரிகளிலிருந்து, எவ்வளவு கூர்மையாகத் தான் சார்ந்திருந்த பார்ப்பனிய சமுதாயத்தையும், அதில் மண்டிக்கிடந்த சீர்கேடுகளையும் ஊன்றிக் கவனித்திருக்கிறார் என்பது நமக்கு நன்கு புலப்படுகிறது. ஒரு மிகச் சிறிய விழுக்காடு எண்ணிக்கையில் உள்ள பார்ப்பனர், தங்களது சமூகத்தைச் சுய பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அ. மாதவையா, இவர் போன்றோரில் தலையானவர் என்று கொள்ள வேண்டும். இன்றையப் பார்ப்பனர்கள், நூறு ஆண்டுகட்கு முன்னர், மாதவையா தனது நூலில் குறிப்பிட்ட நிலை இப்போது எங்கணுமில்லை என்று வாதிடலாம். இது எந்த அளவிற்கு உண்மையான கணிப்பு என்று நாம் ஆராய வேண்டாம். நாம் கருத்தில் கொள்ள வேண்டியதெல்லாம், மாதவையா போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளின் பங்களிப்பும் போராட்டமும் இன்றி, இன்றுள்ள நிலை உருவாகியிராது என்பதை மட்டுமே.

1906இல் மாதவையா, “பம்பா” என்ற தனது புனை பெயரில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், “காலமாகி விட்ட எனது நண்பர் தில்லை கோவிந்தன் எழுதிய கட்டுரைகளையெல்லாம் நான் பார்க்க நேர்ந்தது. இக்கட்டுரைகள் இப்போதுதான் முதன் முதலாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. அவருடைய முதற் புத்தகமான, “தில்லை கோவிந்தன் – தன் வரலாறு” என்ற புதினத்தைப் படித்துப் பாராட்டிய வாசகர்கள் இக்கட்டுரைகளையும் பாராட்டி வரவேற்பர் என்று நம்புகிறேன். இந்தக் கையெழுத்துப் படிகளை முறைப்படுத்தி அடுக்குதலும், தனித்தனிக் கட்டுரைகளாகப் பிரித்தலும், அவற்றிற்கு தலைப்பு ஒன்றைக் குறிப்பிடுவதும் எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. இந்திய வாசகர்கள் எனது நண்பரது அனைத்துக் கருத்துக்களோடும் உடன்படாமற் போகலாம். ஆனால் அவரது சுய வரலாற்றைப் படித்துள்ள பலர், அவர் இன்று பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ள பல விடயங்களில் தில்லை கோவிந்தன் என்ன கருத்து கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொள்ள ஆவலோடு இருப்பார்கள் என நம்புகிறேன்”. (பம்பா – PAMBA – PERUNKULAM A. MADHAVIAH, B.A.)

1903–ல், தில்லை கோவிந்தன் ஆங்கிலப் புதினத்தை எழுதிய மாதவையா, 1906இல், இதே பெயரில் ‘Thillai Govindan’s Miscellany” என்ற தலைப்பில் சில கட்டுரைகளை, கிறித்துவக் கல்லூரி இதழில் எழுதினார். இக்கட்டுரைகள் பின்னர், சென்னையிலிருந்த ஜி.ஏ. நடேசன் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டன.

தில்லை கோவிந்தன் என்ற தலைப்பில் மாதவையா எழுதிய புதினத்திலும், கட்டுரைகளிலும், மிகவும் முற்போக்கான சீர்திருத்தக் கருத்துக்கள் பொதிந்திருப்பதைக் காணலாம். ஆனால் இக்கருத்துக்களின் வீச்சு கட்டுரைகளில் அதிகமாக இருக்கின்றது. ஏனெனில், முந்தியது, அடிப்படையில் ஒரு புதினம். சீர்திருத்தக் கருத்துக்களோடு, கதை மாந்தரும் நமது பரவசத்தைப் பங்கு போட்டுக் கொள்கின்றனர். ஆனால், கட்டுரைகளில், மாதவையாவின் சிந்தனையில் தோன்றிய புதுமைக் கருத்துக்கள் மட்டுமே,

> மாதவையா பிறப்பால் பார்ப்பனர். ஆனால் இறுதி வரை தனது எழுத்துக்களை, சமரசமில்லா பார்ப்பனிய எதிர்ப்பு என்ற மையிலேயே எழுதினார். சாதிப் பிரச்சினையை அணுகுவதில், பல உயர்ந்த உள்ளம் கொண்ட பார்ப்பனர்கள் தமது கண்டனங்களை நேர்மையாகப் பதிவு செய்துள்ளனர்.

முதலிலிருந்து இறுதி வரை நமது சிந்தனையை ஆக்கிரமிக்கின்றன. வெகுவிரைவிலேயே, அவருக்கு “சாதி” என்ற இந்தச் சழக்கை ஒழித்தல் மிகவும் கடினம் என்பது தெரிந்துவிடுகிறது.

“பெண்” குறித்த கட்டுரையில் பெண்களின் கற்பு என்ற பொருளை மாதவையா அணுகும் முறை அவரது விவாதத் திறமைக்குச் சான்று. அவர் கேட்கிறார், “நம் நாட்டில் பலப்பல நூற்றாண்டுகளாக பெண்கள் ஆண்களால் அடக்கப்பட்டே வந்திருக்கின்றனர். குழந்தைத் திருமணம், கல்வி மறுப்பு போன்றவைகளால் அவர்களது மனவளர்ச்சி முற்றாய் முடக்கப்பட்டு, இளம் வயதிலேயே மாண்டு விடும் கொடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். ஆனால், இவர்களனைவரும் கற்புடைய, கற்பிற் சிறந்த மங்கையராகவே இருந்தனர். இவர்களோடு ஒப்பிடும்போது, வெளிநாட்டில் வசிக்கும் பெண்கள், பல மடங்கு அதிகமான உரிமை பெற்றவராக இருக்கிறார்கள். குழந்தை திருமணம் அங்கே கிடையாது. ஆண்களுக்கொத்த சம கல்வியில் பெண்களுக்கும் உரிமை உண்டு. திருமணத்திற்குப் பின்னர், கணவன்மாரிடமிருந்து பல உரிமைகளைப் பெறுகின்றனர். முற்றிலுமாக உரிமைகள் மறுக்கப்பட்டு, வெளி உலகம் என்னவென்றே தெரியாமல் வாழ்ந்து மடிகின்ற நமது பெண்களின் கற்பு பெரிதா அல்லது, அனைத்து உரிமைகளுக்கும் நடுவில், தங்களது தூய்மையை இழக்காமல், கணவன்மாரை நேசித்து வாழும் மேலைநாட்டுப் பெண்களின் கற்பு சிறந்ததா?”. “கற்பு நிலையில், மேலைநாட்டுப் பெண்களே சிறந்தவர் என்பது எனது முடிபு” என்று அவர் சொல்லும் வேளையில், அவரது அறிவார்ந்த அணுகுமுறை நமக்குப் புலப்படுகிறது. அவர் இந்திய நாட்டுப் பெண்களைப் பற்றித் தாழ்ந்த சிந்தனை உடையவராய் இருந்திருக்கிறார் என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, இந்த அணுகுமுறையின் மறுபக்கமாக “நமது நாட்டுப் பெண்கள் அனைவருக்கும் பிறநாட்டுப் பெண்களைப் போலவே கல்வி உரிமை துவங்கி அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்” என்ற கருத்து பொதிந்திருப்பதை நாம் உணர்ந்து தெளிய வேண்டும்.

1907–லேயே மாதவையா நம் நாட்டுப் பெண்களின் நிலை குறித்து இவ்வளவு ஆழமாகச் சிந்தித்திருக்கிறார் என்பது தான் இங்கு கவனிக்கத் தக்கது. இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து அவர் எழுதிய பிற கட்டுரைகளிலெல்லாம், அவர் மகாபாரதம், பகவத்கீதை, விவிலிய நூல், ஷேக்ஸ்பியர் மற்றும் பல கவிஞர்களின் செம்மாந்த கவிதைகள் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டி எழுதியிருப்பதிலிருந்து, அவரது சிந்தனைகளின், வீச்சும், வீரியமும், எல்லைகளும் நமக்குப் புலப்படுகின்றன.

காலம் காலமாக இந்திய மண்ணில் முட்களாய் பிரம்மாண்ட வளர்ச்சி கண்டுள்ள சாதிய அமைப்பின் மூல வேர்களை அவர் வேறு கட்டுரைகளில் ஆராய்வது அவரது தனித்துவத்தைக் காட்டுகிறது. உயர் சாதியினர் என்று கருதப்பட்ட பார்ப்பனரால், தாழ்த்தப்பட்ட கீழ்ச் சாதியினர் எவ்வாறு விலங்குகளுக்கும் கீழாக நடத்தப்படுகின்றனர் என்பதைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுவதோடு, இந்த அவல நிலையைக் கண்டு தனது உள்ளம் எப்படி பதை பதைக்கிறது என்பதையும் நேர்மையாகவும் அறிவுக் கூர்மையுடனும் விளக்குகிறார். இந்தியத் தாயின் வயிற்றில் உதித்த சகோதரர்களில் ஒரு சிலர், ஆண்டாண்டுகளாக சமூக உரிமைகள் அனைத்தையும் அபகரித்து அனுபவித்துக் கொண்டு, அவரது சகோதரர்களில் பலரை, கீழ்ச் சாதியினர் என்று சொல்லி, அவரை ஊரை விட்டு தனியே வெளியே வசிக்கச் சொல்வதும், அவர் உணவுக்கும், உறைக்கும் உடைக்கும் படுகின்ற இன்னல்களையெல்லாம் கண்டு கொள்ளாதிருப்பதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், நமக்கு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை வேண்டும் என்று கோருவது அறத்திற்கு முரணானது என்ற கருத்தைத் துணிவுடனும் தெளிவுடனும் சமுதாயத்தின் முன் வைக்கின்றார். நமது வீட்டைச் சீர்திருத்திய பின்னர்தானே நாம் நாட்டைப் பற்றி கவலைப்படுவது முறையாக இருக்கும் என்ற சிந்தனை விதைகளை மக்களது மனப்பாத்தியில் தூவியிருக்கிறார்.

மாதவையா பிறப்பால் பார்ப்பனர். ஆனால் இறுதி வரை தனது எழுத்துக்களை, சமரசமில்லா பார்ப்பனிய எதிர்ப்பு என்ற மையிலேயே எழுதினார். சாதிப் பிரச்சினையை அணுகுவதில், பல உயர்ந்த உள்ளம் கொண்ட பார்ப்பனர்கள் தமது கண்டனங்களை நேர்மையாகப் பதிவு செய்துள்ளனர். ஆனால் மாதவையா அளவிற்கு, தான் வாழ்நாள் முழுவதும் சற்றும் தொய்வின்றி பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவரைக் காணுதல் அரிது. அதற்குச் சான்றாக, அவர் நமக்காக விட்டுச் சென்ற இலக்கியச் செல்வங்கள் உள்ளன.

இந்த இடத்தில் நமக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. “பெண்” குறித்த கட்டுரையில், மாதவையா “மேலை நாட்டுப் பெண்களின் கற்பு, இந்தியப் பெண்களின் கற்பு நிலையைவிடப் பாராட்டத்தக்கது என்று கருதலாம்” என்று குறிப்பிடுகிறார். இதனையொத்து, பார்ப்பனரல்லாதார் பார்ப்பனியத்தை எதிர்ப்பதைக் காட்டிலும், பார்ப்பனரான மாதவையா பார்ப்பனியத்தை எதிர்ப்பதில் மேலான பொருள் இருக்குமோ என்ற சிந்தனை வருகிறது.

மாதவையா ஆங்கில வழிக் கல்வி பயின்றார். தனக்குக் கல்வி கற்பித்த கிறித்துவக் கல்லூரி பேராசிரியர்கள் பலரோடு தன் வாழ்நாள் முழுவதும் தொடர்பு கொண்டிருந்தார். அந்த ஆங்கிலேயப் பேராசிரியப் பெருமக்கள், பணி நிறைவுக்குப் பின்னர் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்று விட்ட பின்னரும் கடிதங்கள் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தினார். தான் பெற்ற ஆங்கில வழிக் கல்வியின் பயனாக அவர் ஆங்கிலேய அரசில் ஓர் உயர் பதவியில் பல ஆண்டுகள் பணியாற்றினார். ஆனால் அவருடைய முப்பத்தி ஐந்தாவது வயதிலேயே அவருக்கு ஓர் ஐயம் தோன்றியிருக்கிறது. ஆங்கிலேயரிடமிருந்து

> குழந்தை திருமணம், வரதட்சணை, கைம்பெண் கொடுமை, கைம்பெண் திருமண மறுப்பு, தேவதாசி வாழ்க்கை முறை இவையெல்லாம் பெண்களின் வாழ்க்கையையும் மகிழ்ச்சியையும் சிதைக்கக்கூடிய பேரிடர்கள் என்று கருதினார். மேலும், பெண்கள் எங்கு நன்கு மதிக்கப்படவில்லையோ, அந்த இடம் எத்துணை வேத யாகங்கள் செய்தாலும் புனிதம் பெறாது என்று எழுதினார்.

பெற்ற கல்விப் பயனை முழுமையாக அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே அவர்கள் இந்திய நாட்டிற்கு விடுதலையை அளித்துவிட்டுத் திரும்பிச் சென்று விட வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் சுயநலம் இருக்குமோ என்ற ஐயப்பாட்டைக் கொண்டிருந்திருக்கிறார். ஏப்ரல், 1907, கிறித்துவக் கல்லூரி இதழில் அவர் “நாட்டுப் பற்று” குறித்து எழுதிய கட்டுரையில், தனது மன ஊசலாட்டத்தை இவ்வாறு விவரித்துள்ளார்.

மாதவையா ஒரு சிந்தனையாளர். ஒரு பொருளைப் பல கோணங்களிலுமிருந்து அணுகி, அதன் உட்பொருள் இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்ற சிக்கலைத் தீர்க்க, வாழ்நாள் முழுவதும் தன் மனதிற்குள்ளேயேப் போராடியவர். எடுத்துக்காட்டாக, அவர் மதங்கள் குறித்து மேற்கொண்ட ஆழமான ஆய்வுகளைக் குறிப்பிடலாம். கிறித்துவ மதத்தை அவர் முழுமையாகப் புரிந்துகொள்ள முயற்சித்த போது, அவர் கிறித்துவராகவே மாறிவிட்டாரோ என்ற எண்ணம் பலருக்குத் தோன்றியுள்ளது. ஆனால் உண்மையில், அவர் தன் வாழ்க்கையின் இறுதி நாள் வரை இந்துவாகத் தான் இருந்தார். மாதவையாவின் இந்த அகப்போராட்டத்தைப் பற்றி அவரது புதல்வரும், சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதியரசருமான மா. அனந்த நாராயணன் அவர்கள், “என் தந்தையாரின் மதக் கோட்பாடுகளை ஓரளவுக்கு விளக்க நான் கடமைப்பட்டவன். அவர் ஒரு நாளும் கிறித்துவ மதத்தைத் தழுவி, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற ஆசை கொண்டவரல்ல. இருந்த போதிலும், மத்தேயு போன்ற சுவிசேஷங்களில் கூறப்பட்டிருக்கும் ஏசுநாதரின் பொன் வசனங்களில், அவருக்கிருந்த ஈடுபாடு இந்நூலின் பல சான்றுகளிலிருந்தே நன்கு விளங்கும்...”. மா. அனந்தராமன் தனது இறுதி வரியில், “இந்நூல்” என்று குறிப்பிடுவது, “கிளாரிந்தா” ஆகும். ஆங்கிலத்தில் மாதவையா எழுதிய இந்நூலின் முதற் தமிழ்ப் பதிப்பு, அவர் காலமான பிறகு திரு. மா. அனந்தராமன் அவர்களது அணிந்துரையோடு வெளிவந்தது.

மாதவையாவின் பெற்றோருக்குத் திருமணமானபோது, அவரது அன்னையாருக்கு வயது பதினொன்று. அக்கால மரபையொட்டி மாதவையாவின் முதல் மகளான லட்சுமிக்கு (பி. 1896), அவரது ஒன்பதாவது வயதில் அதாவது 1905ஆம் ஆண்டு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. மிகச்சிறிய வயதில் நடந்த இக்கொடுமணத்தால், லட்சுமியின் உடல்நலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அவரது கணவரும் பிற உறவினரும், லட்சுமியின் உடல்நலத்தைப் பேணுவதில் அக்கறை கொள்ளாத நிலையில், மனம் பதறிய மாதவையா, மகள் லட்சுமியைத் தன் வீட்டிற்கே கூட்டிவந்து, தகுந்த சிகிச்சையளித்து, அவரது உடல்நலத்தைச் சீர்படுத்தினார். தனது சொந்த வாழ்வில் நிகழ்ந்த இத்துயர நிகழ்வே, அவரது மனதில் குழந்தை திருமணத்திற்கெதிரான சிந்தனைகளை விதைத்தது.

பொருந்தா மண உறவிலிருந்து தன் மகளை மீட்டு வந்த மாதவையா, தன் மகளைப் பள்ளிக்கு அனுப்பி படிக்க வைத்தார். பள்ளிப் படிப்பு முடிந்த காலை, சென்னை பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் பட்டப் படிப்பு மேற்கொள்ளச் செய்தார்.

லட்சுமியும், தன் தந்தையைப் போலவே, ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராய் இருந்தார். பட்டப் படிப்பு முடித்த தன் மகளை இங்கிலாந்து அனுப்பி அங்குள்ள பெட்போர்ட் கல்லூரியில் படிக்க வைத்து, அவரை ஒரு மிகச்சிறந்த கல்வியாளராக மாற்றினார். இந்தியாவிற்குத் திரும்பிய லட்சுமி, சென்னை ராணி மேரி கல்லூரியில் முதல்வராகப் பணியேற்று, பெண் கல்விக்காக, தன் வாழ்நாள் முழுமையையும் அர்ப்பணித்தார்.

பதின்மூன்று வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்ட மாதவையாவின் தமக்கை முத்துலட்சுமி, உடல்நலம் குன்றி பதினாறாவது வயதில் மரணமடைந்திருந்த சூழ்நிலையில், குழந்தை திருமணம் என்ற, அன்று நாடு முழுவதும் நச்சுக் கிருமிகளாய்ப் பரவியிருந்த இச்சமூக இழிவிற்கான அடிப்படைக் காரணம், பெண் கல்வி மறுப்பே என்பதை நன்குணர்ந்த மாதவையா, தன் சொந்த வாழ்வில், இவ்விழிவிற்கெதிராக, தன் மகளுக்கு மிகப்பெரிய வெற்றியை ஈட்டுத் தந்தார் என்பது அவரோர் மாமனிதர் என்பதை ஐயத்திற்கிடமின்றி நிறுவுகிறது.

“தில்லை கோவிந்தன்” என்ற புதினத்தில், மாதவையா, தனது சொந்த வாழ்வில் நடந்துள்ள நிகழ்ச்சிகளையே விவரித்திருக்கிறார் என்பதை நாம் படித்தறியும்போது, அவர் இப்புனைவுப் பாத்திரத்தைத் தனது சாயலாகவேப் படைத்திருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சென்னையிலுள்ள கிறித்துவக் கல்லூரியில், ஆங்கில இலக்கியத்தில் பட்ட மேற்படிப்பு பயின்ற மாதவையா முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதால், அவருக்கு, கம்பராமாயணம் புத்தகம் பரிசளிக்கப்பட்டது. அக்கல்லூரியிலேயே சில ஆண்டுகள் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். அந்நாட்களில், அவருக்கு, அங்கு ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்த பல ஐரோப்பியக் கிறித்துவ மறைாளரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர் மூலம், கிறித்துவ மதக் கோட்பாடுகளைப் பற்றிக் கேட்டறிந்தும், அம்மத நூற்களைத் தாமே படித்தும், தன் சிந்தனைகளைச் செழுமைப்படுத்திக் கொண்டார். இந்து மதத்தில் காணப்பெறும் சாதிப் பிரிவு என்ற அவலமும், தீண்டாமை என்ற இழிவு, கிறித்துவ மதக்கோட்பாடுகளில் இல்லாதது கண்டு, அவர் மேலும் தீவிரமாக கிறித்துவ மத ஆய்வில் ஈடுபட்டாலும், அவரால், கிறித்துவ மறையாளர்களின் மதமாற்ற முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கிறித்துவ மதக்கோட்பாடுகள் சிலவற்றிலும், அவருக்கு உடன்பாடு இல்லாது போயிற்று. எடுத்துக்காட்டாக, ஏசு, இப்பூவுலகில் அனைவரையும் தீமையிலிருந்து விடுவிக்கும் வல்லமை பெற்றவராயிருப்பின், உலகின் இறுதி நாளன்று, அவர் ஏன் நல்லவரையும், தீயவரையும் தனித்தனியெ இனங்காண வேண்டும் என்று வினவினார். அதே போன்று, மதம் மாறிய கிறித்தவர்களும், நடைமுறையில்,

சாதி வேறுபாடு பாராட்டுவதைக் கண்டு ஏமாற்றமடைந்தார். இவ்விரு பெருமதங்களையும் தாண்டி, அவர் இசுலாம், பவுத்தம் ஆகிய மதங்களை ஆய்வு செய்தபோதும், தனது கேள்விகளுக்கெல்லாம் முறையான பதில் காணாது தன் வாழ்நாள் முழுமையையும், இத்தேடலிலேயே கழித்தார் என்பது தான் அவரது தனிச்சிறப்பாகும். புத்தரின் மனித நேயத்தினாலும், அவரது மகாயானத்தினாலும் ஈர்க்கப்பட்ட அவர், 1918-ல், சித்தார்த்தன் என்ற தலைப்பில் எழுதிய புத்தபெருமானின் வரலாறு, சுதேசமித்திரன் இதழில் தொடராக வெளிவந்தது. எனவே, அவரை இந்து என்ற சிறுவட்டத்திற்குள் ஒடுக்கிட முனைவது, பிழையின் பாற்பட்ட செயலேயாகும்.

மாதவையாவின் தந்தையாரான அப்பாவையர், இரவு நேரங்களில், தேவதாசிகள் என்று அழைக்கப்பட்ட பெண்களின் நடன நிகழ்ச்சிகளைக் காணச் செல்வதை வழமையாகக் கொண்டிருந்தார். ஆண்களின் இம்முறையற்ற செயலுக்கு, அந்நாள் சமுதாயம் அங்கீகாரமும் அளித்திருந்தது. இக்கேட்டினால், பல இரவுகளில் தன் அன்னையின் முகம் வாடக் கண்ட மாதவையா, பின்னாளில், தேவதாசி முறைக்கெதிரான கருத்துக்களைத் தீவிரமாக தன் எழுத்துக்களில் பதிவு செய்யத் துவங்கினார். ஆங்கிலத்தில் தான் எழுதிய முதல் புதினமான தில்லை கோவிந்தனில், சிந்தனைச் செறிவில்லாத செல்வந்தரும், அவரது பிள்ளைகளும், தேவதாசிகளின் தொடர்பினால், எப்படி தம் பொருள் அனைத்தையும் இழந்து, இளம் வயதில் மரணத்தைத் தழுவுதல் குறித்து மட்டுமல்ல, அதன் விளைவாய், அவரது இளம் மனைவியர் கைம்பெண்ணாக மாறும் அவலம் குறித்தும் ஆழமாக எழுதியுள்ளார். அகவையில் முதிர்ந்த தேவதாசிகள், தங்களது, கோயிலில் நடனமாடும் உரிமையை மற்ற இளம் வயது பெண்களுக்கு விற்று, அவரையும் இச்சமுதாயக்கேட்டில் தள்ளிய கொடுமைகளெல்லாம் அரங்கேறிக் கொண்டிருந்த காலம் அது. இதனாலன்றோ, அன்று, ஈரோடு நகர் மன்றத் தலைவராயிருந்த தந்தை பெரியார், தேவதாசிப் பெண்கள் தங்களது கோயில் உரிமைகளை விற்றால், அது செல்லாது என்றும், அவரது மரணத்திற்குப் பின் காலியாகும் இடங்களுக்கு புதிய தேவதாசிகளை நியமிக்கக்கூடாது என்றும், அவருக்கு வாரிசு இல்லாவிட்டால், அந்தப் பதவி அவர்களுடன் முடிந்துவிடும் என்றும் ஆணைகள் பிறப்பித்தார்! தமிழர் தந்தை பெரியார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் போன்றோரின் தளராத முயற்சிகளின் விளைவாய், 1929-ஆம் ஆண்டு, தேவதாசி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது, அதனைக் காண மாதவையா உயிருடன் இல்லை.

மாதவையா தனது இளமைக்காலம் முதற்கொண்டே, தன் செயல்கள் அனைத்திலும் சமூகநீதியை முன்னிறுத்தியே வாழ்ந்தார். குழந்தை திருமணம், வரதட்சணை, கைம்பெண் கொடுமை, கைம்பெண் திருமண மறுப்பு, தேவதாசி வாழ்க்கை முறை இவையெல்லாம் பெண்களின் வாழ்க்கையையும் மகிழ்ச்சியையும் சிதைக்கக்கூடிய பேரிடர்கள் என்று கருதினார். மேலும், பெண்கள் எங்கு நன்கு மதிக்கப்படவில்லையோ, அந்த இடம் எத்துணை வேத யாகங்கள் செய்தாலும் புனிதம் பெறாது என்று எழுதினார். அன்றைய நாளில், இளம் கைம்பெண்களின் கூந்தல் மழிக்கப்பட்டு, அவரது அழகு சிதைக்கப்படுதல் மட்டுமல்ல, வண்ண ஆடைகள் அணிந்து அணிகள் பூணும் உரிமையும், பலர் கூடியுள்ள சூழலில், அவரோடு இயல்பாக உரையாடும் உரிமையும், புத்தகங்கள் படிக்க, பாட்டுப் பாட, மங்கல நிகழ்வுகளில் பங்குபெற இவற்றிற்கான உரிமையும் பறிக்கப்பட்டு, சொல்லொணா கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். பத்மாவதி சரித்திரம் என்ற புதினத்தில், சாவித்திரி என்ற இளம் கைம்பெண் பாத்திரத்தின் தலைமுடி நீக்கப்படும்போது, முடிதிருத்துவோன்கூட மனம் கலங்கித் துடித்துப் போனான் என்று அவர் எழுதிய சொற்களுக்குள், தீண்டாதார் என்று கருதப்பட்ட முடிதிருத்துவோரிடம் காணப்பெறும் இந்தக் கனிவும், நெகிழ்ச்சியும், இந்துமதப் பற்றாளரான பார்ப்பனரிடம் இல்லாமற் போய்விட்டதே என்ற கடுஞ்சினம் புதைந்திருப்பதை உணர முடிகிறது. இத்தகைய தீமைகளையெல்லாம் உள்ளடக்கிய இந்து மதத்தை அவர் கடுமையாகச் சாடினார். இதன் விளைவாய், அவர் வைதிகர்களின் எதிர்ப்பையும், புறக்கணிப்பையும் தேடிக்கொண்டார்.

தான் எழுதியதையெல்லாம் தன் அக வாழ்வில் உண்மையாய்க் கடைப்பிடித்த மாதவையா, தன் மகன்களிடமும், திருமணத்தின்போது வரதட்சணை வாங்கமாட்டேன் என்று உறுதிமொழி வாங்கிக் கொண்டார். மாதவையா அவர்களது வாழ்வினையர் மீனாட்சியும் தம் கணவரைப் போலவே, விரிந்த சமுதாயப் பார்வை கொண்டவராக இருந்ததால், அவர்களது இல்லறம் இனிமை நிறைந்ததாய் இருந்தது. பல நாட்களில், அவர்களது இல்லத்தில், அவர்களுக்கான உணவைச் செய்து கொடுப்பது ஒரு இசுலாமிய அல்லது கிறித்துவ சமையலராகத் தான் இருக்கும். அவரது பிராமணர் அல்லாத நண்பர்கள் அவர் வீட்டிற்கு அடிக்கடி வந்து, அளவளாவி உணவுண்டு செல்வது அன்றாட நிகழ்வாயிருந்தது. இதனாலெல்லாம், அவரை வெறுத்த பார்ப்பனர் பலர் அவரை தவிர்த்தனர். அவதூறு பரப்பினர், இதழ்களில் அவருக்கெதிராக பொருளற்ற வாதங்களை முன் வைத்தனர். ஆனால் மாதவையா, தன் கொள்கைகளில், சிறிதளவு தொய்வையும் அனுமதிக்காமல், இறுதிநாள் வரை ஒரு புரட்சிகரமான சீர்திருத்தவாதியாகவே வாழ்ந்தார்.

22.10.1925 அன்று மாதவையா மதராஸ் பல்கலைக் கழகத்திற்கு, இளங்கலை பட்டப்படிப்பில், தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும், அனைத்து மாணவரும் கட்டாயம் தமிழ் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி உரையாற்றச் சென்றார். தமிழர் நலனுக்கெதிரான இன்றையச் சூழ்நிலையில், தமிழ் பயிலாமலேயே ஒரு மாணவர் பட்டம் பெற்றுவிட முடியும் என்றிருக்கும்போது, அன்றே தொலைநோக்குப் பார்வையோடு தமிழுக்காகப் போராடினார் மாதவையா. அரங்கில் அவர் உரையாற்றி அமர்ந்த வேளையிலேயே மயங்கிச் சரிந்தார். சில விநாடிகளில் அவரது உயிர் அவரைப் பிரிந்தது. லட்சுமணசாமி முதலியார் போன்ற மருத்துவர்கள் சிலர் அரங்கில் இருந்தபோதும், அவரது உயிரைக் காப்பாற்றிட இயலவில்லை.

மாதவையா ஏற்கனவே தனது பிள்ளைகளிடம் வலியுறுத்தியிருந்தபடி, அவரது இறுதி நிகழ்ச்சி மதச் சடங்குகளின்றி நிறைவேறியது என்பதையும், திவசம் என்ற நிகழ்வு நடைபெறவேயில்லை என்பதையும் அறியும்போது, எத்துணை பெரிய மாமனிதர் இத்தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கின்றார் என்பது புலப்படுகின்றது.

கட்டுரையாளர்: எழுத்தாளர்

**பாவல் சங்கர்** pavelsankar@gmail.com

# ரெட் டெக்னீசியன் ஜனா!

ஐரோப்பாவில் நடந்த தொழிற்புரட்சி, முதலாளித்துவ ஜனநாயக யுகத்துக்கான வாசலை திறந்து வைத்தது; ஐரோப்பாவில் இனங்களின் சமத்துவத்தை நிறுவினார்கள். அரசியல், கலை, இலக்கியம், விஞ்ஞானம், உற்பத்தி, அனைத்திலும் ஜனநாயக கலாச்சாரத்திற்கான பாதை போடப்பட்டது . எல்லாத் துறைகளிலும், மேதைகள் உருவாகினர். எல்லாம் சரி...

ஆனால், பழைய நிலப்பிரபுத்துவ பண்ட மாற்று முறையில் இருந்த உற்பத்தியாளனின் உழைப்புக்கு கிடைத்த மரியாதை காணாமல் போனது. பண்டம், கொடுத்து பண்டம் வாங்கிக் கொண்டிருந்த நிலையில், பண்டங்களுக்கிடையே பணம் வந்து நின்றதும், பணத்தின் மரியாதை கூடியது. சமூகத்தின் கவனம் பணத்தின் மீது திரும்பியது. பணத்தைக்கொண்டு பண்டங்களை வாங்கி பதுக்கி, செயற்கையாக பற்றாக்குறையை உருவாக்குவதன் மூலம் சிலரிடம் பணம் குவிந்தது.

உழைத்து உற்பத்தியில் ஈடுபடுபவர்களை விட உழைப்பில் ஈடுபடாமல், பணத்தை சேர்த்த இந்த சோம்பேறிகளிடம், ஆட்சி அதிகாரம் மண்டியிட்டது. மாபெரும் கண்டு பிடிப்பாளர்களும், தொழில் வல்லுனர்களும், அடிமை ஆகினர். உழைப்பு, அறிவு, அனைத்துமே பணத்திற்கு அடிமையாகின. எதை சந்தைப்படுத்த முடியுமோ அதைப்பற்றிய சிந்தனை மட்டுமே வளர்ந்தது.

மனித உடல் செயலாற்றும் விதம், மனிதர்களுக்குள் உள்ள உறவு, மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் தாவரங்களுக்கும் உள்ள உறவு, மனிதர்களுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள உறவு பற்றிய சிந்தனைகள் எல்லாம் ஓரம் கட்டப்பட்டன.

உலக மக்களின் தேவைக்கு இருமடங்கு, மும்மடங்கு உணவுப் பொருட்கள் உற்பத்தி ஆனாலும், கோடிக் கணக்கான மக்கள் பட்டினியில் செத்தார்கள்! மருந்து, உடை, அசுரத்தனமாக உற்பத்தி நடந்தாலும், பணத்தை கைப்பற்றும் யுக்தி தெரியாத மக்களிடம் அது போய் சேர்வதில்லை.

இது ஊடகங்களின் விவாதத்திற்குக்கூட வருவதில்லை.

ஆனால், இவற்றை எல்லாம் தனது திரைப்படங்களில் விவாதித்தவர் ஒருவர் உண்டென்றால் அவர்தான், எஸ். பி. ஜனநாதன் என்ற ஜனா!

தனது திரைப்படங்களை மட்டுமின்றி, காணொலி பேட்டிகளையும், பத்திரிகை பேட்டிகளையும் அதற்கே பயன்படுத்தினார்.

எல்லா உயிர்களும் நிறைந்து வாழும் அருமையான சூழ்நிலையுள்ள இந்த உலகில் மனிதர்கள் மட்டும் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ முடியாமல் போனதன் காரணத்தை சிந்தனையாளர்கள் தேடினார்கள்!

நுண்னுயிரிகளில் இருந்து பெரிய மிருகங்கள் வரை கிடைப்பவற்றை தின்று உயிர் வாழ்கின்றன. முன் கால்களை, உழைக்கும் கரங்களாக்கிய விலங்குகள், தனக்கு தேவையானவற்றை உற்பத்தி செய்து வாழத் தொடங்கி, சமூக விலங்குகளாகின. உற்பத்தியில் ஈடுபட்டு பகிர்ந்து வாழத் தொடங்கியதும், மனிதத் தன்மை வளர்ந்தது. உழைப்புதான், மனிதனைப் படைத்தது! தொடர்ந்து, மனிதனுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் உழைப்புதான் படைத்தது! உழைப்பின் இடையே, கலை, இலக்கியம், கல்வி எல்லாம் பிறந்தன. கூடி வாழ்வதற்கு அரசும் தேவைப்பட்டது. பண்ட மாற்று முறையில் நிலவிய அசௌகரியங்களை நீக்க பணத்தை உருவாக்கினார்கள்!

வந்தது சிக்கல்..!

எதையும் உற்பத்தி செய்து வாழத் தெரியாத மிருகங்களிடையே இல்லாத சிக்கல்கள் எல்லாம், மனிதக் கூட்டத்தில் தோன்றின. தாங்களே உருவாக்கிய சிக்கல்களை, சரிசெய்ய முடியாமல் மானுடம் திணறுகிறது. உலகாயதா!

என்பதுகளின் தொடக்கத்தில், இந்த மானுட வரலாற்றை விவாதித்து புரிந்து கொள்ள, சென்னையில், உலகாயதா கல்வி மையம் ஒன்றை உருவாக்கினோம்.

உலகாயதாவின் தலைவராக, காசிநாதன், செயலாளராக, ஜனநாதன், பொருளாளராக உத்திராபதி செயலாற்றினார்கள். வழிகாட்டும் பொறுப்பு என்னுடையது. சென்னையில் வாழ்ந்த இடதுசாரி, ஜனநாயக சக்திகள், டிக்கட் எடுத்து கூட்டங்களில் பங்கெடுத்தனர். சென்னை வரலாற்றில் கட்டணத்துடன் நடந்த அரசியல் விவாத கூட்டம், அதுவாகத்தான் இருக்கும்.

அரங்கம் நிறைந்த மூன்று கூட்டங்கள் நடந்தன. மூன்று கூட்டங்களிலும், ஜனா ஆற்றிய பங்கு சிறப்பான

ஒன்று. பிற்காலத்தில், திரையுலகை ஆள்வதற்கு அந்த கூட்டங்கள் அவருக்கு பெரிதும் உதவியிருக்கும் என நம்புகிறேன்.

**எண்பதுகளின் தொடக்கம்!**

நான் மயிலை ரொட்டிக்காரன் தெருவில் ஒரு அறையில் குடியிருந்தேன். வந்தியத்தேவன், பாஸ்கர் ராய், காந்தி, மோகன் என நிறைய இளைஞர்கள் அந்த அறையில் எந்நேரமும் என்னுடன் இருப்பார்கள், மாம்பலத்திலிருந்து காசி, தன் நண்பர்களுடன் வருவார்.

சென்னை நகரெங்கும் செயல்படும் இளைஞர்கள் நற்பணி மன்றங்களை, பஸ் கட்டண உயர்வை எதிர்த்து போராட ஒன்றிணைத்தோம். அந்த இளைஞர்களின் பகுதி தேவைக்கான போராட்டச் செய்திகளை பகிர்ந்து கொள்ள யூத்ஸ் வியூஸ் என்ற சிற்றிதழையும் கொண்டு வந்தோம். முதல் இதழ் லயோலா கல்லூரி அருகே வாழ்ந்த குடிசைவாசிகளை அப்புறப்படுத்த காவல்துறை எடுத்த நடவடிக்கைகளை கண்டித்து வெளி வந்தது. அட்டையில் குடிசை பிய்த்து எறியப்பட்ட படத்துடன், பத்துக் காசு நாணயத்தின் படமும் வைத்திருந்தோம். அந்த நாணயத்தில் "Food and Shelter for all" என குறிக்கப்பட்டிருக்கும்.

நாணயத்தில் அப்படி சொல்லிவிட்டு நாணயமற்று செயல்படும் அரசை கண்டித்து கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இதை படித்த ஜனா என்னைப் பார்க்க வந்தார். அப்போது அவருக்கு இருபது வயது இருக்கலாம். துடிப்பு மிக்க இளைஞர்கள் கூட்டத்துடன்தான் வந்தார். அப்போது அவர் 'தொடரும்' என்ற பெயரில் கையெழுத்து இதழ் கொண்டு வந்து கொண்டிருந்திருக்கிறார். என்னை வந்து பார்த்த பின் எங்கள் ஜோதியில் கலந்து விட்டார். அதற்கு பின்தான் உலகாயதா கல்வி மையத்தை உருவாக்கினோம். உலகாயதா கல்வி மையம் மூன்று கூட்டங்கள் நடத்தியது.

முதல் கூட்டம், "தமிழில் தாஸ்கேபிடல்" சிறையிலிருந்து வெளிவந்த புதிதில் தியாகு பேசினார். மயிலாப்பூரில் காற்றோட்டமில்லாத ஒரு சிறிய அரங்கம். வேர்க்க விறுவிறுக்க குறிப்பு எடுத்த இளைஞர்களில் ஜனாவும் ஒருவர்.


இரண்டாவது கூட்டம், "மானுடம் பற்றிய ஆய்வரங்கம்!" மனிதனும் உழைப்பும், தலைப்பில் செ.கணேசலிங்கன், மனிதனும் கலையும், தலைப்பில் இளவேனில், மனிதனும் அரசும், தலைப்பில் இன்குலாப் பேசினார்கள்.

மனிதனும் கல்வியும், தலைப்பில் அ.மார்க்ஸ் கட்டுரை அனுப்பியிருந்தார். மனிதனும் பணமும் தலைப்பில் பேசுவதாக இருந்த தியாகு அவர் அப்போதிருந்த சிபிஎம் கட்சியால் தடுக்கப்பட்டார். இந்த ஆய்வரங்கத்தின் தலைப்புகளின் அவசியம் குறித்தும், கூட்டம் முடிந்ததும், அந்த கூட்டம் ஏற்படுத்திய விளைவுகள் குறித்தும் உலகாயதா உறுப்பினர்களிடையே விவாதத்தை கட்டமைத்ததில் ஜனாவின் பங்கு சிறப்பாக இருந்தது.

உலகாயதாவின் மூன்றாவது கூட்டம், எனது அரசியல் வாழ்க்கையை புரட்டிப் போட்ட கூட்டம். தலைப்பு..

"பாப்புலேசன் Vs பாவர்ட்டி"

பேராசிரியை சரஸ்வதி தலைமையில், SUCI பாஸ்கர் பேசினார். வறுமைக்கு ஜனத்தொகை காரணமா? இல்லையா என்பதை பேச வேண்டிய பாஸ்கர், இங்கு



ஜனாவுடன் கட்டுரையாளர்

நிலவுவது, முதலாளித்துவ சமூக அமைப்பு. நிலப்பிரபுத்துவம் எனச் சொல்வது கவிதை எழுதுவதற்கு வேண்டுமானால் நன்றாக இருக்கும் என்று சொன்னதும் கூடியிருந்தோர் கொந்தளித்தனர். நான் மேடையில் ஏறி அமைதிப்படுத்திவிட்டு, பாஸ்கரை தலைப்பை ஒட்டி பேசவும் என்று சொல்லி, அடுத்த கூட்டத்தில் சமூக அமைப்பு பற்றி விவாதிக்கலாம் என்றேன்.

அடுத்த கூட்டத்திற்கு "தமிழக வேளாண்மையில் முதலாளித்துவ வளர்ச்சி" என தலைப்பை தீர்மானித்தோம். இந்த தலைப்பில் விவாதிக்க யாரும் முன் வரவில்லை. எல்லோருடைய இம்பொட்டன்சியை அம்பலப்படுத்த தலைப்பை வைத்துள்ளீர்கள் என அ. மார்க்ஸ் சொன்னார்.

வாழும் தமிழ்நாட்டின், சூழல் பற்றிய ஆய்வு அறிவு இல்லாமல்தான் அரசியல் பேசிக்கொண்டிருக்கிறோம் என எங்களுக்கு புரிந்தது. தமிழ் தேசிய அரசியல் என்னை ஈர்த்தது. தமிழ் தேசிய அரசியலில் ஒரு காலும், சினிமாவில் ஒரு காலுமாகப் பயணித்தேன்.

திமுக, இளைஞர் அணி, ஈவெரா, கருத்துக்கள், இவைகளையெல்லாம் கடந்து, ஜனா, இடது சாரி போராளி ஆனார்.

எந்த கருத்துக்களால் கவரப்பட்டாரோ, அந்த கருத்துக்களை மக்களிடம் பரப்ப, திரைத்துறை தொழில் நுட்பங்களை கற்கத் தொடங்கினார். சோலைக்குயிலில் தொடங்கி, கேஆரின் படங்களில் எல்லாம் பணியாற்றினார்.

எடிட்டர் லெனின் அவர்களிடம் ஏற்பட்ட தொடர்பு ஜனாவை சிறந்த டெக்னீசியனாக மாற்றியது.

ஒரு பக்கம், நவீன உலகில், தொழில் நுட்ப மேதைகள் நிறையப் பேர் உருவாகின்றனர். மறு பக்கம், இடது சாரி அரசியலை கற்றுத் தேர்ந்தவர்களையும் பார்க்க முடிகிறது. ஆனால், சிவப்பு சிந்தனையும், தொழில் நுட்ப தேர்ச்சியும் இணைந்திருப்பதை பார்க்க முடிய வில்லை.

தமிழ் சினிமாத்துறையில், இந்த இரண்டையும் இணைத்து வெற்றி பெற்றது ஜனா மட்டும்தான். அதால்தான் ஜனாவை ரெட் டெக்னீசியன் என்று இன்று உலகம் பார்க்கிறது.

கட்டுரையாளர்: எழுத்தாளர், பத்திரிகையாளர்

**வேணுமாதவன்**

*venumadhavan2021@gmail.com*

இரண்டு மாதங்களுக்கு முன் இளவேனிலுக்கு இறுதிமரியாதை செலுத்த சென்றிருந்தபோதுதான் நான் கடைசியாக எஸ்.பி.ஜனநாதனைப் பார்த்தேன். பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், திரைக்கலைஞர்கள், அரசியலர்கள் எனத் திரண்டிருந்தவர்களை நீண்ட நாட்களுக்குப் பின்னர் பார்க்க வாய்த்ததால் ஒவ்வொருவரிடமும் இரண்டொரு வார்த்தைகள் பேசிக்கொண்டே வருகையில் ஜனாவையும் பார்த்தேன். அவரை நோக்கி நெருங்கிச்செல்கையில் தோழர் டி, எஸ். எஸ். மணி என்னை அவருக்கு அறிமுகப்படுத்தும் பாவனையில் “வேணுவை உங்களுக்குத் தெரியும்தானே?” என்று சொல்லியபடி ஒருகணம் நின்றார். “ இவரை அண்ணாந்தும் பார்த்திருக்கிறேன், அருகிலும் பார்த்திருக்கிறேன். இவரைத் தெரியாவிட்டால் வரலாற்றின் ஒரு கண்ணியே எனக்குத் தெரியாது என்று அர்த்தம்” என்றார் ஜனா.

அவரது பதில் எனக்கே வியப்பாக இருந்தது. மணியை நான் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அறிவேன். அருகில் இருந்த உதயை மு, வீரையன், துரை, சுந்தரபுத்தன், நீலகண்டன், அமுதா போன்றோரும் நெடுநாள் நட்பினர். ஆனால், ஜனா அப்படியல்லர். நாலைந்து முறை எதேச்சையாகப் பார்த்துப் பேசியிருக்கிறோம், அவ்வளவுதான்.

இளவேனிலைத் தொடர்ந்து ஜனாவும் அடுத்த மாதமே ‘இயற்கை’ எய்துவார் என அப்போது யார் கண்டார்கள்?

• •

அன்றைய சந்திப்புக்கு முன் ஒருமுறை இன்குலாபின் ஊரப்பாக்கம் வீட்டில் நான் அவரைப் பார்த்தேன். ‘புறம்போக்கு என்னும் பொதுவுடைமை” படத்தைக் கவிஞரைப் பார்க்கவைத்து அவருடைய கருத்தறிய ஜனா விழைந்தார். ஆனால், இன்குலாபின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் அரங்கம் சென்று பார்க்க முடியாத நிலை. ஜனா இன்குலாபிற்காக அவரது வீட்டிற்கே வந்து படத்தைத் திரையிட்டுக் காட்டினார். அந்நிகழ்வு இன்குலாபைச் சிறப்பிக்கும் முகமாக மார்க்சியத்தின் மீது ஜனா கொண்டிருந்த ஆழ்ந்த பற்றைப் புலப்படுத்தியது.

படத்தைப் பார்த்த இன்குலாப் ஜனாவைப் பெரிதும் பாராட்டித் தனது முகநூலில் பதிவு ஒன்றினை எழுதியிருந்தார். ஒரு வரலாற்று ஆவணமாகிவிட்ட அதனை நான் இங்கு மீள்பதிவு செய்கிறேன்:

### அரசின் கொலைக்கயிறுகளுக்கு எதிராக...

### -இன்குலாப்

ஒருகாலத்தில் பாரதிராஜாவின் படங்களைத் தொடர்ச்சியாகப் பார்த்திருக்கின்றேன். எனக்குத் திரைப்படங்களில் மிகுந்த ஆர்வம் கிடையாது. எனினும், பாரதிராஜாவின் படங்கள் எனக்குப் பாராட்டத் தகுந்தவையாக இருந்தன. அண்மையில் தொலைக்காட்சியில் பாரதிராஜாவின் ‘என்னுயிர்த் தோழன்’ படத்தை மீண்டும் பார்த்தேன். இன்று பீடித்திருக்கும் தலைமை வழிபாட்டுப் போக்குகளை மிக அருமையாகத் தோலுரித்திருப்பார். தலைமை வழிபாட்டில் இன்றளவும் கட்சித் தொண்டர்கள் ஒரு மனப்பிறழ்வு நிலையில் இருப்பதை அந்தப் படம் பார்த்துக்கொண்டிருக்கையில் என்னால் நினைவுகூராமல் இருக்கமுடியவில்லை.

பாரதிராஜாவின் படங்களுக்குப் பிறகு நான் தொடர்ச்சியாகப் பார்த்துப் பாராட்டும் படங்களாகத் தோழர் எஸ். பி. ஜனநாதனின் படங்களாகத்தான் இருக்கின்றன. அவருடைய இயற்கை, ஈ, பேராண்மை முதலிய படங்களின் தொடர்ச்சியாகப் ‘புறம்போக்கு என்னும் பொதுவுடைமை’ என்ற படம் வந்திருக்கிறது. அவர் படம் ஒவ்வொன்றிலும் சமூக, அரசியல். பொருளாதாரச் சிக்கல்களைக் கலைநயம்படக் படமாக்கியிருக்கின்றார்.

‘புறம்போக்கு’ப் படத்தை அண்மையில் தான் பார்த்தேன். அதில் வரும் கதாநாயகன் பாலுசாமி தன்னைத்




உன் சிறகசைந்தாலே
கிரகங்கள் சிதறுமே!
இந்தத் தூசுமேடு
உனக்கொரு பாரமா?
எழுக ... எழுக!

உனது மூச்சின் சூடுபட்டால்
சூரியமேடு சாம்பலாய் உதிருமே!
இந்தத் தீவட்டிகள்
உனக்கொரு காவலா?
எழுக ... எழுக!

இந்திரசபைகளின் இரும்புத்தூண்கள்
உன் தோளசைவினால் தூர்ந்துபோகுமே!
இந்தக் கைவிலங்குகளில்
நீயொரு கைதியா?
எழுக ... எழுக !

-இன்குலாப்



தான்கொண்ட கொள்கைகளுக்காக அர்ப்பணிப்பவனாகச் சித்தரிக்கப் பட்டுள்ளான். இந்த அர்ப்பணிப்பு, மக்களுக்குத் துரோகம் செய்யும் தன்னலத் தலைவனுக்காகத் தீக்குளிக்க முன்வரும் ‘என்னுயிர்த் தோழன். கதாநாயகனின் மூடத்தனமான அர்ப்பணிப்பு அன்று. பாலுசாமி வரித்துக்கொண்ட கொள்கைகள் வெகுமக்கள் விடுதலை சார்ந்தவை. உண்மையான புரட்சியாளன் ஒருவன் எந்தச் சோதனை தரும் சூழ்நிலையிலும் மக்களையும் இயக்கத் தோழர்களையும் உயிர் கொடுத்துக் காப்பாற்ற முனையும் புரட்சிகரத் தலைமைப் பண்பு சார்ந்தவனாக இருக்கிறான். என்னுயிர்த் தோழனில் கட்சியின் சீர்கெட்ட நிலையைக் கண்டு ஒதுங்கியிருக்கும் கதாநாயகனைத் தலைவர் வீட்டுக்கு வரவழைத்துத் தனது கவர்ச்சியான சொற்கள் மூலமாக அவனைக் கட்சிக்கு இணங்கிப்போக வைக்கிறார். என்னுயிர்த் தோழனில் தலைவர் உரையாற்ற, இவன் தொலைவிலிருந்து மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்கும் அந்தவொரு காட்சி எப்படித் தலைமை தனது வலைச் சொற்கள் மூலமாக ஓர் அப்பாவித் தொண்டனின் மனத்தைப் பிடித்துவைத்துள்ளது என்பதை அற்புத மாகப் பாரதிராஜா படமாக்கியிருப்பார்.

புறம்போக்கிலும்தனதுகட்சித்தோழியை ஒரு தற்கொலைத் தாக்குதலுக்குக் கதாநாயகன் தயார் செய்வான். ஆனால், இறுதியில் அந்தக் குண்டுவெடிப்பைத் தானே நிகழ்த்துவதற்கு முன்வருகிறான். கட்சித்தோழியோ பாலுசாமியின் உடம்பில் இருக்கும் குண்டை வெடிக்கச் செய்வதற்கான பொத்தானை அழுத்தாமல் இருந்துவிடுகிறாள். அதனால் பாலுசாமியின் குண்டுவெடிப்பு முயற்சி தோல்வியுற்றுக் கைதாக நேர்கிறது.

தனது கட்சித்தொண்டனைப் பலி கொடுத்துத் தேர்தல் சதுரங்கத்தில் வெற்றி பெற முனையும் தன்னலத் தலைவனைப் பாரதிராஜா நிறுத்துவார். ஆனால், உயிர்கொடுக்கும் அந்தப் புரட்சிகரச் செயலுக்குத் தன் கட்சித்தோழியை ஈடுபடுத்தாமல் தானே களப்பலியாக முனையும் ஒரு தலைவனை ஜனநாதன் காட்சிப்படுத்துவார். இன்றைய அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் பாரதிராஜா அம்பலப்படுத்தும் தலைவர்களின் பிரதிகளாகவே உள்ளனர். இது ஒரு கடுமையான எதார்த்தம்தான். ஆனால், ஜனநாதனின் கதாநாயகர்கள் தம்மையே அர்ப்பணிக்கும் தியாகிகளாக இருப்பார்கள் என்பதற்கான ஓர் வரைபடத்தைத்தான் நம்முன் வைக்கிறார். இது கற்பனைரீதியான காட்சிப்படுத்தலாகத் தோன்றலாம்; எனினும் சித்தரிக்கப்படும் உண்மையான நிகழ்வுகளால் இப்படம் போராட்டத்தின் எதார்த்தம்தான் இது என்று நம்மை ஏற்கச் செய்கின்றது.

வேலுநாச்சியாரின் படைப்பிரிவில் இயங்கிய குயிலி என்ற தாழ்த்தப்பட்ட பெண் ஒருத்தி ஆங்கிலேயர்களின் ஆயுதக்கிடங்கில் குதித்துத் தீ மூட்டி ஆயுதங்களைச் சின்னாபின்னமாக்கித் தன்னுயிரையும் மாய்த்துக்கொண்டாள் என்பது வரலாறு. வேலுநாச்சியாரை அறிந்த தமிழ் உலகம் குயிலியை அறியவில்லை. இப்படத்தின் கதாநாயகி குயிலிதான். இவளும் தன்னுயிர்க்கொடைக்கு ஆயத்தமாகிறாள். இப்படி மறைக்கப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் இப்படம் முழுவதும் நினைவில் மீட்டப்படுவதைக் காணலாம். எனவே, ஒரு கடந்தகால எதார்த்தத்தை வருங்காலத்தின் முன் நிகழ்வுகளாக இப்படம் சித்திரிக்க முயல்கிறது.

இப்படத்தின் கதாபாத்திரங்கள் மிக அருமையாக வார்க்கப்பட்டுள்ளன. ஒருவகையில் தூக்குத்தண்டனைக்கு முகம்கொடுக்கும் கதாநாயகன் ஒருபுறம், தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுவதைப் பார்த்து அருவருக்கும் எமலிங்கம் என்ற கதாபாத்திரம் மறுபுறம். எமலிங்கத்தின் தந்தை தூக்குத்தண்டனை நிறைவேற்றுவதைத் தொழிலாகச் செய்பவர். அவருடைய மகன் எமலிங்கம்தான் இத்தண்டனையை நிறைவேற்றச் சரியான ஆள் என்று அவனைத் தண்டனையை நிறைவேற்றச் செய்ய முயலும் காவல்துறை அதிகாரி மெக்காலே மறுபுறம். எமலிங்கத்தைத் தீர்த்துக்கட்டுவதன் மூலம் தலைவன் பாலுசாமி உயிரைக் காப்பாற்ற முனையும் குயிலி உள்ளிட்ட அணியின் செயல்பாடுகள் மற்றொருபுறம்.

கதை, முரண்களால் விறுவிறுப்பும் வேகமும் கொள்கிறது. உரையாடல்கள் பல இடங்களில் நிகழ்கால அரசியலைத் தீண்டிச் செல்கின்றன. படம் நமது எதிர்பார்ப்புகளின் கலைவடிவமாகப் பரிணாமம் கொள்கிறது. பாலுசாமி கதாபாத்திரத்தை ஏற்றிருக்கும் ஆர்யா, தூக்குத்தண்டனையை நிறைவேற்றக் குறியாய்க் கொண்டலையும் மெக்காலேயாக நடிக்கும் ஷ்யாம், தூக்குத்தண்டனையை நினைத்து அருவருக்கும் எமலிங்கமாக நடிக்கும் விஜய் சேதுபதி, மகனின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட தாயாக நடிக்கும் ரமா, புரட்சிகர அணியின் முக்கியத் தோழியாகச் செயல்படும் குயிலியின் வேடத்தை ஏற்கும் கார்த்திகா ஆகியோர் பாத்திரங்களை உணர்ந்து கதையை நிகழ்விக்கின்றனர்.

தோழர் ஜனநாதன் இதுபோன்ற பல்வேறு புரட்சிகரப் படைப்புகளை வழங்க முன்வரவேண்டும் என்பது இப்படத்தை வெற்றி பெறச் செய்த மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

நினைவலைகள்

மௌனகுரு

# 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல ! கொல்லவல்ல !'

அண்மையில் மீண்டும் ஒரு தடவை முன்னாள் பேராதனைப் பல்கலைக் கழக பேராசிரியரும் தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர். வி செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலையும் அவரது தமிழ் உரைநடை வரலாறு எனும் நூலையும் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவற்றை படித்தபோது எழுந்த சிந்தனைகளையே இங்கு எழுதுகிறேன்.

1961 ஆம் ஆண்டு ஒருநாள் .பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு விரிவுரை அறை. தமிழ்சிறப்பு செய்யும் இரண்டாம் வருட மாணவர் எழுவர் அமர்ந்திருக்கிறோம். டியூட்டொரியல் வகுப்பு அது. எமக்கு டியூட்டோரியல் பொறுப்பு ஆசிரியராக பேராசிரியர் செல்வநாயகம் நியமிக்கப்படிருந்தார், ஒரு வாரத்திற்கு முன்னால் சிலப்பதிகாரம் பற்றி நாம் எழுதிக் கொடுத்த கட்டுரைகளைப் பற்றி எம்முடன் உரையாட எமது ரியுட்டோரியல் பொறுப்பாளரான பேராசிரியர் செல்வநாயகம் அந்த வகுப்பிற்குள் நுழைகிறார்.

தூய வெள்ளைவேட்டி, தூயவெள்ளைநிற நெசனல், கரைகுலையாது மடித்து வலது தோளின் மீது போடப்பட்ட தூய வெள்ளை நிற சால்வை, அழுத்திவாரிவிடப்பட்ட தலை, அகன்ற பெரு நெற்றி, முகத்தில் அந்தப்பழைய மூக்குக் கண்ணாடி, கூர்மையாக அவதானிக்கும் கண்கள், கையில் புத்தகக்கட்டு, கம்பீரமானதோற்றம் பார்த்தவுடன் ஒரு மரியாதையும் பயமும் பக்தியும் வந்து விடும் தோற்றம். எமது ரியூட்டோரியல்களை வாசிக்கசொல்கிறார்.

அதற்கு முன்னரேயே அதனைப்பார்வையிட்டு அதன் எழுத்துப்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் திருத்தியும் இருந்தார். எனக்கு அப்போது 19 வயது. தினகரனிலும் சுதந்திரனிலும் கதை, கவிதை கட்டுரைகள் எழுதியதால் என்னைப்பற்றி எனக்கோர் பெருமித உணர்வு இருந்தது முதிரா இளம் வயது, இரண்டு கர்வக் கொம்புகள் வேறு தலையில் முளைத்திருந்தன. எனது கட்டுரை 20 பக்கங்களில் அமைந்திருந்தது. பாராட்டுகள் கிடைக்கப் போகின்றன என்ற எதிர்பார்ப்புடன் அமர்ந்திருந்தேன். கட்டுரையை வாசிக்கச் சொன்னார்.

நான் முதல் பக்கத்தை வாசித்தேன் முதல் பக்கம் முடிந்ததும், மௌனகுரு இதில் நீர் என்ன சொல்ல வருகிறீர் ஒரு வரியில் கூறும் என்றார். நான் அதனை ஒரு வரியில் கூறினேன்.

இது போதுமே மற்றவற்றை வெட்டுவோம் என்ன? என்றார். நான் தலையசைத்தேன்.

இவ்வண்ணம் ஒவ்வொரு பக்கமாக என்னை வாசிக்க வைத்து வெட்டி வெட்டி அந்த 20 பக்கக் கட்டுரையை நான்கு



**பேராசிரியர் வி. செல்வநாயகம்**
**(1907 – 1973)**

பக்கங்களுக்குள் கொணர்ந்தார். இப்போது கட்டுரை மெலிந்து சுருங்கி விட்டது. ஆனால் இறுகிவிட்டது. 4 பக்கத்துள் சொல்ல வந்தவற்றை 20 பக்கங்களில் சொல்லியிருக்கிறீர்களே! என்றார். நான் அசந்து போய் இருந்தேன். என் கொம்புகள் கழன்று விழுந்தன. அவமானப்படுத்தப் பட்டதோர் பெரும் கோபம் வந்ததாயினும் எதிர்த்து வாதிட என்னால் முடியவில்லை. காரணம் என் தவறை நான் உணர்ந்து கொண்டேன்.


ஒரு வகையில் நான் அவரால் அன்று தடுத்தாட்கொள்ளப்பட்டேன். என்னால் மறக்க முடியாத நாள் அது. அனாவசியமாக அலங்காரமாகச் சொற்களை வீசி அதிகமாக எழுதுவது பிழையென்பது தெரியவந்தது.

எடுத்துகொண்ட விடயத்தை தெளிவாகப் புலப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்கள் போடப்படவேண்டும் என்பதனை அவரது தொடர் ரியூட்டோரியல் வகுப்புகளில் மேலும் கற்றுக் கொண்டேன். எழுத்துபிழைகளின்றி எழுதுதல், புணர்ச்சி விதிகளுக்கு இணங்க எழுதுதல், ஒருமை

**எனக்கும் அவருக்குமிடையே மூன்று வருடங்களும் கருத்தியல் ரீதியான பெரும் முரண்பாடுகள் இருந்திருப்பினும் அவரது புலமையும் மாணவர் எழுத்துமீது அவர் கொண்ட அக்கறையும் அவரது கற்பிக்கும் திறனும் என்னை அன்றும் இன்றும் தோன்றாத் துணையாக வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.**

பன்மை வழு பால்வழு இன்றி எழுதுதல், கூறியது கூறாமை, சுருங்கசொல்லி விளக்குதல் போன்றன அமைந்த கட்டுரை ஆக்கும் வன்மையினை அவர் ரியூட்டோரியல் வகுப்புகள் தந்தன. இன்றைய எனது உரை நடையும் கட்டுரை எழுதும் முறையும் பேராசிரியர் செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்டது என்பதனை நான் உரத்துச்சொல்வேன்.

எனக்கும் அவருக்குமிடையே மூன்று வருடங்களும் கருத்தியல் ரீதியான பெரும் முரண்பாடுகள் இருந்திருப்பினும் அவரது புலமையும் மாணவர் எழுத்துமீது அவர் கொண்ட அக்கறையும் அவரது கற்பிக்கும் திறனும் என்னை அன்றும் இன்றும் தோன்றாத் துணையாக வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.




அவர் என் மனதில் ஒரு பெரும்இடத்தில்ராஜகம்பீரமாகக் கொலுவீற்றிருக்கிறார். அவர் முறையாக தமிழ் அறிஞர்களின் கீழ் பயின்றவர். இவர் நாவலர் கல்வி மரபிலே வந்த வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களிடம் கல்விகற்றதுடன் பல்கலைக்கழகக் கல்விமரபுடைய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர் நீ. கந்தசாமிப்பிள்ளை, நாவலர் சோமசுந்தரப் பாரதியார் ஆகியோரிடமும் பயின்றவர். அவருடைய ஆரம்பக்கல்வியும் இடைநிலைக் கல்வியும் யாழ்ப்பாணம் புனித ஜோன்ஸ் கல்லூரியிலேயே நடைபெற்றன. பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே சேர்ந்து படித்து, லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பரீட்சைகளிலே தேறிக் கலைமாணிப் பட்டம் (முதற்பிரிவினைப்) பெற்றவர், நவீன உரை நடைக்கு பயிற்சியமானவர். பாரதியார், புதுமைப்பித்தன், லா.சா.ரா போன்றோரின் நவீன உரை நடையினை அறிந்தும் கொண்டவர். இவரது சிந்தனையில் மேற்கும் கிழக்கும் இணைந்திருந்தன. இந்த இணைப்பே அவரது உரை நடையின் பெரும் பலமாகும். அவர் பல நூல்கள் எழுதியவர் அல்ல. அவரது இரு நூல்கள் மிகப் பிரதானமானவை. ஒன்று தமிழ் இலக்கிய வரலாறு, இன்னொன்று தமிழ் உரை நடை வரலாறு.

தமிழ் இலக்கிய வரலாற்றை தமிழ் உணர்ச்சி மீதூரப்பெற்று விஞ்ஞான பூர்வ அணுகுமுறையின்றி அணுகி புற்றீசல்கள் போல தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் வந்த காலத்தில் அவரது இலக்கிய வரலாற்று நூல் ஓர் வழிகாட்டும் நூலாயிற்று. இலக்கியத் தோற்றத்தை அக்கால அரசியல் சமய பின்னணியில் வைத்து நோக்கி அவ்வரலாற்றை சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், 20 ஆம் நூற்றாண்டுக் காலம் எனப் பிரித்து ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய இலக்கியங்களின் பண்புகளை அக்கால அரசியல் சமூக சமயப் பின்னணியில் கூறும் முதல் முயற்சி இந்நூலில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நூல் 1951 ஆம் ஆண்டு வெளிவந்தது என்பதனை நாம் மனம்கொள்ள வேண்டும். பின்னால் இது அவராலேயே சில திருத்தங்களுகுட்படுத்தப்பட்டு மீள் பதிப்பாகவும் வந்துள்ளது

ஒரு பாட நூல் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு உதாரண நூலாகவும் அமைந்துள்ளது. அதுவரை வெளிவந்த ஆய்வுகளின் சாரம்சமாகவும் இது திகழ்கிறது. இன்று தமிழியல் ஆய்வு வெகுதூரம் வந்துவிட்டதாயினும் முன்னோடி ஆய்வு எனும் மதிப்பிற்கு உரிய நூல் இதுவாகும்.

அவரது தமிழ் உரைநடை வரலாறு எனும் நூலும் இத்தகைய சிறப்பு மிக்கதே. தமிழ் இலக்கிய வரலாறு நூலில் கூறப்பட தமிழ் உரைநடை வரலாற்றை மிக விரிவாக தக்க ஆதாரங்களுடன் தரும் ஒரு நூலாகும். ஐரோப்பிய விமர்சனமுறையில் மாத்திரமன்றி தமிழ் உரையாசிரியர் அணுகு முறையிலும் இலக்கியத்தை அணுகும் தமிழ் விமர்சன முறையை அறிமுகம் செய்தல் இந்நூலின் சிறப்பம்சமாகும்

இந்த இரண்டு நூல்களையும் பேராசிரியர் செல்வநாயகத்தையும் இங்கு அறிமுக செய்யும் காரணங்களுக்கு இப்போது வருகிறேன்.

1.அவரது எழுத்து நடை. சின்னச் சின்ன வசனங்களால் அமைந்ததுள்ளது. இதில் ஆறுமுகநாவலரின் சாயலையும் பாரதியாரின் சாயலையும் காணலாம். இதுவும் எடுத்துகொள்ளும் பொருளைத் தெளிவாக கூற சொற்களை அவர் கையாளும் முறையும் இன்றைய தலைமுறை அவரிடம் முதலில் கற்க வேண்டியனவாகும்

2. எழுத்துப் பிழைகளின்றி இலக்கணப் பிழைகளின்றி மாணவர் தமிழை எழுதவேண்டும் என்பதில் அவர்கொண்ட பெரும் அக்கறை இன்றைய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர் கற்க வேண்டியதாகும்.

3. கட்டுரை தர்க்கரீதியாக அமைந்து

சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்கனவாக அமையவேண்டும் என்ற அவரது அக்கறையும் இன்றைய தலைமுறை கவனத்தில் எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

இக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் எழுதும் ஆய்வு க்கட்டுரை களிலும் எம் ஏ எம் பில் படிப்புக்களை பூர்த்தி செய்ய எழுதப்படும் உயர் ஆய்வுக்கட்டுரைகளிலும் காணப்படும் எண்ணற்ற எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் பார்க்கும் போது எமக்கு பேராசிரியர் செல்வநாயகமே ஞாபகத்திற்கு வருகிறார்.

சில விரிவுரையாளர்கள் அதிலும் சிரேஸ்ட விரிவுரையாளர்கள் எழுதும் கட்டுரைகளிலேயே இத்தகைய பிழைகள் காணப்படுகின்றதெனில் மாணவரை நாம் எவ்வாறு குறைகூற முடியும்?

அக்கட்டுரைகளில் காணப்படும் வழுக்களைச்சுட்டிக் காட்டினால் நம் மீது கோபம் அடைவோரையேயும் வேறுவகையில் நம்மைக் குறை சொல்வோரையும் அதனையும் மீறிக் கிண்டல் பண்ணுவோரையுமே இப்போது காண்கிறோம். சில பல்கலைக்கழகங்களில் ரியுட்டோரியல் வகுப்பு எடுப்பதனையும் அவற்றைத் திருத்துவதனையும் தற்காலிக உதவி விரிவுரையாளர்களே செய்யும் அவல நிலையையும் காணுகிறோம். எமது காலத்தில் அவற்றைச் சிரேஸ்டரே செய்தார்கள். இதில் அவ்வத்துறைத் தலைமைகளும் பீடாதிபதிகளும் கவனம் செலுத்த வேண்டும். முதலாம் ஆண்டில் சிரேஸ்ட விரிவுரையாளார்களே கற்பிக்க வேண்டுமென்ற எழுதப்படாத விதி நாங்கள் படித்த காலத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அன்று இருந்தது. இப்போது அவற்றை சில பல்கலைக் கழகங்களில் காணவில்லை. அத்தோடு ஆசிரியருக்குரிய தோற்றம், நேரம் தவறாமை, குரல் வன்மை, விரிவுரையாற்றும் திறன், மாணவர்மீது அக்கறை, அவர்களை வினாக்கள் வினவ அனுமதித்தல், அதன் மூலம் அவர்களின் விமர்சன நோக்கைத் தூண்டல், அவர்களை நூல்களைப் படிக்கத் தூண்டல், நல்ல நூல்களுக்கு அறிமுகம் செய்தல், அவற்றைப் படித்தார்களா என ஆய்ந்து அறிதல், மாணவர் மீது கண்டிப்பு என்பனவும் இன்றைய பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் பலர் அவரிடம் கற்க வேண்டிய பண்புகள் ஆகும். பேராசிரியர் செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றை மீண்டும் ஒரு முறை எழுத்தெண்ணிப் படிக்கும்படி ஆர்வலர்களைக் கேட்டுகொள்கிறேன்.

கட்டுரையாளர்: பேராசிரியர்

**அணிந்துரை**

**ஆ. சிவசுப்பிரமணியன்**

# காலனியவாதிகளுக்குக் கிடைத்த கருப்பு ஆடு




இந்நூலின் தலைப்பே அதன் கருவை உணர்த்தி நிற்கிறது. ஆப்பிரிக்க மக்கள் பிரிவு ஒன்றைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தனது பழங்குடியின் தொல்சமயத்தைக் கைவிட்டு கிறித்தவ சமயத்தைத் தழுவிய கதை இது.

முன்னாள் சோவியத் ஒன்றியக் குடியரசுகளின் மொழிகளில் வெளியான சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து "சோவியத் இனமொழிச் சிறுகதைகள்" என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுதி ஒன்றை, மாஸ்கோ அயல்மொழிப் பதிப்பகம் சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் பூ.சோமசுந்தரம் மொழி பெயர்ப்பில் வெளியிட்டது. அத் தொகுப்பில் இடம் பெற்ற லாட்விய மொழிச் சிறுகதையே இது. இந் நெடிய சிறுகதையின் ஆசிரியர் அந்திரேய் ஊப்பித் (1877&1960) லாட்வியாவின் கோர்கி என்று அழைக்கப் பட்டவர். 'மதம் மாறியவன் என்பது ஊப்பித் எழுதியுள்ள சிறந்த கதைகளுள் ஒன்று' என்று சோவியத் பதிப்பின் ஆசிரியர் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கதைக்குள் நுழையுமுன் கிறித்தவம் குறித்த சில, செய்திகளை அறிமுகம் செய்துகொள்ளலாம்.

உலகின் அனைத்துச் சமயங்களுக்கும் இரு முகங்கள் உண்டு. ஒரு முகம் அன்பு, இரக்கம், பிறர்துன்பம் களைதல் என உயரிய சமூக விழுமியங்களை வெளிப்படுத்தும். மற்றொரு முகம் ஆதிக்க வாதிகளின் பக்கம் நின்று குரல் எழுப்பும்.வறியோர்க்கு அவ்வுலகைக் காட்டி இவ்வுலகை அவர்களிடமிருந்து மறைக்கும்.

சமயம் ஓர் அமைப்பாக இயங்கத்தொடங்கும்போது அது ஆளுவோரின் நலனைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளும். இது கிறித்தவத்திற்கும் பொருந்தும். கிறித்தவத்தை அறிமுகம் செய்த யேசு அய்ரோப்பியரல்லர். எகிப்தியர்களின் அடிமைகள் போன்று வாழ்ந்த யூத இனத்தவர். அவருடைய சீடர்களில் மத்தேயு நீங்கலாக ஏனையோர் மீன் பிடித்தலை மேற்கொண்டு வாழ்ந்த யூதர்கள்தாம். முதல் முறையாக உரோமை நாட்டில் இது பரவியபோது கீழைத்தேய சமயமாகவும் அடிமைகளின் சமயமாகவும் பார்க்கப்பட்டது. அதைத் தழுவியோர் சிறை வாழ்க்கையையும் சித்திரவதைகளையும் எதிர்கொள்ள நேரிட்டது. சிலர்

sivasubramanian@sivasubramanian.in

மரணதண்டனைக்கும் ஆளாயினர். இவர்களை ஆதிக்கிறித்தவர்கள் என்றழைக்கும் எங்கல்ஸ் இது தொடர்பாகப் பின்வரும் மதிப்பீட்டைச் செய்துள்ளார் :

அடிமைகள், அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட சுயேச்சையான மனிதர்கள், எல்லா உரிமைகளையும் இழந்த ஏழைமக்கள், உரோமப் பேரரசினால் விரட்டப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட மக்களின் சமயமாகவே அது தொடக்கத்தில் காட்சியளித்தது. கி.பி 350 வாக்கில் ஒரு மதமாக, கிறித்தவம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் ஒடுக்கப்பட்டோரின் சமயம் என்ற அடையாளத்தை அது சிறிது சிறிதாக இழக்கலாயிற்று. அதிலும் கீழை நாடுகளுடனான கடல்வாணிபமும் அதன் வளர்ச்சி நிலையாக உருவான காலனிய ஆட்சி முறையும் தோன்றிய பின்னர், ஒடுக்கப்பட்டோரின் சமயமாக விளங்கிய கிறித்தவம் ஒடுக்குவோரின் சமயமாக மாற்றமடைந்துவிட்டது.

போர்ச்சுக்கல், ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய அய்ரோப்பிய நாடுகள், கத்தோலிக்கக் கிறித்தவத்தையும், இங்கிலாந்து, டச், டென்மார்க் ஆகிய நாடுகள் பிராட்டஸ்டண்ட் கிறித்தவத்தையும் தம் காலனிய நாடுகளில் அறிமுகம் செய்தன. பிராட்டஸ்டண்ட் கிறித்தவப் பிரிவுக்குத் தேவையான மறைப்பணியாளர்களை அனுப்பியுதவும் பணியினை ஜெர்மனி செய்தது.

சமச்சீர் அற்ற பண்டமாற்று வாணிபம், கனிமவளச் சுரண்டல், வேளாண்மையில் ஊடுருவல், தம் ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை அனுப்புதல், தம் ஆலைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையாக்கம் செய்தல் அத்துடன் வரிவாங்குவோராகவும் ஆட்சியாளர்களாகவும் காலனியவாதிகள் தம்மை நிலை நிறுத்திக்கொண்டனர். இம் முயற்சியில் ஒரு பண்பாட்டாயுதமாகக் கிறித்தவம் பயன் படலாயிற்று. இதனால்தான். கவிதை வடிவிலும் உரை நடை வடிவிலும் ஆப்பிரிக்கர் ஒருவரின் கூற்றாக ஆசிரியர் பெயர் சுட்டியும் சுட்டாமலும் பின்வரும் கூற்று பரவலாக அறிமுகமாகியுள்ளது: "நீங்கள் இங்கு வந்தபோது பைபிளுடன் வந்தீர்கள். அப்போது நிலம் எங்களுக்குச் சொந்தமாக இருந்தது. இப்போது பைபிள் எங்கள் கைக்கும் நிலம் உங்கள். கைக்கும் மாறிவிட்டது".

ஆதிக்கிறித்தவம் என்ற சொல்லாட்சிக்கு நேர்மாறாக, காலனியக் கிறித்தவம் உருவாகிவிட்டது. இக் காலனியக் கிறித்தவத்தை அடிப்படையாகக் கொண்டே 'மதம் மாறியவன் என்ற இச் சிறுகதை உருவாகியுள்ளது. இவ்வாறு குறிப்பிடுவதன் அடிப்படையில், கதையின் களமாக அமைந்துள்ள காலனி நாடு எது? காலனியவாதிகள் யார்? என்ற வினாக்களை எழுப்பி விடை தேடினால் இவ்வினாக்களுக்கான விடை கிடைக்காது. ஊர், நாடு என்ற அடையாளங்கள் இன்றியே கதை உருவாகியுள்ளது. ஐரோப்பிய காலனியவாதிகள் உருவாக்கிய காலனி நாடுகள் அனைத்திலும் காணப்பட்ட பொதுவான பண்பு என்று ஆசிரியர் கருதியதின் வெளிப்பாடாக இதைக் கொள்ளலாம்.

ஆயினும் மனித இறைச்சியை உண்ணும் ஆப்பிரிக்கப் பழங் குடிகள் வாழும் நாடு ஒன்று இக் கதையின் களமாக அமைந்துள்ளது என்பதை நாம் அறியும்படியான சான்றுகளை கதையாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். ஆசிரியர் குறித்த அறிமுக உரையின் இறுதியில் 'கீழ்நாடுகளில் ஐரோப்பிய பூர்ஷ்வாக்களது காலனிக்கொள்கையின் பொய் முகமூடியைக் கிழித்தெறிந்து அதன் கோர ரூபத்தை வெளிப்படுத்துகிறது இக் கதை' என்று குறிப்பிட்டுள்ளதன் பொருத்தப்பாட்டை, இக் கதையைப் படித்து முடித்தவுடன் உணரமுடியும்.

பெயர் சுட்டப்படாது "அவன்" என்று சுட்டப்படுபவன்தான் இக் கதையில் மையப்படுத்தப்படும் பாத்திரமாக அமைகிறான். அவன், தாய் தந்தை இருவரின் உணவு தேடும் வாழ்க்கையை அறிமுகப்படுத்துவதில் இருந்து கதை தொடங்குகிறது. அத்துடன் அவர்களின் சமய வாழ்க்கை எத்தகையது என்ற புரிதலுக்கான செய்திகளும் வாசிப்போனுக்குக் கிட்டுகின்றன. வெள்ளையர்களின் வருகையும் பண்டமாற்று என்ற பெயரால் அவர்கள் மேற்கொண்ட ஏமாற்றுச் செயல்களும் இயல்பான முறையில் வெளிப்படுத்தப்படுகின்றன. இதன் அடுத்தகட்டமாக வெள்ளையர்களின் வருகை அதிகரித்து, துப்பாக்கிகளின் துணையால் அவர்களின் மேலாதிக்கம் கருப்பினப்பழங்குடிகளின் மீது நிலைநிறுத்தப்பட்டது. அவர்களது குடிசைகளுக்கு வரி விதிக்கப்பட்டது. அவர்களின் இயக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. அவர்களது கட்டளைகளை மீறியவர்கள் சவுக்கடிக்கு ஆளா கிறார்கள். காலனிய வாதிகள் அப்பகுதியின் ஆட்சியாளர்களாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

காலனிய ஆட்சியாளர்களுக்குச் செலுத்தவேண்டிய வரியை முறையாகச் செலுத்துவதே மெய்யான கிறித்தவனின் கடமை என்று காலனிய ஆட்சியினர் கருதினர். பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் (1799&1801) திருநெல்வேலி மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக இருந்த லூசிங்டன் என்ற வெள்ளையர் சென்னை வேப்பேரியில் இருந்த ஜெர்கி என்ற கிறித்தவ மறைப்பணியாளருக்கு எழுதிய கடிதத்தில் "சீசருக்கு உரியதை சீசருக்கும் தேவனுக்கு உரியதைத் தேவனுக்கும் கொடுங்கள்" என்ற விவிலியத் தொடரை புதிய கிறித்தவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதி யுள்ளார். இங்கு சீசர் என்பது உரோம் மன்னனைக் குறித்தாலும் ஆட்சிபுரியும் எந்த மன்னனையும் குறிப்பதாகக் காலனியக் கிறித்தவம் பொருள்

கொண்டது. லூசிங்டன் போன்ற உயர் அதிகாரவர்க்கத்தின் எதிர்பார்ப்பை, தொடக்ககாலக் கிறித்தவ மறைப்பணியாளர்கள் நன்றாகவே நிறைவேற்றினர்.

இக்கதையிலும் பெனிடிக்ட் பாதிரியார் பால் பென்ஹார்ட்டுக்குப் பின்வருமாறு கற்றுக்கொடுக்கிறார்: இந்த நிலமும் நீங்கள் எல்லோரும் லூசிடியா வேந்தருக்குச் சொந்தம். அவரோ கடவுளுக்கு அடுத்த படியாக உலகிலே எல்லாரையும் விட மாட்சிமை தங்கிய அரசர். அவருடன் ஒப்பிடும் பொழுது உங்களுடைய இனத்தலைவர்களும் எங்களது சொந்த அதிகாரிகளும், நானுமே கூட யானை முன் ஈக்கள் போல அற்பமானவர்கள். இங்கே கூடியிருக்கும் நீங்கள் எல்லாரும் பாவிகளான மற்ற கறுப்பர்கள் அனைவருமே அவருடைய காலடித்துகள் தவிர வேறில்லை (பக்கம்: 29). தனியார் சொத்து புனிதமானது. ஆக்கிரமிக்கத் தகாதது என்பதன் பொருளைத் தம்மால் மதம் மாற்றப்பட்டவர்களுக்கு ரோமச் சட்டத்தின் அடிப்படையில் மனதில் பதிய வைத்தார். பெனிடிக்ட் பாதிரியார் (பக்கம்: 33).

பொறுமையும் மௌனமும் கடைப்பிடிப்பாயாக மகனே. அரசின் ஆட்சி கர்த்தராலேயே விதிக்கப்பட்டது. எனவே அதற்குப் பணிந்து கீழ்ப்படிவது நமது கடமையாகும். கருணையுள்ள வர்கள், கடுமையானவர்கள் இரண்டு வகையான எஜமானர்களுக்கும் ஒரே மாதிரியாக நாம் தலைவணங்க வேண்டும். உனது தேகம் மரித்த பின்பு புண்ணியசாலிகள் எல்லோருடனும் சேர்ந்து நீ நேரே சொர்க்கம் செல்வாய். அங்கே உனது ஆன்மா அனுபவிக்கப் போகிற பேரின்பத்துடன் ஒப்பிடும்போது இந்தத் துயரங்களெல்லாம் எம்மாத்திரம். மகிழ்வடைவாயாக என் மகனே. உன்னை மிதித்துத் துவைக்கும் பாதங்களை முத்தமிடுவாயாக (பக்கம்: 37).

இவற்றையெல்லாம் கேட்டு வளர்ந்த அவனுக்கு பெனிடிக்ட் பாதிரியார் அன்பளிப்பாக வழங்கிய யேசுவின் உருவத்தைப் பார்க்கும் போது தோன்றும் நினைவு குறித்து ஊப்பித் : இயேசுவின் சிலுவையுரு அவன் மேஜை மீது இருந்தது. அது ஒன்றுதான் எவ்வளவு முயன்றும் அவனுக்குப் பழக்கமாக மாட்டேனென்றது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எறும்புப் புற்றுகளுக்கு மேல் தொங்க விடப்பட்டு இரவு முழுவதும் கோ கோவெனக் கதறி ஊளையிட்டு, முடிவில் சதையெல்லாம் கறவப்பட்ட எலும்புக் கூடுகளாய் மரங்களில் கட்டுண்டு ஊசலாடிய கறுப்பர்களின் நினைவு அவனுக்கு உண்டாகும் (பக்கம்: 52) என்கிறார்.

இது பால் பென்ஹார்ட்டின் ஆழ்மனப் பதிவின் வெளிப்பாடு. இதை மட்டுமின்றி தன் தாய், தந்தை, தம்பி ஆகியோரை எவ்வாறு வெள்ளையர் கொடூரமாகக் கொலை செய்தனர் என்பதை அவன் நினைவு கூர்வதையும் இணைத்துப்பார்த்தால் அவன் உள்ளத்தில் கனல் கனன்று கொண்டிருப்பதாக நினைக்கத் தூண்டுகிறது.

அவர்கள் அழைத்து வந்த வெண்ணிறத் தாடி கொண்ட வயது முதிர்ந்த பெனிடிக்ட் பாதிரியார் மற்ற வெள்ளையர்களைப் போல் சிறுவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. அவர் எப்போதும் பரலோகத்தில் உள்ள தேவனைப் பற்றியும் வெள்ளையர் வாழும் நகரத்தின் சிறப்பு குறித்தும் அவர்களிடம் பேசிக்கொண்டே இருப்பார். இதனால் 'ஊளுவாய்ச் சடையன்' என்று அவர்கள் பெயரிட்டனர். கதையின் தொடக்கத்தில் 'அவன்' என்ற பெயரில் அறிமுகமானவன் அவர் கூறியதை எல்லாம் மிகமிக விரைவாகப் புரிந்து கொண்டதால் அவனுக்குத் திருமுழுக்கு வழங்கி பால் பெர்ன்ஹார்ட் என்ற பெயரும் இட்டார்.

இதன்பின், அவன் ஆதர்ச கிறித்தவன்', ஆனான். 'சாவுக்கு ஒப்பான அஞ்ஞான இருளிலிருந்து மீட்கப்பட்டான்.' தன் சாதனையாக இதைக் கருதிய பெனிடிக்ட் பாதிரியார், தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளவும், எதிர்காலப் பணிக்கு நிதிதிரட்டவும் உதவும் என்ற நோக்கில் அவனைக் கப்பலில் தன்நாட்டிற்கு அழைத்துச்செல்கிறார். அவரது நோக்கம் நன்றாகவே நிறைவேறுகின்றது. அந்நாட்டு நகரின் தேவாலயத்தைப் பெருக்கி, வழிபாட்டின் போது மணியடிக்கும் வேலையில். அவனை அமர்த்திவிட்டு மீண்டும் ஆப்பிரிக்கப் பகுதிக்குத் திரும்புகிறார். இதன் பின்பும் கதை நீள்கிறது. தேவாலயப் பணியில் இருந்து அடுத்தடுத்து வேறு சில பணிகளை மேற்கொள்கிறான். சிறை வாழ்க்கை அனுபவமும் கிட்டுகிறது. இறுதியில் தன் சொந்த சமூகத்தைப் பழிவாங்கும் வெள்ளையரின் கருவியாக மாறுகிறான்.

'அவன்' என்ற பெயரில் சிறுவனாக அறிமுகமாகி, பால்பெர்ன்ஹார்ட் என்ற கிறித்தவப் பெயர் அடையாளத்தைப் பெற்று, தன் சொந்த சமூகத்தையே அழிக்கும் கருவியாக மாறிப்போனவனின் கதை இது. சிறு வயதிலேயே அவனிடம் வெளிப்பட்ட வெள்ளையர் எதிர்ப்புக்குச் சான்றாக, வானுல கத்தில் கடவுள்' ஒரு வெள்ளைக்காரனுக்கு விட்டார் பாருங்கள் உதை (பக்கம்: 27) என்று பெனிடிக்ட் பாதிரியாரிடம் கதை விட்டதைக் கூறலாம். அவன் தந்தை, தாய், தம்பி ஆகியோரைக் கொடூரமாக வெள்ளையர்கள் கொன்றதை நேரடியாகப் பார்த்தவன். நகர வாழ்க்கை அவனிடம் சலிப்பை ஏற்படுத்துகிறது (பக்கம்: 54&55&67). தண்டனைப் படையின் அதிகாரியாக அவன் உள்ளத்தில் தோன்றிய சிந்தனைகள் அவனிடம் மனமாற்றம் தோன்றுகிறது என்பதை வெளிப்படுத்து கின்றன (பக்கம்: 70&71).

ஆனால் இறுதி முடிவு அவனது சுயநலத்தின் வெற்றியை வெளிப்படுத்தி நிற்கிறது. மதமாற்றம் என்பது அவனைப் பொறுத்த அளவில் முன்னேற்றத்திற்கான ஏணிப்படியாக அமைந்து விட்டது. மதம் மாற்றத்தின் மூலம் ஒரு கருப்பு ஆடு காலனியவாதிகளுக்குக் கிடைத்துவிட்டது. இது காலனியக் கிறித்தவத்தின் வெற்றி.

**'மதம் மாறியவன்' நூலுக்கு எழுதிய அணிந்துரை கட்டுரையாக...**

கட்டுரையாளர் : நாட்டார் வழக்காற்றியல் துறையின் பெரும் பேராசிரியர், ஆய்வாளர்

**இரா.மோகன்ராஜன்**

*mohanrajan.r@gmai.com*





# யார் பெறுவார் இந்த அரியாசனம்?!

தேர்தல் அரசியல் கட்சியினர், தமிழீழச் சிக்கல்கள் குறித்துப் பேச வசதியாக மறந்துவரும் சூழலில் திமுகவினர், ஈழத்தமிழ் மக்கள் மீது நடைபெற்ற இன அழிப்புத் தொடர்பாகச் சர்வதேச போர்க் குற்றவிசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பதைத் தமது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்திக் கொண்டுள்ளனர். மேலும் இங்குள்ள ஈழ ஏதிலியருக்கு மாத ஓய்வூதியமும், இந்தியக் குடியுரிமைக்கும் தமது அறிக்கையில் உறுதியளித்துக் கொண்டுள்ளனர். வாக்குறுதி என்ற அளவில் இது முக்கியத்தும் வாய்ந்த ஒன்றே. எனினும் கூடங்குளம், சாகர்மாலா, டெல்டா பகுதியில் நில வாயு எடுக்கும் ஒப்பந்தங்கள் என்பனக் குறித்துப் போசாதது பெருங்குறையே.

தமிழக சட்டசபைக்கான 44 ஆவது தேர்தல் நடைபெற இருக்கிறது. நாடுழுமைக்கானத் திருவிழாவாகக், கொண்டாட்டங்களின் பகுதியாக ஓட்டரசியல் முன்பு எப்போதுமில்லாத வகையில் மாறிக் கொண்டுள்ளது. வெயிலும், மழையும் கொளுத்தும் தாழ்வாரங்களின் வரிசையில் நின்று நியாயவிலைக் கடைகளில் புழுத்த அரிசியை விதியின் பெயரால் சகித்துக் கொண்டு வாங்கிச் செல்வோரும், நடுத்தர குரோட்டன்வாசிகளும், அதிகாரவர்க்கத்தினருடன் ஒருவிதத்தில் சமரசமாகிக் கொண்டு சந்திக்கும் சனநாயகச் சகிப்புத்திருவிழாவாக தேர்தல்அரசியல் இன்று இருந்து கொண்டுள்ளது.

நாளைவிடியும் என்று ஒவ்வொரு தேர்தலிலும் ஒரு எழுதப்படாத நம்பிக்கையும், வாக்குறுதியும், கனவும் வாக்காளனை வாக்குச்சாவடிக்கு உந்தித்தள்ளுவதாக இருக்கிறது. அதற்கேற்றார்போல அரசியல்கட்சிகள் தரும்வாக்குறுதிகள் இருக்கின்றன. மிகப்பெரிய மறதி நோய் அல்லது அறியாமை இருந்தால் மட்டுமே அவற்றை நம்பக்கூடியதாக இருக்கும்.

தேர்தல் சனநாயகத்தின், மக்கள்குடியரசின் பகுதியாக மக்களை மாற்றுவதற்கு, அரசியல் மயப்படுத்துவதற்குப் பதிலாக பங்கேற்கச் செய்வதற்குப் பதிலாகத் தேர்தல் அரசியல் கட்சிகள், அரசியல் தேர்தலைச் செய்கின்றன. அதாவது வாக்குகளுக்குப் பணம் கொடுப்பதன் வழியே மக்களை ஊழல் மயப்படுத்துகின்றனர், அல்லது தமது ஊழலின் பகுதியாகப் பங்கேற்கச்செய்கின்றனர். ஒரு நச்சுவட்டமாக தேர்தல் சனநாயகம் இன்று எதுவித மனத்தடையுமின்றி ஏற்கப்படுகிறது.

வாக்குஎன்பது, வெறும் வாக்குமட்டுமேயல்ல. அது வாழுரிமை, பேச்சுரிமை, நடமாடும் உரிமையும் கூட. வாக்குகளைப் பணத்திற்கும், பொருளுக்கும் விற்கும்போதும், வாங்கும் போதும் இவற்றையே விற்கிறோம். வாங்குகிறோம். நமது இருத்தலை கேள்விக்குள்ளாக்கும் இவ்வித அரசியல் மேற்குறிப்பிட்ட எல்லா உரிமைகளிலிருந்தும் நம்மை

விலக்கிவிடுகிறது; தனிமைப்படுத்திவிடுகிறது; தேர்தலுக்குப்பின் அதே புழுத்த அரிசிக்கும், இலவசத்திற்கும் நம்மை வரிசையில் நிறுத்திவிடுகிறது; விதியைச் சொல்லி நமது சனநாயக மனம் சாமாதனமடைந்து கொள்கிறது, பிறகொரு தேர்தல் வரும் வரை. இப்படியான உளவியலுக்கிடையேதான் தேர்தல் ஒரு திருவிழாவாக, ஆசுவாசமாக பொதுமக்களுக்கும், கைமாறும் சுரண்டல் அதிகாரத்தின் பகுதியாக அதிகாரவர்க்கத்துக்கும் பாராளுமன்ற வழி தேர்தல் இருக்கிறது.

முன்னெப்போதுமில்லாத வகையில் ஆளுமைகளை முன்நிறுத்த வழியில்லாத தேர்தலாக தமிழகச்சட்டசபைத் தேர்தல் இருக்கிறது. தேர்தல் அரசியல் கட்சிகள் திணறிக் கொண்டுள்ளன. ஆளுமை என்பதற்கு இங்கு பலவிதமான பொருள் இருக்கிறது. கொள்கை சார்ந்து, அல்லது அதனைக் கடந்து பொருள் கொள்ளப்படுகிறது. மக்கள் செல்வாக்கும், அதைத் தக்கவைத்துக் கொள்வதுமான போக்கே இங்கு ஆளுமையாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

கொள்கைகள் ஆளுமையாக இருக்குமென்றால் கவலைஇல்லை. ஆனால் ஆளுமைகளே கொள்கைகளாக இருப்பதனால் தேர்தல் கட்சிகள் சற்றே தயக்கத்தடன் தேர்தலைச் சந்திக்கின்றன. தமிழகத்தின் இருபெரும் ஆளுமை என்று கருதப்பட்ட கருணாநிதி, ஜெயலலிதா இல்லாத இந்தத் தேர்தல், இருதுருவ அரசியலிலிருந்து, அல்லது இருதுருவ தலைமையிலிருந்து விலகிச் சென்றிருக்கிறது. இருதுருவம் என்பது கொள்கைசார்தகைமை என்று புரிந்து கொள்வதைவிட, ஆளுமைசார்தகைமை என்றே விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இப்போதையத் தேர்தல் வெற்றிடம் என்பது கொள்கைவெற்றிடம் அல்ல ஆளுமை வெற்றிடம் என்றுதான் சொல்லவேண்டும். கொள்கை வெற்றிடம் என்பது எப்போதுமே வெற்றிடமாகத்தான் இருக்கின்றன. ஆளுமைக்குத் தான் இன்று பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இந்த பஞ்சத்தை, வெற்றிடத்தைப் நிரப்புவதற்குத்தான் இன்றைக்குப் பல ஆளுமைகள் போட்டிப் போட்டுக் கொண்டு களத்தில் இறங்கிக் கொண்டுள்ளனர்.

நிலபிரபுத்துவம்,பூர்சுவாவர்க்கமனநிலையிலிருந்து மூலதன அரசியலுக்குள் மாறிச் செல்லும் மக்கள் இன்றைக்குத் தேர்தல் அரசியலை எதிர்கொள்வதில் எதுவிதச் சிக்கலுமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தேர்தல் கட்சிகள் வெகுவாக மாறியிருக்கிறன. அவை மக்களைச் சந்திக்கத் தயங்குகிறதோ இல்லையோ அவை பன்னாட்டு, இந்நாட்டு மூலதன நிறுவனங்களை, பெரு முதலாளிகளை சந்திக்கத் தயங்குகின்றன. முன்பு மக்களுக்காகத் தம்மை மாற்றிக் கொண்ட கட்சிகள், தற்போது நிறுவனங்களுக்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கின்றன. மாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் மக்களைத் தேர்தல் அரசியல் கட்சிகள் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதிகாரத்துக்கு வந்துவிட்டால் பெரு நிறுவனங்களைச் சந்தித்தே ஆக வேண்டியுள்ளது. பெரு நிறுவனங்களின் மூலதன அரசியலில் சிக்கியுள்ள தேர்தல் அரசியல் சூழல், தேர்தல் கட்சிகளை ஒட்டுமொத்தமாக அடகு வைத்துக் கொண்டுள்ளது. மக்களுக்காகப் பதவியா, பெருநிறுவனங்களுக்காகப் பதவியா என்றால் பெருநிறுவனங்களுக்காகவே பதவி என்பதுதான் பாராளுமன்ற வழி கட்சிகளின் நிலைப்பாடாகும்.

மக்கள் தேர்தல்கட்சிகளை வழிநடத்தியது போக இன்றைக்கு பெருநிறுவனங்களே கட்சிகளை வழி நடத்துகின்றன. பெருநிறுவனங்களும், தேர்தல் அரசியல்கட்சிகளும் கடிகாரத்தைப் போன்று இரு பெரும் முற்சக்கரம் போல ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குகின்றன. ஒன்றை ஒன்று சார்ந்து அதன் இயக்கம் இருக்கிறது. இருக்கும்.

ஏற்றத் தாழ்வான சாதிய, பொருளாதார சமூகத்தில் சிக்கல்கள் ஏராளமிருக்கின்றன. தேவைகள் எதுவும் தீர்ந்தபடில்லை. விடுதலைக்குப் பிறகான பலக்கட்டத் தேர்தல்களில் தவறாது ஒலிக்கும் வறுமையை ஒழிப்பது, வேலைவாய்ப்பை உருவாக்குவது. போன்ற பல முழக்கங்கள் இன்னும் வாக்குறுதிகளாகவே நீடிக்கின்றன. இதை நம்பி பல தலைமுறைகளாக மக்கள் வாக்களித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

தாராளமய, திறந்தப் பொருளாதார நடைமுறை களுக்குப் பிறகு நிலமை எதுவும் மாறிவிடவில்லை. விளிம்புநிலையினர் மேலும் விளிம்பு நிலைக்கும், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை பல மடங்கு அதிகரித்துக் கொண்டுள்ளதும்தான் மிச்சம். பெருந்தொற்று முடக்கம் அவற்றை இன்னும் அதிகப்படுத்தியுள்ளது. ஆக இந்தத் தேர்தல் கட்சிகள், அரசுகள் மக்களுக்கு என்னதான் செய்கின்றன. செய்துகொண்டிருக்கின்றன என்றால் எதுவும் செய்யவில்லை என்பதுதான் மெய்நிலை.

பாராளுமன்ற அரசில், மக்கள் நலக் குடியரசில் வளர்ச்சியும், வளர்ந்திருப்பதும் உள்நாட்டு, வெளிநாட்டு பெரு நிறுவனங்கள் மட்டுமே. ஆக அவர்களது வளர்ச்சி அரசின் துணையின்றி சாத்தியமே இல்லை. மக்களுக்குத் துணை நிற்க வேண்டிய அரசு பெருநிறுவனங்களுக்கே துணை நிற்கின்றன. அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்ததும் தமக்கு பெருநிறுவனங்கள் அளித்த தாராள நிதிக்கு நன்றியாகவே அவர்களுக்கு நாட்டைக் கட்டற்று சுரண்டிக் கொள்ள அனுமதியளிக்கிறார்கள். ஒரு பக்கம் உழவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கப் பிறிதொரு பக்கம் உலகிலேயே மிகப்பெரிய துடுப்பாட்டத் திடல் உருவாக்கப்பட்டு அதற்கு அம்பானி, அதானி பெயர்கள் வைக்கப்படுவதை இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தியாவை நான்கு திசைகளாகப் பிரித்து பெரு முதலாளிகளின் பெயர்கள் சூட்டப்படவில்லையே தவிர நடப்பது என்னவோ அதுதான்.

நிறுவனங்களின் அரசுகளை உருவாக்க முனையும் தேர்தல் அரசியல் கட்சிகள் இந்த முறை மக்களின் அடிப்படைச் சிக்கலுக்காக ஒன்று சேர்ந்திருப்பதாகச் சொல்ல முடியாது. மக்களைச் சந்திக்கும் அறத்துணிவு அற்ற அவர்கள் தமக்கென்று ஆலோசனை சொல்வதற்கு தனியார் நிறுவனங்களை

**மக்களிடமிருந்து வெகு தொலைவுக்குச் சென்றுவிட்ட அவர்கள், வாக்குச்சீட்டை மக்களிடமிருந்து பறிக்க முயற்சி செய்கிறார்களே தவிர இயல்பாக நம்மை நோக்கி வரும் தகுதியை இழந்துப் பல காலம் ஆயிற்று என்றுதான் சொல்ல வேண்டும்.**

வைத்துக்கொண்டு அவர்கள் தரும் கணினித் தரவுகளின் அடிப்படையில் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கிக் கொள்வதுடன், பொது மேடைகளில், ஊடகங்களில் மக்களைச் சந்திக்கும் போது என்ன உடை உடுத்துவது, என்ன உடல்மொழியைக் கையாள்வது என்பது வரை முன் தீர்மானத்தின் ஊடாகவே பொது வெளிக்கு வருகிறார்கள். மக்களிடமிருந்து வெகு தொலைவுக்குச் சென்றுவிட்ட அவர்கள், வாக்குச்சீட்டை மக்களிடமிருந்து பறிக்க முயற்சி செய்கிறார்களே தவிர இயல்பாக நம்மை நோக்கி வரும் தகுதியை இழந்துப் பல காலம் ஆயிற்று என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த சட்டசபைத் தேர்தலிலும் கொள்கைக் கூட்டணியா, கொள்ளைக் கூட்டணியா என்றால் இரண்டும் என்றுதான் சொல்ல வேண்டும். நிறுவனங்களின் அரசை உருவாக்குவதுடன், நிறுவனங்களுக்கும், அரசுக்கும் அல்லது மக்களுக்கும் இடையில் நின்று பேரங்களை உருவாக்கும் தரகு அடிப்படையிலான ஆட்சியையே ஆட்சி என்பதாக நவீன பொருள் கொள்ளச் செய்கிறார்கள் நமது தேர்தல் கட்சியினர். எல்லோரையும் அப்படிச் சொல்ல முடியுமா என்றால் இல்லைதான். உதிரிக்கட்சிகள், இயக்கங்கள்சில கொள்கை அடிப்படையில் பெரும்கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுகின்றன. அதனதன் அடிப்படையில் அவைத் தமக்கான கோரிக்கைகளை முன்நிபந்தனைகளாக வைக்கின்றன. இவை ஆரோக்கியமான ஒன்றாக இருந்தாலும் பல சமயங்களில் பேர அரசியலை உருவாக்கவும் செய்கின்றன என்பதை மறுத்துவிட முடியாது.

இன்றைக்கு ஆட்சியிலிருக்கும் அதிமுக அணி என்பது முற்றிலும் அதிமுகவின் அணி அல்ல. அது பாஜக உருவாக்கி அளித்த அணி. அதற்கென்று தனியான, அடிப்படைக் கொள்கைகள் ஏதும் இன்று இல்லை. அப்படியென்றால் மக்களின் சீவாதாரச் சிக்கல்களின் அடிப்படையில் எழுந்த எந்த கோட்பாடுகளும் அதற்கு இருக்கவில்லை. எனவே மக்களை மிக எளிதாக, எளிமையாகச் சந்திக்க முயற்சிக்கின்றன. வாக்கு வங்கி வைத்திருக்கும் சாதிகளுக்குச் சில சலுகைகள், வாக்கைக் கையில் வைத்திருக்கும் விளிம்பு நிலையினருக்குச் சில சலுகைகள் என்பதாகவே அது மக்களை அணுகிக் கொண்டுள்ளது.

திமுக, கொள்கை சார்ந்த ஓர் கட்டுக்கோப்பான இயக்கமாகத், தேர்தல் கட்சியாக இருக்கிறது. ஆனால், ஆமை தன் ஓட்டைவிட்டு வெளியே வர இயலாதது போல திமுகவால் எவ்வளவு முயன்றாலும் அதனால் அதன் கொள்கைகளைவிட்டு வெளியில் வந்துவிட முடியாது. சமூக சிக்கல்களின் அடிப்படையில், அடித்தளமாகக நிறுவப்பட்ட எந்தவொரு இயக்கத்தின் இயல்பு நிலையும் இதுதான். ஆட்சியில் இல்லையென்றாலும் விடுதலைச் சிறுத்தைகள் நிலையும் ஏறக்குறைய இதுதான்.. எனவேதான் அவர்கள் மக்களைவிட்டு விலகித் தனியான ஒரு முடிவை முற்றிலும் எடுத்துவிட முடிவதில்லை. இந்தத் தேர்தலில் குறைந்த அளவிலேனும் பிற கட்சிகளைப் போலன்றி தமது கொள்கை அடிப்படையிலானத் தேர்தல் அறிக்கையை வெளியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுகிறது. இடதுசாரிகளை இதில் எதிலும் சேர்க்க முடியாது. கூடாது. அதன் அடிக்கட்டுமானமே மக்கள்தான். எனவே அவற்றின் கோரிக்கைகள் என்பன முற்றிலும் மக்களின் கோரிக்கைகளாகவே இருந்துவிடுகின்றன.

திமுக வைத்திருக்கும் சில வாக்குறுதிகள் சமூகச் சிக்கல்கள் சிலவற்றைப் பேசுகின்றன. அப்படிப் பேசுவதற்கு அதனுடன் இணைந்து கொண்டுள்ள மக்கள் சார் கட்சிகள்தாம் காரணம். குறிப்பாக ‘மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளும் நிலை முற்றிலும் ஒழிக்கப்படும்’ என்பது திமுகவின் ஏழு வாக்குறுதிகளில் ஒன்று. இந்த நூற்றாண்டின் நடுவிற்கு வந்துவிட்ட நிலையிலும். இது குறித்துப் பேசும் நிலையிலேயே நமது சமூகம், நாடு இருக்கிறது என்பது நமது அரசியல், சமூக அவலத்தை மதிப்பீடு செய்வதாக உள்ளது.

மனிதக் கழிவை மனிதன் அள்ளுவது என்பது ஏதோ விளிம்பு நிலையினர் வறுமை, வேலைவாய்ப்பின்மைக் காரணமாக இதைச் செய்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. இப்படியானத் தொழிலை உருவாக்கி, இதைக் குறிப்பிட்டச் சமூகத்தினரே செய்ய வேண்டும் என்ற மத அடிப்படையிலான சாதிக்கட்டமைப்பின் ஒரு பகுதியாகவே பார்க்க வேண்டும். எனவே இப்படியான தொழிலை, இழி நிலையை ஒழிப்பது என்பதுசாதிக்கட்டுமானத்தின்,மதக்கட்டுமானத்தின், சமூக ஏற்றத்தாழ்வின், படிநிலையின் ஒரு பகுதியை ஒழிப்பதாகும்.செயலளவில் இது மிகத்துணிச்சலானக் காரியம்.

ஏற்கனவே பாஜக அரசு, ‘தூய்மை இந்தியா திட்டம்’ என்ற போர்வையில் தூய்மைப் பணியாளர்களுக்குப் பாதப் பூஜை செய்து அவர்களது பணியைப் புனிதப்படுத்தியதுடன், அந்த தொழிலை அவர்கள் மட்டுமே செய்யும் புனிதத் தொழிலாக கட்டமைத்தது. கடமையாகக் கட்டமைத்தது. இதன் வழி அப்பணியாளர்களின் தொழில்சார் சாதியை மீள் உறுதி செய்தது.

இந்த மனித அவலத்தைப் போக்க அதிமுகவோ, அதன் கூட்டணியிலிருக்கும் பிற கட்சிகளோ முன்வரும் என்று சொல்லிவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால் பாஜக வின் அடிப்படை மதவாதக் கொள்கைகள் மனித தர்மமாக விளிம்பு

நிலை வேலைகளையும் சாதியையும் ஒருநீதியாகப் போற்றுவதால் அவை இவற்றை ஒரு கோரிக்கை என்ற அளவில் கூட ஏற்பதில்லை. அதிமுக என்று தனியாக ஏதும் இருக்கவில்லை. அது பாஜக வினுடைய பகுதியாகவே இருக்கிறது. மநீம என்பது போன்ற உதிரி அணிகளோ பேசப்போவதில்லை. பேசமாட்டார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், பிரித்துக் கொள்வதுமே அவர்களது இலக்குகளாக பல்லிளிக்கின்றன. எனவே கொள்கையளவில் திமுவின் இந்த அறிவிப்பு முக்கியமானதொன்றாகும்.

அமுமுக இம்முறை தனியாக நிற்பதுடன் ஓவைசி கட்சியுடன் இணைந்து சட்டசபைத் தேர்தலைச் சந்திக்கிறது. சிறையிலிருந்து வெளியே வந்த சசிகலாவை வரவேற்ற அவரது ஆதரவாளர்கள், அதிமுகவைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கிய நிலையில், சசிகலா அரசியலில் தற்காலிக ஓய்வை அறிவித்ததை அடுத்து அம்முயற்சியைக் கைவிட்டிருக்கிறார்கள். அல்லது தற்காலிகமாக ஒத்திவைத்திருக்கிறார்கள். சசிகலாவின் ஒரே தகுதி அம்மாவின் தோழியாக இருந்தது. அம்மாவின் சுரண்டலில் பங்குதாரராக இருந்தது. அவருடன் சிறையிலிருந்தது. அம்மாவின் சமாதியில் ஆவேசமாகச் சபதமெடுத்துக் கொண்டது. இப்போது அவர் அமுமுகவில் இருக்கிறாரா? அல்லது அதிமுகவில் இருக்கிறாரா? என்பது அவருக்கே குழப்பமாக இருக்கிறது.

சிறையிலிருந்து வந்த அவரைச் செந்தமிழன் சீமான், பாரதிராஜா, போன்ற 'வீரத்தமிழர்கள்' சந்தித்து 'வீரத்தமிழச்சி" பட்டம் வழங்கிக் கொண்டுள்ளனர். அந்தச் சந்திப்பு அவரது கணவரின் தமிழ்த் தேசியச் சார் உதவிகளின் பொருட்டென்று சொல்லிக் கொண்டாலும் அதில் நடப்பு அரசியல் ஏதும் இல்லை என்று ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது. சசிகலாவின் தற்காலிக ஓய்வு பாஜகவின் செயல் திட்டத்தின்படியாக இருக்ககூடும் என்ற அரசியல் ஊகங்கள் வெறும் ஊகம்என்று மட்டுமெனக் கடந்துவிட முடியவில்லை.

அம்மாவின் பெயரில், சின்னம்மாவின் ஆட்சியை கொண்டுவர அரசியலில் இறங்கியிருக்கும் தினகரனின் அமுமுகவுக்கென்று ஏதேனும் கொள்கைத் திட்டம் என்ற ஒன்று இருப்பதாகச் சொல்ல முடியாது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று அவர்கள் சொல்கிறார்கள். திட்டங்கள் எப்போதும் கவர்ச்சியானவை. இல்லையென்றால் அவை திட்டங்களாக இருக்க முடியாது என்று தோன்றுகிறது.

ஓவைசி அமுமகவுடன் இணைந்து கொண்டிருக்கிறார். ஏற்கனவே ஓவைசி பாஜகவின், வேலைத் திட்டத்தில் இசுலாமிய ஓட்டுகளைப் பிரிப்பவராகச் சொல்லப்படுகிறது. அகில இந்திய அளவில் ஒரே இசுலாமியக் கட்சியாகப் பாஜகவால் வழி நடத்தப்படும் அவரது கட்சி அமுமுகவுடன் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்கிறது. திராவிட அரசியல் நெறி வழிப்பட்ட தமிழக முஸ்லீம் கட்சிகளின் செல்வாக்கை, தேசிய முஸ்லீம் கட்சி அதன் நம்பகத்தன்மைச் சார்ந்தே பெற வேண்டியிருக்கும்.

பிறிதொரு முஸ்லீம் கட்சியான எஸ்.டி.பி. இனர், கமல்ஹாசனின் ம.நீ.ம.வில் இடம் கேட்டுக் கிடைக்கவில்லை என்றதும் அ.மு.முக.விடம் தஞ்சமடைந்துக் கொண்டுள்ளனர். ஏற்கனவே கமல்ஹாசனின் விஸ்வரூபம் திரைப்படத்துக்கு விரிவான எதிர்ப்புக்காட்டியவர்கள் அவர்கள். இப்போது அமுமுகவிற்கு சென்றுள்ளனர். அமமுக, முடிந்தவரைத் திமுகவுக்கு செல்லும் உதிரிக் கட்சிகளைத் தடுப்பதும், அதிமுகவிற்குப் பேரளவில் எதிர்ப்புத் தெரிவிப்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்திய முஸ்லீம்கள் தமது சுயத்தை இழக்காதவகையில் தமக்கெனத் தேர்தல் அரசியல் கட்சியைத் திடமாக நிறுவிக் கொள்ளாதவரை அவர்களும் ஏனைய அரசியல் கட்சியில் ஒன்றாகவே திரிந்து போகவேண்டியிருக்கும். அல்லது கரைந்துப் போக வேண்டியிருக்கும் ஜின்னாவுக்குப் பிறகாக ஓர் முஸ்லீம் கட்சி, தலைமை என்பது இங்கு இன்னும் தேசிய வெற்றிடமாகவே நீடித்துக் கொண்டுள்ளது.

கமல்ஹாசனின் மநீம ஏறக்குறைய என்ஜிஓ கூடாரம் போலவே ஆகிவிட்டிருக்கிறது. என்ஜிஓ-க்களின் செல்வாக்கு மக்கள் நடுவில் எந்த அளவு இருக்கிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். என்ஜிஓ-க்கள் பொதுவாகத் தத்துவச் சிக்கல்களுக்கு அப்பால் மக்களின் அன்றாடச் சிக்கல்கள் பற்றி மட்டுமே கவலைப்படுபவர்கள் என்ற அளவில் அவர்களுக்குத் தேர்தலில் அரசியல் கட்சிகள் இடம் கொடுப்பதில்லை. இம்முறை அந்தக் குறையை மநீம போக்கிக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் என்ஜிஓக் களுக்கான இடங்களைத் தேர்தல் கட்சிகள் ஒதுக்குவது அவர்கள் பெறும் ஓட்டுக்களிலேயே தங்கிக் கொண்டுள்ளது.

தேமுதிக இந்தத் தேர்தலில் அமுமுகவுடன் கூட்டு அமைத்துக் கொண்டுள்ளது. அதிமுகவில் உரிய இடங்கள் கேட்டுக் கிடைக்காததோடு, உங்களுக்கு என்ன மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்று முதல்வர் எடப்பாடி சிரித்துக் கொண்டே கேட்டிருக்கிறார். அது அவர்களது தன்மானத்தை இப்போதுதான் சீண்டிப்பார்த்திருக்கிறது. முதல்வர் அப்படி சொன்னதை அவரது கரிசனமாக எடுத்துக் கொண்டிருக்கலாம். ஒரு காலத்தில் எதிர்க்கட்சித் தகுதியோடு கம்பீரமாக அது இருந்தது என்னவோ மெய். ஏற்கனவே சசிகலாவின் வருகை குறித்து மென்மையாகக் கருத்து தெரிவித்திருந்தார் பிரேமலதாவிஜயகாந்த. அது இப்போது அவருக்கு தக்க நேர உதவியாக அமைந்துள்ளது. இப்போது தேமுதிக தனக்கான மக்கள் செல்வாக்கை முதல்வருக்கு உணர்த்தியாக வேண்டியிருக்கிறது. விஜயகாந்தா அல்லது சுதீஷ், பிரேமலதா, விஜயபிரபாகரனா என்பதையும் கூட.

சீமான் வழமை போல அசாத்திய நம்பிக்கையுடன் மக்களைச் சந்திக்கிறார். சாதி கடந்த, சரிக்குச் சரியான எண்ணிக்கையில் பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தியிருக்கும் நாம் தமிழரைத் தமிழ் தேசியம் இணைக்குமா என்பது ஒருபக்கம் இருந்தாலும், திமுகவை எதிர்ப்பதில் காட்டும்

கரிசனத்தை அதிமுக வை எதிர்ப்பதில் காண முடியவில்லை. எடப்பாடியும், ஓ.பன்னீர் செல்வமும் ஒருவகைச் சாதிச் சமரச ஆட்சியாளர்களாகத் தெரியாமல் பச்சைத் தமிழர்களாகத் தெரிவது, சசிகலா ஊழல் பங்குதாரராகத் தெரியாதது சீமானின் தமிழ்தேசியப் பார்வையின் ஊனம்.

திமுக, கருணாநிதி இல்லாதத் தேர்தலைச் சந்திக்கிறது. தனிநபர் செல்வாக்கைக் கடந்து கொள்கையை ஓர் ஆளுமையாகக் கொண்டு திமுக செயற்படுமானால் அதற்கு எதிர்காலம் உண்டு. திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிப்பது, எட்டாம் வகுப்பு வரைத் தமிழ் கட்டாயம், நீட் தேர்வு நீக்கம் என்பனவற்றில் திமுகவின் கொள்கை சார் அடையாளங்கள் காணப்படுகின்றன. எனினும் கடந்த காலங்களில் செய்யத் தவறிய அடையாளங்கள் மிச்சமிருக்கவே செய்கின்றன.

காங்கிரசு பேராயக் கட்சியை மதசார்பின்மைக்கு ஆதரவான கடச்சியாகத் தமிழக மக்கள் பார்க்கிறார்கள். பல கசப்புக்களுக்கிடையே காங்கிரசுக் கட்சி அதனைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். ராகுல்காந்தியை அவர்களது கட்சியிலுள்ளப் பூர்சுவாக்கள், ஊழல்வாதிகள், அரைப் பாசகவினர் ஏற்க செய்யத் தமிழகத் தேர்தல் வழிகாட்டக்கூடும்

விடுதலைச் சிறுத்தைகளுக்கு நல்ல எதிர்காலம் தேர்தல் அரசியலில் இருப்பதை மறுத்துவிட முடியாது. அதன் தலைமை, தலைவர் கொள்கை சார்ந்தும், தமிழர் நலன் சார்ந்தும் தெளிவானப் பார்வையைக் கொண்டிருக்கிறார். அடித்தள மக்கள் நலன் சார்ந்த அதன் செயற்பாடு, ஊக்கம், நேர்மை விடுதலைச் சிறுத்தைகளைத் தனித்துவமான, உறுதியான கட்டுக்கோப்பான இயக்கமாக எதிர்காலத்தில் கட்டமைக்கக்கூடும். பேரியக்கங்களில் கரைந்துவிடாமல் தனித்துவமாக அதன் தலைமை உருவாகுமென்றால் சிறுத்தைகளின் உறுமல் சட்டசபையில் ஒடுக்கப்பட்டோர் யாதொருவருக்குமான குரலாக ஒலிக்கக்கூடும். திருமாவளன், முதல்வருக்கான தகுதியை பெற்றிருக்கவே செய்கிறார்.

என்ஜிஒக்கள் அல்லது தனிநபர்கள் தனியாகத் தேர்தல் களத்தில் நிற்பது இத்தத் தேர்தலில் அரிதினும் அரிதாகிவிட்டதைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலும் சுயேச்சை அல்லது தனியர்கள் தமது தொகுதியில் வெற்றி பெற்றுவிட்டால் தொகுதி நலனை முன்நிறுத்திப் பேசுவதைவிட தமது நலன் கருதி ஆளும் கட்சி அல்லது எதிர்கட்சியினருடன் பேரம் பேசுவது அல்லது அக்கட்சிகள் ஏதாவது ஒன்றில் இணைந்து கொள்வதால் தனியர்களுக்கான மக்கள் மதிப்பு ஏறக்குறைய இல்லாது போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. தமது தொகுதியின் அடிப்படைச் சிக்கல்கள் குறித்துத் தேர்தல் கட்சிகள் கவனிப்பதில்லை என்ற ஆதங்கத்திலேயே தனியர்கள் தேர்தலில் இறங்கிக் கொண்டிருந்தனர் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கும் ஒரு காலத்தில் இருந்தது. தனிமனித செல்வாக்கும், அடிப்படைச் சிக்கல்கள் மீதான மக்களின் ஏக்கமும் அவர்களை வெற்றிபெறச் செய்து கொண்டிருந்தது. இப்போது அப்படியான தனியர்கள் மதிப்பிழந்திருப்பது தேர்தல் சனநாயகத் துயரம்தான்.

தேர்தல் அரசியல் கட்சியினர், தமிழீழச் சிக்கல்கள் குறித்துப் பேச வசதியாக மறந்துவரும் சூழலில் திமுகவினர், ஈழத்தமிழ் மக்கள் மீது நடைபெற்ற இன அழிப்புத் தொடர்பாகச் சர்வதேச போர்க் குற்றவிசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பதைத் தமது தேர்தல் அறிக்கையில் வலியுறுத்திக் கொண்டுள்ளனர். மேலும் இங்குள்ள ஈழ ஏதிலியருக்கு மாத ஓய்வூதியமும், இந்தியக் குடியுரிமைக்கும் தமது அறிக்கையில் உறுதியளித்துக் கொண்டுள்ளனர். வாக்குறுதி என்ற அளவில் இது முக்கியத்தும் வாய்ந்த ஒன்றே. எனினும் கூடங்குளம், சாகர்மாலா, டெல்டா பகுதியில் நில வாயு எடுக்கும் ஒப்பந்தங்கள் என்பனக் குறித்துப் போசாதது பெருங்குறையே.

அனைத்துக் கட்சியினரும் சொந்தத் தொகுதியின், தமிழகத்தின் சீவாரதாரம் மற்றும் அடிப்படை உரிமைகள், மாநிலங்களுக்கான மெய்யான அடிப்படை உரிமைகள், ஒன்றிய அரசுக்குரிய கடப்பாடுகளை விட்டுக்கொடுக்காது பேச வேண்டும். பெரு முதலாளிகளுக்கான அரசா, மக்களுக்கான அரசா என்பதை அரசின் செயற்பாடுகளைக் கொண்டே பிறிதொரு தேர்தலில் மக்கள் தமது வாக்குகளை ஆயுமாகப் படுத்துபவர்களாக இருப்பார்கள். பெருந்தொற்றின் பேரவலத்திலும், பெருந்துயரிலிருக்கும் அவர்களுக்கு தேர்தலும் பிறிதொரு அரசும் வெறும் காட்சி மாற்றமாக இருக்குமானால் அதைவிட வேறு பேரவலம் இருந்துவிட முடியாது.

மூன்றாவதாக, நான்காவதாக ஒரு அணி உருவானாலும் கூட இந்தத் தேர்தல் தமிழகத்தைப் பொறுத்தவரை சமூக நீதிக்கும், மனுநீதிக்குமானப் போட்டியாக, வெற்றி தோல்வியாகவே இருக்கும் பாசக, அதன் மதவாத, ஒற்றை தேச, பண்பாட்டு, அதிகார குவிப்பை, பிளவு அரசியலை நேரடியாக, மறைமுகமாக ஆதரிக்கும் கட்சிகளுக்கும், அதற்கு எதிரான, முற்போக்கு சக்திகள் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள கூட்டணிக்குமானது என்றே பொதுவான அரசியல் நோக்கர்கள் வர்ணிக்கின்றனர்.

மேனாள் அமைச்சர் சுப்புலெட்சுமி ஜெகதீசன் போன்ற திமுகவின் கொள்கைக் குன்றுகளுக்கும் அனுபவம் வாய்ந்தவர்களுக்கும், எடப்பாடித் தொகுதியில் முதல்வர் பழனிச்சாமியை எதிர்த்து நிற்கும் சம்பத்குமார் போன்ற புதியவர்களுக்கும் திமுகவில் சரிசமமாக வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. புதியவர் சீனிவாசனிடம், பெருந்தலைவர் காமராசர் தோற்ற வரலாற்றை கொண்டது திமுக. வரலாறு மீண்டும் திரும்புமா என்று பார்க்கலாம்.

திமுக, அதன் கொள்கைசார் கூட்டணி இம்முறை தோற்குமானால் அந்தத் தோல்வி சமூகச் சமத்துவத்துக்கும், மதசார்பின்மைக்கும் இடதுசாரித் தமிழர் தேசியத்துக்கும் இனி எதிர்காலமில்லை என்றே பொருளாகும்.


**கட்டுரையாளர் : எழுத்தாளர்**

அப்பணசாமி

jeon08@gmail.com

## அரங்கின் புரிதலும் புரியாமையும்:

# சிலம்பில் இருந்து நவீனம் நோக்கிய வாசிப்பு



இளைய பத்மநாதன்

நமது தொன்மையான அளவீடுகள், கட்டட, சிற்ப, நீர் மேலாண்மை, மருத்துவ, போர்த் திறங்களின் எழுத்துப் பூர்வ மூலநூல்கள் அழிவுற்றாலும் அதன் பற்பல சிறப்பம்சங்களை மேற்கோளிட்டுக் காட்டும் இலக்கண இலக்கிய படைப்புகள் மூலம் அறிகிறோம், இவை பற்பல உரையாசிரியர்கள் மற்றும் பிற்கால இலக்கியக் கூற்றுகளில் காணக்கிடைத்தாலும் கூத்தாடும் அரங்கு அமைப்பின் இலக்கணம் குறித்த சிலம்பின் வரிகள் வாய்திறந்து அதிசயக்கத்தான் செய்கிறது. என்பதிலும் அதனை இன்றைய நாடக அரங்க யதார்த்தங்களிலும் அவதானிக்கக்கூடியதாக அமைகிறது என்பது மேலும் அதிசயிக்கத்தக்கதாக உள்ளது.

பத்தண்ணா என எங்களால் பிரியத்துடன் அழைக்கப்படும் திரு.இளைய பத்மநாதன் அவர்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கும் அதிகமாக ஈழம், தமிழகம், புலம்பெயர் சூழல் என இயங்கி வருபவர்.

இலங்கையில் தமிழ்தேசிய இன அடையாளத்தை முன்னெடுப்பதிலும் தமிழ்தேசிய பண்பாட்டினை அரசியல்படுத்துவதிலும், வர்க்க, சாதியசமத்துவ அரசியலை அறிமுகம் செய்வதிலும் 1960கள் காலம்தொட்டு நாடகங்கள் மூலம் தங்கள் அரசியல் செயல்பாடுகளை வடிவமைத்த முன்னோடிகளில் ஒருவர் இளைய பத்மநாதன். கந்தன்கருணை, தீனிப்போர், ஏகலைவன் உள்ளிட்ட படைப்புகள் இன ஒடுக்குமுறையையும் வர்க்க அரசியலையும் வடிவ அடிப்படையில் ஒருங்கிணைத்து பரப்புரை செய்தன. இதனால் எழுந்த தீதேசிய இன எழுச்சிக்கு உரமிட்டது என ஆய்வாளர்கள் கூறுவது மிகையல்ல.


தொடர்ந்து, ஈழத்தில் ஏற்பட்ட போர்ச் சூழலில் தனது வாழ்வாதரம், உடமைகள் என அனைத்தையும் இழந்து தமிழகம் வந்த திருஇளைய பத்மநாதன் அவர்கள் சுமார் 5 ஆண்டுகள் தங்கி இருந்து பணியாற்றினார்கள். அக்கால கட்டத்தில் பத்தண்ணாவின் அணுக்கத் தொண்டனாக அவருடன் ஒட்டிக்கொண்டு அவர் செல்லுமிடமெல்லாம் அவரது கைவிரல் பற்றிச்சென்று அவரது அரங்கியல் பார்வையைக் கற்றுக்கொண்ட மாணவர்களில் அடியேனும் ஒருவன். அவரோடு இணைந்து சில நாடக ஆக்கங்களிலும் பங்கேற்கும் அரிய பேறும் பெற்றவனானேன்.

இக்காலகட்டத்தில் தான் தமிழ் அரங்கியல் பார்வை கூர்மையானது. அரங்கியலை கோட்பாடு சார்ந்து கற்றுத்தந்தார். தமிழ் நவீன நாடகத்தில் நிலவி வந்த கிளிஷேக்களையும் புரோட்டோடைப்களையும் உடைத்தெறிந்தார். மொழி. இனம்சார்ந்து அரங்கியலை அணுகவேண்டியதன் தேவையை தமிழ்ச் சூழலில் ஆழமாகப் பதித்தார். கண்களுக்கு அப்பால், பயணத்தின் கதை, தீனிப்போர், ஏகலைவன் ஆகிய நாடக ஆக்கங்களில் அவரது சீராய்வும் அண்ணாவியமும் நவீனதமிழ் அரசியலில் தேசியஇன அடையாளங்கள் மீட்பில் முன்னோடிப் படைப்புகளாக அமைந்தன. அக்காலம் தமிழ்நவீன அரங்கியலில் முக்கியத்துவம் வாய்ந்த காலம் ஆகும்.

இக்காலத்துக்கு முன்பிருந்தே தமிழ் சமுதாயத்தின் மரபான நாட்டார் கலைகள், சடங்குகள், தமிழ்இசை ஆகியவற்றை நுண்மான் நுழைபுலம் காணும் ஆய்வில் பத்தண்ணா தீவிரமாக இயங்கி வந்தார். தமிழின் அரங்கியலின் வேர்களை தொன்மையில் காணும் ஆய்வு அவரது மூச்சாகக் கலந்திருந்தது.

குறிப்பாக இயல், இசை, நாடகம் என தமிழை முப்பெரும் படைப்பூடகங்களாக வகுத்துக்கொண்ட தொன்மை மிக்க தமிழ்சமுதாயத்தில் நாடகம் என்பது ஆதிகாலம் தொட்டு மக்களுக்கான தொடர்பூடகமாக நிலைத்து வந்திருக்கவேண்டும் என்ற கருத்தியல் சார்ந்து தனது ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார்.

இப்பன்முகப்பட்ட ஆய்வில் ஒரு பகுதியாக சிலப்பதிகாரத்தின் அரங்கத்திறம் குறித்து 20 ஆண்டுகளுக்கு அதிகமாக ஆராய்ந்து வந்தார். இதற்காக,




சிலப்பதிகாரம் மூலம், அதன் உரைகள், தொல்காப்பியம் அகத்தியம், யாப்பெருங் கலக்காரிகை, தண்டியலங்காரம், நன்னூல், உள்ளிட்ட இலக்கண நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், பெருங்கதை, அவற்றில் பல உரையாசிரியர்களின் நூல்கள், கூத்தநூல்,பஞ்சமரபு, வீரசோழியம், பரதசித்தாந்தம், மகாபாரத சூளாமணி, நாட்டிய சாத்திரம் உள்ளிட்ட அரங்க – இசை இலக்கண நூல்கள் மட்டுமல்லாமல் பண்டைய கிரேக்கம் முதல் நவீன ஐரோப்பா உள்ளிட்ட மேலை அரங்கியல் கோட்பாட்டு நூல்கள் என பெருங்கடல்களில் மூழ்கி தமது ஆய்வினை மேற்கொண்டும் மனநிறைவுறாமல் தமிழகம் முழுவதும் பயணித்து சேகரித்த தரவுகளை தொல்லியல் தடயங்களுடன் உரசிப்பார்த்து இந்த ஆய்வினை இத்துணை துல்லியமாக மேற்கொண்டுள்ள பாங்கும் உழைப்பும் ஆச்சரியமும் வியப்பும் அளிப்பது இயல்பே! இந்த முக்குளித்தலில் கிடைத்த நன்முத்தே 'அரங்கின் புரிதலும் புரியாமையும்: அரங்கத்திறம் – சிலப்பதிகாரம்' எனும் இந்நூல்.

அந்நூலினை தமிழ்வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்கிறேன்.

இந்த நூலின் முகவுரையில் ஆய்வாசிரியர் குறிப்பிடுவது போல 'அரங்கின் புரிதலும்..' என்ற தொடரில் காணப்படும் 'புரிதல்' என்பது அரங்குக் கலைக்கு மட்டும் உரித்தானதல்ல. பிற கலை வகைமைகளுக்கு மட்டுமல்ல பண்பாடு, வரலாறு அறிதலிலும் இது நீடித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் இந்த புரிதலும் புரியாமையும் ஒருவர் படித்தவற்றிலும் பட்டறிவிலும் உருவாவது ஆகும். இதுவே செயல்முறை (Process).

தமிழன் எதிர்கொள்ளும் சாபக்கேடுகளில் முதன்மையானது தனது தொன்மைக்கான வரலாற்றுத் தடயங்களை தொலைத்துவிட்டதுதான். 18ம் நூற்றாண்டுக்குப் பிறகான மாற்றங்கள் நிகழாது போயிருந்தால் தொன்மை என்பது கூட்டு நினைவிலியாக மட்டுமே நிலைத்திருக்கும். நாட்டார் வழக்காறுகள், சடங்குகள்கூட காலப்போக்கில் அழிபவைதான். 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாகவே நாம் நமது தொன்மையை ஓரளவுக்கேனும் அறிவியல் அடிப்படையில் மீட்க முடிந்திருக்கிறது.

அவ்வாறு இழந்தவற்றில் இசைத்தமிழ், நாடகத்தமிழ் இலக்கண நூல்களும் படைப்புகளும் பெருந்தொகை ஆகும்.

ஒரு தேசிய இனத்தின் பண்பாட்டை வரையறுப்பதில் அதன் ஓவியம் உள்ளிட்ட கவின்கலைகள், இசை, ஆட்டம், நாடகம், வழக்காறுகள் மற்றும் சடங்குகள், இன வரைவியல் உள்ளிட்ட பல்வேறு விழுமியங்களின் வகிபாகம் முக்கியத்துவம் கொண்டது. இவற்றில் நாடகம் தமிழுக்கே உரிய தனித்துவம் ஆகும். (காலத் தடுமாற்றங்களையும் கணக்கில்கொண்டு கிரேக்கம் போன்ற சில அரிய மொழிகளும் உள்ளன.)

இந்த நூல் முகவுரையுடன் கூத்து, கூத்தக்கை, ஆடுகளம், அரங்கேற்றம் ஆகிய நான்கு இயல்களில் அதன் பாடத்தலைப்பின் ஆழ அகலங்களில் உழுகிறது.

கூத்து என்ற சொல்லின் தோற்றத்தை ஆய்வுக்கு உள்ளாக்கும் முகாமையில் "ஒரு காலத்தில் இனத்தின் அடையாளங்களாக வீரியத்துடன் வளர்ந்த கலைகளும் கலைச் சொற்களும் அரசியலில் ஏற்படும் மாற்றங்களாலும், இனம் தன்னாதிக்கம் இழப்பதாலும் அடக்கப்பட்டுவிடுகின்றன. இவ்வாறாக, பண்ணும் கூத்தும் முடக்கப்பட்டன" எனும் இளைய பத்மநாதன் கூறும் கூற்று காலத்தைத்தாண்டி முன்னும் பின்னும் அகவும் குரலாக ஒலிக்கிறது.

(கூத்து எனும் தொடரின் தோற்றுவாய், வேர்ச்சொல் ஆகியன குறித்த ஆய்வில் ஆசான் இளைய பத்மநாதன் ஈடுபாடு குறித்து அவருடன் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உரையாடலில் ஈடுபடுபவன் நான் என்ற முறையில் மிக நன்றாகவே அறிவேன்.)

கூத்து என்பது அரங்கச் செயல்பாட்டின் அடித்தளச் சொல்லாகும். குதி என்ற வேர்ச்சொல்லின் அடியாய் தோன்றிய சொல். இச்சொல் சங்ககாலம் முதற்கொண்டு தமிழ் பண்பாட்டில் புழங்கப்பட்டு

வருகிறது. இசைத்தலும் ஆட்டமும் இணைந்தது என்பதை உணர்த்த கூவி, துள்ளல் என இரு சொற்களின் இலக்கணப் பூர்வ இணைப்பே கூத்து என்பதை விளக்கும் இளைய பத்மநாதன் இதற்கான கூடுதல் விளக்கங்களை தொன்மைக் கிரேக்க அரங்கியல் மற்றும் வடமொழி நாட்டிய சாத்திர செய்யுள்கள் ஆகியவற்றிலிருந்தும் நிறுவுகிறார்.

ஆனால், ஆடலும் பாடலும் இசையும் இணைந்து நாட்டியமாகவும் நாடகமாகவும் இருந்த கூத்து நாளாவட்டத்தில் அதன் அடையாளங்களையும் ஆதாரங்களையும் இழந்த ஒரு பண்பாட்டின் துயரத்தையும் இந்த இயலில் சுட்டிக்காட்டுகிறார்.

கூத்தின் 11 வகைகள் தமிழ் பண்பாட்டில் நிலவியதை இலக்கிய ஆதாரங்களுடன் எடுத்தாளுகிறார். பிற்கால கந்தபுராணம், சிவ மகாபுராணம் உள்ளிட்ட வடமொழித் தாக்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் மற்றும் வடமொழி நாட்டிய சாத்திர சூத்திரங்கள் மூலமும் அதன் செல் நெறிகளை பின்தொடர்கிறார். குறிப்பாக, 11 வகை கூத்துகளின் வரைவிலக்கணங்களின் ஊற்றுக்கண்ணை சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் காண்கிறார். இவ் இருகாப்பியங்களும் கூத்து நூல்போன்ற நாடக இலக்கண நூல்களில் காணப்படும் வகைமாதிரிகளுக்குள் கையடங்குவதுபோல் உள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லு, துடி, குடை, குடம், பேடி, மரக்கால், பாவை, கடையம் என சிலப்பதிகாரம், பஞ்சமரபுஆகிய இலக்கிய- இலக்கண நூல்களில் கூத்தின் 11 வகைகள் ஆடல் வகைகளாக வகைப்படுத்தப்பட்டாலும் அதன் இலக்கணங்கள் ஊடாக விளக்கம் விரிகையில் அரங்கியல் வகை மாதிரிகளாக விரிவதைக் காணமுடிகிறது. அகம், புறம் எனப் பிரியும்இருவகைக் கூத்து; சாந்தி, விநோதம் என விரியும் பலவகைக் கூத்து, 11 ஆடல்களாக விரியும் வகைக்கூத்து, இந்த 11 ஆடல்கள் நின்றாடல், வீழ்ந்தாடல் என வகைப்படுத்தல் போன்றவற்றையும் விரித்து நூலாசிரியர் விளக்கம் காண முயல்கிறார்.

இயல், இசை, நாடகம் என மூன்று இயல்களிலும் செறிவான இலக்கண இலக்கிய நூல்களைக் கொண்டிருந்த போதிலும் பண்டைய இலக்கண, இலக்கியங்கள் அழிப்பு, வடமொழித் தாக்கம், அரசுகளின் வடமொழிச் சாய்பு, மக்களிடம் இருந்து அன்னியம், நவீனமாக்கம் கைவிடல் போன்ற காரணிகளால் தொடர்ச்சியான உரையாடல் இன்மையால் மரபு பாழ்பட்டு இலக்கணங்களைத் துல்லியமாக விளங்கிக்கொள்வதில் புரிதலும் புரியாமையும் நிலவுகிறது. குறிப்பாக, நாடகம் குறித்த இலக்கணங்களை அறிவதில் அது அதிகமாக நிலவுகிறது. இந்த இடைவெளிகளை அகற்றுவதில் இளைய பத்மநாதன் நீண்டநெடுங்காலமாக ஈடுபட்டு வருகிறார். அப்பெருந்தேடலின் விளைவாகவே இந்த நூலில் சிலப்பதிகார அரங்கத்திறத்தினூடக மரபுக்கும் நவீனத்துவத்துக்குமான இணைப்பில் பண்டைய நாடக நூல்கள் ஆற்றும் வகிபாகத்தையும் குன்றில் இட்ட விளக்காகக் காட்டுகிறார்.

அது மட்டுமல்லாமல் இன்று உலகளாவிய அளவில் நாடகக் கருத்தியல்களாக அறியப்படும் முக்கிய வகைமாதிரிகளும் ஐரோப்பாவின் செவ்வியல் வகை மாதிரியும் கூட கையடங்குவது நாடகம் எனும் கலையின் உலகளாவிய தன்மையையும் தொன்மையையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

“கூத்துக்கும் ஆடலுக்கும் இடையிலான ஒட்டுறவு, ஆக்க வடிவத்தாலும் ஆக்க இலக்கணத்தாலும் வேறுபாட்டாலும் எடுத்தாளப்படும் சொற்களாலும், சொற்களின் பொருட்களாலும் இரு ஆக்க வகைகளிலும் பொருத்தப்பாடு இயல்பாகவே உள்ளது. கூத்தில் பயிலப்படும் பலகலைச் சொற்கள் இலக்கிய வகைகளாகப் பரிணமித்துள்ளதையும் இலக்கியச் சொற்கள் கூத்து வகைகளாகப் பெயர் பெறுவதையும் காணலாம். உதாரணம் அகம் – புறம், மேலும் பல உள.”

அடவு, ஆடல், பாவம், அபிநயம், முத்திரை, கை, முகம், கண், இடுப்பு, முழங்கால், விலக்கு, விடை, அலகு(Unit), தொடர்(series), தடை, இயற்பாட்டு, சொற்கட்டுப்பாட்டு, பொதுமை, வேத்துமை என கூத்தாடல்களில் ஆடலும் பாடலும் பாவமும் உணர்ச்சியும் கலக்கும் நாடகீயம் குறித்த விளக்கங்கள் சிலப்பதிகாரம், கூத்து நூல் உள்ளிட்ட தமிழின் பண்டைய இலக்கியங்களில் விரவிக்கிடக்கும் நவீனத்தின் கீற்றுகளையும் ஊற்றினையும் வித்தினையும் காண இயல்கிறது.

நூலின் மூன்றாம் இயலான கூத்தாடுகளம் தற்கால அரங்கியலாகப் பரிமாணம் கொண்ட நவீனத்தின் முந்தைய வித்துகளான நமது தொன்மை அரங்க அறிவியலறிதல் கூறுகளின் கீற்றுகளை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

நமது தொன்மையான அளவீடுகள், கட்டட, சிற்ப, நீர் மேலாண்மை, மருத்துவ, போர்த் திறங்களின் எழுத்துப் பூர்வ மூலநூல்கள் அழிவுற்றாலும் அதன் பற்பல சிறப்பம்சங்களை மேற்கோளிட்டுக் காட்டும் இலக்கண இலக்கிய படைப்புகள் மூலம் அறிகிறோம், இவை பற்பல உரையாசிரியர்கள் மற்றும் பிற்கால இலக்கியக் கூற்றுகளில் காணக்கிடைத்தாலும் கூத்தாடும் அரங்கு அமைப்பின் இலக்கணம் குறித்த சிலம்பின் வரிகள் வாய்திறந்து அதிசயக்கத்தான் செய்கிறது. என்பதிலும் அதனை இன்றைய நாடக அரங்க யதார்த்தங்களிலும் அவதானிக்கக்கூடியதாக அமைகிறது என்பது மேலும் அதிசயிக்கத்தக்கதாக உள்ளது.

அரங்கம் எங்கு அமைய வேண்டும், எந்த, எவ்வித மண்வளம் கொண்ட நிலத்தில் அமையவேண்டும், அதற்கு ஆதாரமான சிற்ப, கட்டட கலைநூல்கள் எவை, அரங்கின் நீள, அகல, உயரம், அதனை அளக்கப் பயன்படும் கோல்கூட எவ்வித மூங்கிலில் இருந்து வெட்டப்பட வேண்டும், தரையில் இருந்து அரங்க மேடை எவ்வளவு உயரம், பார்வையாளர் பகுதி எவ்வாறு அமைந்திருக்க வேண்டும், வாயில்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், அரங்க ஒளிஅமைப்பு, ஒப்பனை- சோடனைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அமைப்புகளுடன் அரங்கத்தின் எழினிகள் குறித்தும் சிலம்பாசிரியர் கூறுவதை ஆய்வாசிரியர் விளக்குவதுடன் எழினிகளின் அமைப்புகள் குறித்து விளக்கமளிக்கையில் தமது சொந்த அரங்க அனுபவங்களினூடாக விளக்குவது நவீன அரங்கின் வேர்களினூடாக தொன்மை நோக்கிய ஒரு பயண அனுபவத்தை நமக்கு அளிக்கிறது. இதில் அடியேன் இயக்கத்தில் உருவாகிய பனுவல் ‘கண்களுக்கு அப்பால்’ நாடகத்தைப் புதுப்பித்து இளைய பத்மநாதன் அண்ணாவியம் செய்த அனுபவமும் இடம்பெற்றது அடியேன் பெற்றபேறு என்றே கூறுவேன்.

அரங்கியலில் நிலவும் அரசியல்,படிநிலை கொண்டது. அதன் உச்சத்தில் கோலோச்சுவது ஆளும் சக்திகள்தாம். இது சிலம்பின் காலத்துக்கு முன்பிருந்தே நிலவும் மரபாகத் தெரிகிறது. கூத்தரங்கில் முதல்மரியாதை அரசின் பிரதிநிதியான தலைக்கோலுக்கு ஆகும். இதுபோன்ற உரிய மரியாதையுடன் தலைக்கோல் பவணியாக எடுத்துவரப்பட்டு உரிய இடத்தில் நிறுவப்பட்ட பின்னரே இதர நிகழ்வுகள் தொடங்கப்பட வேண்டும். இதற்கான "பிண்டி இலக்கணமும், சடங்கும், பட்டமளிப்பும், பட்டத்தின் மதிப்பும், மேலும் தேவர்களுடன் தொடர்புபடுத்திய புராணக்கதையும், அத்துடன் ஆடலின் கற்பனை வரலாறுகளும்' எவ்வாறு இலக்கியங்களிலும் உரைகளிலும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதை நூலாசிரியர் தலைக்கோல் எனும் துணை இயலில்(இயல்: அரங்கேற்றம்) விளக்குகிறார்.

அரங்கம், நாடகர்கள் வாழ்விலும் சமூகத்திலும் இந்த ஆதிக்கம் ஏற்படுத்திய தாக்கத்தையும் உற்றுநோக்குகிறார். முக்கியமாக, மிகை மிஞ்சிய மதிப்பும் அதிகாரமும் கோரப்படும் சமுதாயங்களில் அதனை நியாயப்படுத்த வேற்றுலக அல்லது மீயுலகக் கற்பனைக் கதைகளின் தொடர்பு தவிர்க்க முடியாதன. இங்கும் தலைக்கோல் குறித்த புராணக்கதை ஒன்றும் கூறப்பட்டு கட்டுடைப்பு செய்யப்படுகிறது. இந்த புராணக்கதையில் தமிழ்முனி அகத்தியர் தொடர்புபடுத்தப்பட்டிருப்பது பலமான சந்தேகங்களை எழுப்பினாலும் அரங்கியல் நோக்கில் இக்கதையின் நுட்பம் கவனிக்கத்தக்கது. குறிப்பாக, மேடையில் நிகழ்த்துனருக்கும் பார்வையாளருக்கும் இடையில் நிலவ வேண்டிய ஒழுங்கு, ஒருங்கிணைப்பு குறித்து மிகநுட்பமாக இக்கதை வெளிப்படுத்துகிறது.

இந்திரன் சபைக்கு அழைத்து வரப்பட்ட அகத்திய முனியை சிறப்பிக்க நடனமாடும்படி ஊர்வசி பணிக்கப்படுகிறாள். ஊடுருவிக் காணக்கூடிய மெல்லிய திரையின் (பொருமுக எழினி) பின்பகுதியில் இருந்து ஊர்வசி ஆடுகிறாள். முன் பக்கம் பார்வையாளர் அரங்கில் இந்திரன் மகன் சயந்தன் உள்ளிட்டோர் அகத்திய முனியுடன் நிகழ்வைக் கண்டுகளிக்கின்றனர். இந்த நிகழ்வின்போது சயந்தன் – ஊர்வசி கண்கள் சந்திக்கும்போது சஞ்சலம் உண்டாகிறது. ஊர்வசியின் தடுமாற்றம் மேடை முழுவதும் தொற்றுகிறது. ஊர்வசியைத் தொடர்ந்து பாடகன் தடுமாறுகிறான். இசைக் கருவிகள் திணறுகின்றன. வீணை அபசுரமாகிறது. குழல் பிசிறுகிறது. மொத்தத்தில் அக்காட்சி முழுமையுமே குழறுகிறது.

இதனால் வெகுளும் அகத்தியமுனி இடும் சாபத்தால் சயந்தன் செங்கோல் ஆகிறான். ஊர்வசி ஆடல் மகளிராக மண்ணில் பிறக்கிறாள். இதற்கான சாபநீக்கம் என அப்புராணக்கதை தொடர்கிறது.

ஒரு நாடகர் அல்லது அரங்கியலாளர் கவனிக்க வேண்டிய கருத்து என்னவெனில் மேடையில் பேணப்பட வேண்டிய ஒழுக்கம் குறித்த நுட்பமான அவதானமே இங்கு சுட்டப்படுவதாகும்.

மேடையின் நிகழ்த்துவோனுக்கும் பார்வையாளனுக்குமான உறவில் பாத்திரமாக மட்டுமே நின்று நிகழ்த்துவதே ஒழுங்கு. அங்கு ஒவ்வொரு கனமும் நிகழ்த்துவோனும் பாத்திரமும் மாறி, மாறி பிரக்ஞை கொள்வது தவிர்க்க முடியாதது எனினும் அங்கு நிலைநிறுத்தப்பட வேண்டியவன் பாத்திரமே! இது போன்ற அரங்கியல் நுட்பங்களைக் கொண்டது நமது மரபு; இந்த அரங்கத்திறத்தினை மட்டும் பிரித்தெடுத்துக் கோப்பதே நூலாசிரியர் நோக்கம்: அதில் முழுமையான வெற்றி கண்டுள்ளார்.

அதே சமயத்தில் தமிழ்மரபில் ஆரியமயமாக்கல் திணிப்பின் அரசியலையும் உற்றுநோக்க வேண்டியுள்ளது. தொடந்து தலைக்கோல் சடங்குகள், பட்டம், தலைக்கோல் பெறுவோருக்கு ஆயித்தென் கழஞ்சு பொன் என்று விரியும் அரங்கக் காட்சிகளே பின்னர் சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தின் அச்சாணியாகவும் அடித்தளமாகிறது எனும் அவதானிப்பில் 1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் சமுதாயத்தில் அரங்கின் முக்கியத்துவம் எந்த அளவுக்கு 'கோல்' ஆச்சியுள்ளது என்பதும், அதன் சமுதாயத்தாக்கமும் துலக்கமாக்கப்படுகிறது. மேலும், சங்க இலக்கியங்களில் தலைக்கோல் குறித்து காணப்படும் பகுதிகளையும் எடுத்தாண்டு அதன் மாறுபாடுகளையும் கவனமாக விளக்குகிறார்.

தொடர்ந்து அரங்கியல் படிநிலையில் ஒவ்வொருவர் (ஆடல்ஆசான், இசை ஆசான், பாடல் இயற்றுவோன், தண்ணுமை – முழவு, மத்தளம் – ஆசான், குழல் இசைப்பாளன், யாழ் இசைப்பாளன்) இடம் குறித்தும் அதற்கான இலக்கணங்கள் குறித்தும் இளங்கோவடிகள் கூறியுள்ளதை உரிய உரைகளுடன் விளக்குகிறார். கூத்தியர் வகைகள், ஆடல் வகைகள், பாடல் வகைகள் என விளக்கம் அளிக்கப்படும் வரிசையில் அரங்கில் எவையெல்லாம் தோன்றலாம், எவையெல்லாம் தோன்றத் தகாதவை என்பவையெல்லாம் வரையறுக்கப்பட்டுள்ளமை குறித்தும் சான்றுகளுடன் பகிர்கிறார். அன்றைய சமூக விழுமியங்கள் குறித்த ஆய்வுக்கான பகுதியாகவும் உள்ளது.

"ஆய்வு எனப்படுவது உண்மையின் தேடல், எது உண்மை என்பதும் காலத்தால் மாறலாம். தேடல்தான் முக்கியம்."

இந்த முன்னோடி ஆய்வை முன்னொட்டாகக் கொண்டு தொன்மைமிக்க நமது அரங்கியலை மீட்டெடுப்பதும் அதனை நவீனப்படுத்தி காலத்துக்கேற்ப புதுப்பித்தலும் ஜனநாயகப்படுத்தலும் தற்கால பாசிச அரசியல் சூழலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளில் அரங்கியல் குறித்த கவனம் சற்று இடம்பெறத் தொடங்கியுள்ள இக்காலகட்டத்தில் இது போன்ற ஆய்வுகளுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

கட்டுரையாளர் : எழுத்தாளர்
நாடகஅரங்கச் செயற்பாட்டாளர்

---

நூல் தலைப்பு: அரங்கின் புரிதலும் புரியாமையும்; அரங்கத்திறம்; சிலப்பதிகாரம்

நூலாசிரியர்: இளையபத்மநாதன்

களரி வெளியீட்டகம், புலம் இணைந்த வெளியீடு (2020) பக்கம்: 312 விலை: ரூ 350

சிறுகதை


களந்தை அப்துல் ரஹ்மான்

# புதுமாப்பிள்ளை

மெட்ராஸின் காலைப் பொழுது எப்பவும் போல பரபரப்பாக இருந்தது. சேக்கப்பா என்னைக்கும் இல்லாத பரபரப்போடவும் உற்சாகத்தோடவும் ஆபிஸ் கெளம்புனான். அவனோட கல்யாணத்துக்காக சாய்ங்காலம் ஊருக்கு கெளம்பனும்... செம்பருத்தி ரோஜாவாக மனசுக்குள்ள பதிஞ்சிருந்த ஸீனத்தின் நெனைப்பும் இப்போ முன்னவிட அதிகமாகிட்டே இருந்துச்சு சேக்கப்பாக்கு. ஆபீஸ் போனதுமே மன்சூர் மொதலாளி இன்னைக்கு என்னென்ன வேலைலாம் இருக்குன்னு சொல்லிட்டு அவசரமா வெளிய கிளம்பிட்டார். அந்த கம்பெனில மொதலாளிக்கு அப்புறம் சேக்கப்பா தான் எல்லாமே; ஏன்னா மன்சூர் மொதலாளியையும் சேக்கப்பாவவையும் சேர்த்து மொத்தமே ரெண்டு பேருதான் அங்க. மொதலாளிப் போனதும் சேக்காப்பாக்கு... கல்யாணத்துக்கு ஊருக்குப் போனதும்... எப்படியெல்லாம் புதுமாப்ள பவுசு காட்டணும்குற ரோசனையாகவே இருந்தது. சேக்கப்பா ஒல்லியா நல்ல நெடுப்பமா இருப்பான், சுருண்ட முடி தலைய அப்பி புடிச்சிட்டு இருக்கும். கண்ணு மட்டும் உருவத்துக்கு சம்பந்தமே இல்லாம முண்டக் கண்ணாட்டு திருட்டு முழி மாதிரி உருட்டிக்கிட்டே இருப்பான். பாக்க அமைதியா இருந்தாலும் சரியான ஊமகுசும்பன். புதுசா ஒருத்தன் முன்னாடி வந்து நின்னா, நின்ன அடுத்த செகண்ட்லயே அவனுக்கு பட்டப் பேரு வைச்சி கொமைக்க ஆரம்பிச்சிடுவான். கல்யாணத்துக்கு அப்புறம் சேக்கபாக்கு இருக்குற பெரிய ஆசை, மன்சூர் மொதலாளி ஆபிஸ்லயே மேனஜர் ஆகுறதுதான். மன்சூர் மொதலாளியும் கொழும்புல பெரிய வேபாரம் செய்ய அந்நேரம் பேச்சு வார்த்தை நடத்திட்டு இருந்தாரு.

சாய்ங்காலம் ஊர் கெளம்ப ரெடியாவுன சேக்கப்பா... போற வழில ஊர் மாமா வேலை பாக்குற டிராவல்ஸூம் ஷாப் கடையும் இருக்குற லாட்ஜ் பில்டிங்ல எட்டிப் பார்த்தான். ஷாப் கடைல இருந்த மதார் காக்காகிட்ட அஸ்ஸலாமு அலைக்கும்ன்னு சலாம் சொல்லிட்டே உள்ள போன சேக்கப்பாவ பார்த்ததும். “ஒங்க ஊர்காரனுவுளுக்கு சலவாத்துக்கு மட்டும் கொறச்ச இல்ல” என சலித்துக்கொண்டே வலைக்கும் சலாம்ன்னு பதில் சொல்லியபடி, முறைச்சிப் பார்த்தார். “ஊர்மாமா அவசரமா ஊருக்குப் போய்ருக்கார்ன்னு கேள்விப்பட்டேன்...” என சேக்கப்பா இழுக்கவும்... “ஆமா கொள்ளேளவான் வந்தான்... வந்த வேகத்துல திரும்பவும் ஊருக்குப் போய்ட்டான்.. அவன கடைல வச்சிட்டுதான் நான் ஊருக்கு போணும்னு இருந்தேன்... அய்த்ரவான் என் நெனப்புல மண்ணள்ளிப் போட்டு குத்திட்டுப் போய்ட்டான்.” மதார் காக்கா கருஞ்சிப் போன சீப்பணியாரம் மாதிரி பதில் சொன்னவர்... செவத்துல கிடந்த காவட்டையப் பர்த்து கை நீட்டி காட்டி சேக்கப்பாட்ட சொன்னார்... “வருசம் இப்போ தொன்னித்தாறு தான ஆவுது... எப்டியும் ரெண்டாயிரத்து பத்துல வந்துடுவான் அந்த செத்தமட்ட...!” இவ்ளோ கடுப்புலயும் மதார் காக்கா நல்ல விட்டு அடிக்காறேன்னு சேக்கப்பா வாய பொத்திட்டு சிரிக்க... கடைக்கு பின்னால இருந்த டிராவல்ஸ் ஆபிஸ்ல இருந்து ஊர்மாமாவோட மொதலாளி பஷீர் காக்கா சேக்கப்பாவ கூட்டு... கையில கவுரு கொடுத்து ஊர்மாமாட்ட மறாக்காம கொடுத்துருன்னு சொல்லி அனுப்புனார்.

சேக்கப்பாவுக்கு நாலு லாத்தாமார், மூனாவது லாத்தாவ மட்டும் பேட்டைல கட்டிக் கொடுக்க, மத்த மூனு பேரும் உள்ளூர்லயே முடிச்சிருந்ததால, கல்யாண வீடு ஒருவாரத்துக்கு முன்னாடியே ஹோ... ஹோன்னு கெடந்துச்சி. ஊருக்கு வந்த சேக்கப்பா மொத வேலையா அத்துல பாத்து “கல்யாணத்துக்கு டை கட்ட கரக்டா வந்துடுல, இந்த ஊர்ல ஒனக்கு மட்டும் தான் டைய டை மாதிரிக் கட்டத் தெரியும், மத்தவண்ட்ட சொன்னா அரிசிப் பைல முடிச்சிப் போடுற மாதிரி கழுத்துல ஒரே இறுக்கா இறுக்கித் தொலச்சிடுவானுவோன்னு” சொல்லி பெருமூச்சி விட்டான். அத்துலு “ஆட்டும் ஆட்டும்ன்னு” தலய



ரெண்டு ஆட்டு ஆட்டி "சரி காக்கா வந்துடுறேன்னு" சொல்லி சேக்கப்பாவ அனுப்பி வச்சான். சேக்கப்பா ஒவ்வொரு வாட்டியும் தெருல வரும்போதும் போவும்போதுலாம்... யாராவது அவன புதுமாப்பிள்ளன்னு கூப்டுறாங்களான்னு காத ரொம்ப கூர்மையா வச்சிட்டே நடந்தான். சேக்கப்பாவுக்கு ஒரு மாசம் கழிச்சு கல்யாணம் பண்ணபோற சஹாப மட்டும் தெருல எல்லாரும் புதுமாப்ள... புதுமாப்ளன்னு கூப்ட, சேக்கப்பாக்கு சஹாபு மேல சரியான கோவம்."கொள்ளேளவானுக்கு வீடு மூனாந்தெருல தான இருக்கு.., இந்த தெருல பொண்ணு பேசிருக்குன்னு இங்கயே வந்து வந்து பந்தா பண்ணிட்டே இருக்கான்னு" மனசுக்குல்லயே சொல்லிச் சொல்லி கறிச்சிக் கொட்ணான்.

சஹாபுக்கு பேசிருக்க பொண்ணு ஷகிலா சேக்கப்பா வீட்டுக்கு பக்கத்து வட்டாரம்ங்கிறதால சஹாபு தெருல அங்குட்டும் இங்குட்டும் சாரத்த மடிச்சுக் கட்டிக்கிட்டு சண்டியர் மாதிரி அலையுறது அவனுக்கு சுத்தமா புடிக்கல. சேக்கப்பாவும் ஊர்மாமாவும் பேசிட்டு இருக்கும் போது சஹாபு திரும்பவும் தெருக்குள்ள வந்தான். சஹாபுக்கு இருக்குற புதுமாப்ள பவுசு எனக்கு இல்லயேன்னு சேக்கப்பா ஊர்மாமாகிட்ட புலம்ப, "அய்தரவான் அவன் கெடக்கான்... அவன் காட்டுற பந்தாவுக்கு இப்ப பாரேன்னு..." ஒரு இழு இழுத்து சேக்கப்பாக்கு ஆறுதல் சொல்லி முடிச்சார். ஊர் மாமா வாய் வச்ச நேரம் சஹாபு இன்னும் கொஞ்ச நேரத்துல வவ்வா மாதிரி தொங்கப் போறான்னு சேக்கப்பாவுக்கு தெரியாது.

சஹாபு சரியா ஷகிலா வீட்டுக்கு பக்கத்துல வரும் போது அவனுக்கு வென வைக்கிறதுக்குன்னே... எதித்தாக்குல கிஜா அவனோட M80 பைக்ல போவோ... சஹாபு சும்மா இல்லாம கிஜாவ நிப்பாட்டி, பைக்ல ரவுண்டு கேட்டான். "ஒனக்கு சைக்கிளே சரியா ஓட்ட வராது, இதுல M80லாம் வேண்டாம்ல"ன்னு சஹாபுட்ட கிஜா எவ்ளோ சொல்லியும்... அத சஹாபு கேக்குற மாதிரி இல்ல. சேக்கப்பாவும் ஊர்மாமாவும் என்னதான் நடக்குன்னு பாத்துட்டே இருக்க, சண்டியர் மாதிரி சாரத்த மடிச்சுக் கெட்டிட்டு பைக்ல ஏறுனான் சஹாபு. இன்னிக்கு ஏதோ விபரீதம் நடக்கபோதுன்னு ஷகிலா வீட்டு எதுத்தாக்குல இருந்த ஜெமிலா பெத்தா சஹாபையே பாத்துட்டு இருந்தாள்.

பைக்ல சஹாபு உக்காந்து ஆக்சிலேட்டர முறுக்குன்னு முறுக்கோ, அத தட்டாடில நின்னு வச்ச கண்ணு வாங்காம பாத்துட்டே இருந்தாள் ஷகிலா. அவள பாத்துட்டே M80 ஆக்சிலேட்டர இன்னும் வேகமா சஹாபு திறுக்கோ... பைக்கோட முன்பக்க பைதா சல்லுன்னு ஒரே தூக்கா தூக்கிட்டு குதுர மாதிரி பாஞ்சுது. சஹாபு மடிச்சுக் கட்டிருந்த சாரம் சரியா பைக் கேரியர்ல மாட்டி பைக்கோட போவோ... லங்கோடு போடாததால சஹாபோட டோங்கா கேரியர்ல மாட்டி கிழிஞ்சி... நெத்தம் பீச்சிட்டு அடிச்சிச்சு... கொள்ளேளவான் கவுட்டய

பொழந்துட்டு தெருல கெடந்தான். ஜெமிலா பெத்தா சும்மா பேசுனாலே எட்டுத் தெருக்கும் கேக்கும். இப்போ சஹாபு விழுந்ததும் கத்துனா ஒரு கத்து, “அல்லா ஹரவாக்கிப் போடோ எளா சஹாபுக்கு டோங்கா கிழிஞ்சு நெத்தம் கொட்டுதுளான்னு” ஊரையே கூட்டுனா. சேக்கப்பா, ஊர்மாமான்னு தெருல நின்ன மொத்தக் கூட்டமும் சஹாப தூக்க... தட்டாடில நின்ன ஷகிலா “ஏ எழவே ச்சைன்னு” வெக்கத்தோட கண்ண பொத்திட்டு ஓடிட்டா. கவுட்டய பொழந்துட்டு கெடந்த சஹாப சேக்கப்பா, ஊர் மாமா, மிக்கேல் சாச்சா எல்லாருமா சேந்து ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டுப் போனாங்க.

ஆக, சேக்கப்பாக்கு புதுமாப்பிள்ளைல போட்டியா இருந்த சஹாபோட தொல்லை சோலி முடிஞ்சுது. இனிமேல் நாம மட்டும் தான் ஊருக்குள்ள புதுமாப்பிளன்னு நெனைச்சிட்டு இருந்த சேக்காப்பாவோட நெனப்புல... மண்ணள்ளிப் போட வந்தான் காதர். சேக்கப்பா கல்யாணத்துக்கு மூனு நாள் தான் இருக்க, லொஹர் தொழுவிட்டு பள்ளி முன்னாடி நின்ன அவன நோக்கி, ஊர்மாமாவும் காதரும் வெரசலா வந்தாங்க. காதர் ஈன்னு பல்ல இளிச்சிட்டு தலைய சொறிஞ்சிட்டு நிக்க, எல சேக்குன்னு ஊர்மாமா தான் மொதல்ல ஆரம்பிச்சாரு. “கதைய கேட்டியா காதருக்கு அடுத்த மாசம் தான் கல்யாணம் வைக்கறதா இருந்துச்சி... இப்போ என்னான்னா பொண்ணோட வாப்புமாக்கு உடம்புக்கு ஏழலையாம்... அதனால இப்போ அவசரமா ரெண்டு நாள்ல கல்யாணம் முடிவு பண்ணிட்டாங்கலாம்ல”. ஊர்மாமா சொல்லி முடிக்கவும் இதுல எதோ வில்லங்கம் இருக்கும்ன்னு யோசிச்சிட்டே... சேக்கப்பா இப்போ அதுக்கு நான் என்ன பண்ணனும்னு இழுத்தான். “அதுவந்து ஒண்ணுமில்லல, காதர் இனிமேல் அவசரமா கோர்ட் எதுவும் எடுக்க முடியாது... அதான் உன்னோட கோர்ட்ட கொடுத்தா... நிக்கா எழுவும் போது மட்டும் போட்டுக் கொடுத்துடுவான்னு” இழுத்தார். அவ்ளோதான் சேக்கப்பாக்கு வந்துச்சே கோவம். “யோவ் நா என் கல்யாணத்துக்கு எடுத்த கோர்ட்ட இவங்கிட்ட கொடுத்தா... அப்போ ஏங்கல்யாணத்துக்கு நான் என்ன போட முடியும்”சொல்லி மூஞ்சிய ஒரு சுண்டு சுண்டுணான்.



ஊர்மாமாவும் காதரும் விடுறதா இல்ல... லொஹர்ல ஆரம்பிச்ச பலாய் அசர் தொழுவை முடிஞ்சும் ஒரு முடிவுக்கு வரல. சேக்கப்பா விடாம மறுத்தான், ஊர்மாமாவும் விடுறதா இல்லை “எல செத்தக் கொள்ளேளவான் காதர் கல்யாணம் ஆத்தூர்ல தான்ல நடக்கு... அவசரமா நடக்குறதால நம்மூர்காரனுவோ கொஞ்சம் பேர்தான் போவானுவோ... அந்த ஊர்காரனுவளும் ஓங் கல்யாணத்துக்கு வரமாட்டானுவோ... அப்பா யாம்ல பயப்படுறன்னு” பேசி ஒரு வழியா சேக்கப்பா கோட்ட வாங்கி காதர்கிட்ட கொடுத்தாரு.

சேக்கப்பா ஊட்ல கல்யாண வேலைலாம் வேகமெடுத்தது, வேலைகளை வேகமெடுத்து செய்வதற்கு ஆளில்லாததால எல்லாத்துக்கும் சேக்கப்பாவே அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்தான். அருமைக்கிளி நாடார் கடைல மளிகை சாமான், காய்கறி வாங்கவும் அவன்தான், கொச்சிக்கா திரிக்கவும் சேக்கப்பாதான். வீட்டு முன்னால் போடப்பட்டிருந்த பந்தலில் சின்ன பிள்ளைகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்க, கழுதைல கொண்டு வந்த ஆத்து மணல் வீட்டு முத்தத்தில் நிரம்பிக் கிடந்தது. இன்னொரு பக்கம் வசந்தம் சவுண்ட் சர்வீஸ் குழாயில இருந்து அஸ்ஸலாமு அலைக்கும்ன்னு ஆரம்பிச்ச நகூர் ஹனிபா தீன்குலப் பெண்ணு எங்கள் திருமறைப் பொண்ணுன்னு ரெண்டு டி-90 கேசட்டு வழியா பாடிட்டு இருந்தார்.

கல்யாணத்துக்கு வரவ்ங்க உக்காறதுக்கு பள்ளியில் போய் செயர் எடுக்க ஆள் கெடைக்காமல் சேக்கப்பா தெருவையை சுத்தி சுத்திப் பாத்துகிட்டு இருந்தான். யாரும் தோதாக இல்லை, வேற வழியே இல்லாம நாலு சின்னப் பையனுவள கூட்டிட்டு சக்கடா வண்டியயும் தள்ளிட்டு பள்ளிக்குப் போனான் சேக்கப்பா. இரும்பு செயர்களை ஏத்திக்கிட்டு சின்னப் பயனுவளை வச்சி சக்கடா வண்டிய தள்ளுனா, சரியா சரஸ்வதி அக்கா கடை பக்கத்துல கெடந்த கெடையில பைதா மாட்டி வண்டி அப்படியே நின்னட்டு. எல்லாப் பொடியன்களும் இதுக்கு மேல வேலைக்கு ஆவாதுன்னு அப்டியே போட்டுட்டு ஓடோ... என்ன பண்ணன்னு தெரியாம சேக்கப்பா திருதிருன்னு முழிச்சான். அந்தநேரம் பார்த்து ரெண்டு காலையும் அவட்டி அவட்டி கந்தூரிக்கு தூக்குற சந்தனக்கூடு மாதிரி நடந்து வந்தான் சஹாபு... அவன ஒத்தாசைக்கு கூப்ட்டான் சேக்கு. “யாம்ல செத்த அய்த்தரவான்... இப்பதான் தையல் சேருது திரும்பவும் அத்து தொங்கவா..? போவுலா செத்தமட்ட” என்றபடி அழகு குறையாத சந்தனக்கூடு மாதிரி சேக்கப்பாவை கடந்துப் போனான் சஹாபு. போறபோக்குல பீடியோட வந்த டர்ரப்பா... ஒரே தம்முல சக்கடா வண்டிய தள்ளி சேக்கப்பாவ மேலையும் கீழையுமா ஒரு பார்வை பார்த்தாரு. அந்த பார்வைல இவன்லாம் நாளைக்கு கல்யாணம் முடிச்சி... என்னத்த கிளிக்கப் போறானோன்னுங்குற மாதிரி சேக்கப்பாவ கேக்குற மாதிரி இருந்துச்சு.

மறுநாள் கல்யாணம், மதியம் பசியாறிவிட்டு காதரிடம் கோர்ட்டு வாங்க அவசரமாக கிளம்பினான் சேக்கப்பா. ரெண்டாமறைல இருந்து வெளியே வந்த அவனைப் பார்த்து “சோறு உண்ட கையோட எங்கல போற நல்லாயீந்துருவான்? அந்தாக்குல எச்சிப் பிசாசு அடிச்சிடப் போவுதுன்னு”

சேக்கப்பாவின் வாப்புமா சத்தம் போட்டாள். திருப்பிட்டு சேக்கு கேட்டான் "அது என்ன எப்பவும் எச்சிப் பிசாசு... எச்சிப் பிசாசுன்னு சொல்லிட்டே இருக்க, அது எப்டி இருக்கும் சொல்லு பாக்கலாம்... சும்மா ஒரே நொய் நொய்ன்னுட்டு". "அதான் அந்த செத்தமட்ட நாளைக்கு நீ கல்யாணம் பண்றல அவதான் அந்த எச்சிப் பிசாசு; இப்டியே போயேன் அவதான் அந்தாக்குல வந்து அடிக்கப் போறா" என்றாள் சேக்கப்பாவின் வாப்புமா. சேக்கப்பா காதில் கேட்டும் கேக்காத மாதிரி எட்டு வைக்க, ரெண்டாமத்தியில் குவிச்சுப் போட்ருந்த தக்காளி மேல மூத்த அக்காவோட மொவன் பைசல் ஓடி வந்து தொம்முன்னு விழுந்தான். அத பாத்ததும் சேக்கப்பாக்கு தக்காளி மேல விழுந்து ஹீரோவும் ஹீரோயினியும் டூயட் பாடுற தமிழ் பாட்டு எல்லாம் கண்ணு முன்னால வந்துச்சு. நாமளும் இப்டி ஸீனத்தோட தக்காளி மேல விழுந்து டூயட் பாடுனா எப்படி இருக்கும்ன்னு ஒரு நிமிசம் நின்னு யோசிச்சுப் பார்த்தான். அதுக்குள்ளதான் இந்த தக்காளிய எல்லாம் பருப்பாணத்துல போட்டுருவானுவலன்னு மனசுக்குல்ல ஒரே கவலை சேக்கப்பாவிற்கு.

கல்யாணம் அன்னைக்கு காலைல வீட்டில் கூட்டம் கூட கூட, சேக்கப்பாவிற்கு உற்சாகம் பீறிட்டு வந்தது. சேக்காளிமார், ஊர்மாமா துணையோடு ரெண்டாமறையில் சேக்கப்பா ரெடியாக ஆரம்பிச்சான். மொகத்துல சிங்கப்பூர் ரோஸ் பவுடர் பூசி, செண்ட் எல்லாம் அடித்து செம சக்கையாக இருந்தான் சேக்கப்பா. ஒருபக்கம் மாப்பிள்ளைக்கு சட்டத் தலப்பா போடோ ஆலிம்சா, மோதியாரப்பா, ஜமாத்து ஆளுங்கலாம் ரெடியா இருந்தாங்க. அதுக்கு முன்னாடியே சேக்கப்பாக்கு அவனோட வாப்பும்மாவும், பெத்தாமார்களும் நெத்திலயும், கண்ணத்துலயும் மாத்தி மாத்தி மோந்துக்க... சேக்கப்பா மூஞ்சில இருந்த பவுடர்லாம் பெத்தாமார்வோ வாய்ல ஒட்டிக்கிச்சு. அது தெரியாம தெருவூட்டுக்கு வந்த சேக்கப்பாவ பாத்ததும் ஜமாத் ஆளுங்கலம் சிரிப்போ சிரிப்பு; அதுலயும் கட்டாண்டி அப்பாக்கு ஏகத்துக்கும் சந்தோசம். "ஏய்.... என்னல மாப்ள இப்டி டயானா சர்கஸ் கோமாளி மாதிரி இருக்கான்..! கொள்ளேளவானுவோ என்னல பண்ணிங்கோ சேக்கப்பாவன்னு" ஊர்மாமாவையும், சேக்கப்பா சேக்காளிமார்வளையும் ஒரு பார்வை பார்த்தார். கட்டாண்டியப்பா வாய்க்கால்ல குளிக்கும் போதுலாம்... முங்கு நீச்சல் போட்டு வந்து... அவரு சாரத்த உருவி விட்ட சேக்கப்பாக்கு... கணக்கு தீர்த்தார். சேக்கப்பா அலமாறில இருந்த கண்ணாடிய எட்டிப் பார்க்கான்... நெத்திலயும் கண்ணத்துலயும் இருந்த பவுடர்லாம் இல்லாம போய், கண்ணுக்குழி, மூக்கு, வாய், நாடில மட்டும் பவுடர் அப்பிப்போய், அவனோட திருட்டு முழிக்கு அசல் கோமாளி மாதிரியே இருந்தான். கட்டாண்டியப்பா அப்பவும் சேக்கப்பாவ விடல, "ஆளப் பாரு நல்ல புல் தடுக்கி பயில்வான் மாதிரி, இடுப்பும் இல்ல புடுக்கும் இல்ல இவனுக்கு எப்டில மக்கா பேண்ட் மாட்டிவுட்டிங்க..? எதும் சணல் கயிற போட்டுக் கட்டி உட்டிங்ளோன்னு"பலாய் இழுத்தார். ஒழுவோட இருந்தும் ஆத்திரத்தின் உச்சிக்கே போன சேக்கப்பாக்கு முதல் தடவையா ஒரேயொரு சொட்டு முட்டி வந்துச்சி.

பைத் சொல்லி வீட்ட விட்டு வெளிய வந்ததும் கூட்டத்துல இருந்து ஒரு குரல் "எல புதுமாப்ள அஞ்சாந்தெரு வரைக்கும் நடந்தா வரணும்..?ன்னு கேள்வி எழுப்ப, வழக்கம் போல ஊர்மாமாவும், சேக்கப்பாவோட சேக்காளி உருட்டலும் ஒன்னா ஆரம்பிச்சாங்க "மாப்ள யாம்ல நடக்கணும்... அதான் செல்லப்பாவோட மாப்ள சந்தாக்கு இருக்குல, அதுல ஊர்வலமா கூட்டுப் போவோம்ன்னு" சொல்லி முடிக்கவும், மொத்த கூட்டமும் "அஸ்தவுபிருல்லா... அஸ்தவுபிருல்லா யாம்ல செத்த அய்த்துருவானுவோ நல்ல காரியம் நடக்கும்போது சந்தாக்குன்னு சொல்லிட்டுத் திரியிறீங்கன்னு" ஒரே சத்தம். ஊர்மாமா அதுக்கும் பதில் கொடுத்தார், "ஆமா பின்ன என்னல செல்லப்பா ப்ளசரு எப்ப நிக்கும்ன்னு அவனுக்கே தெரியாது..? அந்த ப்ளசர அவன் ஓட்டுரத விட, பின்னாடியே தள்ளிட்டு போறவனுவோ தான் அதிகம்... அவன் காரு மாப்ள ஊர்வலம் போறதுக்கும், கெப்பனக்காரி பேர்காலத்துக்கு போறதுக்கு மட்டும்தான் லாய்க்கி. அட இவ்ளோ யாம்ல செல்லப்பா காருக்கு மாப்ள சந்தாக்குன்னு பேரு வச்சதும் சேக்கப்பா தான்னு" ஒரு போடு போட்டாரே பார்க்கலாம்; மொத்த கூட்டமும் சேக்கப்பாவ ஏற இறங்க பார்த்துச்சு. இப்போ சேக்கப்பாவுக்கு ரெண்டாவது சொட்டு முட்டி வந்துச்சு.

கார் முன் சீட்ல சேக்கப்பாவும் பின்னாடி சீட்ல சின்ன புள்ளைங்களும் ஏற ஊர்மாமா, மொய்தீன், தேன்பாட்டல், உருட்டல் காரை சுத்தியும், ஜமாத் கூட்டம் கார் முன்னாலயுமா பைத் சொல்லிட்டே ஊர்வலம் போனாங்க. சேக்கப்பாவின் லாத்தாமார்கள் வீட்டில் காரை நிறுத்தி பால், பழம் கொடுத்தது போலயே, சில நெருங்கிய சொந்தகாரங்களும் அவனுக்கு பால், பழம் கொடுத்தபடி ஊர்வலம் தொடர்ந்தது. சரியா கார் மூனாந்தெரு தொங்கல்ல (தெருமுனை) இருந்த காதர் வீட்டு பக்கத்துல போவவும்; ஊர்வலத்தில் ஒரே களேபரம். சேக்கப்பாவோட மூனாவது மச்சான் பேட்டைகாரர் முறுக்கிட்டு போக... மொத்தக் கூட்டமும் அவரு பின்னாடியே "அட நில்லுங்க பேசிக்கலாம்... இதுக்குப் போய் கோவப்படலாமா..?" அப்டி இப்டின்னு அவர தாஜா பண்ண ஆரம்பிச்சாங்க. காரும் அசையாமல் சரியா காதர் வீட்டு முத்தத்துல வந்து நின்னுச்சு. சேக்கப்பாவுக்கு ஒன்னுமே வெளங்கல; ஊர்மாமாவும் தேன் பட்டாலும் ஓடி வந்து அவன்கிட்ட விவரத்த சொன்னாங்க. "எல இன்னிக்கு ஒனக்கு கல்யாணம் முடிஞ்சா மாதிரிதான்...ஓங் மச்சான் அவரு வீட்டுலயும் வந்து பால், பழம் சாப்ட்டாதான் கல்யாணத்துக்கு வருவேன்னு சொல்லிட்டு போய்ட்டாருல... அவரு சொல்ற மாதிரி நீ இப்போ செல்லப்பா கார்லயே பேட்டைக்கு போய் பால், பழம் குடிச்சிட்டு வரதுன்னா... எப்டியும் இன்னும் ரெண்டு மூனு நாளு ஆவும்ல"ன்னு ரெண்டு பேரும் இழுத்து முடிக்கும் போது... சேக்கப்பாவுக்கு மூனாவது சொட்டு முட்டி நின்னுச்சு.

இது போதாதுன்னு பொண்ணு வீட்டுல இருந்து காதர் வீட்டுக்கு வந்திருந்த அவனோட சின்ன கொழுந்தியாமாருவோ, ஜன்னல் வழியா சேக்கப்பாவ எட்டிப் பார்த்து... “எளா இங்கப் பாருங்களா நம்ம மச்சான் நேத்து கல்யாணத்துக்கு போட்டுருந்த கோர்ட்டதான் இந்த மாப்ளையும் போட்டுருக்கார்ன்னு” சத்தமா சொல்ல சேக்கப்பா கண்ணுல ரெத்தம் தெறிக்க ஊர் மாமாவையும் காதரையும் ஒரு மொறை மொறைச்சான். “நீ எதுக்குல பொண்ணு வீட்டுல வச்சு நிக்கா முடிக்க..? ஒழுங்கா பள்ளிலயே வச்சிருந்தா இப்ப மூனாந்தெரு பக்கம் கூட வந்திருக்காம பள்ளிக்குள்ள போய்ருக்கலாம்லன்னு..?” உருட்டல் தன் பங்குக்கு ஒரு உருட்டு உருட்டுனான். மூனாந் தெருக்கு முன்னாலயே பள்ளி இருக்குறதால அவனோட ரோசனை அப்டி போச்சு. கார்ல இருந்து மொனங்கனபடியே பதில் சொன்ன சேக்கப்பா “ஆமா!! அப்டியே பள்ளில வச்சிட்டாலும்... அங்க ஊர்ல வசதியான பெரிய குடும்பத்துல நிக்காவா இருந்தா உள் பள்ளில சங்கையா நிக்கா வைக்கிறானுவோ... இல்லனா ஜனசா தொழுவை வைக்கிற வெளிப் பள்ளில தான நிக்கா வைக்கானுவோ..! நான் என்ன மையத்தா அங்கவச்சி நிக்கா வைக்கன்னு” சொல்லவும்; ஊர்மாமா சும்மா இல்லாம “ஆமா இப்ப மட்டும் என்னாவாம் கரெக்டா உன்ன கொண்டுவந்து மையவாடி பக்கம் நிறுத்திட்டானுவோ”பாருன்னு இழுத்தார். சரியா காதர் வீட்டு தொங்கல் தாண்டுனா மையவாடிதான் இருந்துச்சு.

சேக்கப்பா ஆத்திரத்தின் உச்சிக்கே செல்ல ஊசி நூலில் கொருத்த பாசி மாதிரி அடுத்தடுத்து வரிசையா சொட்டு முட்ட ஆரம்பிச்சிடுச்சு. இதுக்கு மேல தாங்காதுன்னு சேக்கப்பா ஊர்மாமாவ கூட்டு மெதுவா அவர் காதுல சொன்னான்... “மாம்ஸ் ஒன்னுக்கு முட்டிக்கிட்டு வருது... கார அப்டி பள்ளி பக்கமோ இல்ல மையவாடி பக்கமோ மெதுவா நகத்துனா... நான் டக்குன்னு போய் ஒன்னுக்கு அடிச்சிட்டு வந்துடுறேன்னு” பாவமா கேட்டான். “அட அய்த்தரவான் அதுக்குத்தான் இப்டி பேமுழி முழிக்கிறியோ..? ஒழு செஞ்கிட்டு நிக்கா முடியோ முன்னாடி எப்டில ஒன்னுக்குப் போவோ முடியும்..? சத்தம்காட்டம கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ எப்டியும் ஒன் மச்சானுக்கு பால், பழம் கொடுத்து ஜமாத்தாளுவோ கூட்டி வந்துடுவாங்க... அப்புறம் நிக்கா முடிஞ்சிட்டு போய்க்கலாம்”ன்னு ஊர்மாமா பக்குவமா பதில் சொல்லி முடிச்சார். ஆனாலும் சேக்கப்பாவின் பேமுழி மாறவே இல்ல, கெப்பனக்காரி மாதிரி வயித்த புடிச்சிட்டு நெழிய ஆரம்பிச்சான்.

“எல ஒனக்கு ஒன்னு தெரியுமா நம்ம நாலாந்தெருவுல தொங்கல் வீட்டுல டர்ரப்பா இருக்காற அவருக்கு எப்டி அந்த பேரு வந்துச்சு தெரியுமா..? உன்ன மாதிரிதான் நிக்காக்கு ஒழுவோட பள்ளிக்கு போன மனுசன் சரியா நிக்கா எழுத ரெடியா ஆவும் போது... டர்ர்ர்ர்ன்னு போட்டாரே ஒரு பாம்... அப்ப வச்சதுதான் அவருக்கு டர்ரப்பான்னு... இப்ப நீயும் ஒன்னுக்குப் போனா உனக்கும் ஒரு பேரு வைப்பானுவோன்னு” ஊர்மாமா சொல்லி முடிக்க சேக்கப்பா அமைதியானான்.

மொறைச்சிட்டுப் போன பேட்டை மச்சான ஊர் ஜமாத்தாளுவோலாம் சேர்ந்து “அசன் தள்ளு உசேன் இழுன்னு” ஒருவழியா நிக்கா மேடைக்கு கூட்டி வந்துவிட்டாங்க. நிக்கா எழுத ஸீனத் வீட்டு முத்தத்துல போட்டுருந்த பந்தல் மேடைல... அத்தஹயாத்துல உக்காந்த சேக்கப்பாக்கு... வேத்து விருவிருத்துச்சி. உருட்டலும் தேன் பாட்டலும் சேக்கப்பாவ சுத்தி ஆளுக்கொரு பக்கமா உக்காந்து... கைநேஞ்சி எடுத்து மொவத்த துடைச்சி விட்டே இருந்தாங்க. இதுபோதாதுன்னு ஊர்மாமா அடுத்த திரிய கொழுத்திப் போட்டாரு. சேக்கப்பாக்கு கால் கழுவி மோதிரம் வாங்குன கடமைக்கு... ஸீனத்தோட சாச்சி மொவன் அல்லா பிச்சை... தங்கநிற ஜிகினாவால டெக்கரேசன் பண்ண விசாறியால சாமரம் வீசிட்டு இருந்தான். அவன்கிட்ட “எல மச்சானுக்கு வேக்குதுலா... கொஞ்சம் வேகமாதான் வீசுனா என்னன்னு” செல்லமா அதட்டுனாரு. ஊர்மாமா சத்தத்துல பதறிப்போன அல்லா பிச்சை படார்ன்னு வேகமா வீச... வீசாறி அவன் கைல இருந்து உருவி சேக்கப்பா மூஞ்சில சப்புன்னு ஒரு அடி... விசாறில இருந்த மொத்த ஜிகினாவும் கந்தூரிக்கு தர்காவுல மாட்டுன சீரியல் பல்பு மாதிரி சேக்கப்பா மூஞ்சில மினுங்க ஆரம்பிச்சிது. கைநேஞ்சியால உருட்டல் அத தொடச்சிவிட்டு.... சேக்கப்பா கண்ணு தொறக்க முன்னாடி ஊர்மாமா அங்க இருந்து தலைமறைவானாரு. நிக்கா முடிஞ்சி எல்லாரும் முசாபா செய்றோம்ங்குற பேர்ல சேக்கப்பாவ நல்ல இறுக்கி இறுக்கி கட்டிப் பிடிக்க... சேக்கப்பா மனோகர் சாச்சா பஞ்சர் பாக்குற சைக்கிள் டியூப் மாதிரி தொலதொலன்னு தொங்கி நின்னான்.

நிக்கா முடிஞ்சு ஸீனத் வீட்டுக்குள்ள போன சேக்கப்பாவ கடைசி பந்தி முடியுறவரையும் வெளிய ஆளயே காணோம். தேன் பாட்டலும் உருட்டலும் வீட்டுக்கு கெளம்ப ரெடியானதும், ஊர்மாமா “கொஞ்சம் வெயிட் பண்ணலாம்ல மக்கா... எப்டியும் அடுத்த சங்கதிக்கு அவன் நம்மள்ட்டதான ஐடியா கேட்டு வரணும்”ன்னு சொன்னாரு. “அவன்லாம் நம்மள்ட்ட ஐடியா கேக்கமாட்டான்... அவன் ஏற்கனவே லபுக்கபீம் வாங்கி திண்ணுட்டு இருக்கான்... நீங்க வேணா அவண்ட்ட ஐடியா கேளுங்கன்னு” சொன்னபடியே உருட்டல், தேன் பாட்டல், காதர் எல்லாரும் நடைய கட்ட ஆரம்பிச்சாங்க. ஊர்மாமா ரொம்ப அதிர்ச்சியா “அது என்னல லபுக்கபீம்; என்னல சொல்றீங்கோ கொஞ்சம் தெளிவா சொல்லுங்கன்னு” கெஞ்சாத குறையா கேட்டார். “எல்லாத்துக்கும் நீர் தான் மாம்ஸ் காரணம்... உங்களுக்கு கொட்ட வீங்கிட்டுன்னு உங்க மொதலாளிக்கு அவனே கள்ள கடிதாசிப் போட்டு ரெண்டாயிருவா ஏமாத்தி வாங்கிட்டு வந்துட்டான். அதுல தான் லபுக்கபீம் வாங்கி திண்ணுட்டு... நம்மளயெல்லாம் தெனமும் பஜாருக்கு கூட்டிப் போய் அல்வா, கீரின் ஓட்டல்ல ரொட்டிச் சால்னா வாங்கித் தந்துட்டு இருக்கான்” எல்லாம் சொல்லி முடிக்கவும் ஊர்மாமாக்கு தலையே சுத்திட்டு. “அட பேதிலவான் சேக்கப்பா ஊமக்குசும்பன்னு தெரியும்... ஆனா இப்டி வெளஞ்ச



ஊமக்குசும்பன்னு தெரியாம போச்சேன்னு” தலைல கை வச்சாரு.

சேக்கப்பாவுக்கு பிரியாணிச் சோறு பரிமாறிட்டு இருந்த அவன் மாமியார் “வாப்பா நல்லா உண்ணுங்கோ... வளரப் புள்ளன்னு” சொல்லி ரொம்ப பதுஷாக்குல பக்கத்துல நின்னுட்டு இருந்தாள். அந்த நொடியே சேக்கப்பாவுக்கும், அவன் மாமியாருக்கும் ஜனுபாவின் நிக்கால நடந்த சம்பவம் ஓர்மைல வந்துப் போச்சு. கடைசி ஆம்பள பந்தி முடிஞ்சதும் அடுத்த பொம்பள பந்தில உக்காறலாம்ன்னு நின்னுட்டு இருந்த ஸீனத் உம்மா, பக்கத்துல நின்ன கச்சிபா லாத்தாகிட்ட சேக்கப்பாவையும் அவன் சேக்காளிமாரையும் காட்டி “இங்க பாருங்க லாத்தா அந்த செத்த ஐயித்துருவானுவோ சகன் சாப்பாடுங்குறதால அந்தாக்குல உக்காந்து மண்ணு லாரி மாதிரி அள்ளிப் போட்டுட்டு இரிக்கானுவோ... இவனுவோளுக்கு வாயில இருந்து கால்வரைக்கு குடல் இருக்குமோ”ன்னு சேக்கப்பா காதுபடவே பேசுனதுதான் அது.

நிக்கா முடிஞ்ச மொத நாள் பொண்ணு வீட்டுலதான தங்கப் போறோம்ன்னு நெனச்சிட்டு இருந்த சேக்கப்பா ஆசைல, ஓட்டு மாவு வடிவத்துல மண்ணு விழுந்துச்சு. கல்யாண சீராக கொடுக்க வேண்டிய ஓட்டு மாவுல ரெண்டு படி கொறைஞ்சதால வந்த தகராறில் முதல் இரவு சேக்கப்பாவின் வீட்டுக்கு மாத்தப்பட்டது. புளுக்கமும் வெக்கையுமாக இருந்த ரெண்டாமறையில் சேக்கப்பாவும் ஸீனத்தும் ஒருத்தர ஒருத்தர் பார்த்துட்டு இருக்க, சரியா ராத்திரி 12 மணிக்கு கரண்டும் போச்சு. வீட்டு திண்ணைல லபுக்கபீம்ன்னா என்னன்னு ரோசனையோட படுத்துக்கிடந்த ஊர்மாமாக்கு கெரண்ட் போனதும் குபீர்ன்னு சிரிப்பு வந்துச்சு. “வாந்திலவ சும்மா இல்லாம ஒயர்மேன் கணேசன்ன பாவடை கணசேன்... பாவட கணேசன்னு சேக்கப்பா கொமைச்சதுக்கு... அவன் சரியா நேரம் பார்த்து சோலிய முடிச்சுட்டான். இனிமேல் லபுக்கபீம் வேலைலாம் எடுபடாதுன்னு” மனசுக்குள்ளயே சொல்லி சொல்லி ஊர்மாமா சிரிச்சிட்டு கிடந்தார்.

விருந்துக்காக சின்ன மாமியார் வீட்டுக்குப் போன சேக்கப்பா, ஊர்மாமா ரோசனை படி மானம், மருவாத கெட்டுடக் கூடாதுன்னு கொஞ்சமாவே சாப்ட்டான். எல்லாரும் எவ்ளோ கட்டாயப்படுத்தியும் சேக்கப்பா அத காதுல வாங்கிக்கல. ராத்திரிலயும் அங்கயே தங்க சேக்கப்பாவுக்கு பதினொரு மணிக்கு மேல நல்ல பசி, மதியம் விருந்துல வச்ச நெய்ச்சோறு, கறியாணம், கலியா கத்திரிக்கான்னு எல்லா ஐட்டமும் கண்ணு முன்னாலயே நின்னுச்சு. நேரம் ஆக ஆக பசியின் உச்சத்துக்கே போன சேக்கப்பா, ஸீனத்துமாவின் காதில் மெதுவாக கேட்டான் “எளா உங்க சாச்சிமார்லாம் தூங்கிருப்பாங்களோ..? யாருக்கும் தெரியாம கொஞ்சாம் சோறு, பொறிச்சக் கோழிலாம் இருந்தா எடுத்துட்டு வாயேன்... வயிறு குல்குவல்லா சூரா ஓத ஆரம்பிச்சிட்டு... இதுக்கு மேல தாங்காதுன்னு” கெஞ்சாத குறையா கெஞ்ச. சேக்கப்பாவின் திருட்டு முழிக்கு ஸீனத்து கரிசனம் காட்டினாள். அவங்க இருந்த அறைக்கு பக்கத்துலயே வளவூடு இருந்ததால லைட்லாம் போடாம மெதுவா போய் சோறு, கறி எல்லாம் எடுத்துட்ட வர, சேக்கப்பா ரவுண்டு கட்ட ஆரம்பிச்சான்.

சரியா அந்நேரம் பார்த்து ஸீனத்தோட பூட்டிமாக்கு ஒன்னுக்கு முடுக்க தட்டு தடுமாறி வானாளிக்கு வந்தவ, இருட்டுல வாச படி தடுக்கி சேக்கப்பாவும் ஸீனத்தும் இருந்து அறை கதவ உடைச்சிக்கிட்டு உள்ளப் போய் விழுந்தா. அவ்ளோதான் சேக்கப்பா பார்த்து பாத்து வாய்ல வச்ச கோழிக் கறி முள்ளோட போய் அவன் தொண்டைல சிக்கி கண்ணு முழிலாம் மேல சொருவ ஆரம்பிச்சிட்டு. அத பார்த்து ஸீனத் கத்த தூங்கிட்டு இருந்த மொத்தக் கூட்டமும் முழிச்சு அறைக்குள்ள பார்த்தா... சேக்கப்பா பேச்சு மூச்சு இல்லாம பேயறைஞ்ச மாதிரி கிடந்தான். ஸீனத் சாச்சி, லாத்தா, கண்ணுமான்னு மொத்த பொம்பளைங்க கூட்டமும் சேக்கப்பாவ ஒரே தூக்காத் தூக்கி வானாளிக்கு கொண்டுவந்து முதுக தடவி... தலைல அடிச்சி... தொண்டைல சிக்குன கோழிக் கறிய எடுக்க போராடுனாங்க. ஓரளவு சுயநெனைவோட இருந்த சேக்கப்பாவும் மனசுக்குள்ளயே பேச ஆரம்பிச்சான்... “எந்த பாவமும் செய்யாம இளந்தாரியா மவுத்தானா அல்லாஹ் சொர்க்கத்துல நாலு கண்ணழகிய தருவேன் சொல்லிருக்கான்... பேசாமா இந்த கோழிக் கறி தொண்டைல சிக்கி மையமாகியிருந்தா அங்க போயாவது நாலு கண்ணழகிக் கூட சந்தோஷமா இருந்துருக்கலாம்..! இப்போ இப்டி ராத்திரி கோழிக் கறிய திருடி திண்ண பாவத்துக்கு காலம்பூறா இந்த ஊர் என்ன சொல்லி நம்மள பாடாப்படுத்த போவுதோ..? ஸீனத்தோட பூட்டிமா ஒருத்தியே போதுமே... தேரம் விடியக்குள்ள ஊர் பூரா சேதி தெரிஞ்சிடுமே..” இதுல எதிர்ல தல முடிலாம் கலஞ்சிப் போய் கண்ணத்துல கை வச்சி உக்காந்து இருந்த ஸீனத்த பாக்கும் போது, சேக்கப்பாவுக்கு வாப்புமா சொன்ன எச்சிப் பிசாசு நெயாபவம் வந்துச்சி. மோதியாரப்பா சுபுஹ் பாங்கு சொல்றதுக்கு முன்னாடியே சேக்கப்பா தொண்டைல கோழிக் கறி சிக்கி பேமுழி முழிச்சக் கத, ஊர்பூரா தெரிஞ்சி ஊர்மாமா, உருட்டல் எல்லோரும் சேக்கப்பாவ கொமைச்சி எடுத்தாங்க.

அடுத்த விருந்துக்காக பெரிய லாத்தா வீட்டுக்குப் போன சேக்கப்பாவுக்கு, லாத்தா வீட்டு தட்டாடில தனியா ரூம் இருக்குன்னு சந்தோசம். அதோட எப்டியாவது ஸீனத்மா ஆசப்பட்ட மாதிரி மல்லிப்பூ வாங்கிக் கொடுக்கணும் முடிவு பண்ணான். மஃரிப் தொழுவைக்குப் பிறகு பெரிய லாத்தா வீட்டில் மொத்தக் கூட்டமும் திண்ணைல உக்காந்து கதபேச

சேக்கப்பாவுக்கு பூ வாங்க எப்டி பஜாருக்கு போறது... போனாலும் வாங்கிட்டு வந்து எப்டி லாத்தாமார்க்கெல்லாம் தெரியாம ஸீனத்மாக்கு கொடுக்குறதுன்னு ரோசனையாவே இருந்துச்சி. சரியா அந்த நேரம் பாத்து அஜ்மீர் காஜா சைக்கிள்ல கிலிங்... கிலிங்ன்னு பெல் அடிச்சிட்டே பாஞ்சி வந்தான். சேக்கப்பா லாத்தா வீடு முக்கு கடைசில இருக்குறதால சட்டுன்னு சேக்குக்கு ஒரு ரோசனை வந்துச்சி. சைக்கிள்ல பாஞ்சி வந்த அஜ்மீர் காஜாவ சேக்கப்பாவும் பாஞ்சிப் போய் அணை கட்டுனான். “தம்பி சலாமலைக்கும் எங்கல பஜாருக்கு போறியோ..?”ன்னு சேக்கப்பா கேக்க... இல்ல காக்கா துணி துவைக்கோ ஆத்துக்குப் போய்ட்டு இருக்கேன்னு அஜ்மீர் காஜா ரிவிட்டு அடிச்சான். வேற வழியே இல்லாம அஜ்மீர் காஜா அடிச்ச இத்துப்போன விட்டுக்கு(கமெடி) சேக்கப்பா ஈஈஈஈன்னு பல்ல காட்டி சிரிச்சான். “என்னலே தம்பி விட்டு அடிக்கிறியோ... அதுலாம் இருக்கட்டும் மந்திரம் மாமா கடைல ஒரு நூறு கிராம் அல்வாவும், சின்னையா கடைல ஒரு ரெண்டு மொழம் பூவும் காக்காவுக்கு வாங்கிட்டு வாயம்லே”ன்னு பவ்யமா சொல்லி முடிச்சான். “ஆங் எங்க வாப்பாவுக்கு வயித்தாவுல போவுதுன்னு அவசரமா ரொட்டி, சால்னா வாங்கப் போய்ட்டு இருக்கேன்... பூ, அல்வாலாம் வாங்குனா தேரமாவும்... ம்மா திட்டுவா”ன்னு அஜ்மீர் காஜா இழுத்தான். சேக்கப்பா அவன விடுறதா இல்ல... சமாளிச்சி அஜ்மீர் சட்டை ஜேப்புல இருவது ரூவா புது தாள திணிச்சான். அதோட இல்லாம “எல தம்பி காக்கா திண்ணைல இருப்பேன் நேரா வந்து எங்கிட்ட தந்துடாத... நீ தட்டாடி மேல போட்டு திரும்பி பாக்காம போய்ட்டே இரு... நான் பொறவாட்டி தட்டாடில போய் எடுத்துக்கிறேனு” லாத்தாமார்க்கு பயந்து ஐடியா பண்ணான்.

மந்திரம் மாமா கடைல ஏற்கனவே ஊர்மாமா சர்வர் கோசாஅத்துலுகிட்ட அல்வாக்கு தொட்டுக்க சட்னி கேட்டதால... அங்க பெரிய சண்ட போய்ட்டு இருந்துச்சி. அஜ்மீர் காஜா சைக்கிள் ஹேண்டில் பார்ல தொங்குன கூடைல கிடந்த ரொட்டி சால்னா, பூவுலாம் வெளிய தெரியுற மாதிரி மந்திரம் மாமா கடைல போய் அல்வா கேட்டான். “என்னல கொள்ளேலவான் இப்பதான் உன் வாப்பா வயித்த கலக்குதுன்னு வயித்த தடவிட்டே போனான்... நீ என்னான்னா பூ, அல்வா, ரொட்டி சால்னாலாம் வாங்கிட்டுப் போற ன்னு” ஊர் மாமா அஜ்மீர்கிட்ட கேட்டாரு. “ஆங் இதுல ரொட்டி சால்னா மட்டும்தான் வாப்பாக்கு; பூவும் அல்வாவும் வாங்கிட்டு போய் தட்டாடில போடச் சொல்லி சேக்கப்பா காக்கா சொல்லிருக்குன்னு” அஜ்மீர் காஜா சரியா ஒடைக்க கூடாத இடத்துல உண்டியல ஒடச்சான். “பாத்தீங்களா மந்த்ரம் மாமா... நம்ம புல் தடுக்கி பயில்வான் இந்த பள்டம் போற பொடியன்ட்ட பூ, அல்வா வாங்கச் சொல்லிருக்கான்... அதுவும் வாங்கிட்டுப் போய் தட்டாடி மேல வீசணுமாம்... அவன் லபுக்கபீம் சபட்டுல இருந்து இப்டிதான் ஒரு மார்க்கமா இருக்கான்வோய்” அவரு அடுத்த உண்டியல ஒடச்சாரு. அவ்ளோதான் மந்த்ரம் மாமா, அல்வாக்கு தொட்டுக்க சட்னியான்னு சண்டப் போட்ட கோசாஅத்துலு, மிக்கேல் சாச்சான்னு மொத்த கூட்டமும் “அது என்னல லபுக்கபீம்... பேரே புதுசா சிலுக்கு வச்ச முந்திரி பாயாசம் மாதிரி இருக்குன்னு” ஊர் மாமாவ மொச்சி எடுத்தாங்க.

முக்கா பெடல் போட்டு வேகமா சைக்கிள்ல பெல் அடிச்சிட்டே போன அஜ்மீர் காஜா பரச்செடி தாண்டவும் கரெண்டு போவோ இன்னும் வேகமெடுத்தான். எங்க மறந்துபோய் நேர கைல வந்து பூவையும் அல்வாவையும் தந்துருவானோன்னு பயந்து போன சேக்கப்பா... இந்தா இப்ப வரேன்னு லாத்தாமார்கிட்ட சொல்லிட்டு ஒரே மூச்சுல தட்டாடி ரூம்ல இருந்து வெளிய வந்து வெளிமேடைல இருந்து எட்டிப் பார்த்தான். அஜ்மீர் காஜா சைக்கிளை அழுத்திட்டே கூடைக்குள்ள கைய விட்டு கேரி பேக்க எடுத்து சுழட்டிட்டே... சரியா சேக்கப்பா லாத்தா வீடு வரவும் ஒரு வீசு வீசுனான். எட்டிப் பார்த்த சேக்கப்பா மூஞ்சில போய் அடிக்கும் போது தான் தெரிஞ்சுது கேரி பேக்ல இருந்த பூவும் அல்வாவும் இல்ல... ரொட்டி சால்னனானு. கவுரு கிளிஞ்சி சேக்கப்பா மூஞ்சிலயும் கண்ணுலயும் சால்னா அடிக்க கண்ணு எரிச்சல்ல அலறி துடிச்சான். வேகமா வீடு போன அஜ்மீர் காஜா வாப்பா முன்னாடி கூடைல இருந்து கேரி பேக் எடுக்க உள்ள இருந்து பூவும் அல்வாவும் விழுந்துச்சி. அத பார்த்த அடுத்த நிமிசமே அஜ்மீர் காஜா அவன் உம்மாவோட அடிக்குப் பயந்து பாஞ்சி ஓடோ... அஜ்மீர் காஜா வாப்பாவுக்கோ வயித்து வலி போய் முன்னாடி நின்ன வீட்டம்மாவ பார்த்து மன்மத சிரிப்பு சிரித்தார்.

மறுநாள் காலைல ஊர் பூரா சேக்கப்பாவோட கதை மறுவாட்டியும் கொடிகட்டி பறந்துச்சு. அன்னைக்கு சாயங்காலமே சேக்கப்பா மச்சான்மார்லாம் சேர்ந்து குடும்பத்தோட ஊட்டிக்கு போவ ஐடியா பண்ண... அதகேட்டு சேக்கப்பாக்கு சந்தோசம்ன்னா சந்தோசம். சரியா அடுத்த வாரம் ஜும்மா தொழுவிட்டு ஊட்டி போவோ முடிவாக; சரியா புதன்கிழம லுகர் தொழுவை தேரத்துல எதிர்த்தாக்குல இருக்குற தபால்காரர் தில்பர் வீட்டுக்கு... மன்சூர் மொதலாளிகிட்டே இருந்து ட்ரங்க் கால் வந்துச்சி. “சலாமலைக்கும் அடேய் சேக்கப்பா அவசரமா வியாபாரம் விசயமா நான் ரெண்டு நாள்ல கொழும்புக்கு போவணும்ல... நீ மாச்சப்படாம உடனே கௌம்பி மெட்ராஸ் வந்துரு.. நான் கொழும்புக்கு போவிட்டு வந்தப்றோம் வேணா ஊருக்குப் போய் கொஞ்ச நாள் இருந்துட்டு வாடே.... இதவிட்டா நம்ம கம்பெனிய மூட வேண்டியதான்.... போய்ட்டு வெயாபாரம் மட்டும் முடிஞ்சுதுனா நமக்கு சக்கபோடுதாம்ல.. அதனால இப்போ ரெண்டு நாள்ல நீ வந்து சேருன்னு” சொல்லி போன வைக்கவும்... ஊட்டிக்கு போக சொல்லி வச்ச மணி அண்ணனோட உங்கள் டிராவல்ஸ் மகேந்திரா வேன்... சேக்கப்பா நெஞ்சில ஏறி இறங்குன மாதிரி இருந்துச்சு. ஆத்திரமும் ஏமாற்றமும் தாங்க ஏலாத சேக்காப்பாக்கு திரும்பவும் ஊசி நூல்ல கோர்த்த பாசிமணி மாதிரி.. வரிசையா ஒவ்வொரு சொட்டா முட்டி நின்னுச்சி!!.

கட்டுரை

ந.முருகேசபாண்டியன்

# தேர்தல் கமிஷனும் தேர்தல் நாடகத்தின் கட்டியங்காரனும்

சாதி மத அரசியலை முன்னிறுத்தும் கட்சிகளைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது. தேர்தலுக்குப் பின்னரும் தேர்தல் கமிஷனின் செயல்பாடுகள் தொடர்ந்திட வேண்டும். புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. இந்நிலையில் தேர்தலில் காலங்காலமாக வாக்களித்த வாக்காளர்கள் கைமேல் கண்ட பலன் என்ன என்ற கேள்வி தோன்றுகிறது. வாக்குச் சாவடியில் இருந்து வெளியேறும் வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரலில் தடவப்பட்டிருக்கும் கருப்பு மை மட்டும்தான் மிச்சம்.

*தேர்தல் என்றவுடன் எனக்கு எப்பவும் சர்க்கஸ்தான் நினைவுக்கு வருகிறது. எண்பதுகளில்கூட 20 யானைகள், 30 புலிகள், 10 சிங்கங்கள், 200 கலைஞர்கள் அடங்கிய ஆசியாவிலே மிகப் பிரமாண்டமான சர்க்கஸ் என்ற அறிவிப்புடன் விளம்பரம் வெளியாகும். நகரத்துத் தெருக்களில் விலங்குகளுடன் சர்க்கஸ் கலைஞர்கள் அணிவகுப்பு நடக்கும். பெரிய எதிர்பார்ப்புடன் சர்க்கஸ் அரங்கினுள் நுழைந்தால், மணியடித்தவுடன் முகத்தில் வண்ணம் பூசிய கோமாளிகள் ஹே எனக் கத்தியவாறு வருவார்கள். யோசிக்கும்வேளையில் கோடிக்கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்கும் தேர்தல் களத்தில், தேர்தல் கமிஷன், இறங்குவது. நாடகத்தில் கட்டியங்காரன் பிரவேசம் எனச் சொல்லத் தோன்றுகிறது.*

*தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது என்ற சூழலில், ஊடகங்கள் தேர்தல் பற்றிய பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகின்றன. தேர்தல் என்பது முக்கியமானது என்பது என்ற பிம்பம் கட்டமைக்கப்படுகிறது. இனிமேல் தேர்தல்தான் விடிவு என்ற மாயை வலுவடையும்போது, திடீரெனக் களத்தில் குதிக்கும் தேர்தல் கமிஷன், கேள்விகளுக்கு இடமளிக்காத புனிதமாகக் கருதப்படுகிறது. தேர்தல் கமிஷன் உண்மையிலே சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது தானா? தமிழகத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் தினமும் ஊடகங்களில் தோன்றிய தலைமைத் தேர்தல் அதிகாரியின் பேச்சுகள், அஞ்சாத சிங்கமாக அவரைக் காட்சிப்படுத்துகின்றன. தேர்தல் கமிஷன் யாருக்கும் கட்டுப்படாத சுதந்திரமான அமைப்பு என்று ஊடகங்கள் ஊதிப் பெருக்குகின்றன. யதார்த்தத்தில் தேர்தல் கமிஷன், எப்படியாவது மக்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வருகின்ற ஆள் பிடிக்கின்ற வேலையை அதிகாரத் தொனியில் செய்கிறது. 18 வயது நிரம்பிய ஒவ்வொருவருக்கும் கிடைத்த அபூர்வமான வாய்ப்பு, தேர்தலில் ஓட்டுப் போடுவது கடமை என்று தெருவெங்கும் விளம்பரங்கள். 100 சதவீத ஓட்டுகள் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷன் வலியுறுத்தி விளம்பரம் செய்வது நுண்ணரசியல் சார்ந்தது. கண்ணா ஓட்டுப் போட ஆசையா? 18 வயதில் என்ன பண்ண வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். இப்படி வாக்களிக்க வற்புறுத்துவது, ஒருகட்டத்தில் தேசபக்தியுடன் முடிச்சுப் போடப்படுகிறது. தேர்தலினால் என்ன பயன் என யாரையும் யோசிக்கவிடாமல், 100% வாக்குப் பதிவு என்ற பிரேமை உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல தடவைகள் வாக்களித்து, அரசியல் கட்சிகள்மீது வெறுப்படைந்து, சலிப்படைந்திருக்கும் மக்களுக்கு தேர்தல்மீது நம்பிக்கை ஏற்படுத்துவதைத்தவிர தேர்தல்*

கமிஷம் வேறு என்ன உருப்படியாகச் செய்கிறது?

கடந்த சட்டசபைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன், தமிழகத்தில் 'தேர்தல் கமிஷன் விதித்த விதிமுறைகள், கெடுபிடிகள் ஒருவகையில் பயபீதியைக் கிளப்பியுள்ளன. தமிழகத்தின் அன்றாட நடைமுறைகள்கூட எங்களைக் கேட்டுத்தான் நடைபெற வேண்டும் என்பதில் கமிஷன் உறுதியாக இருக்கிறது. கிராமத்துக் கோவில் திருவிழாவை நடத்துவதற்கும் முன் அனுமதி பெற வேண்டும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் குடும்பத்துடன் வெளியூர் செல்கிறவர்களின் கார்களை மறித்து 20 கி. மீட்டருக்கு ஒருமுறை செக்கிங் செய்வதுதான் பணக்கடத்தலை ஒழிப்பதற்கான தேர்தல் கமிஷனின் முக்கிய அஜெண்டா. சிறிய நடுத்தர வியாபாரிகள் தொழில் காரணமாக எடுத்துச் செல்லும் பணத்தைக் கைப்பற்றி நேர்மையாக நடப்பது போன்று ஊடகங்களில் பில்டப் வேறு. தமிழகத் தேர்தல் வரவிருப்பதை முன்னிட்டுச் சில மாதங்களுக்கு முன்னரே மாநிலமெமெங்கும் கோடிக்கணக்கான பணம் கொண்டு செல்லப்பட்டுவிட்ட நிலையில், தேர்தல் கமிஷனின் சோதனைச் சாவடிகளும் கறார் செயல்பாடுகளும் வேடிக்கையானவை . ஏற்கனவே ஊழலில் திளைத்துக் கொண்டிருக்கும் காவல்துறை அதிகாரிகள், வருவாய்த் துறை அலுவலர்கள் வாகனச் சோதனையில் ஈடுபடுவது ஒருவகையில் கேலிக்கூத்து. .

சுதந்திர இந்தியாவில் பல்லாண்டுகளாகத் தலைமறைவாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த தேர்தல் கமிஷன், பற்றி முன்னர் பலருக்கும் தெரியாது. அது அரசு இயந்திரத்தின் ஓர் அமைப்பு. அவ்வளவுதான். தேர்தல் கமிஷன், தன்னிச்சையாக முடிவெடுத்துச் செயற்படும் அமைப்பு; அரசியல்வாதிகள், ஆளும் கட்சியினரின் நெருக்கடிகளுக்குப் பணிந்துவிடாமல், சுயமான முடிவெடுக்கும் திறன் மிக்கது; இந்தியாவில் ஜனநாயகம் தழைத்தோங்க அடித்தளமாக விளங்குவது; எங்கும் சுதந்திரம் பரவிட வழிவகுப்பது... இப்படி பேச்சுகள் ஒலிக்கின்றன. இந்திய ஜனநாயகம் என்பது தேர்தல் கமிஷன் இல்லாமல் சாத்தியமில்லை என்பது பொதுவான நம்பிக்கை. 1975 ஆம் ஆண்டு இந்தியாவில் திடீரென 'அவசர நிலை' அறிவிக்கப்பட்டு 'தேர்தல்' என்ற சொல் மோசமானதாகக் கருதப்பட்டபோது, 'தேர்தல் கமிஷன்' எங்கே போனது?? 1976-இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. அரசைக் கலைத்துவிட்டு, ஆளுநரின் ஆலோசகர்கள், சில ஆண்டுகள் தமிழ்நாட்டினை நிர்வாகம் செய்தபோது, ஜனநாயகம் என்ற சொல்லைத் தேர்தல் கமிஷன் ஏன் உச்சரிக்கவில்லை? . அப்பொழுது தேர்தல் நடத்தியே தீர வேண்டும் எனத் தேர்தல் கமிஷன் ஏன் அடம் பிடிக்கவில்லை.. இந்தியாவில் நிலவுகிற சகலவிதமான பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய தேர்தலுக்குப் பின்னர் தேர்தல் கமிஷன் ஐந்தாண்டுகள் தலைமறைவாவது ஏன்?

இந்திய ஜனநாயகம் என்ற அமைப்பு, நான்கு வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான பிரதமர், மத்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள், மாநில முதலமைச்சர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள் போன்றோர் சட்டம் இயற்றுகின்றனர். மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், வருவாய் அலுவலர், கிராம நிர்வாக அலுவலர் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். மக்கள், சட்டத்தை மீறும்போது, அதை அமல்படுத்துவதில் நீதிமன்றம், காவல்துறை, ராணுவம் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இத்தகைய மூன்றுவிதமான அமைப்புகளும் சரியான வழியில் செயல்படுகின்றனவா எனபதைக் கண்காணிப்பது ஊடகங்களின் பணி. இப்படியான ஜனநாயகம்தான் இந்தியாவில் இருக்கிறது. இத்தகு சூழலைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல். ஜனநாயகம் நிலைத்திட தேர்தலை நடத்துவதுதான் தேர்தல் கமிஷனின் முதன்மையான வேலை. ஏற்கனவே நிலவுகிற அரசியல் அமைப்பினைப் பாதுகாத்திடுவதற்குதான் தேர்தல் கமிஷன் பயன்படுகிறது.

மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் தீர்ந்திட, தேர்தல்மூலம் ஏதோ ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதுதான் ஒரே வழி என்பது தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. உண்மையில் பொருளாதாரரீதியில் இந்தியா தன்னிறைவு பெற்றுள்ளதா? உலக அரங்கில் இந்தியாவின் இடம் என்ன என்பது முக்கியமான கேள்வி. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனியாக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற இந்தியா, இன்று பல்வேறு மேலைநாடுகளின் வேட்டைக்காடாகியுள்ளது; புதிய காலனியாக மாறியுள்ளது. உலகவங்கி, ஐ. எம்,எஃப், போன்ற சர்வதேச நிதி நிறவனங்களின் கிடுக்கிப்பிடியில் இந்தியா திணறிக்கொண்டிருக்கிறது.. உலகமயமாக்கல் என்ற பெயரில் பன்னாட்டுப் பகாசுரக் கம்பெனிகளுடன், அம்பானி, டாடா போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களும் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இத்தகைய சூழலில் 'தேசியம்'சுதேசியம் போன்ற சொற்கள் அர்த்தமிழந்து விட்டன.: உள்ளூர்ப் பிரச்சினையின்போது ,'இந்துக்களின் கடைகளில் மட்டும் பொருட்களை வாங்குவோம்' என மத வெறுப்பைக் கோஷமாக்கும் சங்பரிவார், ஆர்.எஸ்.எஸ்., போன்ற இந்துத்துவா அமைப்புகள், அமெரிக்க நிறுவனங்களைப் பார்த்தவுடன் பல்லை இளித்து, வாலைச் சுருட்டுகின்றன. இங்கு யார் ஆட்சியதிகாரத்தில் இருக்கிறார் என்பது முக்கியம் அல்ல. கார்ப்பரேட்டுகளுக்குச் சார்பான பொருளியல் மேலாதிக்கத்துடன் ஒத்துப் போகிறவர் ஆட்சியில் இருப்பதுதான் அவசியமானது. யாராவது ஒரு கட்சியினர் தேர்தல்மூலம் ஆட்சிக்கு வரவேண்டும். மற்றபடி ஆட்சிக்கு வந்தவுடன் முந்தைய கட்சியினர் சென்ற தடத்திலே புதிய கட்சியினரும் செல்ல வேண்டியது நிர்ப்பந்தமாக உள்ளது. ப.சிதம்பரம், மன்மோகன் வகுத்த வழியில்தான் மோடியும் செல்கிறார். பெரிய அளவில் மாற்றம் எதுவும் இல்லை. கடந்த 65 ஆண்டுகளாக ஊழலில் திளைத்துக்கொழுத்துத்திரியும் அரசியல்வாதிகளுடன்



கைகோர்த்துள்ள உயர்மட்ட அதிகாரிகள் பெருகி விட்டனர். சட்டத்தை அமல்படுத்தும் காவல்துறை, நீதிமன்றத்தின் செயல்பாடுகள் நேர்மையானவை இல்லை என்பது ஊரறிந்த ரகசியம். சட்டத்தின் முன் அம்பானியும் குப்பனும் ஒன்றுதான் என்பது கேப்பையில் நெய் வடியும் கதை. இந்நிலையில் ஏதாவது ஒரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டியதுதான் இந்தியக் குடிமகனின் ஜனநாயக கடமை. அப்புறம்?

நாட்டு விடுதலைக்குப் பின்னர் 1952-இல் நடத்தப்பெற்ற தேர்தல், இந்திய மக்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கையைத் தந்தது. அதற்குப் பின்னர் எத்தனையோ தேர்தல்கள் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்கள் மாறிக் கொண்டிருக்கின்றனர். பல ஐந்தாண்டு திட்டங்கள்; பல்வேறு நலப்பணிகள். இறுதியில் அரசியல், பொருளியல் நிலைமையில் பெரிய மாற்றம் எதுவும் இல்லை. நாடாளுமன்றம்/ சட்டசபைக்காக மக்கள் வாக்குச் சாவடிக்குகளுக்குள் மாறிமாறி நுழைந்துகொண்டே இருக்கின்றனர். ஒவ்வொரு மூத்த குடிமகனும் குறைந்தது பத்துத் தடவைகளாவது வாக்கு அளித்திருப்பார்கள். அப்புறம் உள்ளூர்த் தேர்தல்கள் வேறு. இப்படி உற்சாகத்துடன் வாக்கு அளித்த வாக்காளர்களுக்கு இறுதியில் என்ன மிச்சம் என்பதுதான் கேள்வி.

இந்தியாவில் அரசியல் என்பது பரம்பரையாகச் செய்யப்பட்டு வரும் தொழிலாகி விட்டது. சில பத்தாண்டுகளில் நூற்றுக்கணக்கான கோடிகளைச் சம்பாதிக்கும் வல்லமை மிக்க அரசியலில், ஒருவர் வெற்றி பெற்றுவிட்டால், அவருடைய கொள்ளுப் பேரன் பேத்திகளும் உட்கார்ந்து கொண்டு சுகமாக வாழ முடியும். அரசியலில் பஞ்சைப்பராரிகள் நுழையவே முடியாது. அரசியல்வாதிகள் என்ற முழுநேரச் செயற்பாட்டாளர்கள் தனித்து உருவாகி விட்டனர். அரசியல்வாதிகளின் மகன்/மகள் அரசியலுக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது.

எழுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து ‘ஊழல்’ என்ற சொல் தமிழகமெங்கும் ஒலிக்கிறது. அது எந்த மொழிச் சொல்? தமிழ்தானா? ஐந்து பவுன் நெக்லஸ் வாங்கிக்கொண்டு ஊழல் செய்தார் எனத் தமிழக அமைச்சர் மீது எழுபதுகளில் ஆளுநரிடம் எதிர்க் கட்சியினரால் புகார் அளிக்கப்பட்ட செயல், இன்று வேடிக்கையாக உள்ளது. முன்னணி அரசியல்கட்சியினர் ஆயிரக்கணக்கான கோடிகளுடன் சௌகரியமாக உள்ளனர். ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகாத தலைவர்கள் நிச்சயம் அமைச்சராக இருக்க வாய்ப்பில்லை. என் தலைமையிலான கட்சி, நல்லாட்சி அமைக்கும். உங்கள் வாக்குகளைச் சிந்தாமல் சிதறாமல் எங்கள் ... சின்னத்திற்குப் போடுங்கள்’ என்ற குரல் எல்லாத் தேர்தல்களிலும் ஒலிக்கிறது. ‘நான் உங்கள் வீட்டுப் பிள்ளை. கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவேன்’ எனத் தேர்தலில் போட்டியிடுகிறவர், மேடைகளில் முழுங்குவதை யாரும் சீரியஸாக எடுத்துக் கொள்வதில்லை, ஓட்டு வேட்டையின் போது சில வாரங்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் கும்பிட்டுக் கொண்டிருப்பார், தேர்தல் முடிந்தபிறகு பொதுமக்கள் ஐந்தாண்டுகளுக்கு எம்.எல்.ஏ., அல்லது எம்.பி.யைப் பார்த்துக் கும்பிட வேண்டும். இதுதான் இருவேறு உலகத்து இயற்கை. தேர்தலில் வெற்றி பெற்றவர் காட்டில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பண மழை. அதுவும் ஆளும் கட்சியாக இருந்து விட்டால் பேரதிர்ஷ்டம்தான். ‘தேர்தலில் நிற்பதற்காகச் சில கோடிகளை அண்ணன் போட்டிருக்கார். அதை மீண்டும் எடுக்க வேண்டாமா?’ என ஒரு கோஷ்டி ஊழலை நியாயப்படுத்தும். ‘தேன் எடுத்தவன் புறங்கையை நக்காமல் இருப்பானா’ என்று பொதுப்புத்தி நிலவுமாறு சூழலை மாற்றியிருப்பதுதான் சூழலின் அவலம்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் பெரிய அளவில் மாற்றம் ஏற்படாது என்பது பாமரனுக்கும்கூடத் தெரியும், எனவேதான் தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் முன்வைக்கும் வாக்குறுதிகளை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. ஓட்டுப் போடுவதற்காகத் தரப்படும் தொகையையும்

உற்சாகத்துடன் வாங்குகின்றனர். 'சரி...போன ஐந்து வருஷம் அவன் ஆண்டான். நல்லா தின்னானுக. இப்ப இவன் ஆளப் போறான். இவன் மட்டும் திங்காமல் இருப்பானா' என்று விளிம்பு நிலையினர் கருதுமளவு சூழல் சீர் கெட்டிருக்கிறது. வாக்களிக்கப் பணம் வாங்குவது தண்டனைக்குரிய குற்றம் எனத் தேர்தல் கமிஷன், காட்டுக் கத்தல் கத்தினாலும், தேர்தலின்போது தமிழகமெங்கும் பண வெள்ளம் பாய்கிறது.

விவசாயத்தை மூலதனமாகக்கொண்டு கோடிக்கணக்கான மக்கள் வாழும் இந்தியாவில், அரசியல்வாதிகள் அவர்களுக்குச் செய்து வருகின்ற கேடுகள் ஏராளம். பாரம்பரியமான முறையில் தலைமுறைகள்தோறும் விவசாயம் செய்துவரும் விவசாயிகள் இனிமேல் விவசாயம் பற்றிப் பேசுவது குற்றம் எனச் சட்டம் இயற்ற அரசாங்கம் துடிப்பதை என்னவென்று சொல்ல? ரசாயன உரம், பூச்சிமருந்து, விதைகளை தயாரிக்கின்ற பன்னாட்டுக் கம்பெனிகளின் கொள்ளைக்களமாக இந்தியாவை மாற்றி, விவசாயத்தை நாசமாக்குகிற வேளாண் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தேவரனையக் கயவர் ஆவர். அப்புறம் புதிய வேளாண்மைச் சட்டங்கள்மூலம் நாட்டின் விவசாயத்தைக் கார்ப்பரேட்டுகளுக்கு வழங்கிட ஆளும் பிஜேபி அரசு முயலுகிறது. எதிர்காலத்தில் இந்தியா எங்கும் விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை பெருகும். அதேவேளையில் அதானி, அம்பாணி உள்ளிட்ட நான்கைந்து கார்ப்பரேட்டுகளின் சொத்து மதிப்பு பத்தாயிரக்கணக்கான கோடிக்கணக்கில் பெருகுகிறது

விவசாயம் சிதலமானதனால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதை எந்த அரசாங்கமும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. 1960 களில் பசுமைப்புரட்சி என்ற பெயரில் செயற்கை உரம், பூச்சி மருந்து எனத் திணித்து, வளமான நிலத்தை தரிசாக்கிவிட்டு, இன்று மீண்டும் 'இயற்கை உரம்' பற்றிப் பேசும் வேளாண்மைத் துறையினரின் அயோக்கியத்தனத்தை என்னவென்பது? அமெரிக்காவிலுள்ள மான்சோட்டா கம்பெனியின் மலட்டு விதைகளை இந்தியாவெங்கும் தூவி, விவசாயிகளின் குரல்வளைகளைக் கடித்துத் துப்ப, கொலைகாரக் கும்பல் காத்திருக்கிறது. அதற்கு ஆட்சியிலுள்ள அரசியல்வாதிகளும் உடந்தை. உழவர்களின் வாழ்வாதாரங்களை அழிக்கத் துடிக்கும் பன்னாட்டுக் கம்பெனிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அரசுகளில் ஆளும் கட்சி, எதிர்கட்சி என்ற பேதம் எதுவுமில்லை, சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் அயனான நஞ்சை நிலத்தை மிகக்குறைந்த விலைக்குப் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு வாரி வழங்கிடத் துடிக்கும் அரசுகளின் கோரமுகத்தைக் என்னவென்று சொல்ல?. நாடு விடுதலையடைந்து பல்லாண்டுகள் கழிந்த பின்னர், குடிக்க தூய குடிநீர், உணவுக்கு உத்திரவாதம் அளிக்க வக்கற்ற கட்சிகள், தேர்தல் மூலம் பதவிக்கு வந்து அதிகாரத்துடன் ஊழல் செய்வது தொடர்கிறது.

தேர்தல் மூலம் எதுவும் மாறாது என்பது பெரும்பான்மை மக்களுக்குத் தெரியும். "நம்ம தலையெழுத்து அப்படி இருக்கு. நம்மால் இதை எதிர்த்து என்ன செய்யமுடியும்? இந்தக் கட்சி... இல்லாட்டி அந்தக் கட்சி. இதுல எதை நல்ல கட்சி என்று சொல்வது? கழுதை விட்டையில் முன்விட்டை வேறு பின்விட்டை வேறுன்னு சொல்லமுடியுமா" என்று ஒதுங்கிப் போகும் போக்கு உருவாகியிருப்பது தற்செயலானது அல்ல.

'தேர்தலில் ஓட்டுப் போடுவதன்மூலம் ஜனநாயகம் செழிக்கும்,' 'வாக்களிப்பது முக்கியமானது' என்று பல்வேறு தன்னார்வக் குழுக்கள் தமிழகமெங்கும் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. "தேர்தலில் வாக்களிப்பது இந்தியக் குடிமகன்களின் கடமை" என்ற ரீதியில் தேசப்பற்றைப் போதிக்கின்ற திரைப்பட நடிகர்கள், நாலாந்தரமான திரைப்படங்களில் குத்தாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் யோக்கியர்கள். காட்சி ஊடகங்களைத் தொடர்ந்து கவனிக்கிறவர்கள் ஓட்டுப்போடுவது சமூகக் கடமை' என்று நம்புகின்றனர். எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக. மக்கள் தங்களுடைய கடமையைச் செவ்வனே செய்வார்கள். இனி என்ன? பழைய கறுப்பு வெள்ளைத் திரைப் படங்களின் முடிவில் வரும் 'சுபம்' போல எங்கும் சுபிட்சம் மலர்ந்துவிடுமா? தெருவெங்கும் தேனும் பாலும் ஆறாகப் பெருக்கெடுத்து ஓட வாய்ப்புள்ளதா?

தேர்தலில் போட்டியிடுகிற கட்சிகளின் பணம், கார், உணவு, இலவசப் பொருட்கள், மது எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு வாக்களிப்பதுதான் உன் வாழ்க்கை லட்சியம், பிறவிப்பயன் என்ற போதனைகள் ஓ.கே. யாருடைய எச்சில் காசிலும் பங்கெடுக்காமல், தன்மானத்துடன் வாக்களிப்பது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் யாரைத் தேர்ந்தெடுப்பது? அன்பிற்கினிய தேர்தல் கமிஷன் இந்த இடத்தில் மௌனம் சாதிக்கிறது. அது செல்லும் வழியை மட்டும்தான் காட்டும். தேர்தலில் போட்டியிடும் இரு பலமான கூட்டணிகளில், ஏதாவது ஓர் அணி சார்ந்த வேட்பாளருக்குப் பொன்னான வாக்களிப்பதுதான் வாக்காளரின் கடமை. அப்புறம் யார் ஆட்சிக்கு வந்தாலும் என்ன நடக்கப் போகிறது என்பது ஊரறிந்த ரகசியம். இந்நிலையில் 'தேர்தல்' குறித்துத் தேர்தல் கமிஷன் செய்யும் பிரச்சாரங்கள் ஒருவகையில் அர்த்தமிழக்கின்றன. . நாட்டுநலன், தேசப்பற்று போன்ற சொற்கள் அர்த்தமிழந்த நிலையில், மீண்டும்மீண்டும் நம்பிக்கை பத்திரத்தைப் புதுப்பிக்கச் சொல்லும் தேர்தல் கமிஷனுக்கு உள்நோக்கம் இருக்கிறது. விண்ணிலிருந்து தேவன் இறங்கி வந்து நிகழ்த்தவிருக்கும் அற்புதங்கள் போல் பலருடைய மனங்களில் தேர்தல் கமிஷனால் ஏற்பட்டிருக்கும் பிரேமைகளும் மலட்டுக் கனவுகளும் அளவற்றவை. அழுகித் துர்நாற்றமடிக்கும் முதலாளிய அரசியலமைப்பினை நியாயப்படுத்தும் பணியை நுட்பமான வழிகளில் தேர்தல் கமிஷன் செய்து கொண்டிருக்கிறது.

தேர்தல் கமிஷன் யாருக்கும் பயப்படாமல், நியாயமான முறையில் தேர்தல் நடத்துகிற

செயல்பாடுகள் குறித்து மாற்றுக் கருத்து எதுவும் இருக்க முடியாது. இந்தியா போன்ற ஊழல் பெருகிய நாட்டில் தேர்தல் கமிஷனில் பணியாற்றுகின்ற சில அரசு அதிகாரிகளின் நேர்மையான முடிவுகளும் செயற்பாடுகளும், நாம் இந்தியாவில்தான் வாழ்கின்றோமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. சரி தேர்தலில் வெற்றியடையும் கட்சியானது பெரும்பான்மை பெற்று ஆட்சியதிகாரத்திற்கு வந்துவிடும். இனிமேல் அந்தக் கட்சியினர் ஊழல் செய்தால் யார் பெறுப்பேற்பது? தேர்தல் கமிஷனா? அரசுக் கட்டிலேறியுள்ள கட்சியினர் ஊழல்கள் செய்யும்போது மக்கள் என்ன செய்வது? வண்டியில் கோடிக்கணக்கில் பணம் கடத்தினால்? ஊர் முழுக்கத் தலைவரின் கட்–அவுட்டுகள், ப்ளக்ஸ் போர்டுகள் வைத்தால்? அரசியல் தலைவரின் மகன், மகள் திருமணத்திற்காக ஆயிரக்கணக்கான ஆடுகளை வெட்டி பிரியாணி விருந்து பல்லாயிரக்கணக்கானோருக்கு வழங்கினால், பல்லாயிரக்கணக்கில் மதுக்குப்பிகள் இலவசமாக வழங்கினால், தேர்தல் வெற்றி மாநாடு என்ற பெயரில் கோடிக்கணக்கில் பணம் செலவழித்து, ஆயிரக்கணக்கான வாகனங்களில் லட்சக்கணக்கான மக்களை ஒன்று திரட்டினால், கிலோ கணக்கில் உடல் முழுக்க நகைகளை அணிந்துகொண்டு மண ஊர்வலத்தில் தலைவி நடந்து வந்தால், பல மைல்கள் தொலைவு அலங்கார விளக்குகள், குழல்விளக்குகள் அரசியல் கூட்டத்திற்காக ஒளிர்ந்தால், டி-சாட், தொப்பி, கட்சிக்கரை போட்ட வேட்டி, சேலைகள் பல்லாயிரக்கணக்கில் இலவசமாக வழங்கப்பட்டால்... அரசியல்வாதிகள் எவ்விதமான கணக்கு வழக்குகளும் இல்லாமல் சுவிஸ் வங்கிகளில் சேர்த்து வைத்திருக்கும் பணத்தினை எப்படிக் கைப்பற்ற முடியும்? ஆட்சிக்கு வந்தவுடன் ஊரை அடித்து உலையில் போட்டுக் கொள்ளையடிக்கும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்தல் கமிஷனால் கட்டுப்படுத்த முடியுமா என்பதுதான் இன்றைய கேள்வி. ஊழல் அரசியல்வாதிகளைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என வாக்கு அளித்த மக்கள் விரும்பினால், அதற்கான வழிமுறைகளைத் தேர்தல் கமிஷன் செய்து தர வேண்டாமா? அதுதானே நியாயம்?

தேர்தல்மூலம் ஆட்சிக்கு வந்துள்ள அரசியல்வாதிகளைத் தேர்தல் கமிஷனால் கட்டுப்படுத்த முடியாது. அது, நீதிமன்றத்தின் வேலை என ஒதுங்கிக்கொள்ளும். ஊழல் பிரச்சினையில் சிக்கிய கட்சியினர்மீது தொடுக்கப்பட்ட வழக்கு, இருபது வருடங்கள் கடந்தாலும் முடியாது. ஊழல் சொத்துக் குவிப்பில் ஒழுங்காகக் கூட்டல் கணக்குப் போடத் தெரியாத நீதியரசர் மீது எந்தக் கேள்வியும் கேட்க முடியாது. இந்நிலையில் தேர்தலில் போட்டியிடுகின்ற எல்லாக் கட்சியினரும் ஊழலுக்கு எதிராகக் குரல் எழுப்பலாம். புதிய ஜனநாயகம் மலர அதுவே வழி என்று ஊடகங்கள் பிரச்சாரம் செய்யும். ஞாபகமறதியான மக்கள், ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டினுக்குள்ளானவருக்கு மீண்டும் வாக்களித்துத் தங்கள் நாட்டுப்பற்றை நிரூபிப்பார்கள்.

தேர்தலை நடத்தியதோடு தேர்தல் கமிஷனின் பணி முடியக்கூடாது., யார் யார் தேர்தலில் நிற்க வேண்டும் என்ற விதிமுறைகளில் மாற்றங்களைச் கொண்டுவர வேண்டும். ஆரசியல் என்பது ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமான தொழிலா? சாதி வெறியர்கள், மத அடிப்படைவாதிகள், தெருப்பொறுக்கிகள், கந்துவட்டிக்காரர்கள், ரவுடிகள், நிலவுடைமைக் கொடுங்கோலர்கள் போன்றோர் அரசியலில் நுழைந்து அதிகாரம் செய்கின்றனர். இந்நிலைமை ஒழிக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் மட்டும்தான் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் சில மாதங்கள் விடுப்புப் பெற்றுத் தேர்தலில் போட்டியிட தேர்தல் கமிஷன் வாய்ப்பளிக்க வேண்டும். நேர்மையான ஆசிரியர்கள், வங்கி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள். காவல் துறை உயர் அதிகாரிகள் போட்டியிட்டு வெற்றியடையும்போது, கழிசடைத்தனமான அரசியல் சூழலில் மாற்றமேற்படும். ஒருக்கால் அவர்கள் தேர்தலில் தோற்றுவிட்டால், மீண்டும் பணிக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும். தேர்தலில் கண்ணியமானவர்களும் நேர்மையானவர்களும் போட்டியிடுவதற்கான சூழலைத் தேர்தல் கமிஷன் ஏற்படுத்தித் தர வேண்டும். அப்பொழுது தான் ஊழல்கள் குறையும்.

தேர்தல் கமிஷன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சில முக்கியமான அம்சங்கள்:.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு/ஊழல் செய்யும்போது, அவர்களைத் திருப்பி அழைப்பதற்கான வழிமுறைகள் ஏற்படுத்த வேண்டும்.

தேர்தலுக்கு முன்னர் அரசியல்வாதிகளின் முறையற்ற செயல்களைக் கட்டுப்படுத்தி வரன்முறைப்படுத்தியது போல, தேர்தலுக்குப் பின்னர் ஆட்சியதிகாரம் செய்திடும் கட்சியினரின் ஊழல்கள்/ ஒழுங்கீனங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்துடன் தேர்தல் கமிஷன் இருக்க வேண்டும்

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்றோர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

சாதி மத அரசியலை முன்னிறுத்தும் கட்சிகளைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது.

தேர்தலுக்குப் பின்னரும் தேர்தல் கமிஷனின் செயல்பாடுகள் தொடர்ந்திட வேண்டும். புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. இந்நிலையில் தேர்தலில் காலங்காலமாக வாக்களித்த வாக்காளர்கள் கைமேல் கண்ட பலன் என்ன என்ற கேள்வி தோன்றுகிறது. வாக்குச் சாவடியில் இருந்து வெளியேறும் வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரலில் தடவப்பட்டிருக்கும் கருப்பு மை மட்டும்தான் மிச்சம்.

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

பா.செயப்பிரகாசம்

jpirakasam@gmail.com




# பெண்ணடிமைச் சாசனத்தின் இன்னொரு பக்கம்

"உல்லாசத் திருமணம்" - நாவல்

தஹர் பென் ஜெலூன்

பிரெஞ்சிலிருந்து தமிழில்: சு.ஆ. வெங்கட சுப்புராய நாயகர்.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது - வழக்கத்திலிருக்கும் வாசகம்! திருமணம் ஆணின் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது - சமகால வாசகம் . ஒரு ஆணுடைய இதயத்துக்கும் சௌகரியத்துக்கும் ஆன ஒப்பந்தச் சடங்கு அது.

பெண்ணெனும் இன்னொரு பாலியலின் முழுமையான ஒப்புதலின்றி நிறைவேற்றப்படுதலால், திருமணம் ஒரு வன்முறை. இந்து மதத்தில் மட்டுமில்லை; அனைத்து சமுதாயங்களின் திருமண நிகழ்வுகளும் தரிசனப்படுத்துவது இதுவே. குடும்ப வன்முறையின் தொடக்கப்புள்ளியும் திருமணம் என்னும் ஒப்புக்கைச் சீட்டுடன் தொடங்குகிறது..

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையாக இருக்கிறதென்று மனச் சமாதானம் கொள்ளமுடியாது. எந்நாடயினும், எவ்வினமாயினும், எச் சாதியாயினும் அனைத்திலும் திருமணமென்பது , பெண்ணை அடிமையாக்குகிற விசயம்தான்.

வடக்கு ஆப்பிரிக்க நாடான மொரோக்காவின் இரு முக்கிய நகரங்கள் பேஸ் , தாஞ்சியர் ; இவ்விரு நகரங்களின் கலாச்சாரத்தைக் களனாக வைத்து நாவல் இயங்குகிறது. அமீரின் பெற்றோர் முதல் தலைமுறை; அமீர்,அவன் தமையன், தம்பி - இரண்டாம் தலைமுறை, அமீரின் பிள்ளைகளான ஹசன், ஹுசேன் - என மூன்று தலைமுறைகளின் நதியலையில் கதை ஓடம் செல்லுகிறது. .

சந்தை வணிகத்தின் நெறிகளால் உருவாக்கப்பட்ட ஒரு சவுகரியம்' உல்லாசத் திருமணம்'. வியாபார நிமித்தம் செனகல் போன்ற கருப்பின நாடுகளுக்கு பயணிக்கிற அராபியர்கள் ' பிரவுன்' நிறத்தவர்; தம்மை வெள்ளைநிறத்தவராக கெத்தாகக் கருதிக்கொள்கிறவர்கள். தேவைப்படும்போது கருப்பினப் பெண்களை திருமணத்துக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். வியாபார மளிகைப் பொருள்,மற்றும் அரிய பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஆண்டுதோறும் செனகல் நாட்டுக்குச் சென்றுவருவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் அமீர். வியாபாரத்துக்கான சரக்குகள் சேகரம் ஆகிறகாலம் வரை - அது ஆறுமாதமோ, ஒருவருசமோ , குறிப்பிட்ட காலத்துக்கு வீடும் பெண்ணும் அமர்த்தி திருமணம் செய்து கொண்டு பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து வாழ்கிற ஏற்பாட்டு முறையைக் கைக்கொள்கிறான். அதன்படி செனகலின் நபூ என்ற கருப்புப் பெண்ணை அமீர் ஓராண்டுக்கு திருமணம் செய்து கொள்கிறான். வணிகக் காரியம் நிறைவேறியதும், அந்தப் பெண்ணை விட்டுவிட்டு வந்துவிடலாம்; கருப்பினப் பெண் அதன்பின் இதுபோல் வேறொரு ஒப்பந்த திருமணம் செய்துகொண்டு வாழலாம்; வேறு உறவுகள் வைத்துக் கொண்டும் வாழலாம்.பாலியல் தொழில் புரிந்தும் வாழலாம்.

ஆணின் பாலியல் தேவைகளைத் தீர்ப்பதற்கு ,சிவப்பு விளக்கு, சின்ன வீடு, வைப்பு, பரத்தையர் விடுதி, உல்லாசத்திருமணமென எத்தனை ஏற்பாடுகள் 1 ஒவ்வொரு ஆணுக்கும் ஒவ்வொரு வகை! நிலக்கரியை விட கருப்பு உண்டா ? வைரம் கிடைக்கிறது. கருப்பின பூமியிலிருந்து நபூ போன்ற சில வைரங்கள் கிடைக்கின்றன; மெய்யாகவே அவளிடம் உடல் ஆசுவாசம் மட்டுமல்ல, மன ஆசுவாசமும் கொள்பவனாக அமீர் தன்னை இழக்கிறான்.

நபூ தன் கணவனை கைக்குள் இடுக்கிக் கொண்டாள் எனக் கருதுகிறாள் மனைவி லாலா ஃபாத்மா. அறிவுக்கூர்மை; உடற் கவர்ச்சியுமுள்ள நபூவின் ஈர்ப்பு ஒரு பக்கம்; மனைவி குடும்பம் உறவுகள் சுற்றம் இஸ்லாமிய சம்பிரதாயம் மற்றொரு பக்கம். இரு புள்ளிகளிடையில் அலைக்கழிப்புக்குள்ளாகும் அமீர், மன அழுத்தத்திற்கான விடியலாய் எப்போதும் சந்திக்கும்

தத்துவப் பேராசான் முலே அகமதுவை அணுகுகிறான். அல்குரான் பல்கலைக்கழக பக்தியியல் பேராசிரியர், முலே அகமது.

"ஒரு ஆண் நான்கு பெண்களை மணம் செய்து கொள்ள இறைவன் அனுமதி அளித்துள்ளார். ஆனால் ஒரு நிபந்தனையுடன்! மீண்டும் சொல்கிறேன் ஒரு நிபந்தனையுடன். அவர்களை சரிசமமாக நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் " ( பக்கம் 124)

கொந்தளிப்பும் குழப்பங்களுமான இருளில் வெளிச்சம் தருகிற அவரது கருத்து அதிகாரப் பூர்வமானது. அவருடைய அறிவுத் திறன் குறித்து எவருக்கும் ஐயம் இல்லை.

செனகலிருந்து அமீருடன் பேஸ் நகர் வந்தடைந்த நபூ, இஸ்லாமிய முறைப்படி அமீரை மணம்புரிந்து கொண்டபோதும், அமீரின் மனைவி லாலா ஃபாத்மா கருப்பினப் பெண் என்பதனால் அவளை வெறுக்கிறாள் :சொந்த வீட்டுக்குள் தனது நான்கு பிள்ளைகளையும் வெறுத்து ஒதுக்கச் செய்கிறாள். 'கறுப்பினத்தவர் கீழான நடத்தை கொண்டவர்கள்; தம்மின் நலன்களுக்காக எந்த எல்லைக்கும் செல்வார்கள் ' போன்ற படிமங்கள் , உள்மனதில் படிந்து கிடப்பது - இந்த ஒரு லாலா ஃபாத்மா அல்ல; வெள்ளை நிறத்தினராக தம்மைக் கருதும் 'பிரவுன் நிற' லாலா ஃபாத்மாக்கள் பேஸ் நகரின் பரப்பெங்கும் நிறைந்துள்ளனர்.

நபூ இரட்டைக் குழந்தைகள் பெறுகிறாள். மூத்தவன் வெள்ளை நிறம் - ஹசன்;இரண்டாமவன் கருப்பு - ஹுசேன். இரட்டைக் குழந்தைகள் பற்றி அமீரிடம் நேரடியாகக் கேட்டாள் லாலா ஃபாத்மா.

"பிரசவம் நடந்த போது அந்த அறைக்குள் இருந்தீர்களா, இல்லை அல்லவா, எனவே திருமணம் ஆகாத, ஒடுகாலியான பல பேருடன் உறங்கிய அந்த மோசமான பெண், புதிய செவிலித்தாயைக் கைக்குள் போட்டு வெள்ளைக் குழந்தையை திருடி இருக்க வேண்டும்; அவள் சொல்வதை எல்லாம் நம்ப முடியாது; நம்மிடம் வந்து கதை அளக்க முடியாது"

வாழ்க்கையில் முதல் முறையாக அமீர் உரக்கப் பேசினான்

"லாலா ஃபாத்மா , நபூ மீது இத்தகை பழியைச் சுமத்துவதை இனியும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.....ஆமாம் இத்துடன் நிறுத்திக்கொள். இனியும் ஒரு வார்த்தை இழிவாக வரக்கூடாது. அவளைத் திட்டினால் அது என்னையும்,என் புகழ், என் நேர்மை ஆகிய எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குவதற்குச் சமம்.எனவே நீ எல்லாவற்றையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்"

அவள் துணிந்து கேட்டாள்" இல்லையென்றால்.."

"இல்லை என்றால் விவாகரத்து: ஒரு நிமிடம் கூட ஆகாது, உன்னைத் திருப்பியனுப்பும் கடிதத்தை எழுதினால், உன்பெட்டி படுக்கையைக் கட்டவேண்டும். அவ்வளவுதான் , என் மனைவியாக இல்லாமல் போக மூன்று முறை நீ விலக்கப்பட்டாய் (தலாக்) என சொன்னால் போதும் .அதுதான் சட்டம் " கடுமையான தொனியில் கூறினான்.


# ஒரு தேர்தல் நாளும் திருமயிலையும்

● மு.செல்லா

இன்று தேர்தல் நாள்
ஒன்றை ஒன்று
முட்டிக் கொள்ளாத
சர்!.. புர்..! வாகன உராய்வில்
விடிந்தது திருமயிலை

நடைபாதையெங்கும்
கூடற்ற பறவைகளின்
எச்சமும் சிறகுதிர்ப்பும்
தவணைமுறை வெட்கத்தில்
காமம் கரைந்த
இரவின் நீட்சியால்
விடிந்தது அது

சாலையோர ஜாகையிலிருந்து
சடாரென எழுந்து கொண்ட
பசுவொன்று
காலைக் கழிப்பின் இடந்தேடி
'அம்மா!..' என்றதும்
விழித்துக் கொண்டான் 'கபாலி'
'கற்பகம்' பக்தர்களின்
நேர்காணலுக்கு ஏற்கனவே
தயாராகிவிட்டதால்
பரபரப்பாகினாள்



சாலையோரக் கூண்டுக்குள்
என்றோ கரந்த
பசுவின் பால்
பளபளப் பாக்கெட்டுகளில்
கைமாறிக் கொண்டிருந்தன

கீய.. கீய... யென
கீரை விற்பவன்
வண்டியில் தள்ளிக்
கூவிக் கொண்டிருந்தான்

இரவின் எச்சரிக்கையால்
மடி கட்டிய
சரக்குடன் வாய்க்கொப்பளித்து
சுத்தமாகினர்
நல்ல குடிமக்கள்

நேற்று வாங்கிய
கவரின் கனம் சோதித்தவாறு
மயிறுக்கு டையடிக்கக்
கிளம்பினார்
தேர்தல் கொண்டாட்டத்து
கனவான் ஒருவர்

மயிலையில்
வாக்கில்லாத பிரபலங்களாய்
கபாலியும் கற்பகமும்
பாவம்
பணமுமில்லை
பக்தர்களுமில்லை இன்று

லாலா பத்மா ஓங்கி அழுதாள். இத்தகைய கோலத்தில் தன் கணவனை அவள் ஒருபோதும் கண்டதில்லை.ஆப்பிரிக்க சூன்யம் வேலைசெய்கிறது என நினைத்தாள்.பிறகு அறைக்குள் சென்று தொடர்ந்து அழுது கொண்டிருந்தாள். (பக்கம் – 148) அழுவதைத் தவிர அவளுக்கு வேறு வழி இல்லை. எதிர்ப்பதும் அழுவதும் வாழ்க்கையாகி காலமுழுசும் நொந்து , உடல் நோய்வாய்ப்பட்டு , ஒருநாள் இரவு தூக்கத்திலேயே இறந்தும் போகிறாள்.

ஆணாதிக்கத்தை எதிர்க்கும் இந்த எல்லையில் வேறுபட்ட ஒரு ஆத்மாவாக லாலா தோன்றுகிறாள். ஆனால் எதிர்த்து நிற்கவேண்டியதும் போராட வேண்டியதும் ஒரு ஆணை எதிர்த்து அல்ல; ஆணுக்கு அந்த அதிகாரத்தை வழங்கிய கொடிய மதச் சம்பிரதாயத்தை எதிர்த்து; ஆணுக்குப் பின்பலமாக இருக்கும் மதச் சட்டதிட்டத்தை எதிர்த்து; இன்னும் ஓங்கி எரியும் பழமையின் தீப்பந்தத்தை அணைக்க சமர் செய்திருக்கவேண்டும். தனக்கென இவ்வாறு விதிக்கப்பட்டதாக எண்ணுகிற லாலா போன்ற பெண்ணால் இதைச் செய்ய இயலாது.

நபூவுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் மூத்தது வெள்ளை. தம்மினத்தவனாகக் கருதி அணைக்கிற, கருப்புக் குழந்தையான ஹுசேன் மீது எல்லையற்ற வெறுப்பை உமிழுகிறார்கள்." நாம் எல்லோரும் வெள்ளை நிறத்தவர்கள்; நாம் அரேபியர்கள்; அவர்கள் அடிமைகள்; வெள்ளை அராபியர்களைப் பார்த்தவுடன் அவர்களின் முதுகெலும்பு தானாக மறைந்து விடும்"

நாவலாசிரியர் சாட்டை எடுத்து விளாசும் ஓரிடம் வரும் :

"குதிரையைக் கண்டுபிடித்ததற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்; இல்லையென்றால் வெள்ளைக்காரர்கள் கருப்பர்களை வாகனமாகப் பயன்படுத்தியிருப்பார்கள்.மற்றவர்களை இழிவு படுத்துவதையே மனிதன் எப்போதும் விரும்புகிறான் (இங்கே சாதிப் புறக்கணிப்பு சாமியாடுவதை நினைவில் கொள்ளலாம் – கட்டுரையாளர்.) . அதிலும் குறிப்பாக ஏழைகளை, கருப்பு நிறமுடையவர்களை, எவ்விதப் பாதுகாப்புமில்லாதவர்களை அவமானப்படுத்த விரும்புகிறான். இப்படித்தான் அடிமைத் தனம் என்னும் பயங்கரம் சில நாடுகளில் இன்னும் தொடர்கிறது "

கருப்பினப் புறக்கணிப்பின் நீட்சியாய் ஹுசேன் நடத்தப்படுகிறான். காலப்போக்கில் அவன் மிகவும் தனியனாக மாறி விட்டான் என்கிறார் நாவலாசிரியர். துயரத்தின் உப்புப் பாரித்த கடலைப் பருகிக் கொண்டே ஓடுகிறான்; உலகின் அனைத்து மூலைகளுக்கும் ஓடி ஓடி முற்றாகச் சிதைக்கப்படுகிறான். கருப்பாக பிறந்ததற்காக 'பிரவுன் நிற' சமுதாயம் அவனை அப்படித் தண்டித்துக்கொண்டே விரட்டுகிறது.

"இனவெறி எல்லாத் திசைகளிலிருந்தும் வெளிப்பட்டது; கருப்பர்களை எதிர்த்து வெள்ளையர்கள் ; வெள்ளையர்களை எதிர்த்து கருப்பர்கள் ; கருப்பர்கள் மட்டும் நிறையப் பணம் படைத்தவர்களாக இருந்திருந்தால் இருவரும் இணக்கமாகப் பெரிய உணவு விடுதியொன்றின் மேல் தளத்தில் மதுக்கோப்பையுடன் ஒருவரை ஒருவர் வாழ்த்தியபடி இருந்திருப்பார்கள் "

ஹுசேன் எண்ணிக் குமைகிறான். நிற பேதத்துக்கு வர்க்கவேற்றுமையே மூலம் எனத் தெறிக்கிறது அவன் பிரகடனம்.

மொரோக்கா நாட்டின் பேஸ் நகரிலும் தாஞ்சியரிலும் வாழ்ந்து அனுபவித்த கதைசொல்லியை, மொழியாக்கம்செய்தவரின் அவதானிப்பு அளவிடுகிறது: "கதைசொல்லியின் உண்மையான இலக்கு வேறு என்பது விரைவிலேயே விளங்கிவிடுகிறது.அந்நாட்டில் நங்கூரமிட்டு, பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறவேற்றுமையினை விளக்கவே இக்கதைப் பின்னல் என்பதும் வாசகர்களுக்குத் தெளிவாகிறது."

இந்து சமுதாயத்தில் சாதி வேற்றுமை, வர்க்கவேறுமைக்கும் மூலம்; செம்மி இறுகிப் போயுள்ள சாதி. தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலின வன்முறை, கருப்பினப் பெண்களுக்குக் கொஞ்சமும் குறைந்ததில்லை. தாழ்த்தபட்ட மக்கள் மீது உமிழப்படும் வெறுப்பு, கருப்பின மக்கள் மீதான வன்முறைக்கு இம்மியும் குறைந்ததில்லை. சாதியும், இந்து சனாதனமும் இரு பிணைசல் பாம்புகளாய் நட்டுக்க நின்று ஆடுகின்றன. பாம்புகள் பிணைகிறபோது, அவற்றின் மீது வெள்ளைத்துணியை எடுத்து வீசிப் போர்த்தினால், அவ்வளவும் தங்கமாக ஆகிவிடுமென்பது ஒரு நம்பிக்கை; அந்த முயற்சியை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர் ஆட்சிப் பின்புலத்தில் சனாதனிகள். மனிதனின் புனிதத்தை விட மாட்டின் புனிதம் மேலானது, கோமாதாவைக் காப்போம்; மாட்டுக்கறி உண்ணும் மனிதனைத் தேடிப்பிடித்து கட்டிப்போட்டு, சாட்டையால் அடித்துக் கொல்வோம்;

உல்லாசத் திருமணம் நாவலை முடித்து கைகளில் இதய நடுக்கத்துடன், நீராடும் விழிகளுடன் ஏந்துகையில்- இந்து சனாதன சமுதாயம் கட்டமைத்துப் பேணிக் காத்துவரும் சாதிப் புறக்கணிப்பு பற்றிய அடுத்தகட்ட சிந்திப்புக்கு, ஒரு இலக்கிய வாசகன் பயணிப்பது தவிர்க்க முடியாத வாசிப்பு நியதி.

கலகம் செய்யும் இடது கை, சூறாவளி போன்ற நாவல்களில் தொடங்கி,ஆண்டன் செகாவின் ஆகச் சிறந்த கதைகள், லூயி பஸ்தேரின் வாழ்க்கை வரலாறு வரை , பிரஞ்சிலிருந்து தமிழில் ஆக்கம் செய்து வழங்கி வரும் சு.ஆ.வெங்கட சுப்புராய நாயகரின் எழுத்துக் கலை லாவகம், உல்லாசத் திருமணத்தையும் உயர்த்திப் பிடித்திருக்கிறது.

வெளியீடு: தடாகம், எண்- 112, முதல் தளம்,
திருவான்மியூர் சாலை, திருவான்மியூர் ,
சென்னை – 600041. பேசி: + 91- 98400 70870.

கட்டுரையாளர்: எழுத்தாளர்


இரா. எட்வின்

# 65 / 66

## காக்கைச் சிறகினிலே



சத்யபால் மாலிக்



மோடி

"ஒரு தெரு நாயின் உயிரிழப்பு கூட வருந்தத்தக்க செய்தியாக அனுசரிக்கப்படுகிறது. ஆனால் தலைநகர் தில்லியில் இதுவரை 250 விவசாயிகள் போராட்டக் களத்தில் உயிர் துறந்துள்ளனர். இதைப் பற்றி அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. நான் இதுகுறித்து பிரதமர் மோடியிடமும் அமித்ஷாவிடமும் பேசினேன். விவசாயிகளை வெறுங்கையுடன் அனுப்பக் கூடாது. அரசு பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும் என்று அவர்களிடம் தெரிவித்தேன்."

இதை கூறியிருப்பவர் ஏதோ ஒரு எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவர் அல்ல. இதைக் கூறியவர் மேகாலயாவின் ஆளுநர் சத்யபால் மாலிக் அவர்கள். ஏறத்தாழ ஐந்து மாநிலங்களில் நடைபெற இருக்கிற சட்டசபைத் தேர்தல்களும், மைய அரசின் அலட்சியமும், ஊடகங்களின் கள்ளத்தனமான மௌனமும் பேரெழுச்சியான விவசாயிகளின் போராட்டத்தை இருட்டடிப்பு செய்து கொண்டிருக்கும் இந்த வேளையில் திரு சத்யபால் அவர்களின் இந்தக் கூற்று நம்மை மீண்டும் உழுகுடிகளின் போர்க்களத்திற்கு அழைத்துப் போகிறது.

ஆளுநரின் இந்தக் கோவம் நமக்கு சற்று ஆறுதலையும் கொஞ்சம் நம்பிக்கையையும் தருகிறது. ஆனாலும், குஜராத் கலவரங்களின்போது கொன்று குவிக்கப்பட்ட இஸ்லாமியர்கள் குறித்த ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது கார்ல போயிட்டிருக்கும்போது ஒரு தெருநாய் அடிபட்டா அதுக்காக உட்கார்ந்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்க முடியாது என்று கூறிய திரு மோடி, ஆளுநரது இந்தக் கூற்றை பொருட்படுத்துவார் என்றெல்லாம் நம்புவதற்கில்லை.

நாம் பொருட்டென கொள்வது என்னவென்றால் ஒரு ஆளுநருக்கு இப்படி ஒரு கருத்தை சொல்வதற்கு தைரியமும் ஈரமும் இருக்கிறதே என்பதுதான். இந்தக் கருத்தைக் கூறியதற்காக தான் பணிநீக்கம் செய்யப்பட்டாலும் அதுகுறித்து கவலை இல்லை என்றும் தனது பதவி விலகலை அரசு விரும்பினாலும் அதைச் செய்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் கூறிய அவர் தொடர்ந்து "தில்லியில் நடக்கும் உழுகுடிகள் போராட்டத்தை பாஜக தொடர்ந்து அலட்சியம் செய்தால் எதிர்காலத்தில் உத்திரப் பிரதேசம், ஹரியானா, மேற்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் பாஜக இல்லாது போகும்" என்றும் கூறி இருப்பதுதான் திரு மோடி அவர்களும் திரு அமித்ஷா அவர்களும் அவசியம் பரிசீலிக்க வேண்டியது

• •

மக்கள் நீதி மையத்தின் தேர்தல் அறிக்கை பள்ளிக் கல்விக் குறித்தும் பேசுகிறது. சிலர் அதை போகிற போக்கில் பகடியோடு கடந்து போகிறார்கள். மக்கள் நீதி மையத்தின் தேர்தல் அறிக்கை ஆபத்தானது. அதிலும் குறிப்பாக பள்ளிக் கல்வி குறித்த பகுதி மிக மிக ஆபத்தானது

"இன்றைய மாணவர்களுக்கும்,பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தைக் கொடுக்கக்கூடிய பத்தாம்



கமல்ஹாசன்

வகுப்பு பொதுத் தேர்வுமுறை ஒழிக்கப்பட்டு ஒன்பதாம் வகுப்பில் இருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரைக்குமான நான்கு வருடங்களுக்கு பருவமுறைப் பாடத்திட்டம் உருவாக்கப்படும்" இந்த இடம் வரைக்கும் நமக்கு ஒரு கருத்து உண்டு என்பதைத் தவிர பிரச்சினை ஏதும் இல்லை. நாம் பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பருவத்தேர்வு கொண்டு வரலாம் என்றும் பத்தாம் வகுப்பு வரைக்கும் வடிகட்டலுக்கான தேர்வுகளே கூடாது என்றும் கூறி வருகிறோம்.

நான்கூட இதுகுறித்து பல பக்கங்கள் எழுதி இருக்கிறேன். தமிழ்நாடு முதுகலை ஆசிரியர் கழகம் (TNPGTA) இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக் கொண்டே இருக்கிறது. இந்தப் பகுதியின் துவக்கத்தில் "இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தைக் கொடுக்கக்கூடிய பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முறை ஒழிக்கப்பட்டு" என்று இருப்பது மிக மிகச் சரியானது. காரணம் தேர்ச்சி பெறாமைக்காக குழந்தைகள் அதிகமாகத் தற்கொலை செய்துகொள்வது இந்தக் காலக் கட்டத்தில்தான். தேர்ச்சி பெற்றவனை இனிப்பு வாங்கவும் தேர்ச்சி பெறாத குழந்தையை நஞ்சு வாங்கவும் ஒரு தேர்வுமுறை அனுப்பும் என்றால் அந்தத் தேர்வு முறையினை சீர் செய்யவேண்டும் அல்லது தூக்கிக் கிடாச வேண்டும். அதைத்தான் தாம் செய்ய நினைத்திருப்பதாக மக்கள் நீதி மையம் தனது தேர்தல் அறிக்கையில் கூறுகிறது

போகிற போக்கில் பார்த்தால் இது மிகவும் சரியான திட்டமாகத்தான் தோன்றும் இன்னும் வெளிப்படையாகக் கூறுவதென்றால் இதற்காகத்தான் கல்விமீது அக்கறை கொண்ட அனைவரும் போராடிக் கொண்டிருக்கிறோம். எனில் இது நமது கோரிக்கைதானே. அதை செய்வதாகக் கூறுகிற மையத்தின் திட்டத்தை ஆதரிக்க வேண்டியதுதானே என்ற கேள்வி எழும் ஆனால் கூர்ந்து கவனித்தால்தான் கமல் மிக நுட்பமாக பார்ப்பனர்களுக்கான கல்வித் திட்டத்தை பொதுக் கல்வித் திட்டமாக பூசி மெழுகி இருப்பது புரியவரும். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் இருக்காது என்றும் அதற்கு பதிலாக "சீட்" கொண்டு வரப்படும் என்றும் கூறுகிறார். நீட்டில் CBSE பாடத்திட்டத்தில் இருந்து வினாக்கள் வருவது மாநிலக் கல்வித்திட்டத்தின் வழி பயிலும் நமது குழந்தைகளுக்கு சிக்கலைத் தருவது தமக்கு வேதனை அளிப்பதாகவும் ஆகவே நீட்டினை கிடாசிவிட்டு சீட்டினை கொண்டு வருவதற்கான முயற்சியை மையம் செய்யும் என்றும் அந்த அறிக்கையில் கமல் தெரிவித்து இருக்கிறார். சீட் என்பது சற்றேறக் குறைய முன்பு நடைமுறையில் இருந்த நுழைவுத் தேர்வை ஒத்ததாகும். நுழைவுத் தேர்வுமுறை நடைமுறைக்கு வந்தபோது அதற்கான பயிற்சி மையங்களும் சேர்ந்தே தோன்றி வளர்ந்தன. கொள்ளை கொள்ளையாய் லாபம் பார்த்தன. நுழைவுத் தேர்வு மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகளே மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடிக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

ஏழைக் குழந்தைகளுக்கு மருத்துவப் படிப்பு என்பது ஏறத்தாழ இல்லை என்றே ஆனது. எனவேதான் நுழைவுத் தேர்விற்கு எதிராக ஒரு மிகப் பெரிய தொடர் போராட்டத்தை நடத்துவதற்கான தேவை வந்தது. அந்தப் போராட்டத்தின் விளைவாக நுழைவுத் தேர்வு முடிவிற்கு வந்தது. உள்ளூர் பார்ப்பனர்களுக்கும் உள்ளூர் பணக்காரர்களுக்கும் நுழைவுத் தேர்வு மருத்துவப் படிப்பிற்கான வாய்ப்பை வழங்கியது என்றால் அடுத்த மாநிலத்து பார்ப்பனக் குழந்தைகளுக்கும் பணக்காரக் குழந்தைகளுக்கும் மருத்துவக் கல்வி வாய்ப்பை நீட் வழங்கியது. மீண்டும் உள்ளூர் பார்ப்பனக் குழந்தைகளுக்கும் பணக்காரக் குழந்தைகளுக்கும் மருத்துவக் கல்வி வாய்ப்பினை வழங்குவோம் என்பதைத்தான் அத்தனை தேன் தடவி அறிக்கையில் வைத்திருக்கிறார் கமல் அதைவிடவும் ஆபத்தான ஒரு விஷயத்தை வைத்திருக்கிறார். பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வா அல்லது சீட் தேர்வா என்கிற கேள்வி எழுமானால் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான பொதுத் தேர்வினை ரத்து செய்துவிட்டு சீட் தேர்வினை மட்டும் அமல் செய்வோம் என்கிறார். இது அமலுக்கு வந்தால் பாடத் திட்டத்தைவிட நுழைவுத் தேர்வுப் பயிற்சி முக்கியத்துவம் பெற்றுவிடும்.

அடுத்த கட்டமாக பொதுப்பள்ளிகள் தங்களது முக்கியத்துவத்தை இழந்து விடும் இது ஒரு கட்டத்தில் பொதுப் பள்ளிகளின் இருத்தலைக் கேள்விக்குள்ளாக்கும் இது ஏழைக் குழந்தைகளுக்கான கல்வியை ஒரு புள்ளியில் இல்லாது செய்து விடும். ஆக மையத்தின் அறிக்கையானது ஒடுக்கப்பட்ட மற்றும் உழைக்கும் மக்களின் கல்விக் கனவையே இல்லாது செய்யும் நச்சுத் திட்டம். எனவே மையத்தின் தேர்தல் அறிக்கையை பகடியோடு கடந்து போகாது மிகுந்த நுட்பத்தோடு புரிந்துகொண்டு கடுமையாக எதிர்க்க வேண்டும்.

**Printed by H. Dhanasekaran and Owned, published by V. Muthaiah and Printed at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084. Editor: V. Muthaiah**

இரண்டாவது அட்டைத் தொடர்ச்சி...



# ‘ஜனா’

சரியாகச் சொல்வதென்றால் 70களின் இறுதியில் தொடங்கி 80களின் நடுவில் என்று சொல்லலாம். 80களின் நடுவில் மெல்ல மெல்ல வணிக இதழ்களுக்கும் படங்களை வரையத் தொடங்கிவந்த காலம் என்றும் என்னால் சொல்ல முடியும். அப்போது நக்கீரன் வார இதழில் லெனின் அவர்கள் ஒரு தொடர் எழுதினார். எழுதுகிறவர் லெனின்; படங்களைக் கேட்டுப் பெற்றவர் நக்கீரன் கோபால். ‘தாய்’ வாரஇதழில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே கோபால் எனக்கு அறிமுகம் என்றாலும் சாதாரணமானவர்கள் எவரும் உள்ளே நுழைந்துவிடாதபடி பத்திரிகை உலகத்தை பரம்பரையாய் ஒருசாரார் கைக்கொண்டிருந்த காலத்தில் அதன் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்துவிட்டு உள்ளே நுழைந்தவர் என்பதால் கோபால்மீது எனக்குப் பெரிய அபிமானம் உண்டு. எனவே, லெனின் தொடருக்கு படங்கள் வரைந்து அளிக்க இசைவு அளித்திருந்தேன். சினிமா, இலக்கியம், அரசியல் ஈழத்து நட்புகள் என அரசியல் தெளிவும் அறச் சிந்தனையும் கிளர்ந்த நட்புவட்டம் எனக்குப் பக்கத்தில் வந்துகொண்டிருந்த அந்த நேரத்தில், லெனின் தொடருக்கு நான் வரைந்து தரும் ஓவியத்தை வந்து வாங்கிச்செல்லும் ஒரு நபராகத்தான் ஜனா எனக்கு அறிமுகமானார். என்னதான் அடித்தட்டு வாழ்க்கை வாழ்ந்து வந்தாலும் ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் ஒரு ரசிகன், கலைஞன், வாசகன், படைப்பாளி எனப்பல வடிவங்களில் உறைந்துகிடப்பான். அந்தவகையில், லெனின் அவர்களின் தொடர் கட்டுரை இடையறாது வெளிவருவதற்கு உறுதுணையாக நின்றவர் ஜனா.

எனவே, நாளடைவில் நான் வரைந்துதரும் ஓவியத்திற்குள் ஒளிந்து நிற்கும் நுட்பத்தையும் அது பேசும் அரசியலையும் மிகுந்த ஈடுபாட்டோடு ரசித்து கலாபூர்வமான கருத்தைப் பகிர்ந்துகொள்ளும் நண்பனாய், தோழனாய் மாறிப்போனார் ஜனா. அதன்பிறகு கொஞ்ச நாட்களிலேயே மெதுவாக கேயார் மூலம் திரையில் காலடி எடுத்து வைக்கத் தொடங்கினார். திரைப்படத்தில் Blue Screen பின்புலத்தில் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் பயன்பாடு முதன்முதலாக திரையில் பயன்படுத்திய காலம் அது. திரையில் சில காட்சிகளை எடுக்க படப்பிடிப்பு நடத்தும்போது விதவிதமான உத்திகளைக் கையாளுவோம். அது தயாரிப்பாளர், இயக்குநர், ஏன் நடிகர்களுக்கேகூட தெரியாது. அதை ஏன் செய்கிறோம்; எதற்காகச் செய்கிறோம்; எப்படிச் செய்கிறோம் என்பதெல்லாம் விளக்கிச் சொல்லவும் முடியாது. ஆனால், அந்த உத்திகளையெல்லாம் பயன்படுத்தி படப்பிடிப்பை முடித்தபிறகு போட்டுப்பார்த்தால் அது திரையில் முழுமைபெற்று நிற்கும். ஒருமுறை அலெக்ஸாண்டர் என்கிற ஒரு படத்துக்காக விஜயகாந்தை வைத்து எடுக்கப்பட வேண்டிய காட்சி. விஜயகாந்த் தலைகீழாய் தொங்கவேண்டிய மிரட்டலான காட்சி. விஜயகாந்த் அவர்களே அந்தக் காட்சியைச் சொன்னவுடன் சற்றே மிரண்டுவிட்டார். அப்படியான புதுமையான காட்சிகளைப் படிப்பிடிப்பு செய்யும்போது என்னோடு பணிசெய்கிற அத்தனை இளைஞர்களுள் என்னைத்தவிர அதுகுறித்த நுட்பங்களை என் அருகிலேயே இருந்து அறிந்துகொள்ளும் ஆர்வத் தோடும் முனைப்போடும் இருந்த முதல் இளம் இயக்குநர் என்றுகூட ஜனாவைச் சொல்லலாம்.

அதற்குப் பிறகு படம் இயக்குகிற நிலைக்கு மிக விரைவிலேயே வளர்ந்துவந்தார். அந்தச் சமயத்தில் கிராப்க்சில் தேளை முன்னிறுத்திய கதை முயற்சிக்கும் முன்நின்றேன். ஒருநாள் எனது இல்லத்துக்கு வந்த அவர், தனியே படம் இயக்குவதற்கான வாய்ப்பு கைகூடி வந்திருப்பதாக முதன் முதலில் என்னிடம்தான் சொன்னார். கதையெல்லாம் சொன்னார். அந்தச் சமயத்தில் தயாரிப்பாளரிடம் போய் கதையை, கதையாய்ச் சொல்வதைவிட அதையே வரைந்து காட்சிப்படுத்தி வைத்துக்கொண்டு காட்சிக்குக் காட்சி சித்திர வடிவத்தில் சொன்னால், தயாரிப்பாளர்களுக்கு உங்களின் தன்னம்பிக்கையும் தனித்துவமும் புரியவரும் என்பதை எடுத்துச்சொல்லி அவர் மீதிருந்த பிரியத்தின் காரணமாக 20 நாள் அவருடன் அமர்ந்து ஒவ்வொரு காட்சியாய் விளக்கி விளக்கி மொத்தம் எடுக்கப்பட வேண்டிய 500 காட்சிகளையும் சித்திரமாக்கித் தந்தேன். அதையெல்லாம் பத்திரமாக வைத்திருப்பதாக பின்னர் என்னைச் சந்தித்த நேர்வுகளில் நன்றிப் பெருக்கோடு சொல்லி இருக்கிறார். ஒரு ரஷ்ய நாவலை மையமாகக் கொண்ட அந்தக் கதைதான் அவருடைய முதல் படமாக வந்திருக்க வேண்டும். ஆனால் அது பெரிய பட்ஜெட் படமாக இருப்பதாகவும் அதைப் பின்னர் எடுக்கலாமென்றும் முதன்முதலில் படம் இயக்கும்போது சிறிய பட்ஜெட் படம் எடுத்தால் எதிர்கால வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்றும், கேயார் அவர்கள் நெறிப்படுத்திய பிறகு அவர் எடுத்த படம்தான் இயற்கை. ‘இயற்கை’ படம் குறித்த கதையையும் எடுத்துக்கொண்டு என்னிடம் வந்தார். கதையை முழுமையாகக் கேட்டு முடித்தபிறகு, கதை எந்த இடத்தில் தொடங்கி எந்த இடத்தில் முடியவேண்டும் என்கிற விவரங்களை மிகுந்த நுட்பத்தோடு எடுத்துச் சொன்னேன். கூடவே, ‘இந்திய மேகசின்’ இதழிலிருந்து எடுத்து நான் நீண்டகாலமாகச் சேமித்து வைத்திருந்த சுமார் 40 புகைப்படங்களை அவரிடம் கொடுத்து, உங்களது திரைக் காட்சிகளையெல்லாம் இந்த இடங்களில் போய் படம் பிடித்துக் கொண்டுவாருங்கள், சிறப்பான இடத்துக்கு வருவீர்கள் என வாழ்த்தி அனுப்பிவைத்தேன்.

அதில் நான் குறிப்பிட்டுக்காட்டிய அந்தமான் தீவுகளை ஒட்டியுள்ள அந்த இடங்களுக்கே போய் படங்களைக்

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month

காட்சிப்படுத்தி வந்தார். அந்தப் படத்தின்மூலம் மக்களின் மகத்தான வரவேற்பையும் பெற்றார். முதல் படத்திலேயே சிறந்த படத்துக்கான தேசிய விருதையும் பெற்றார். அதற்குப் பிறகு 'பேராண்மை' எடுத்தார். அதுதான் நான் அவருடன் முதன்முதலாய் உட்கார்ந்து வடிவமைத்த கதை. அந்தச் சமயத்தில் தன்னுடன் இருந்து உதவுமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். ஆனால், நான், புலம்பெயர் தமிழர்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், குழந்தைகள் பாடத்திட்டம் ஆகிய பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டிருந்ததால் அவரோடு சேர்ந்து இயங்க முடியவில்லை. ஆனாலும் அந்தப் படத்தின் கதாநாயகனுக்கு அவர் வைத்திருந்த பெயர் என்ன தெரியுமா? மருது. வெளிநாட்டிலிருந்து நான் சென்னை திரும்பியிருந்த நிலையில் என்னைச் சந்தித்த ஜனா, பேராண்மையில் வரும் விஞ்ஞானி வேடத்தில் நான்தான் நடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அதுமட்டுமல்ல; 'இதை ஆரம்பித்து வைத்ததே நீங்கள்தான். அதனால் நீங்களே முடித்து வையுங்கள்' என்று வேண்டுகோள் வைத்தார். நடிப்பெல்லாம் நமக்கு வராது. அதுக்குரிய ஆட்கள் இருக்கிறார்கள், அவர்களை வைத்து சிறப்பாகச் செய்யுங்கள் என்று சொல்லி மறுத்துவிட்டேன். ஆனால், என்னை நடிக்க வைப்பதில் தொடர்ந்து பிடிவாதம் காட்டிய அவர், ஒரு கட்டத்தில், "சார் நீங்க நடிக்க வரலேன்னா, உங்களைக் கடத்திட்டுப்போயாவது நடிக்க வச்சே தீருவேன்" என்று மிகுந்த அன்புத் தொல்லை செய்ததால் அதில் நடித்தேன். அந்தப் படம், அவருக்கு நல்ல உயரத்தைத் தந்தது.



இப்படிப் படிப்படியாக வளர்ந்து சுயமாக இயங்கத் தொடங்கினாலும் என்னுடனான நட்பையோ, அன்பையோ ஜனா விட்டுவிடவில்லை. தொடர்ந்து தொடர்பிலேயே இருந்தார். அவ்வப்போது எங்களது சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் நேரிலும், செல்போனிலும் நடந்துகொண்டேதான் இருந்தது. கடைசியாய் அவர் 'லாபம்' படம் தொடங்கியபோதும் அவருடன் இருந்தேன். ஆனால் கதை விவாதம் தொடங்கிய இரண்டு நாளில் புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்ந்து மறைந்த ஓவியர் கருணா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ள கனடா நாட்டுக்குச் செல்ல நேர்ந்ததனால் அவருடன் சேர்ந்து செயல்பட என்னால் இயலாது போயிற்று.

எனது தாத்தா சோலைமலை மிகுந்த நையாண்டிக்காரர். அவர் இருக்கிற இடத்தை எப்போதும் கலகலவென சிரிப்பும் கும்மாளமுமாய் ரசிக்க வைத்துக்கொண்டிருப்பார். அடிக்கடி அவர் சொல்லிய வார்த்தை என்னவெனில், 'நான் எம். ஆர். ராதாவுக்கு கதை எழுதி பணம் சம்பாதிக்கல; அவருக்காக எழுதுன கதையாடல்களைத் திருத்தியே சம்பாரிச்சதுதான் அதிகம்' என்பார். அப்படி ஒரு நையாண்டிக்காரர்தான் என் ஜனா. எந்தப் பொருளில் இருந்தும் எந்த இடத்தில் இருந்தும் விலகி நின்றுகொண்டு அவர் நையாண்டி செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும். எனக்குத் தெரிய அவரது சமகாலத்தில் என்னிடம் வந்தவர்களிலேயே மிகவும் துடிப்பானவர்; தெளிவானவர்; சமூகக் கரிசனையும் அக்கறையும் மிகுந்தவர் என்றால் அது என் ஜனா தான் என்றே சொல்வேன். கிட்டத்தட்ட இயக்குநர் மணிவண்ணன் மாதிரி. திரைத்துறையில் கடைசிவரை இயங்கியவர் ஜனா. அவரது மறைவு, ஒரு கையை இழந்து நிற்பதுபோன்ற துயரத்தையே எனக்குள் நிறைத்தது. இப்படியெல்லாம் அவரைப்பற்றி நான் நினைவுகூரும் செய்திகளை இருந்து படிக்கவும் படித்து மகிழவும் அவர் இல்லையே என்று நினைக்கின்றபோது எனது கண்கள் பனிக்கின்றன.